D
Y211,31 N83
N83.4.8.3
136029
சென்னை-600 008

# உள்ளக்கடகம்.

6—4—1983

1. வினாக்கள்-விடைகள்:
உடுக்குறியிட்ட வினாக்கள். 573—603

2. தகவல் கோரல்:
(அ) பேரவையில் விவாத வரம்புகள். 603—604
(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். 604—607

3. அறிவிப்புகள்:
(அ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன் வடிவு,1983. 607
(ஆ) பேரவை அலுவல். 675

4. கவன ஈர்ப்பு:
சென்னை, மதுரை சட்டக் கல்லூரி விடுதிகளின் மாணவர்கள் நிலை. 607—609

5. வரவு-செலவுத் திட்டம் 1983—84 -வாக்கெடுப்பு (தொடர்ச்சி)
(அ) கோரிக்கைஎண் 22—கால்நடை வளர்ப்பு.
(ஆ) கோரிக்கை எண் 30—சமூக நலன் 609—710
மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன். 609—611, 685—686, 689—709
திரு. கெ. சொக்கலிங்கம் 612—616
டாக்டர் கே.பி. இராமலிங்கம். 617—626
திரு. எஸ். சிவராமன். 626—634
திரு. வி.வி. சுவாமிநாதன். 634—642
திரு. எம். செல்லமுத்து. 642—648
திரு. பி. துரைராஜ். 648—651
திரு. மு. அப்பாதுரை. 651—657
திரு. செ. குப்புசாமி. 657—660
திரு. எஸ்.என். இராமசாமி. 660—663
திரு. ந. குலசேகரபாண்டியன். 664—669
திரு. ஏ. சந்திரசேகரன் 669—671
திரு. ஜி.கே. சுப்பிரமணியன். 671—674
செல்வி. ப. விசயலட்சுமி. 676—679
திரு. பெ.சு. திருவேங்கடம். 679—685
686—688

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்: 711

2707

T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: XLVIII NO: 3

APRIL 6 1983

©


V211,31 N83

N83.48.3
136029

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன் கிழமை, 1983 ஏப்ரல் 6

பங்குனி 23, துந்துபி—திருவள்ளுவர் 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்.''

முகத்தால் இனிமையாகச் சிரித்துப் பழகி, அகத்தில் தீமை கொண்டுள்ள வஞ்சகருடன் நட்புக் கொள்வதற்கு அஞ்ச வேண்டும்.

1 வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாவட்ட தொழில் கேந்திரங்கள் செயல்படும்
விதத்தை மாற்றியமைக்கும் திட்டம்.

*வினா எண் 659—திரு. பெ.சு. திருவேங்கடம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட தொழில் கேந்திரங்கள் செயல்படும் விதம் மாற்றியமைக்க வேண்டுமென மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) அரசு எடுத்துள்ள முடிவென்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: (அ) மாவட்ட தொழில் மையங்கள் செயல்படும் விதத்தை மாற்றியமைக்க மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அறிவுரை வழங்கவில்லை.

(ஆ) மற்றும் (இ): வினாவுக்கு இடம் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தொழில் மையங்கள் செயல்படும் விதத்தை மாற்றியமைக்க மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு ஆலோசனை வழங்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். மாநில அரசிற்கு அப்படிப்பட்ட ஆலோசனை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைப்பை மாற்றியமைக்க மத்திய அரசு எங்களுக்கு தாக்கீது அனுப்பவில்லை. ஆனால் நடைமுறையிலிருக்கிற சில சிரமங்களைப் போக்க சில ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறது. 1980 ஆம் ஆண்டு மீண்டும் கண்ணியத்திற்குரிய மாண்புமிகு பிரதமர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு இதனை பரிசீலனை செய்து இதனுடைய நடைமுறையில் சில மாற்றங்கள் மாவட்ட தொழில் மையங்களில் அல்ல, மாவட்டத் தொழில் மையங்களுடைய நடைமுறைகளை மாற்றியமைக்க தாக்கீது, தகவல் இங்கே மாநில அரசிற்கு வந்திருக்கிறது. குறிப்பாக மூன்று துறைகளில் மாற்றியமைக்கப்படும் மையத்தில் ஒரு பொது மேலாளரும், பொறியாளர், ஆய்வு, கடன், கிராமத் தொழில் ஆகிய ஒவ்வொரு துறைக்கும் ஒரு செயல் மேலாளர் வீதம் மூன்று செயல் மேலாளர்களும் மாநில அரசு கேட்ட மூலப்பொருள், விற்பனை, பயிற்சி, தகவல் போன்ற பிரிவுகளில் ஏதேனும் ஒன்றிற்கு மாவட்ட தேவைகளுக்கேற்ப செயல் மேலாளர் இருக்கவேண்டுமென்று இப்படிப்பட்ட மூன்று ஆலோசனைகளை அளித்திருக்கிறார்கள். அதன்மீது தமிழக அரசு ஆலோசனை செய்து, 1981-ம் ஆண்டு மத்திய அரசு மாநில அரசிற்கு எழுதியது. அதன்மீது நாங்கள் பரிசீலனை செய்து ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அளவிற்குச்செலவு செய்து இந்த நிலைமைகளுக்கு உகந்த வகையில் மாற்றியமைக்க தமிழக அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. ஒரு கோடி ரூபாய் அளவிற்குச் செலவு செய்து இந்த மாறுதல்களை நடைமுறைப்படுத்த ஆலோசனை தீவிரமாகச்செய்து வருகிறது.

திரு .பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நடைமுறையில் மாறுதல் செய்யவேண்டுமென்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் ஆலோசனை கூறியதாகச்சொல்கிறார்கள். 1981—ல் எழுதப்பட்டது; இப்போது 83 வந்துவிட்டது; ஒரு கோடி ரூபாய் செலவு செய்து எந்தெந்த மாவட்டங்களில் இதை நடைமுறைப்படுத்த மாநில அரசு ஆலோசனை செய்துள்ளது? எந்தத் தேதியிலே அவை நடைமுறைக்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தொழில் மையங்கள், டிஸ்டிரிக்ட் இன்டஸ்ட்ரீஸ் என்ற அமைப்பு—தமிழகத்தில் 16 மாவட்டங்கள் இருக்கின்றன; அதிலே 14 மாவட்டங்களில் இப்போது செயல்படுகிறது. விரைவிலே நீலகிரி மாவட்டத்திலும் சென்னை மாவட்டத்திலும் மாவட்ட தொழில் மையங்களை ஆரம்பிக்கலாம் என்ற குறிப்பு ஆய்விலிருக்கிறது. ஆகவே 16 மாவட்ட மையங்களில் இந்த மாறுதல்களை விரைந்து செயல்படுத்த முனைவோம்,



2707

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த மாவட்ட தொழில் மையம் என்னென்ன தொழில்களுக்கு ஊக்கமளிக்கிறது என்ற நடைமுறை விவரங்கள் இன்னும் பலருக்குத் தெரியாமல்இருக்கிறது. ஆகவே, இதை விளக்குகிற வகையில் ஒவ்வொரு தாலுக்கா தலைநகரங்களிலும் அமைச்சர் அவர்கள் வந்து, அந்த மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக கருத்தரங்கு ஏற்பாடு செய்து தெரியப்படுத்துவார்களா? அதற்கான ஏற்பாட்டை அரசு எடுக்குமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே மூன்று ஆண்டுகளாக எல்லா யூனியன் அளவிலும் மோட்டிவேஷன் கேம்ப்பைன் என்ற வகையில் ஊக்குவிப்பு முகாம்கள் தொடர்ந்து, தொய்வில்லாமல் நடைபெற்று வருகிறது. கரூரில் கூட நடைபெற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவருடைய தொகுதியிலே கூட நடைபெற்றிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாவட்ட தொழில் மையங்களில் இருக்கிற அலுவலர்கள் தாங்கள் மேலே அனுப்புகிற பல்வேறுவிதமான பேப்பர்கள் அல்லது கருத்துகளுக்கு பதில் கிடைப்பதில்லை, அங்கே வருத்தப்படுகிறார்களே, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் என்ன? மேலும் அதை அபிவிருத்தி செய்வதற்கு அரசு ஏதாவது ஆலோசனை செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. அதனை விரைவிலே போக்க தமிழக அரசும் ஆய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. இ. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாவட்டத் தொழில் மையக் கூடங்களில் இருந்து வழங்கப்படும் உரிமங்கள் 6 மாத அளவிற்கு என்று இருப்பதை—அதனால் பல சிக்கல்கள் இருக்கின்றன என்ற உணர்வுடன்—மேலும் நீட்டிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா? அதற்கான முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையங்களில் அங்கே இருக்கிற அதிகாரிகள் லோன் எந்தத் தொகைக்குக் கேட்டாலும் சென்னைக்கு அனுப்பித்தான் பெற வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சிறு தொழிலைத் துவக்க, ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மாவட்ட அதிகாரிகளே அந்தக் கடனைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: ஆவன செய்யப்படும்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவிக்கும்போது, நீலகிரியிலும் சென்னை மாவட்டத்திலும் மிக விரைவில் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். நீலகிரி மாவட்டத்தில் இந்த 1983—84 ஆம் ஆண்டிலேயே அமைக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிமு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, விரைவில் முடிக்கப்படும்.

### மதுராந்தகம் அருகில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 660—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு செலவில், எப்பொழுது திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) அச்சிறுபாக்கத்தில் இயங்கிவரும் பால் குளிரூட்டும் நிலையத்தை மதுராந்தகம் அருகிலுள்ள சாலூருக்கு மாற்றி அமைக்கும் கருத்துரு ஒன்று உள்ளது. இதற்குத்தேவையான நிலம் ஆர்ஜிதம் செய்தபின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். இந் நிலையத்தை அமைக்க இதர எல்லா கூறுகளையும் ஆய்வு செய்த பின்னரே இத்திட்டத்திற்கான செலவு மதிப்பீடு தெரியவரும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பால் குளிரூட்டும் நிலையத்தை மதுராந்தகம் அருகில் உள்ள சாலூருக்கு மாற்ற இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதற்கான நிலங்கள் கையகப்படுத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கிறதா ? அதற்கு எத்தனை ஏக்கர்கள் தேவை என்று அறிவிக்க இயலுமா ?





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக, மதுராந்தகம் அருகிலேயிருக்கிற சாலூரில் அமைய இருக்கிற அந்தக் குளிரூட்டும் நிலையத்திற்கு 4 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த அரசு முயன்று வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பால் குளிரூட்டும் நிலையத்தினுடைய கொள்திறன் எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ? இதனால் எத்தனை பேருக்கு வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக அமைய இருக்கிற பால் குளிரூட்டும் நிலையம் 10,000 லிட்டர் கொள்திறன் கொண்டதாக, பதப்படுத்துகிற திறன் கொண்டதாக அமையும்.

### ஷிப்டு முறையில் வகுப்புகள் நடத்தப்பட்டுவரும் பள்ளிகள்

* வினா எண் 661—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல பள்ளிகளில் தற்போது வகுப்புகள் (Shift Systemத்தில்) நடத்தப்பட்டு வருவதை அரசு அறியுமா ?

(ஆ) அந்த முறையை நீக்கி முழு நேரமும் வகுப்புகள் நடத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம். சில உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்புகளுக்குத்தேவையான இட வசதி இல்லாத காரணத்தால் அரசு ஏற்கனவே அனுமதித்துள்ளபடி மாற்று முறை (Shift System) திட்டத்தில் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) அரசு நிதிநிலை இடம் தருவதற்கேற்ப ஆண்டுதோறும் பள்ளிக் கட்டடங்களுக்கு கணிசமான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு படிப்படியாக பள்ளிகளுக்கு கட்டட வசதிகள் பெருக்கப்பட்டு வருகின்றன. இடைக் காலத்தில் ஷிப்ட் (Shift System) முறைப்படி சில பள்ளிகள் நடக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிட வசதியில்லாத காரணத்தினால் இதுபோன்ற பகுதி நேர வகுப்புகள் நடத்தப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படிப் பகுதி நேர வகுப்புகள் நடத்துவதனால் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களிலுள்ள பாடங்களை முடிப்பதில் ஏதாவது சிரமங்கள் ஏற்படுவதாக

அரசுக்குத் தகவல் வந்துள்ளதா? அப்படி ஏதேனும் வந்திருந்தால் அதைச் சரிப்படுத்தி, அதிலேயிருக்கிற சங்கடங்களைக் குறைக்க அரசு ஏதேனும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடைக்கின்ற நேரத்தில் அந்தப் பாடங்களை அவர்கள் நடத்திக் கொடுக்கின்றார்கள். அதிலே எந்தவிதமான பிரச்னையும் இல்லை. ஆனால், ஒரு நேரம் மாணவர்கள் பள்ளிக்கூடத்திலே இல்லாமல் இருக்கிற நிலைமை ஏற்படுகிறது.

(முற்பகல் 9—10)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிட வசதி இல்லாததே இதற்குக் காரணம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிட வசதிகளைச் செய்வதற்காக எல்.ஐ.சி.யில் கடன் பெறுவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்று ஒரு சமயத்தில் அறிவித்தார்களே, அந்த முயற்சி எந்த அளவில் இருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்களுடைய கொள்கைப்படி, பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்குக் குறைந்த வட்டி வீதத்தில் கடன் தர இயலாது என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெறுவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அரசே பட்ஜெட்டிலே, இப்பொழுது நிதி ஒதுக்கத்திலே அதிகப்படுத்தவும் முயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் நிதிநிலைமை கஷ்டம் என்று சொன்னார்கள். அது முற்றிலும் உண்மைதான். ஆனால் கல்வியின் நிலை கருதி ஷிப்டு சிஸ்டத்தைக் கொண்டு வந்திருப்பதன் காரணமாக, கிராமாந்திரங்களில் மூன்று மைல்கள், நான்கு மைல்கள் தூரத்திலிருந்து வரக்கூடிய பிள்ளைகள், அந்தப் பள்ளி காலையிலோ அல்லது மாலையிலோ ஷிப்ட் சிஸ்டத்தின்படி நடத்தப்படுவதன் காரணமாக அந்தப் பிள்ளைகள் கெட்டு விடுகிறார்கள் ; சினிமாவுக்குப் போகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட கேடான காரியங்கள் நடக்க வாய்ப்பில்லாத முறையில் செய்ய வேண்டும். குறிப்பாக தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களில் பள்ளிக் கட்டிடங்களுக்காக அவர்களே பத்தாயிரம் ரூபாய், இருபதாயிரம் ரூபாய் என்று பணம் கொடுத்திருந்தும் கட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே, பிள்ளைகளின் நலன் கருதியும், சர்க்காரின் சூழ்நிலை கருதியும் அரசாங்கம் தமிழகம் பூராவும் எத்தனை இடங்களில் பள்ளிக்



கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்றன. அவைகளைக் கட்டுவதற்கு எத்தனை கோடி ரூபாய்கள் செலவாகும் என்பதையெல்லாம் கணக்கிட்டு, ஒரு ஸ்பெஷல் ஸ்கீமாக எடுத்து, அமைச்சரவையில் கேட்பதோடு மட்டுமல்லாமல், வங்கிகளிலிருந்தும் கடன் பெற்று, மூன்றாண்டுக் காலத்திற்குள்ளே எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் கட்டிட வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசுமுன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, தொடக்கப்பள்ளிகளைப் பொறுத்தமட்டில் கட்டிடமே இல்லாத பள்ளிக்கூடங்களுக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக மூன்றாண்டுக் காலத்தில் நாம் ஒரு சிறப்புத் திட்டத்தை நிறைவேற்றி அந்தக் குறையை ஓரளவிற்கு ஒழித்திருக்கிறோம். இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவைகளுக்குக் குறைந்தபட்சத் தேவைகளைக் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது இன்றைக்கு நூறு கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இன்றைக்கே நூறு கோடி ரூபாய் தந்தால்கூட நம்மால் எல்லா வேலைகளையுமே முழுவதும் செய்ய முடியாது. அந்த அளவிற்குக் குறைந்தபட்ச தேவைக்கே நூறு கோடி ரூபாய் தேவை என்று நாம் கணக்குப் போட்டு அந்தப் பணத்தைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறோம். கடனாக இரண்டு மூன்று ஆண்டுக் காலத்தில் தந்தால் கட்டிவிடலாம். ஆனால் கல்விக்காக கட்டிட வசதிக்காகச் செலவு செய்யும் பணத்தை முதலீடு என்ற முறையில் எடுத்துக் கொள்ளாத காரணத்தால் குறைந்த வட்டி வீதத்தில் தர இயலவில்லை என்று சொல்லப்படுகிறது. இருந்தாலும் பேசிக்கொண்டு வருகிறோம். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியிலிருந்து ஓரளவுக்குப் பணம் கொடுத்தால் கொஞ்சம் வேகமாகக் கட்டிடங்களைக் கட்டடலாம்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வளர்ந்து வரும் நகரங்களில் பள்ளிக் கூடங்களைக் கட்டுவதற்குப் பணம் இருந்தாலும் இடமில்லாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, ரியல் எஸ்டேட் என்று சைட்டைப் பிரித்து, நிலங்களை வீட்டு மனைகளாகப் பிரித்துக் கொடுக்கின்றவர்கள் கட்டாயமாகப் பள்ளிக் கூடத்திற்கு என்றும் இடம் ஒதுக்க வேண்டுமென்ற உத்தரவைக் கடுமையான முறையில் அரசு பிறப்பிக்குமா? இப்படி நகரங்கள் வளர்ந்து வருகின்றபொழுது பள்ளிக்கூடங்களுக்கு இடமில்லாத சூழ்நிலை இருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கேள்வியை அது தொடர்பான அமைச்சரிடத்திலே கேட்க வேண்டும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, ஷிப்டு முறையிலே நடத்துவது என்பது பற்றி இன்றைக்கிருக்கின்ற நிலைமையிலே நியாயம்தான்; வரவேற்றக்கூடிய அம்சம்தான். இந்த ஏற்பாடு நிரந்தரமானதா அல்லது தற்காலிக ஏற்பாடா? இது

தற்காலிகமான ஏற்பாடு என்றால், நிரந்தரமாக என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவிப்பதோடு, இந்த ஷிப்டு முறையினால் அடிஷனல் உபாத்தியாயர்கள் போடப்பட்டிருக்கிறார்களா அல்லது அதே உபாத்தியாயர்கள்தான் டீச்சிங் செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவரவர்களே, ஆசிரியர்களைப் பற்றிய விவரம் இல்லை. என்றாலும், அதே ஆசிரியர்கள்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான கஷ்டமும் இல்லை. ஆசிரியர்கள் என்றால் இப்பொழுது 1-வதிலேயிருந்து 5-வது வரைக்கும் காலையிலே என்றால், உபாத்தியாயர்களுக்கும் அரைநேரம் சும்மாயிருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. அதேபோல் 6-வதிலேயிருந்து 8-வது வரைக்கும் அவர்கள் காலையிலே சும்மாயிருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. எனவே, உபாத்தியாயர்களுக்குச் சௌகரியமாகத்தான் இருக்கிறது. நிரந்தரமான திட்டம் இல்லை; வேண்டுமென்று கொண்டு வந்ததும் அல்ல. இருக்கின்ற நிலைமைகளில், முடியாத காரணத்தினால் தான் இதைக்கொண்டு வந்திருக்கிறோம். இதைத் தவிர்க்க வேண்டும்; இப்படி இருக்கக் கூடாது என்பதுதான் நம்முடைய கொள்கை.

மறைந்த கணிதமேதை ராமானுஜம் அவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்.

*வினா எண் 662—திரு. டேசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மறைந்த கணிதமேதை ராமானுஜம் அவர்கள் குடும்பத்திற்கு உதவித்தொகை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மறைந்த கணித மேதை அவர்களின் துணைவியார், திருமதி ஜானகி அம்மாளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் கீழ்க்கண்ட உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன ;

(1) மாதந்தோறும் ரூ. 500 ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

(2) மாநில அமைச்சர்களுக்கு அளிக்கப்படும் மேம்பட்ட மருத்துவ சிகிச்சைகளும் இலவசமாகப் பெறவும்; அரசு பேருந்துகளில் தமிழ்நாட்டில் எந்த இடத்திற்கும் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.



**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த கணித மேதை ராமானுஜம் அவர்கள் குடும்பத்திற்கு செய்யும் உதவிகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தத் தேதியிலிருந்து அவர்களுடைய குடும்பத்திற்கு உதவிகள் செய்யப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஆணை 4—12—1982 நாளிட்ட கல்வி அறிவியல் மற்றும் தொழில் கல்வி ஆணை எண். 2241 மூலம் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா;** தலைவர் அவர்களே, செயற்கறிய செயல் செய்து மறைந்த பெரியவர்களுக்கு அரசு உதவித் தொகை அளிப்பதனையொட்டி சமுதாயத் துறையில் தேவதாசி முறையை ஒழிப்பதற்காக அரும்பாடுபட்ட-பொட்டுக் கட்டுதல் முறையை அகற்றுவதற்கு அரும்பாடுபட்ட-மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத் தம்மையார் அவர்கள் குடும்பத்திற்கு அரசு உதவி அளிக்க முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை தனியாகக் கேட்டால்தான் பதில் சொல்ல முடியும். இது கணித மேதை சீனிவாச ராமாநுஜ அவர்கள் குடும்பத்திற்கு அளிக்கப்பட்ட உதவி பற்றிய கேள்வி. கல்வித் துறையைப் பற்றி இருப்பதால் நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆகவே, தனியாக கேள்வி கேட்டால் அதற்குரியவர்கள் பதில் சொல்வார்கள்.

**திரு குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கணித மேதை சீனிவாச ராமாநுஜம் அவர்களுடைய குடும்பத்திற்கு உதவி செய்வதாகச் சொன்னார்கள். பாராட்டுக்குரியது அது. அவர்கள் போர்ட் டிரஸ்டிலே பணிபுரிந்தார்கள் என்ற காரணத்திற்காக அவர்களுடைய நினைவை நிரந்தரமாக்குவதற்கு ஏதாவது திட்டத்தை அரசாங்கம் வைத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அப்படி ஒரு திட்டம் இல்லை.

தமிழில் புலவர் மற்றும பி. லிட். பட்டம் பெற்று வேலையில்லாமல் இருப்போர் எண்ணிக்கை

வினா எண் 663—திரு. கு. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழில் புலவர் பட்டமும், பி. லிட். பட்டமும் பெற்றவர்கள் எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கின்றனர்?

(ஆ) சென்ற ஆண்டில் (1981) எத்தனை பேர் தமிழாசிரியர்களாகப் புதிதாக நியமனம் பெற்றனர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (அ) (31-7-81 நிலவரப்படி) 4,135.

(ஆ) 1981-82-ம் ஆண்டில் 572.

விடைத்தாள்களைத் திருத்த வருகின்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயணப்படி.

*வினா எண். 664—திரு. பி ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளியின்தேர்வு சம்பந்தமான விடைத்தாள்கள் திருத்த வருகின்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு பயணப்படி எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

(ஆ) திருத்தப்படுகின்ற ஒவ்வொரு விடைத்தாள்களுக்கும் எவ்வளவு பணம் வழங்கப்படுகிறது?

(இ) இம்முறை எப்பொழுது முதல் அமலில் உள்ளது?

(ஈ) மாற்றி அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் (அ) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளியின் தேர்வு சம்பந்தமான விடைத்தாள்களைத் திருத்த வருகின்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு 'தமிழ்நாடு பயணப்படி விதிமுறை' களின்படி பயணப்படி ஒப்பளிக்கப்படுகின்றது.

(ஆ) இடைநிலைப் பள்ளித்தேர்வு விடைத்தாள் ஒன்றுக்கு ரூ. 1-ம், மேல்நிலைத் தேர்வு விடைத்தாள் ஒன்றுக்கு ரூ. 1.25-ம் வழங்கப்படுகின்றது.

(இ) இம்முறை, இடைநிலைத் தேர்வுக்கு ஏப்ரல் திங்கள் 1971-ம் ஆண்டு முதலும், மேல்நிலைத் தேர்வுக்கு ஏப்ரல் திங்கள் 1980-ம் ஆண்டு முதலும் அமலில் உள்ளது.

(ஈ) இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:—பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேப்பர்கள் திருத்துவதற்காக வருகின்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு முதல் வகுப்பு பயணப்படி கொடுப்பதில்லை என்று அரசாங்கத்திற்கு ஏதாவது புகார்கள் வந்திருக்கிறதா? அதோடு அவர்களுக்கு கொடுக்கின்ற அந்த



படி இருக்கிறதே, அதாவது எஸ்.எஸ்.எல்.சி. தாள்கள் திருத்துவதற்கு ஒரு பேப்பருக்கு 1 ரூபாயும், மேல்நிலை வகுப்பு, அதாவது ப்ளஸ் 2 பேப்பருக்கு ரூ.1.25 பைசாவும், கொடுக்கப்படுகிறதே. இன்றுள்ள விலைவாசி ஏற்றத்தின் காரணமாக, அதிகப்படியாகக் கொடுக்கப்படவேண்டுமென்று ஆசிரியர்கள் சங்கத்திலிருந்து கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை அனுதாபத்தோடு பரிசீலித்து அந்த தொகையை உயர்த்துவதற்கு மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்பதை அரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, விடைத்தாள்களைத் திருத்துகின்றவர்களுக்கு ரூபாயைஉயர்த்த வேண்டுமென்று நாம் அனுதாபத்தோடு முயற்சியை மேற்கொண்டால், மாணவர்களிடமிருந்து அதிகத் தொகையை கொஞ்சம் கோபத்தோடு வாங்க வேண்டி வரும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திருத்த வருகின்ற ஆசிரியர்களுக்கு தினசரி 20 பேப்பர்கள்தான் கொடுக்கப்படுகிறதாகத் தெரிகிறது. அந்த முறையிலே பார்த்தால் கூட ஒரு நாளைக்கு 20 ரூபாய்தான் கிடைக்கிறது. இந்தத் தொகையை வைத்து அவர்கள் நகரங்களிலிருந்து வந்து தங்கி, சாப்பாட்டுச் செலவு மற்றும் உள்ள செலவுகளை எல்லாம் செய்ய மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசாங்கம் அறியுமா? ஆகவே அவைகளை நீக்க வேண்டும் என்றமுறையிலே முயற்சிகளை மேற்கொண்டு செய்யுமா? பேப்பர் திருத்துகின்ற போது தங்குவதற்கான முறையிலே, தங்குகின்ற இடங்களிலே வசதிகள் போதுமானதாக இல்லை. இன்னும் சொல்லப்போனால் திருத்துகின்ற இடத்திற்கும் அவர்கள் தங்குகின்ற இடத்திற்கும் 2 கி. மீட்டர், 3 கி. மீட்டர் தூரம் இருக்கிறது. எனவே இவைகளைப் போக்க பேப்பர் திருத்துகின்ற இடத்திற்குப் பக்கத்திலேயே அவர்கள் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :தலைவர் அவர்களே. அவர்களுக்கு எந்த வித சிரமமும் இல்லாமல், அவர்கள் வசதியாக திருத்துவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்துகொடுக்க வெண்டுமென்று கல்வி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நல்ல பெரிய பள்ளிக்கூடங்களில் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து, அவர்கள் போக வர அல்லது அவர்கள் தங்குகின்ற இடத்திலேயே கூடுமான வரையில் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கல்வித்துறை அதிகாரிகளுக்கு சொல்லி இருக்கிறோம். இப்போதுசென்ட்ரல் வேல்யுவேசன் நடக்கின்ற போது கல்வி அதிகாரிகள் முழுவதும் அந்தக் காரியத்தைத் தான் செய்து கொண்டுஇருக்கிறார்கள்.

தற்காலிகமான ஏற்பாடு என்றால், நிரந்தரமாக என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவிப்பதோடு, இந்த ஷிப்டு முறையினால் அடிஷனல் உபாத்தியாயர்கள் போடப்பட்டிருக்கி றார்களா அல்லது அதே உபாத்தியாயர்கள்தான் டீச்சிங் செய் கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலை வரவர்களே, ஆசிரியர்களைப் பற்றிய விவரம் இல்லை. என்றா லும், அதே ஆசிரியர்கள்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான கஷ்டமும் இல்லை. ஆசிரியர்கள் என்றால் இப்பொழுது 1-வதிலேயிருந்து 5-வது வரைக்கும் காலையிலே என்றால், உபாத்தியாயர்களுக்கும் அரைநேரம் சும்மாயிருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. அதேபோல் 6-வதிலேயிருந்து 8-வது வரைக்கும் அவர்கள் காலையிலே சும்மாயிருக்கும் வாய்பு கிடைக் கிறது. எனவே, உபாத்தியாயர்களுக்குச் சௌகரியமாகத்தான் இருக்கிறது. நிரந்தரமான திட்டம் இல்லை; வேண்டுமென்று கொண்டு வந்ததும் அல்ல. இருக்கின்ற நிலைமைகளில், முடியாத காரணத்தினால் தான் இதைக்கொண்டு வந்திருக்கிறோம். இதைத் தவிர்க்க வேண்டும்; இப்படி இருக்கக் கூடாது என்பதுதான் நம் முடைய கொள்கை.

மறைந்த கணிதமேதை ராமாநுஜம் அவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்.

*வினா எண் 662—திரு. வேடசந்தூர் திரு. வி. பி. பால சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மறைந்த கணிதமேதை ராமாநுஜம் அவர்கள் குடும்பத் திற்கு உதவித்தொகை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மறைந்த கணித மேதை அவர்களின் துணைவியார், திருமதி ஜானகி அம்மாளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் கீழ்க்கண்ட உதவிகள் அளிக்கப் பட்டுள்ளன ;

(1) மாதந்தோறும் ரூ. 500 ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

(2) மாநில அமைச்சர்களுக்கு அளிக்கப்படும் மேம்பட்ட மருத்துவ சிகிச்சைகளும் இலவசமாகப் பெறவும்; அரசு பேருந்து களில் தமிழ்நாட்டில் எந்த இடத்திற்கும் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.



**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த கணித மேதை ராமா நுஜம் அவர்கள் குடும்பத்திற்கு செய்யும் உதவிகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தத் தேதியிலிருந்து அவர்களுடைய குடும்பத்திற்கு உதவிகள் செய்யப் படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஆணை 4—12—1982 நாளிட்ட கல்வி அறிவியல் மற்றும் தொழில் கல்வி ஆணை எண். 2241 மூலம் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, செயற் கரிய செயல் செய்து மறைந்த பெரியவர்களுக்கு அரசு உதவித் தொகை அளிப்பதனையொட்டி சமுதாயத் துறையில் தேவதாசி முறையை ஒழிப்பதற்காக அரும்பாடுபட்ட-பொட்டுக் கட்டுதல் முறையை அகற்றுவதற்கு அரும்பாடுபட்ட—மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத் தம்மையார் அவர்கள் குடும்பத்திற்கு அரசு உதவி அளிக்க முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** தலைவர் அவர் களே, இந்தக் கேள்வியை தனியாகக் கேட்டால்தான் பதில் சொல்ல முடியும். இது கணித மேதை சீனிவாச ராமாநுஜ அவர் கள் குடும்பத்திற்கு அளிக்கப்பட்ட உதவி பற்றிய கேள்வி. கல்வித் துறையைப் பற்றி இருப்பதால் நான் பதில் சொல்லிக் கொண்டி ருக்கிறேன். ஆகவே, தனியாக கேள்வி கேட்டால் அதற்குரியவர் கள் பதில் சொல்வார்கள்.

**திரு குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர் களே, கணித மேதை சீனிவாச ராமாநுஜம் அவர்களுடைய குடும்பத்திற்கு உதவி செய்வதாகச் சொன்னார்கள். பாராட்டுக்குரியது அது. அவர்கள் போர்ட் டிரஸ்டிலே பணிபுரிந் தார்கள் என்ற காரணத்திற்காக அவர்களுடைய நினைவை நிரந்தரமாக்குவதற்கு ஏதாவது திட்டத்தை அரசாங்கம் வைத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அப்படி ஒரு திட்டம் இல்லை.

தமிழில் புலவர் மற்றும் பி. லிட். பட்டம் பெற்று வேலை யில்லாமல் இருப்போர் எண்ணிக்கை

வினா எண் 663—திரு. கு. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழில் புலவர் பட்டமும், பி. லிட். பட்டமும் பெற்ற வர்கள் எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கின்றனர்?

[1983 ஏப்ரல் 6

(முற்பகல் 9–20)

திரு. இரா. சண்முகம்: தலைவரவர்களே, விடைத்தாள்களைத் திருத்த வருகின்ற பட்டதாரி ஆசிரியர்கள் எந்தத் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, படிப்பு சம்பந்தமான தகுதி, அவர்களுடைய அனுபவம், அவர்கள் இதற்கு முன்னால் இந்த வாய்ப்பை பெற்றிருக்கிறார்களா? இல்லையா? என்ற விவரம், எந்தவிதமான ரிமார்க்கு குறைபாடும் இல்லாமல் இருக்கிறார்களா என்றவிவரம் போன்றவைகளைப் பார்த்து, இந்த வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

### பாரதியார் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகங்களுக்கு கட்டடங்கள் கட்ட ஒதுக்கப்பட்ட நிதி

*வினா எண். 665—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கோவை பாரதியார், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகங்களுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த ஆண்டு நிதிக் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம்எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்

(ஆ) 1982–83ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரம்

பாரதியார் பல்கலைக்கழகம்

| | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| கட்டடங்கள் .. .. | 22.00 |
| நிலம் கையகப்படுத்த .. | 15.00 |
| குடிநீர் திட்டத்திற்கு .. .. | 7.96 |
| மொத்தம் | 44.96 |

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

| | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| கட்டடங்கள் கட்டுவதற்கு .. .. | 25.00 |
| நிலம் கையகப்படுத்த .. .. | 15.04 |
| குடிநீர் திட்டத்திற்கு .. .. | 2.60 |
| மொத்தம் | 42.64 |



1983 ஏப்ரல் 6]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, பாரதியார் பல்கலைக்கழகம் கோவையில் கட்டப்பட அதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள், இப்போது அதனுடைய வேலையைத் தொடங்குவதற்கு பெரிய கட்டிடங்கள் வேலை நடக்கிறதா அல்லது வேறு காரியங்களுக்கான கட்டிடம் கட்டப்படுகிறதா ? இந்தக்கட்டிட வேலையைப் பொறுத்தவரையில் அத்தியாவசிய காரியங்களுக்கான கட்டிட வேலை எந்த காலக்கட்டத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நாம் பாரதியார் பல்கலைக்கழகத்தை இப்போது திடீரென்று ஆரம்பிக்கவில்லை. ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு 'அட்டானமஸ் போஸ்ட் கிராஜுவேட்சென்டர்' என்ற முறையில் மருதமலைக்குப் பக்கத்தில் இருக்கிற பகுதியில் கட்டிடங்கள் கட்டப்பட்டு, நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அந்த இடத்தில் தான் பல்கலைக்கழகம் தொடங்க இருக்கிறோம். அதற்குப் பக்கத்தில் நிலம் கையகப்படுத்தப்பட்டு , மெயின் பில்டிங் வேறு இருக்கிறது, வைஸ் சான்ஸ்லர், ரெஜிஸ்திரார் லைபிரரியன் எல்லாம் அங்கே இருந்து செயல் பட்டு வருகிறார்கள்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, கோவையில் இருக்கக்கூடிய பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு கட்டிடம் கட்ட கிட்டத் தட்ட 45 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் கட்டிடம் கட்ட ஒதுக்கப்பட்டிருக்கின்ற இடம் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சின்னஞ்சிறு விவசாயிகள் நிலம். அந்த சிறு விவசாயிகள் வைத்திருந்த 2 ஏக்கர், 5 ஏக்கர் , 10 ஏக்கர், நிலம் கையகப்படுத்தப் பட்டிருக்கிறது. அந்த விவசாயிகள் நாங்கள் சிறு விவசாயிகள், எங்கள் நிலங்களை பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு எடுத்துக்கொண்டதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை; ஆனால் இந்த சிறு அளவு நிலத்தை நம்பி விவசாயம் செய்து வாழ்க்கை நடத்துகிற எங்களுக்கு அதிகப்படியான தொகையைத் தரவேண்டுமென்று அரசாங்கத்திற்கு மனுச் செய்திருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து, அதிகத் தொகை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதெல்லாம் சட்டப்படி தரக்கூடிய சமாச்சாரம். நிலம் கையகப்படுத்தப்பட்டு, அங்கே வேலை நடந்து கொண்டிருக்கிறது. கொடுத்த தொகை போதாது என்றால் அவர்கள் கோர்ட்டுக்குப் போக வேண்டும் .கோர்ட்டில் அதிகத் தொகை வழங்க வேண்டுமென்று சொன்னால் நாங்கள் வழங்குவோம். இது நம் இஷ்டத்திற்குத் தருவதில்லை. நாமாக உயர்த்துவதாக இருந்தால் நீங்கள் சொல்லி நான் தருவதாக இருக்கும். அது தப்பான முறை. கோர்ட்டில் அதிகம் கொடுக்க வேண்டுமென்று

சொன்னால் அதிகமாகக் கொடுக்கிறோம். இன்னொரு விவரத்தையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த 1983–84 ஆம் ஆண்டில் பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு 48 லட்சம் ரூபாயும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு 60 இலட்சமும் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

### உப்பிடமங்கலம் லிங்கத்தூரில பாலம் அமைக்கும் திட்டம்

*வினா எண். 666.—திரு. பி. எம். தங்கவேல்ராஜ் [: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா, கரூர் தாலுகா, உப்பிடமங்கலம் லிங்கத்தூரில் ஒரு பாலம் அமைக்க Part I திட்டத்தில் ரூபாய் 8 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்னும் வேலை ஆரம்பிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம்எனில் பாலம் கட்டும் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இப்பாலம் அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப் புள்ளிக்கு நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறையின் தலைமை பொறியாளரால் 5—2—1983 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஒப்பந்தக்காரரிடம் இப்பணி ஒப்படைக்கப் பட்டு தற்பொழுது மண்வேலை (Earth work) ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

### திருப்போரூர் ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

*வினா எண். 667—திரு கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியத்தில் தன்னிறைவுப்பணி முழுமையாக முடிக்கப்பட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் வேலை முடித்த ஒப்பந்தக்காரர்களுக்கு தொகை சேராமல் இருப்பது அரசுக்குத்தெரியுமா ?

(இ) அவர்களுக்கு உடனடியாக தொகை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுவிட்டன.



(ஆ) அரசால் அங்கீகரிக்கப்பட்ட வேலைகளுக்குத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. அனுமதி பெறாமல் டெண்டர் கோரப்பட்ட வேலைகளில் 30 வேலைகளுக்கு தொகை அளிக்கப்படவில்லை.

(இ) கூடுதலாக கேட்டுள்ள பணம் செங்கல்பட்டு மாவட்ட, ஆட்சித் தலைவரிடம் தற்போது பரிசீலனையில் உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை கிடைத்தவுடன் இது குறித்து பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

திரு. கெ. சொக்கலிங்கம்: : தலைவர் அவர்களே, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் முடிவடைந்து விட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் வேலை செய்த ஒப்பந்தக்காரர்களுக்கு, குறிப்பாக ஒன்பது இலட்சம் ரூபாய் பணம் நிலுவையில் இருக்கிறது. பல ஊராட்சி ஒன்றியங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த திருப்போரூர் ஒன்றியத்தில் நிலுவையில் உள்ள பணத்தை விரைவில் கொடுக்க—அந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருப்பதாகக் கூறியுள்ளார். அந்தப் பரிசீலனை முடிவடைந்த பிறகு வெகு சீக்கிரமாக கொடுக்க—அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ந. சிவஞானம் :தலைவர் அவர்களே தற்போது நடந்துவரும் தன்னிறைவுத் திட்டப் பணிகளை சில வட்டாரங்களில் மேலும் இரண்டு மாதங்களுக்கு நீட்டிப்பதற்கு அரசு ஏதாவது உத்தரவு இட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஒரு சில மாவட்டங்களில் பணிகள் முடிவடைந்துவிட்டன என்று அரசாங்கத்திற்குத் தகவல் வந்துள்ளது. முடிவடையாத மாவட்டங்களில் மீண்டும் இரண்டு மாதங்கள் கால நீட்டிப்பு கொடுக்கலாமா என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்டம் 31–3–1982 ஆம் தேதி முடிக்கப்பட வேண்டும். அப்படி முடிவடையாத ஒன்றியங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இரண்டு மாத காலம் நீட்டிக்கலாம் என்பது அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது சம்பந்தமாக அரசு எப்போது முடிவு செய்து இந்த நீட்டிப்புக் காலத்தைக் கொடுக்கும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: வெகு சீக்கிரமாக.

திரு இல. பலராமன்: தலைவர் அவர்களே, இந்த தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த வரையிலே முதல் கட்டமாக எடுத்த பஞ்சாயத்து ஒன்றியங்களை இரண்டாவது கட்டமாக மீண்டும் எடுப்பதற்கான ஆலோசனை அரசுக்கு இருக்கிறதா? அதற்கான உத்தரவு ஏதாவது பிறப்பிக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** முதல் கட்டமாக எடுக்கப்பட்ட பணிகள் எல்லாம் முடிக்கப்பட்ட ஒன்றியங்களைப் பொறுத்தளவிலும் அதேபோன்று இரண்டாவது அல்லது மூன்றாவது கட்டமாக எடுக்கப்பட்டு பணிகள் முடிவடைந்திருந்தாலும் ஒரு சில கிராமங்கள்விடுபட்டுப் போயிருக்கின்றன. அவைகளுடைய பணிகளை எல்லாம் எடுக்க வேண்டுமென்று அரசாங்கம்பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் இப்போது வறட்சி இருக்கிற காரணத்தால் முனைப்பாக அந்தச் செயல்களை எல்லாம் உடனடியாகச் செயல்படுத்த முடியவில்லையே தவிர வறட்சி முடிவடைந்தவுடன் மீண்டும் பரிசீலனை செய்யப்படும்.

**திரு. சி. கோபால் :** தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் பல மாவட்டங்களில் முடிவடைந்துவிட்டது என்ற தகவல் அரசுக்கு வந்துள்ளதா ? அந்தப் பணிகளில் ஈடுபட்ட பொறியாளர்களுக்கு இனி அரசுப்பணி கிடையாதா ? எதிர் காலத்தில் அவர்கள் நிலை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் முடிவடைந்ததாக இதுவரை தகவல் இல்லை. ஆனாலும் ஒருசில மாவட்டங்களிலே வேலை முடிவடைந்ததாக தகவல் வந்திருக்கிறது. அதற்கேற்ற முறையில், ஏற்கனவே பணியாற்றியபணியாளர்களுக்கு பின்னால் என்னென்ன உதவிகளைச் செய்ய முடியுமோ அந்த உதவிகளைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்டத்திலாவது மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள நந்தனார் பிறந்த ஊரான மேலாதனூரில், இப்போது மேலநல்லூர் என்று வழங்கப்படுகிற நந்தனார் பிறந்த இடத்தைக் கட்டி முடிப்பதற்கு அரசாங்கம்ஆவன செய்ய முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தனிக் கேள்விபோடவும்

## நகராட்சிக்குச் சொந்தமான இடங்களை ஆக்கிரத்துள்ளவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வாடகை

*வினா எண். 686 திரு. கே. சௌந்தரராசன் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நகராட்சிக்குச் சொந்தமான இடங்களை ஆக்கிரமித்துள்ளவர்களிடமிருந்து வாடகை வசூலிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?





(இ) அப்படி வாடகை வசூலிக்கப்படுவோர் பட்டியல் அறிவிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு நகராட்சியிலும் ஆட்சேபணை இல்லை என்று கருதும் ஆக்கிரமிப்புகளுக்கு உரிமையாணை கொடுக்கப்பட்டு ஆக்கிரமிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆட்சேபணை எனக் கருதப்படும் ஆக்கிரமிப்புகளை அகற்ற நகராட்சி ஆணையர்களுக்கு நகராட்சிகள் சட்டம் 182 பிரிவின்கீழ் செயல்படுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(இ) பட்டியலுக்கான விவரம் சேகரிப்பதற்காக நேரமும் ஆள் சக்தியும் அதிகமாகும்.

(முற்பகல் 9-30)

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிக்குச் சொந்தமான புறம் போக்கு நிலங்களை நகராட்சியின் அனுமதி பெற்று, ஆக்கிரக்மிப்புசெய்துள்ளவர்களிடமிருந்து வாடகை வசூலிக்கிறார்கள். அந்த வாடகை தினசரி வாடகையாக இருக்கின்ற காரணத்தினால், நிரந்தரமாக மாத வாடகையைவிட அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், இந்த தினசரி வாடகை வசூலை நிறுத்திவிட்டு, மாத வாடகையை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போதும் கூட ஆக்கிரமிப்பு செய்கின்றவர்களிடம் அதுவும் குறிப்பாக காவல் துறையினரிடத்திலிருந்து ''நோ அப்ஜக்ஷன்'' என்கின்ற முறையில், ஆட்சேபணை இல்லை என்று அறிவிக்கப்பட்டால் ஒழிய, இந்த நிலங்களை ஆக்கிரமிப்புககு கொடுப்பதில்லை. ஆகவே, ஆக்கிரமிப்பை எந்த நேரத்திலும் அகற்றப்பட வேண்டுமென்பதற்காக, தினசரி வாடகையை நாம் வசூல் செய்கின்றோமே தவிர, மாத வாடகை போடுவதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட நிலையில் மாத வாடகை போடுவது சரியாக இருக்க முடியாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் அனுமதியில்லாமல் அரசியல் கட்சி மன்றங்கள், அரசியல் கட்சிக் கொடிக் கம்பங்களை வைத்து விடுகிறார்கள். அதிகாரிகள்

அவற்றை அப்புறப்படுத்துவதற்கு பயப்படுகிறார்கள். ஆதலால் எந்தவிதமான தாட்சண்யமும் இல்லாமல், அதை அப்புறப்படுத்துவதற்கு அரசு ஏதேனும் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தாமரைக்கனி போன்ற **சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தால், கண்டிப்பாக இந்த நிலைமை நீடிக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * என்ற அந்த வார்த்தை வேண்டாம். அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

**திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் கடை வைப்பதற்கு உடல் ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. விதவைகளுக்கு கடை வைப்பதற்கு அரசு பணம் தருகிறார்கள். நகராட்சிகளுக்குச் சொந்தமான இடங்களை விதவைகளுக்கு கொடுப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் தாமரைக்கனி அவர்களை என்று சொன்னதற்குக் காரணம், பாக்கி இருக்கக்கூடியவர்கள் * * * * * என்கின்ற அந்த அடிப்படையில்நான் சொன்னேன் (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் உங்களுக்கு பாதுகாப்பு தருகிறேன். எல்லா உறுப்பினர்களும் சமமாக பாவிக்கப்பட வேண்டும். எனவே * * என்ற வார்த்தைகள் **அவைக் குறிப்பிலே** இருக்கக்கூடாது. ஆகவே, அவைகளை நீக்குகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு, விதவைகளாக இருக்கின்றவர்களுக்கு நகராட்சி மூலம் இடம் கொடுப்பதில்லை. அவர்கள் எல்லாம் சமூக நலத் துறை மூலம் அனுமதி பெற்று வந்தால், இடம் ஒதுக்கப்படுகிறது. ஆகவே, சமூக நலத் துறையை அணுகி அவர்கள் மூலம் வந்தால், நகராட்சி மூலம் இடம் கொடுக்கப்படும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மூலம் கொடுத்துக் கூட, மாநகராட்சிகள், நகராட்சிகள் இன்னும் பலபேர்களுக்கு இடம் கொடுக்கவில்லை என்ற தகவல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படி இல்லாதவர்களுக்கு ஒரு ஸ்பெஷல் சர்குலர் அனுப்பி, உடல் ஊனமுற்றவர்களுக்கு, ஏழை விதவைகளுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. அவர்கள் சர்குலர் கொடுத்தால் கூட சமூகநலத்துறை மூலமாகக் நடவடிக்கைக் குறிப்புகள் அனுப்பினாலும், நராட்சிகளில் தகுந்த இடம் இருக்கவேண்டும். அப்போதுதான் கொடுக்கமுடியும். அப்படி இடம் இல்லாமல் இருந்தால், அவர்கள் நடவடிக்கை எடுத்து நமக்கு கட்டளைகள் போட்டாலும் கூட கொடுக்க முடியாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து நடவடிக்கை எடுக்காத பல்வேறு மனுக்கள் இருக்கின்றன.

**திரு. கே. சௌந்திரராஜன்:** பேரவைத் தலைவரவர்களே, நகராட்சிகளில் பெரும் பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏழைகள் ஆக்கிரமித்திருந்தால், அவர்களை அகற்றுவதற்கு அதிகாரிகள் துடிக்கிறார்கள். திருச்சி போன்ற நகராட்சியில் பெரிய பெரிய மாளிகைகள் எழும்பி இருக்கின்றன. அவைகளையெல்லாம் அகற்றுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் ஆட்சித்தலைவர் மூலமாக அதிகாரத்தைப் பெற்றவர்கள், நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல பல இடங்களில் நேரடியாகச் சென்று, நான் ஆக்கிரமிப்புகளைக் கூடப் பார்த்தேன். அவைகளை உடனடியாக அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அதைத் தடுக்கின்ற முயற்சிகள் இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட நிலை நீடிக்குமானால் பணக்காரர்கள் அதற்குள்ளே பதுங்கிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்வது என்பது நமக்கு மிக நலமாக இருக்கும்

**திரு. பி. எஸ். துரைசாமி:** பெரும் பணக்காரர்கள் பினாமி பேரில் இடங்களை அதிகமாகப் பிடித்துக்கொள்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்தால், அப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, இல்லாத ஏழைகளுக்கு அந்த இடத்தைத் திரும்பப் பெற்றுத் தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பல்வேறு இடங்களில் வீடுகள் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆக்கிரமிப்புகளை அகற்றுவது என்று சொன்னால், வீட்டையே காலி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இவைகளையெல்லாம் கவனத்தில் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆக்கிரமிப்பாளர்கள் வேண்டுமென்றே அந்தப் பொதுச் சொத்தை வீணாக்குகின்ற காரியத்தைச் செய்திருந்தால், கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, நான் அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிந்து கொள்ள விரும்புவது, பெரும் பணக்காரர்கள் பெரிய இடங்களை ஆக்கிரமித்து பெரிய பெரிய கட்டிடங்களைக் கட்டி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். திருச்சியிலே சாரதா போன்ற பெரிய நிறுவனங்கள் கழிவறைகளைக் கூடக் கட்டிடங்களின் மையப் பகுதியிலே கட்டியிருக்கிறார்கள். நான் அறிய விரும்புவது ஏழைகள் கடைத்தெருக்களின் ஓரமாக ஆக்கிரமித்திருந்தால், அதை அகற்றுவதற்குத் துடிக்கின்ற அதிகாரிகள், இப்படிப்பட்ட பெரும் பணக்காரர்கள் கட்டிடங்களை ஏன் அகற்றாமல் இருந்துவிடுகிறார்கள்? காலங்கடந்து விட்டது என்று சொல்வது முறையாகுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதை நான் ஒரு குற்றச்சாட்டாகக் கூட எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அதே நேரத்தில், இருக்கின்ற நிலைமைகளை நாம் தான் ஆராய்ந்துபார்க்கவேண்டும். கேட்கின்ற கேள்வியைப் பொருத்துதான் பதில் இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். பணக்காரர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், தயவு செய்து குறிப்புகள் கொடுங்கள். எந்தெந்த இடங்களில் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். எவ்வளவு இடங்களை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்பதை தெரியப்படுத்தினால், உடனடியாக நடவடிக்கை எடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம். ஏழைகள் செய்கின்ற ஆக்கிரமிப்புகளை அதிகாரிகள் அகற்றுகிறார்கள் என்று சொல்வது ஒரு வகையிலே சரியாக இருக்கமுடியாது என்பதை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக பழனிவேல் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பழனி அரசாங்க ஆஸ்பத்திரியினுடைய கேட்டின் முன்பு ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். நேரடியாகப் பார்த்தேன். உடனடியாக அதிகாரிகளைக் கூப்பிட்டு அகற்றப்படவேண்டுமென்று சொன்னேன். அதுகுறித்து ஒரு கோரிக்கை கூட அரசாங்கத்திற்கு வந்தது. மீண்டும் அனுமதிக்க வேண்டுமென்று. எப்படி அனுமதிக்கமுடியும்? ஏழை எளியவர்களுக்குத் தகுந்த இடங்களில் கண்டிப்பாக அவர்களுக்கு வசதி செய்துகொடுக்கப்படும். ஏழை எளியவர்களுக்குத்தான் இந்த அரசாங்கம் இருக்கிறது என்பதை தான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



திரு. என். பழனிவேல்: இந்த நகராட்சிக்குச் சொந்தமான புறம்போக்குகளில் குடிசைப் போட்டுக்கொண்டிருக்கிறவர்களை இன்றைக்கு அரசாங்கம் பொதுமக்கள் நலனைக் கருதி காலிசெய்கிறது. அதே சமயத்தில் கட்டிடங்கள் கட்டி பலகாலங்களாகி விட்டால் அதிலே சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஏழைகள் கட்டிடம் கட்டமுடியாது. ஆகையால் நகராட்சியில் மொத்தமாக சுமார் எத்தனை பேர்களுக்கு அதை மாற்றிக்கொடுக்கலாம் என்பதை அரசாங்கம் பரிசீலித்து வருகிறதா? வறட்சியான காலத்தில், மிகவும் கொடுமையாக இருப்பதால், அதையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இன்று தமிழகத்தைப் பொறுத்த வரையில் 106 நகராட்சிகள் இருக்கின்றன. அத்தனை நகராட்சிகளில் எத்தனை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள், என்ற தினமும் எவ்வளவு நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் கணக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னால், அதற்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்க வேண்டும். அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கவேண்டும் என்று கொண்டுவந்தால், என்னவாகும்? சாலைகளை கூட ஆக்கிரமித்து விடுவார்கள். தகுந்த மாற்று இடங்களைக் கொடுக்கவேண்டும். அப்படிப் பட்ட நிலையை வளர்ப்பது என்பது சரியாக இருக்கமுடியாது.

அகத்தியன் பள்ளி கிராமத்திலுள்ள கள்ளிக்கரையை
வெட்டி கடல்நீரை உள்ளே கொண்டு வரும் திட்டம்

* வினா எண். 669—திரு. எம். எஸ். மணிக்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அகத்தியன்பள்ளி கிராமத்தில் தடுப்புச் சுவர் போல உள்ள கள்ளிக்கரையை வெட்டி கடல்நீர் கொண்டுவரும் திட்டத்திற்கு பொதுமக்களிடமிருந்து எதிர்ப்பு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவசாய நிலங்கள் பாதிக்காமலும், உப்பளத்திற்கு கடல்நீர் கிடைக்க உப்பள எல்லைக்குள்ளேயே வெட்டப்படுமா ?

(இ) இந்தக் கடல்நீர் மத்திய அரசு உப்பளங்கள் மட்டுமின்றி மாநில அரசு உப்பளங்களுக்கும் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) இவை தல அலுவலர்களின் ஆய்வில் இருக்கின்றன.

(முற்பகல் 9—40)

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பதில் அளிக்கின்ற நேரத்தில், அந்தப் பகுதிக்கு வந்து அவற்றை ஆய்வு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே மத்திய அரசிடமிருந்து லைசென்சு பெற்ற உப்பள நிலங்களுக்குத்தான் கடல் நீர் வழங்கப்படும் என்று மத்திய உப்புத் துறை அதிகாரிகள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிற, புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து அங்கே உப்பு தயாரித்து வருகின்றவர்களுக்கும் கடல் நீர் வழங்க அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததுபோல், நேற்று கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்தபோதே அது குறித்து நேரடியாகச் சென்றுதான், அங்கேயுள்ள தனியார்கள், அரசின் அனுமதி பெற்றோ, பெறாமலோ நடத்திக் கொண்டு வரும் உப்பளங்களுக்கு தண்ணீர் வழங்குவது பற்றி முடிவு செய்யலாம் என்று நான் சொல்லியிருக்கிறேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஒரு குறிப்பிலே கூட மாநில அரசு உப்பளங்களுக்கும் கடல்நீர் அளிப்பது குறித்த திட்டம் இறுதியாகும் போதுதான் பரிசீலிக்கப்படும் என்று கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இது குறித்து நேரடியாகச் சென்று முடிவு செய்யலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கடல் நீரை வழங்கும் திட்டத்தை அதிக கால தாமதப் படுத்தாமல், விரைவில் எல்லா உப்பளங்களுக்கும் கடல் நீர் வழங்க, இந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, எல்லா உப்பளங்களுக்கும் என்று அவர்கள் திரும்பவும் சொல்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே எதைக் கேட்டார்களோ அதை உள்ளடக்கித்தான் மறுபடியும் கேட்கிறார்கள். இந்தத் திட்டம் மத்திய அரசைச் சார்ந்தது. அந்தத் துறையால் நடத்தப்படுகின்ற உப்பளங்களுக்கு கடல்நீர் கொண்டு செல்லும் ஒரு திட்டமாகும். இது. ஏற்கனவே கள்ளிக்கரையை வெட்டி ஒரு இணைப்புக் கால்வாய் அமைக்க அனுமதி கோரினார்கள். அப்படி ஒரு இணைப்புக் கால்வாய் அங்கே வெட்டப்படுமானால், விவசாய நிலங்கள் பாதிக்கப்படும். எனவே மாற்று வழியாக செல்லவேண்டும் என்று சொன்னார்கள். அதை ஏற்றுக்கொண்டு மாற்று வழியாக இப்போது கால்வாய் அமைத்து இருக்கிறோம். அந்த மாற்று வழியிலே அந்தக்





கடல் நீரைக் கொண்டு செல்கிறபோது, அந்தப் பகுதியில் உள்ள உப்பளத் தயாரிப்பாளர்கள் எங்களுக்கும் கடல் நீர் வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிடலாம். என்றாலும் கூட, ஒரு சில தனி நபர்கள் தொழில் செய்யாமல் இருப்பார்கள் என்று நாம் அப்படி சொல்லிவிட முடியாது. காரணம், அவர்களை நம்பி ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் அந்த உப்பளத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். எனவே, நேரடியாகச் சென்றால், எத்தனை தொழிலாளர்கள் அங்கே வேலைவாய்ப்பைப் பெற்று இருக்கிறார்கள், அதிலே ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து அதற்குப் பிறகு அரசு ஒரு முடிவுக்கு வரும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

## விருத்தாசலம் அருகே மணிமுத்தா நதிக்கு தடுப்புச்சுவர் கட்டும் திட்டம்

*வினா எண் 670—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகராட்சியிலுள்ள மணிமுத்தா நதி தண்ணீர் நகரத்தில் புகாமல் இருக்க தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இதற்கான திட்டம் தற்போது தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் ஆய்வில் உள்ளது. இத்திட்ட மதிப்பீடு கிடைக்கப் பெற்ற பின், அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

திரு. எல். இளையபெருமாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் ஆய்வில் உள்ளது என்று சொன்னார்கள். இதிலே இரண்டு விஷயங்களைப் பார்க்கவேண்டும். ஒன்று மழைக் காலங்களில் அதிகப்படியான நீர் வந்து அது கடலில் சென்று வீணாகிப் போய்விடுகிற அவல நிலை இருக்கிறது. மற்றொன்று, விருத்தாசலம் பகுதியில் இருக்கும் அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள் கூட பாழாகிப் போகின்ற அவல நிலையும் இருக்கிறது. ஆகவே, கடந்த 10 ஆண்டு காலமாக இது சம்பந்தமாக அரசாங்கத்தை அணுகி, பொது மக்களும், அந்தப் பகுதியின் பிரதிநிதிகள் சொல்லியும், இன்னும் ஆய்வில் இருக்கிறது என்று சொல்லப்படும் நிலை இருப்பதால், அதைத் துரிதமாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, துரித நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிடும்.

ஏரிகள் மற்றும் குளங்களில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் திட்டம்

*வினா எண் 671—திரு. எம். சின்னசாமி: மற்றும் திரு மா. சின்னராஜ்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மழை நீர் தேங்கக்கூடிய பெரும்பான்மை ஏரிகள் மற்றும் குளங்களில் ஆக்கிரமிப்பு உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்புக்களை அகற்ற அரசு தீவிர நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்

(ஆ) காவல்துறை அதிகாரிகளை கலந்து ஆக்கிரமிப்புகளை அகற்ற தக்க நடவடிக்கை எடுக்கும்படி பொதுப்பணித்துறை அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள பெரும்பாலான ஏரிகள், குளங்களில் மழை நீர் அதிகமான அளவிற்குத் தேக்கம் செய்ய முடியாமல், வீணாகிப் போய்விடுவதற்குக் காரணம், அங்கே பல ஆக்கிரமிப்புகளை பலர் செய்து கொண்டு இருப்பதுதான் என்று சொன்னாலும், அதனால் தண்ணீர் அதிக அளவிற்குத் தேக்கம் அங்கே செய்ய முடியாத காரணத்தால், அந்தப் பகுதியில் உள்ள நிலத்தடி நீர் அளவும் குறைந்து விடுகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது ஒரு தேசீய நஷ்டம் என்று கூடச் சொல்லலாம். ஆகவே, தயவுசெய்து தமிழ் நாடு பூராவிலும் உள்ள அத்தகைய ஆக்கிரமிப்புகளை—அது யாராக இருந்தாலும், அவர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு—சாதாரணமாக உள்ள நிலைமையில் அதிகாரிகளைக் கலந்து கொண்டு செய்வதுபோல் இல்லாமல், ஒரு அவசர நடவடிக்கையாக இதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, குளங்களின் மடைகளில் ஆக்கிரமிப்புகளை தடுக்க வேண்டும் என்பது இந்த அரசினுடைய பொதுவான கொள்கை. ஆனால் எல்லாக் குளங்களிலேயும் இதிலே நடவடிக்கைகளை தீவிரமாக எடுத்துவிட முடியாத நிலை இருக்கிறது. காரணம் சில குளங்களின் படுகைககள் கால்நடைச் செல்வங்களினுடைய மேய்ச்சல் நிலமாக இருக்கிறது. சில இடங்களில் நிலமில்லாத ஏழை சிறு விவசாயிகள் விவசாயம் கூட செய்து வருகிற நிலை இருக்கிறது. எனவே ஆக்கிரமிப்பை அகற்றுகிறோம் என்று பெயரால் விவசாயம் பாதிக்கக்கூடிய நிலையிலோ, கால்நடைச் செல்வங்கள் பாதிக்கக் கூடிய நிலையிலோ அவைகளை முழுவதுயாக நடவடிக்கை எடுந்துச் செய்ய முடியாது.





முதலிலே நாம் பார்க்க வேண்டியது குளங்களில் நீரின் கொள் அளவு பாதிக்கப்பட்டிருக்கிறதா என்றுதான். எத்தனை ஆயிரம் கன அடி நீர் அங்கே இருக்க வேண்டும்; எவ்வளவு ஏக்கருக்கு பாசன வசதி தர வேண்டும் என்பதைப் பார்த்து. அதைப் பாதுகாக்கும் அளவிலே நடவடிக்கையை எடுக்க வேண்டிய நிலையும் இருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுக்கிற போது, சில இடங்களில் குளங்களின் கரைகளிலே பின் பக்கத்திலே பயன்படுத்தியிருந்தால், கொள் அளவு குறைவதற்கு இடம் ஏற்படும் என்ற வகையில், அந்த இடங்களில் உடனடியாக ஆக்கிரமிப்புகள் காவல் துறையின் உதவியோடு அகற்றப்படுகின்றன. மற்றப்படி 90 சதவீதம் குளங்களின் படுகைகளில் வனத்துறையின் மூலமாக மரங்களை நட்டு, அந்த இடங்களை வனத் துறைக்கு சொந்தமாக்கி பிறகு அகற்ற வேண்டும் என்று ஏற்றுக்கொண்டு, காலக் கட்டத்தில் அதை செயல்படுத்தி வருகிறோம். சில இடங்களில் தவிர்க்க முடியாத காரணத்தால், துரிதமாக, வேகமாக நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலை இருக்கிறது.

திரு. த. அன்பழகன் : தலைவர் அவர்களே, நீர்பிடிப்பு உள்ள குளங்கள் கண்மாய்களில் ஆக்கிரமிப்பு செய்வதன் காரணமாக அதன் நீர்ப்பிடிப்பு கொள் அளவு பாதிக்கப் படுகிறது. ஆக்கிரமிப்பு செய்தவர்கள் தங்களுடைய சுயநலத் திற்காக, தண்ணீரை வெளியேற்றி விடுகிறார்கள். அப்படிப் பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, வழக்குகளைப் போட அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இதனால்தான் கூடுமானவரையில் குளங்களின் பின் பகுதியில், ஆக்கிரமிப்பு செய்கின்றவர்கள் உடைப்பு செய்து விடுவதன் காரணத்தால், அதை ஒட்டி உள்ள சுற்றுப்புற நிலங்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக கட்டாயமாக ஆக்கிரமிப்புகளை தடுத்துவிடுகிறோம். அங்கேதான் வனத் துறை மூலமாக மரங்களை நட்டு, உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்ற, காவல் துறை மூலமாக உடனடியாக நடவடிக்கையை எடுக்கிறோம். எனவே எதிர் காலத்தில் இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் என்பதே இல்லாமல் போய்விடக்கூடியநிலைமையை உண்டாக்கி வருகிறோம். சில இடங்களில் மேய்ச்சல் நிலமாக பயன்படுத்தி வருகிறார்கள் அப்போது அது கால்நடைகளுக்கு தேவையாகிவிடுகிறது.

ஒவ்வொரு பகுதிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. சில இடங்களில் நஞ்சை நிலமாக இருக்கும் ஆனால் மேய்ச்சலில் நிலம் இல்லமால் இருக்கும், உதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மேய்ச்சல் நிலம் கிடையாது. அங்கே இருக்கக் கூடிய குளங்கள் "சிஸ்டம் டாங்கிலிருந்து" தான் வருகிறது. ஆகவே

அந்தப் பகுதிகளையே சில இடங்களில் மேய்ச்சம் நிலமாக பயன் படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஊருக்கு ஊர் இப்படி நிலைமைகள் மாறுபடும். ஆகவே, எந்த இடமாக இருந்தாலும் குளங்களின் பின் கரைகளில் உடைப்பு எற்படாமல் தடுப்பதற்காக, மிகத் தீவிரமாக நடவடிக்கையை எடுந்து வருகிறோம்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளிலும், குளங்கள், கண்மாய்களிலும், ஆக்கிரமிப்புகளை முதலிலேயே அகற்றாயல் அப்படியே நீண்ட நாட்கள் விட்டு விடுவதனால் தான்இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் அதிகமாக எற்பட்டு வருகினறன். அந்த ஆக்கிரமிப்புகளை வருவாய்த் துறை அதிகாரிகளைக் கொண்டு அகற்றி, விவசாயத்தை பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே. இப்போது நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் படி, பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இடங்களில் ஆக்கிரமிப்புகளை வெளியேற்ற வேண்டும் என்றாலே, வருவாய்த்துறை அதிகாரிகள் மூலமாகத்தான் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி வருவாய்த்துறை அதிகாரிகள் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கிறபோது சில பிரச்சினைகள் வந்து விடுகின்றன. அவர்கள் அந்த நிலங்களுக்கு தண்டத் தீர்வை கட்டி வந்திருப்பார்கள். அனுபவ பாத்தியதை என்று சொல்லுகிறார்கள். வழக்கு மன்றத்திற்குச்சென்று வழக்கு போட்டு தடை வாங்கிவிடுகிறநிலை எல்லாம் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் ஒரு கால அளவில் கண்மாய்கள் குளங்கள் நிறைந்திருக்கிற நேரத்தில் வனத் துறையிடம் அந்த நிலங்களைகொடுத்து விட்டு, அந்த நிலங்கள் வனத்துறைக்கு சொந்தமானதற்கு பிறகு, ஆக்கிரமிப்புகளை சுலபமாக அகற்ற நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஆகவே, எப்படி சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கலாமோ, அந்த வகையில் எல்லாம் எடுத்து, இதை தடுத்துக்கொண்டுதான் வருகிறோம்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, ஏரிகள் குளங்கள், கண்மாய்கள் உள்ள நஞ்சை நிலங்களுக்கு ஒரு காலத்தில் அதனுடைய நீர் கொள் அளவைவைத்துத்தான் ஆயக்கட்டு நிர்ணயிக்கப் பட்டது. ஆகவே உறுதியாக பாசனத்திற்கு நீர் கிடைக்கும் என்ற நிலையிலேதான்நஞ்சைத்தீர்வையைத் விவசாயிகள் செலுத்துகிறார்கள். அப்படி நஞ்சை தீர்வை செலுத்துவதற்கு விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நீரின் கொள் அளவுகுறையக் கூடிய அளவில் ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களை அகற்றி, விவசாயிகளுக்கு அரசு உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். விவசாயம் என்று வருகிறபோது, விவசாயத் தொழிலாளர்களையும் மனத்திலே கொண்டு, இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டியிருக்கிறது. அந்தப் பகுதியிலே விவசாயம் செய்யக் கூடிய தொழிலாளர்கள் கறவை மாடுகளை வைத்திருக்கிறார்கள். அந்த மாடுகளுக்கு அது மேய்





சல் நிலமாக பயன்படுத்தப்பட்டு வளமேயானால்' அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு சற்று யோசிக்க வேண்டும். இதுபோல் ஒவ்வொரு இடத்திலேயும் அந்தந்த இடங்களில் என்ன நிலைமை இருக்கிறது என்பதைப் பாறுத்து கவனிக்க வேண்டியிருக்கிறது.

(முற்பகல் 9-50)

சில இடங்களில் மேய்ச்சல் நிலங்களாக இருப்பதன் காரணத் தால் முழுவதுமாக அங்கே அவர்கள் வரக்கூடாது என்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட இடங்களில் கொள்ளளவு குறைந் திருந்தால் கரையை பலப்படுத்துகிறோம். அப்படி கரையை உயர்த்துகின்றபோது ஓரளவுக்கு பாதுகாக்க முடிகின்றது. சில இடங்களில் ஆழப்படுத்துகிறோம். எனவே கரையைச் சுற்றி இருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகளைக் கண்டிப்பாக அகற்றுகிறோம். மையப் பகுதிகளும், ஓரமாக இருக்கக்கூடிய சில பகுதிகளிலும் உள்ள நிலங்கள் மேய்ச்சல் நிலமாக இருப்பதன் கரணத்தால் அவற்றைக் கொஞ்சம் கவனிக்க முடியவில்லை என்றுதான் சொன் னேன். எனவே ஆக்கிரமிப்பை எந்தவிதத்திலும் அனுமதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய குளங்கள் அத்தனையும் மிக அதிகமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக் கின்றது. எனவே அவை அனைத்தையும் ரீ சர்வே செய்து ஃபாரஸ்ட் டிப்பார்ட்மென்ட் போட்டிருப்பது போன்று உயரமான கல் போட்டு அடையாளம் காட்டுவதற்கு ஏற்பாடுசெய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் தலைவர் அவர்களே, அது எல்லா குளங்களுக்கும் சாத்தியமானதல்ல. குளங்களில் உள்ள படுகைகள் என்பது தனியாருக்குச் சொந்த மான இடம் அல்ல. நீர் வரத்து வரக்கூடிய பிற பகுதிகள் அத்தனையும் அரசுக்குத்தான் சொந்தம். எனவே அதற்கு மேல் ஆக்கிரமித்துவிடலாம் என்று சொல்லிவிட முடியாது. எனவே தான் அந்தக் குளங்களை முதலிலே கட்டுகின்றபோது அதிலே எவ்வளவு கன அடி நீர் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப் பட்டிருக்கின்றதோ அந்த அளவுக்கு தேக்கி வைக்க முடியவில்லை என்றால் கரையை உயர்த்துவது அல்லது குளத்தை ஆழப்படுத்து வது என்ற அளவிலே இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து மிக நல்ல யோசனைதான். ஆனால் எல்லா குளங்களிலும் அப்படிச் செய்ய முடியாது. சாத்தியமான குளங்களில் அதைச் செய்வது பற்றி அரசு பரிசீலிக்கும்.

## கடலாடியில் பொதுப் பணித் துறை மூலம் ஆய்வு இல்லம் ஒன்று கட்டும் திட்டம்

வினா எண். 672—திரு. வ. சத்திய மூர்த்தி மாண்புமிகு க்தர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலாடியில் பொதுப்பணித்துறை மூலம் ஆய்வு இல் இல்லம் ஒன்று கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ் என். இரா..சேதிந்ரன்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கடைகோடிப் பகுதியில் இருக்கும் கடலாடிக்கு அருகே வாலிநோக்கம், மாரியூர் போன்ற பகுதிகளில் உப்புத் தொழில் அரசின் சார்பிலே செய்யப்படுகின்றது. எனவே அங்கே அரசு அதிகாரிகளும் பிறரும் போய்த் தங்குவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துகின்ற வகையிலே அங்கே ஓய்வு இல்லங்களைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயர் குடியில் வனத்துறை ஓய்வுமளிகை ஒன்றுள்ளது. இது கடலாடியிலிருந்து ஒரு கிலோ மீட்டர்தூரத்தில்தான் இருக்கின்றது. எனவே கடலாடியில் கட்டவேண்டிய அவசியம் இல்லை. மேலும் நிதி நிலையினை அனுசரித்து தான் ஓய்வு இல்லங்கள் கட்டப்படுகின்றன. கடலாடியில் கூட 3.70 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு ஓய்வு மாளிகை கட்டக்டிகூய மதிப்பீடு ஒன்றை இராமநாதபுரம் மேற்பார்வைப் பொறியாளர்செய்திருக்கிறார். அது அரசின் கவனத்திற்கு வரவில்லைஎன்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அறிஞர் அண்ணா சமாதி அருகே செய்யுப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் திட்டம்

வினா எண் 673—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கதர் ம்ற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறிஞர் அண்ணா சமாதி அருகே கடைகளை வைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு என் நடவடிக்கை எடுத்துள்ளது?



136029

மாண்புமிகு திரு. எஸ். இராசேந்திரன்.

(ஆ) ஆக்கிரமிப்புகளை அகற்ற சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர், மயிலை-திருவல்லிக்கேணி வட்டாட்சியர் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் துயிலுகின்ற இடத்தில் அவருடைய புனிதத்தைக் கெடுக்கின்ற அளவில் அங்கேகடைகளை வைத்து கஞ்சா, கள்ளச் சாராயம் போன்றவற்றை விற்பனை செய்கிறார்கள். மேலும் இரவிலே அங்கே உள்ள குடிசைகளில் தவறுகள் நடக்கின்றன. எனவே அவற்றை எல்லாம் அப்புறப்படுத்துகின்ற வகையில் ஒரு காலக் கெடுவினை நிர்ணயித்து அப்புறப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்களின் சமாதியின் தென்புறத்தில் கிழக்கு-மேற்காக வரிசையாக சிறு சிறு கடைகளை வைத்துள்ளார்கள் என்ற தகவல் வந்திருக்கின்றது. இந்தக் கடைகள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்ற இடம் வருவாய்த்துறையைச் சேர்ந்த இடம். எனவே கோட்ட நிர்வாகப் பொறியாளர் அந்தக் கடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். எனவே அதனை விரைவிலே அகற்றுவதற்கு பொதுப்பணித்துறை வருவாய்த்துறை அதிகாரிகளைக் கேட்டு விரைவிலே நடவடிக்கை எடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி இடம் கடற்கரைப் பகுதியாக இருப்பதால் அவை ஆக்கிரமிப்பு நிலங்களாக இல்லை. எனவே அந்தக் கடைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்றால் 6 ஆம் நம்பர் நோட்டீஸ் கொடுத்துத்தான் அகற்ற வேண்டியயிருக்கின்றது. அப்படி 6 ஆம் நம்பர் நோட்டீஸ் கொடுத்தால் அவர்கள் கோர்ட்டுக்குப் போகக் கூடிய சூழ்நிலை ஏற்படும். எனவே அந்த இடத்திற்கு விதிவிலக்கு அளித்து அறிஞர் அண்ணா அவர்கள் துயிலுகின்ற இடம் அங்கே இருக்கின்ற காரணத்தால் உடனடியாக அவற்றை அப்புறப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். [என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா சமாதியினுடைய புனிதத் தன்மை கெட்டு விடக் கூடாது என்பதற்காக இந்த நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை இந்த பொதுப்பணித்துறை எடுத்து இருக்கிறது. வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அந்த விரைவில் எடுக்க வேண்டும் என்று பொதுப் பணித்துறை வருவாய்த்துறையை கேட்டுக் கொள்ளும்.

[1983 ஏப்ரல் 6

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அங்கு இருக்கின்ற கடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடைகளுக்கு முன்னாலேயே மிக அழகான ஒரு போர்டு வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடைகளின் சொந்தக்காரர்கள் அத்தனை பேர்களும் உறுப்பினர்களாக இருக்கின்ற அண்ணா தொழிற் சங்கத்தினுடைய விளம்பர போர்டு அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே இருக்கின்றவர் அறங்காவல் குழு—தேர்வுக் குழுவின் தலைவராக இருக்கின்றவர் அங்கே இருப்பதாகவும் போர்டு போடப் பட்டிருக்கிறது. அதிலே கொடிகளும் நடப்பட்டு இருக்கின்றன. எனவே அந்த கொடிகளையும், போர்டுகளையும் தயவு தாட்சணியம் இல்லாமல் அகற்ற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஏற்கனவே ஒரு கேள்வியில் சொல்கிறபோது சொல்லியிருக்கிறார்கள். அதனை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன், அறிஞர் அண்ணா சமாதியின் புனிதத் தன்மை கெட்டு விடக்கூடாது என்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கிற காரணத்தால் இதில் கட்சி பாகுபாட்டை நிச்சயமாக இந்த அரசு பார்க்காது. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமரர் அண்ணா உறங்குகின்ற அந்த இடம் என்றும் பழுது இல்லாமல் ஆக்கிரமிப்புகளுக்கு ஆளாகாமல் சுத்தமாக வைத்துக் கொள்ளுகின்ற முறையில் இந்த அரசு, அரசு சார்பற்ற முறையிலும், கட்சி சார்பற்ற முறையிலும் தமிழ்நாடு தழுவிய ஒரு பெரிய அறக்கட்டளையை அமைக்க முன் வருமா? அதே சமயத்தில் கன்னிமாரா நூலகம் போன்ற ஒரு புகழ்மிக்க ஒரு லைப்ரரியை பேரறிஞர் அண்ணா பெயரால் அங்கே நிறுவ அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறக்கட்டளை சம்பந்தமாக அரசின் கவனத்தில் இதுவரை இல்லை, ஆனால் It will be examined. என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அறிஞர் அண்ணாவின் கொள்கை சம்பந்தப்பட்ட புத்தகங்கள் அடங்கிய நூலகம் ஒன்றை அண்ணாசமாதியின் பக்கத்தில் அமைக்கலாம் என்றமாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஆலோசனை கண்டிப்பாக பரிசீலிக்கப் படும்.



திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தலை நாயகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் துயில் கொள்ளும் இடத்தில் பகல் நேரத்தில் தமிகத்திலிருந்து வந்து அதை பார்க்கக் கூடிய தாய்மார்களின், குழந்தைகளின் கால்களில் வெப்பம் தாளாமல் கொப்பளங்கள் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா? இதிலிருந்து பொது மக்களை பாதுகாக்க இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் துயில் கொள்ளும் இடத்தைக் காணச் செல்கிறவர்கள் அல்லது வணங்கச் செல்கிறவர்கள் குளிர்ந்த நேரங்களான காலையிலோ அல்லது மாலையிலோ சென்றால் கொப்பளங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகும். ஆகவே மத்தியானம் நேரத்தில் வெயிலில் ஆர்வத்தோடு செல்வதால் கொப்பளங்கள் ஏற்படுகின்றன. அதை அவர்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக் குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) பேரவையில் விவாத வரயடுகள்.

திரு. உ. சுப்பிமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோர்ட் சம்பந்தப்பட்ட ஒரு தீர்ப்பை நீண்ட விளக்கமாக நேற்று சொல்லி விட்டீர்கள். அதற்குள் நான் செல்லவில்லை. இருந்தாலும் ஒரு சின்ன விளக்கத்தை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன். இங்கு பல பிரச்சினைகளை எடுத்து உறுப்பினர்கள் வாதாடும்போது தாங்களும் அரசு தரப்பிலும் சப்-ஜுடீஸ் என்று சொல்லி கோர்ட்டில் இருக்கின்ற காரணத்தால் இங்கே விவாதிக்கக் கூடாது என்று சொல்லப்படுகிறது. இப்போது உங்கள் தீர்ப்பின் மூலம் இந்த அவை தான் சுப்ரீம். வெளியிலிருந்து எந்தச் சக்தியும் நமக்கு ஆணை போட முடியாது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் இங்கு வாதாட அனுமதிக்கிறீர்களா? எங்களுக்கு உரிமை உண்டா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ' சப்-ஜுடீஸ்' என்பதை எல்லாம் இங்கே வாதாட முடியாது. சப்-ஜுடீஸ் என்று சொல்லிக் கொண்டு இங்கே வாதாடலாமா என்று அனுமதி கேட்பது தவறு. சப்-ஜுடீஸ் ஆக இருப்பதை பேசக் கூடாது. மற்ற

அன்றைப்பற்றி பேசலாம். அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது அதில் இன்னும் ஒன்றை சொன்னேன். சபாநாயகர் அனுமதி அளித்த காரியங்களில் பேசுவதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கட்டுப்பாடே நாம் போட்டுக் கொண்டதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று பூராவும் சொல்லியிருக்கிறேன். அதை புத்தகமாக வேண்டுமானாலும் நான் போட்டுக் கொடுத்து விடுகிறேன்.

(முற்பகல் 10—00)

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. அ. ரகுமானகான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் இன்னும் விளக்கம் அதிகம் வேண்டுமென்பதற்காக நான் ஒரு உரிமைப் பிரச்சினையை முதலமைச்சர் மீது கொடுத்திருக்கிறேன். ஐ.ஜி. மோகன்தாஸ் அவர்கள் மீது கொடுத்திருக்கிறேன். தினமணி பத்திரிக்கை மீது கொடுத்திருக்கிறேன். இப்படி பல்வேறு பிரச்சினைகளைக் குறித்து நான் கொடுத்து ஒரு மாதத்திற்கு மேலாகிறது. ஏற்கனவே தாங்கள் தீர்ப்பு வழங்கி இருக்கிறீர்கள். ஏற்கெனவே பாலசுப்பிரமணியம் அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. இது முக்கியமான பிரச்சினை. கன்டம்ப்ட் ஆப் தி ஹவுஸ் என்பது ஒரு அடிப்படையான பிரச்சினை, ஆகவே இந்த மூன்றையும் தாங்கள் பரிசீலித்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரைவத் தலைவர் : மோகன்தாஸ் மீதான உரிமைப் பிரச்சினையை விரைவிலே எடுத்துக் கொள்ள இருக்கிறேன். முதலமைச்சர் மீது கொடுத்ததை நான் தள்ளுபடி செய்து வீட்டுக்கு நான் தகவல் அனுப்பி வீட்டிலே தகவலைப் பெற்றிருக்கிறார்கள். நான் அறையிலேயே தள்ளுபடி செய்து விட்டேன் தள்ளுபடி செய்ததைப் பற்றிய தகவல் உங்களுக்கு அறிவித்து விட்டேன். ஆகவே அதை மீண்டும் அவையிலே எழுப்புவது சரியல்ல. மற்றப் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக ஏது எதை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அதை எடுத்துக் கொள்கிறேன், பொறுத்திருந்தால் ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளலாம்,

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, தாங்கள் சொல்லும்போது புத்தக ரூபத்தில் எல்லா மெம்பர்களுக்கும் கொடுப்பதாகச் சொன்னீர்கள். நிச்சயமாக புத்தக ரூபத்திலே எல்லா மெம்பர்களுக்கும் கொடுக்கப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: : கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டேன். மீண்டும் அதைப்பற்றி தெரிந்து கொள்ள விரும்புகிறேன் என்று ஏன் கேட்க வேண்டும். கொடுக்கப்படும்.

திரு. அ. ரகுமான்கான் : காவல் துறை மானியம் நாளைக்கு விவாதத்திற்கு வருகிறது. .......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: : அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் (குறுக்கீடு) எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லி இருக்கிறேன், மன அமைதி கொள்ள வேண்டியது திரு. ரகுமான்கான் அவர்களுடைய பொறுப்பு.

திரு. அ. ரகுமான்கான் : நாளைக்கு இந்த சப்ஜெக்ட் பேசப்பட்டுவிட்டால் எந்த சப்ஜெக்ட் பேச வேண்டுமென்று நான் சொல்கிறேனோ அந்த சப்ஜெக்ட்டே இன்ப்ரக்சுவஸ் ஆகிவிடும். காவல் துறையிலே நாளைக்கு ஒரு உறுப்பினர் இதைப் பற்றிப் பேசலாம். பேசி விட்டால் எந்த நோக்கத்திற்காக நான் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தேனோ '' தி வெரி பர்ப்பஸ் ஆப் இட் வில் பி டிபீட்டட் '' என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பிறகு வேறு பேரமே கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தான் பேசப் போகிறீர்கள். வேறு யார் பேசப் போவது ?

திரு. அ. ரகுமான்கான் : டிமாண்டிலே பேசுவது என்பது வேறு. காவல் துறை மானியத்திலே உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துக்களைப் பேசுவது என்பது வேறு. ஆனால் அவை உரிமை மீறிய செயலை நாங்கள் எடுத்துச்சொல்லி தங்களிடம் பரிகாரம் கேட்கிறபோது வேறு ஒரு போரம். ஆகவே அந்தப் பிரச்சினை பற்றி பேசப் பட்டுவிட்டால் என்னுடைய மனுவினுடைய நோக்கமே நிறைவேறாத சூழ்நிலை ஏற்படும். ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. எனவே இன்றைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காவல் துறையிலே நாளைக்கு நீங்கள் பேசாமல் இருந்தால் வரும். நீங்கள் பேசினால்தான் வராதே தவிர இந்தப் பொருள் நீங்கள் தான் கொடுத்திருக்கிறீர்கள். அதைப்பற்றி யாரும் பேச மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. எப்படியும் இந்தப் பிரச்சினையிலே உங்களுக்குப் பேசுகின்ற வாய்ப்பைத் தருகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : மற்றவர்கள் பேசாமல் எப்படி இருக்க முடியும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்படும். (குறுக்கீடு). ஆகாது. கற்பனையில் பேசாதீர்கள். (குறுக்கீடு) ஆயிற்று என்றால் அப்புறம் என்ன

செய்வது என்று பார்க்கலாம். அவையிலே நான் சொல்ல மாட்டேன். அறைக்கு வாருங்கள்; விளக்கம் தருகிறேன். (குறுக்கீடு) உங்களுடைய ரைட்டை கர்டய்ல் பண்ணக் கூடாது என்று தான் விரும்புகிறேன்.

திரு க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்த உரிமைப் பிரச்சினையாக இருந்தாலும் எவ்வளவுக்கு எவ்வளவு விரைவிலே எடுக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதே மாதிரியான உரிமைப் பிரச்சினை வரக் கூடிய தவறை மற்றவர்கள் செய்யாமல் இருக்க உதவும். உரிமைப் பிரச்சினை அவையிலே எடுக்கப்பட்டு தாங்கள் ஏற்றுக் கொள்ளாமல் மறுத்தால் கூட அந்த உரிமைப் பிரச்சினை மூலமாக வெளியிடப்படுகிற கருத்துக்களை பலருடைய தவறுகளைத் திருத்தப் பயன்படும்.

எனவே அந்த வகையிலே அந்த பிரச்சினையை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் மேலும் இப்படிப்பட்ட தவறுகள் தொடர்வதற்கு நாம் வழி விட்டு விட்டு, தாமதப் படுத்துவதாலே மற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்கிறோம் என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. ஆகவே உரிமைப் பிரச்சினைக்கு அடையாளமாக வாவது ஒரு வாய்ப்பு கொடுத்து, முடிவு சொல்வதை தள்ளிப் போட்டாவது, அவர்களை காப்பாற்ற வேண்டியிருந்தால் தாங்கள் காப்பாற்றலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரையும் காப்பாற்றி ஆகப் போவது ஒன்றுமில்லை. அதை எடுத்துக் கொள்கிறேன். என்று சொல்கிறேன் இன்ப்ரக்சுவஸ் ஆகாது நான் பார்த்துக் கொள்கிறேன். உங்களுக்கு அந்த உறுதியளிக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த 6 மாதக் காலத்திற்கு முன்னாலேயே ஒரு உரிமைப் பிரச்சினையை கொடுத்திருக்கிறேன். தவறான தகவல் முதலமைச்சர் அவர்கள் கொடுத்ததன் மீது அதைக் கொடுத்திருந்தேன். போன செஷனில் எடுத்துக் கொள்வதாகச் சொன்னீர்கள். இந்த செஷனிலும் சொன்னீர்கள். ஆனால் இதுவரையில் அந்த உரிமைப் பிரச்சினை சம்பந்தமாக தாங்கள் எடுத்துக் கொள்ளாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எடுத்துக் கொள்ளாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை என்னுடைய அறைக்கு வந்தால் விளக்குகிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி காவல் நிலையத்தில் ஒரு பெண் கற்பழிப்பு சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : போலீசின் நடவடிக்கையில் இருப்பதால் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதாக உங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

### 3. அறிவிப்புகள்.

#### (அ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1980) ஆய்வு செய்யப்பெற்று திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

### 4. கவன ஈர்ப்புகள்

#### சென்னை, மதுரை சட்டக்கல்லூரி விடுதிகளின் மாணவர்கள் நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எல். இளையபெருமாள், ப. நெடுமாறன், க. பாரமலை, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ஆகியோர் ஒரே பொருள்குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னைச் சட்டக் கல்லூரி விடுதி மூடப்பெற்றுள்ளதால் ஏழை மாணவர்கள் படும் இன்னல் பற்றியும் தங்கும் விடுதி வசதி பற்றியும் மற்றும் உதவித்தொகை கிடைக்காததினால் மதுரைச் சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் படும் இன்னல் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு.செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னை சட்டக்கல்லூரியைச் சார்ந்த சில மாணவர்கள் 28—12—1982 அன்று சில கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்து கல்லூரிக்குச் செல்லவில்லை. கோரிக்கைகளில் சில வருமாறு :—

1. மாணவர் பேரவைத் தேர்தல் நடத்துதல் ;
2. பருவமுறைத் தேர்வுகளில் பயிலாத மாணவர்க்கு துணைத் தேர்வு நடத்துதல் ;

3. ஐந்து மற்றும் ஆறாவது பருவமுறைத் தேர்வுகளைக் தொடர்ச்சியாக நடத்தாமல் இடைவெளிவிட்டு நடத்துதல் :

4. நகரப் பேருந்துகளில் விடுதி மாணவர்க்கு டோக்கன் மட்டும் வழங்குதல்.

இவர்கள் ஆர்ப்பாட்டம் காரணமாக கல்லூரி மூடப்பட்டதால், கல்லூரியின் விடுதியும் மூடப்பட்டது. விடுதி 25—1—1983 அன்றும், கல்லூரி 27—1—1983 அன்றும் திறக்கப்பட்டு விட்டன. விடுதியில் மாணவர்கள் ஏறக்குறைய முழு அளவில் வந்து சேர்ந்துவிட்டனர். இப்போது போதுமான அளவு தண்ணீர் வசதி இல்லை. ஆகவே விடுதியில் உணவு இன்னும் வழங்கப்பட வில்லை. புதியதாக ஒரு குழாய்க் கிணறு ஏற்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் உணவு வழங்குவதற் கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2. மதுரை சட்டக் கல்லூரிக்கான விடுதி இன்னும் கட்டப் படாததால் சில மாணவர்கள் ஐ.டி.ஐ. (I.T.I.) விடுதியில் தங்கி யுள்ளனர். வேறு சிலர் அண்ணா நகரிலிருந்த தனியார் கட்டி டத்தில் தங்கி இருந்தனர். அண்ணா நகர் கட்டிடச்சொந்தக் காரர், கட்டிடம் தனக்கு வேண்டுமெனக் கோரி விடுத்திருந்த வேண்டுகோளுக்கிணங்க இந்தக் கட்டிடம் காலி செய்யப்பட்டு விட்டபடியால், இங்கு தங்கியிருந்த மாணவர்கள் ஸ்டூடன்ஸ் டியூட்டோரியல் கல்லூரி விடுதியில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ள னர். கல்லூரிகளிலிருந்து 5 மைல் தொலைவிற்குள் வசிக்கக் கூடாது, மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விடுதியில்தான் தங்க வேண்டும் என்றுள்ள சில விதிகளை தளர்த்தி, அரசு நிலை ஆணை எண் 1390. சமூக நலத்துறை, நாள் 28—3—1983-ல், 1982–83ஆம் ஆண்டுக்கான உதவித் தொகையை மதுரை சட்டக் கல்லூரியைச் சேர்ந்த பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்க அரசு ஆணை இட்டுள்ளது. மதுரை சட்டக்கல்லூரிக்கு, தல்லாகுளத்தில் விடுதி கட்ட அரசு ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கி யுள்ளது. விடுதிக்கான வரைபடம், மதிப்பீடு அரசால் ஒப் பளிக்கப்பட்டவுடன், விடுதி கட்டி முடிக்கப்பட்டுவிடும். மாணவி களைப் பொறுத்தவரையில் இவர்களுக்கு மீனாட்சி அரசினர் கலைக்கல்லூரி வளாகத்தினுள் விடுதி உள்ளது.

3. மாணவர்கள், மாணவியர்களிடையே பதட்டநிலை எதுவும் நிலவவில்லை.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அந்த மாணவர்களுக்கு படிப்பதற்கு வசதியற்ற நிலைமையில், உணவு அருந்துகிற வழியற்ற நிலைமையில் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஸ்காலர்ஷிப் தொகை ஆதி திராவிடர் நலத்துறை மூலம் கொடுக்கப்பட்டும் 9—3—1983 வரையில் அவர்களுக்கு அந்த பணம் கொடுக்கப்படாமல் மாணவர்கள் அல்லல்படுவது அரசிற்குத் தெரியுமா ? . பரீட்சை காலம் நெருங்கி வருவதால்



உடனடியாக விடுதியை திறந்து, மாணவர்களுக்கு கொடுக்க வேண்டிய உபகார சம்பளம், கடன்வசதி சம்பளம் ஆகியவற்றை கொடுப்பதற்கு அரசு உடனடியாக ஆவன செய்யுமா என்பதை

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம்: தலைவர் அவர்களே. இந்த உதவித் தொகை தருவது சம்பந்தமான புகார் பரிசீலிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரையில் உள்ள சட்டக்கல்லூரியில் அங்கே 7 ஆண்டுக்கால மாகியும் இன்னும் விடுதி கட்டப்படப்படவில்லை. சென்ற ஆண்டு கல்வி மானிய விவாதத்தின் போது விரைவில் அதற்கான நட வடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். ஆனால் இப்போது அதே பதில் தான் இதிலே சொல்லப்பட் டிருக்கிறது. ஆகவே, உடனடியாக மதுரையிலே சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு விடுதி கட்டுகிற வேலை ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை வர் அவர்களே, விடுதிக்காக ரூ. 5 இலட்சம் நாம் ஒதுக்கியிருக் கிறோம். விடுதிக்கான வரைபட மதிப்பீடு அந்தக் குறிப்பிட்ட துறையினாலே ஒப்பளிக்கப்பட்டவுடன் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டு விடுதி கட்டி முடிக்கப்படும்.

5. வரவு-செலவுத்திட்டம், 1983–84, வாக்கெடுப்பு. —தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு. என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,16,16,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். ''

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, குத்தாலம் ஒன்றியத்தில் இயங்கிவரும் கால்நடை பராமரிப்புக் கிளை நிலையங்களுக்குத் தனியே கட்டிடங்கள் கட்டிக் கொடுப் பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர் மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 22— கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,16,16,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. கல்லன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியில் பால் பெருக்க நல்ல இன மாடுகளை வெளி மாநிலங்களிலிருந்து கொண்டுவந்து இனப்பெருக்கம் செய்வதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,16,16,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை அரசே நியாய விலையில் வழங்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,16,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. தி.கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி விதை, தவிடு இவைகளில் இருந்து எண்ணெய் எடுப்பதை, இத்தனை சதம் என்று கால்நடைகளுக்கு ஒதுக்கி வைப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21, 16, 16,000ல்ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திருஎஸ்.என்.இராமசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதி பேய்குளம் பகுதியில் ஒரு கால்நடை வளர்ப்பு நிலையம் அமைப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,16,16,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

(ஆ) கோரிக்கை எண் 30—சமூக நலன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:



''மானியக்கோரிக்கை எண். 30— சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 59,38,83,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்கு அண்மையில் பொறுப்பாளர்களை நியமனம் செய்த முறைப்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,38,83,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு எம். செல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 வயது அடைந்த அனைத்து விவசாயத் தொழிலாளர்களையும் கணக்கெடுத்து முதியோர் உதவித் தொகை கொடுக்க தகுதியுடைய அனைவருக்கும் உதவித் தொகை கொடுக்க வகை செய்வது பற்றி விவாதிக்கத் தான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 30 — சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,38,83,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால் ஊனமுற்றவர்கள் அனைவருக்கும் மூன்று சக்கர வண்டி கொடுப்பது பற்றியும், கொடுத்தவர்களுக்கு உள்ள மூன்று சக்கர வண்டி பழுதடைந்து ஓடாமல் இருப்பதை மேலும் சீர்செய்து கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 59,38,83,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கப் புத்தகத்தை நான் * படித்ததாக, மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டு அவரவர்களுடைய கருத்துக்களைக் குறிப்பிட்ட பிறகு, இறுதியில் என்னுடைய உரையில் அவர்களுக்குப் பதில் அளிக்கிறேன்:

---

* 611-679—ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

**மாண்புமிகு** பேரவைத் தலைவ: இந்த விவாதம் காலை 1½ மணிக்குள்ளாக முடிக்கப்பட வேண்டும். மாலை 4-00 மணிக்கு தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற மானியப் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகவும் விளக்கமாகவும் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு கெ. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியங்களிலுள்ள கால்நடை, குழந்தைகள் காப்பகம், சமூக நலன் போன்றவற்றின் மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விழைகின்றேன். இன்றையதினம் இந்தக் கால்நடைத் துறையைப் பற்றி அதிகமாகச் சொல்லலாம் என்றாலும் கூட, என்னைப் பொறுத்த மட்டில் ஒரு சில வார்த்தைகளை மட்டும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். கால்நடை மருந்தகங்கள், குறிப்பாக கிராமங்களில் உள்ள அந்த மருத்துவக் கூடங்கள், கிளை நிலையங்கள் சரிவர இயங்கவில்லை. அதிலும் குறிப்பாக, மருந்துகள் சரியாகக் கொடுப்பதில்லை. அப்படியிருந்தாலும் கூட, அந்தக்கூடங்கள் உள்ள கட்டிடங்கள் அரசுக்குச் சொந்தமானதாக இல்லை; வாடகைக் கட்டிடங்களிலே இருக்கின்றன. இப்போது விநியோகிப்பதற்காக வாங்கப்படும் மருந்துகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 15,000, 10 ஆண்டுகளுக்கு முன்னால் என்ன தொகை ஒதுக்கப்பட்டதோ அதே தொகை இப்பொழுது தொடர்ந்து கொடுக்கப்படுகிறது.

அப்படியென்றால் பத்தாண்டுகளுக்கு முன்னால் என்ன விலை இருந்தது? இப்பொழுது என்ன விலை இருக்கிறது என்பதைப்பற்றி அமைச்சரவர்கள் உற்றுக் கவனித்து, அந்தத் தொகையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருந்துகள் வாங்குகின்றபொழுது, கிடங்கிலிருந்து பர்ச்சேஸ் செய்யும்பொழுது, டெண்டர் கால்பார் செய்து, லோயஸ்ட் டெண்டருக்கு விடப்பட்டு அந்த மருந்துகளை வாங்குவதாகக் கேள்விப்படுகிறோம். வெளி மார்க்கெட்டிலேயும் சில வழிகளிலே மருந்துகளை வாங்குகிறார்கள். அப்படி வெளி மார்க்கெட்டில் வாங்கும்பொழுது மருந்துகளின் தரம் குறைவாக இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட நிலைமைகள் வளராமல் தடுத்து, உயர்ந்த ரக மருந்துகளையே வாங்குவதற்கு அரசு முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை உதவி மருத்துவர்கள் என்று இருக்கிறார்கள். உதவி மருத்துவர்கள் என்று ஏன் வைக்க வேண்டும். அந்தப் பெயர்களை மாற்றி அவர்களை கால்நடை மருத்துவர்கள் என்றே பதவி உயர்வு கொடுத்துவிட்டால் என்ன? எத்தனையோ





பெயர்களை மாற்றுகிறீர்கள். பெயர்களை மாற்றுவதில் நீங்கள் ரொம்ப சாமர்த்தியசாலிகள்; அதிலே நீங்கள் கை தேர்ந்தவர்கள் அப்படியிருக்கும்பொழுது இந்த உதவி மருத்துவர்கள் என்று இருப்பதை மருத்துவர்கள் என்று மாற்றுவதில் சங்கடம் ஏதும் இல்லை. எனவே, உதவி மருத்துவர்களை மருத்துவர்கள் என்று மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைத் துறைக்குத் தொழில் நுணுக்க இயக்குநர்கள் என்று இருக்கிறார்கள். கால்நடை உதவி மருத்துவர்களுக்கு வட்டியில்லாத கடன் கொடுத்தால் அவர்கள் தங்கள் தொழிலைச் செய்வதற்கும், மற்ற இடங்களில் சுற்றிப் பார்ப்பதற்கும், சப் சென்டர்களைச் சுற்றிப் பார்ப்பதற்கும் வசதியாக மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். அவர்கள் பலயிடங்களில் சுற்றிப் பார்க்க வேண்டிய அவசியமிருக்கிறது. எத்தனையோ காரியங்களுக்கு இந்த அரசாங்கம் பணத்தைச் செலவழிக்கின்ற நேரத்தில், அவர்கள் மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு வட்டியில்லாமல் கடனாகக் கொடுத்தால் அவர்கள் பல சென்டர்களையும் சுற்றிப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே, அமைச்சரவர்கள் இதைப்பற்றி உற்றுக் கவனித்து அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைத் துறைக்காக கட்டிடத்தைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அந்த மருத்துவமனைகளில் கருத்தரிக்கின்ற மருந்துகள் கூடச் சில நேரங்களில் இருப்பதில்லை. விவசாயிகள் சென்று கேட்டால், நீங்களே வாங்கி வாருங்கள் என்று அங்குள்ளவர்கள் சொல்லுகிறார்கள். கிராமத்திலுள்ள சாதாரண விவசாயி எங்கே போய் வாங்கி வர முடியும்? குறிப்பாக சப் சென்டர்களில் அப்படிப்பட்ட மருந்துகளை வைத்திருந்தால் வசதியாக இருக்கும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சமூக நலன் பற்றி எடுத்துக்கொண்டால், இந்தச் சத்துணவுத் திட்டம் படாதபாடுபடுகிறது. எங்கே பார்த்தாலும், ஒன்றியங்களிலே பார்த்தாலும், இந்தச் சத்துணவுத் திட்டம் பற்றியே விளம்பரப்படுத்தி பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இங்கேயொரு குறிப்பைச் சொல்லியிருக்கிறார்கள். 1973-74இல் 21 கோடி ஒதுக்கியுள்ளீர்கள். அதேமாதிரி, 1982-83-ல் ஆக மொத்தம், அதாவது 77,277 குழந்தைகள் காப்பகங்களுக்காக நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் கடைசியிலே சொல்கிறார்கள், அதிகமாக ஆதிதிராவிடர்களுக்கு முன்னுரிமை வழங்கியிருக்கிறது என்று.

உதாரணமாக என்னுடைய தொகுதியிலே உள்ள ஒரு நிலைமையைப் பற்றி மனு மூலமாகவும் கொடுத்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக. எங்கேயாவது ஒரு இடத்தில் தாழ்த்தப்பட்டவர்களை ஆசிரியர்களாக நியமிக்கிறார்கள் என்றால், உள்ளூரிலே உள்ள ஒரு சிலர் அல்லது கிராமங்களிலே உள்ளவர்களும் சரி, மனுக் கொடுத்து அவர்களை உடனடியாக நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். உதாரணமாக செம்பாக்கம், கொளத்தூர் என்ற இடத்தில் தாழ்த்தப்பட்ட அரிஜனப் பெண் ஒருவர் அமர்த்தப்பட்ட நேரத்தில், உடனடியாக ஒரு வாரத்தில் உள்ளூர் கிராம மக்கள் மனுக்கொடுத்து, அவ்வாறு அவர்கள் கொடுத்தவுடனேயே வேலையிலிருந்து அந்தப் பெண்ணை நீக்கம் செய்கிறார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், உள்ளூரிலே பல பிரச்னைகள் இருக்கலாம், அதற்காக இப்படியா செய்வது? ஜாதி ஒழிப்பு பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறோம், ஆனால் அது எங்கே நடக்கிறது? சாதாரண குழந்தைகள் காப்பகத்திலே நியமிக்கப்படுகின்ற ஒரு ஆசிரியைக்கே இப்படிப்பட்ட நிலைமை என்றால், மற்றயிடங்களிலே எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இது பற்றிய மனுக்கள் வந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரும், சம்பந்தப்பட்ட துறையினரும் இது நியாயமா என்பதை உற்றுக் கவனிக்க வேண்டும். யாரோ நான்கு பேர் மனுக் கொடுத்துவிட்டார்கள் என்பதற்காக உடனடியாக அவர்களை வேலையிலிருந்து நீக்குவது என்பது சரியானது அல்ல. திருப்போரூர் ஒன்றியத்திலுள்ள செம்பாக்கம், கொளத்தூர் என்ற இடத்தில் இப்படி இருக்கிறது. குறிப்பாக எந்த இடம் என்று அமைச்சரவர்கள் கேட்பார்கள் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

(முற்பகல் 10-20.)

குறிப்பாக இந்த அச்சரப்பாக்கம், கொளத்தூர் என்ற கிராமத்தில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை இனிமேல் ஏற்படாமலும், வளராமலும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

சத்துணவு ஆசிரியருக்கு சம்பளம் கொடுக்கிறார்கள். இது நிச்சயமாகப் போதாது. ஓரளவிற்கு நீங்கள் அதை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விதவைகள் குழந்தைகளுக்கு ஆண்டுக்கு ரூ. 3,000-க்கு புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அது மிகவும் குறைவாக இருக்கிறது. ரூ. 4,000-த்திற்காவது, அதை உயர்த்தி, அந்த விதவைகள் குழந்தைகளுக்குக் கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்ததாக எங்கள் தொகுதியைப் பற்றி 2,3 பிரச்சினைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். முட்டுக்காடு என்ற இடத்தில் உடல் ஊனமுற்றோர் தொழிற் சாலை ஒன்று இருக்கிறது. குறிப்பாக இதற்கு முன்பிருந்த அமைச்சரின் மூலமாகக் மனு கொடுத்தேன். இப்போதுள்ள அமைச்சரிடமும் மனுக் கொடுத்திருக்கிறேன். நான் நினைக்கிறேன்—இந்த உடல் ஊனமுற்றோர் தொழிற்சாலை கலைஞர் ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்டது என்ற காரணத்தால் இதைப் புறக்கணித்து இருப்பதாக நான் நினைக்கிறேன். தொழிலாளர்களுக்குச் சம்பளம் ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை. உற்பத்தித்திறனும் குறைந்திருக்கிறது. கலைஞர் ஆட்சியில் இருந்தபோது நாம் எவ்வளவு பாடுபட்டு அந்த தொழிற்சாலையை அமைத்திருக்கிறோம். அது இன்று சீர்குலைந்த நிலையில் இருக்கிறது. அங்கே இருக்கின்ற பல உடல் ஊனமுற்றோர்களுக்கு அவர்கள் கேட்ட வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. சம்பளமும் கிடைப்பதில்லை. உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு, டான்சி மூலமாக அதனை வாங்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு, தொழில் அபிவிருத்தி செய்வதற்கும், வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் வசதியாக இருக்கும்.

தொழிற் சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அரசு வாங்குவதற்கும், மற்றும் தனியார் மூலம் அதை விற்பதற்கும், அரசாங்கம் முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அதற்குப் பக்கத்தில், 2, 3 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த இடத்தில் அவர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டுமென்று நான் ஏற்கனவே ஒரு மனு கொடுத்திருக்கிறேன். அவர்கள், கை, கால்கள் இல்லாமல், உடல் ஊனமுற்ற நிலையில் உள்ளார்கள். அவர்களுக்கு அங்கேயே ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்தால், அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதை உடனடியாகச் செய்வதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரனூர் தொழுநோய் இல்லத்தைப் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். ஏற்கனவே கொடுக்கப்பட்ட தொகை 400 பேர்களுக்கு உணவு அளிப்பதற்குத்தான் போதுமானதாக இருக்கிறது. ஆனால் இப்போது 600 பேர்கள் இருக்கிறார்கள் பரனூர் தொழு நோய் இல்லத்தில், இன்றையதினம் உணவு கூட சரியாகக் கொடுக்கப்படுவதில்லை. 400 பேர்களுக்குக் கொடுக்கப்பட்ட உணவு இன்றைக்கு 600 பேர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அதே உணவைக் கொடுத்தால் எப்படி பொருந்தும்? 1979-ல் கொடுக்கப்பட்ட அந்த அளவு உணவே இப்போது 1983-ல் கொடுக்கப்படுகிறது. அதே 400 பேருக்கு கொடுத்ததை 600 பேருக்கு கொடுக்கவேண்டும் என்று கூறுகிறீர்கள். அதை அமைச்சரவர்கள் உற்று நோக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிப்பது கூட குறைந்துவிட்டது. ஏதோ கலைஞர் ஆட்சிக்காலத்தில் தொழுநோய் இல்லத்தை திறந்து வைத்தார்கள் என்பதால், அந்தத் திட்டத்தை, ஒதுக்கி வைக்கிறீர்களா என்று எனக்குப் புரியவில்லை. உடல் ஊனமுற்றோர் வலு இழந்து சீர்குலைந்திருக்கிறார்கள். மருந்து கூட கிடையாது. சாதம் கூட கிடையாது. அந்த நிலைமையை நீக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பரனூர் தொழுநோய் இல்லத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொக்கலிங்கம் குறிப்பிட்டார்கள். நானே ஒரு தடவை நேரிலே பரனூர் தொழுநோய் இல்லத்திற்குச் சென்றேன். அந்த மக்களைப் பார்த்தேன். நான் அங்கு சென்ற சமயத்தில் அந்த சமையல் கூடத்திற்குச் சென்று, அவர்களுக்கு சமைத்து வைக்கப்பட்ட அந்த உணவைச் சாப்பிட்டுப் பார்த்தேன். அவர்களுக்கு எவ்வளவு உணவு சமைக்கப்படுகிறது என்பதைப் பற்றியும் நான் அப்போது பார்த்தேன். நல்ல முறையிலே அங்கே அவர்களுக்குத் தேவையான உணவை சமைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டு அவர்கள் இப்படிச் சொல்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

**திரு. கெ. சொக்கலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, நான் அங்கே போடப்படுகின்ற உணவு போதவில்லை என்று சொல்கிறேன். இப்போது அங்கே 600 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் 400 பேர்களுக்கு உண்டான உணவைச் சமைத்து 600 பேர்களுக்குப் போடுவதால், அவர்களுக்கு உணவு போதவில்லை என்று தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அந்த இடத்திற்குச் சென்றபோது, அங்குள்ளவர்களைக் கேட்டேன். உங்களுக்குப் போதுமான உணவு கொடுக்கிறார்களா என்று கேட்டபோது அவர்கள் எங்களுக்குப் போதுமான உணவு கொடுக்கிறார்கள் என்றுதான் என்னிடம் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. கெ. சொக்கலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இடத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வந்ததற்கு நன்றி. அமைச்சர் அவர்கள் சென்றபோது வேண்டுமானால் அப்படிச் சொல்லியிருக்கலாம். ஆனால் அமைச்சர் அவர்கள் அங்கே சுற்றுப் பயணம் செல்கின்றபோது, என்னையும் அழைத்தால், நானே அங்கேயிருக்கின்ற குறைகளைச் சொல்கிறேன் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.





***டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற கால்நடை வளர்ச்சி, மற்றும் சமூக நலத்துறை ஆகிய திட்டங்களுக்கு கிட்டத்தட்ட 80 கோடி ரூபாய் அளவிற்கு மானியக் கோரிக்கையிலே ஒதுக்கி இருப்பதை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்திலே எடுத்து வைக்க விழைகிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரை கடந்த, 10, 15 ஆண்டுகளுக்கு மேல் சொல்லப்போனால், கூட இந்தத் துறை ஆரம்பித்த நாளிலேயிருந்து இன்றைக்கு வரையிலும், இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே அமைந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் காலம்தான் கால்நடைப் பராமரிப்பின் பொற்காலம் என்று சொல்லலாம். இன்னும் சொல்லப் போனால் கால்நடைப் பராமரிப்புத் துறையின் பொற்காலம் என்பதை விட கால்நடை பராமரிப்புத் துறையிலே பணியாற்றுகின்ற கால்நடை உதவி மருத்துவர்களுக்கு ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமைந்திருக்கிற மிகப் பெரிய பொற்காலமாக அமைந்திருக்கிறது.

அதற்கு உதாரணமாக பல்வேறு இடையூறுகளுக்கு இடையேயும், பல்வேறு அரசியல் பிரச்சினைகளுக்கு இடையேயும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு கால்நடை உதவி மருத்துவர்களை, அங்கே விரிவாக்கப் பணியாளர்களாக, அங்கே விரிவாக்க அதிகாரிகளாக நியமிக்கப்படவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்து இருப்பது நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலே உள்ள தமிழ்நாடு அரசுதான் என்பதைக் காணுகிற நேரத்திலே கால் நடை மருத்துவர்கள் சார்பாகவும், கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாகவும் அமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே டியோனார் ஸ்லாட்டர் ஹவுஸ் என்று சொல்லப்படுகின்ற, மராட்டிய மாநிலத்திலே பம்பாய்க்கு அருகே உள்ள இடத்தில் டியோனார் ஸ்லாட்டர் உ வுஸ் என்ற வகையிலே அந்தப் பகுதியிலே மிகப் பெரிய ஒரு இறைச்சிக் கூடம் இன்றைக்கு இந்தியாவிலேயே செயல்பட்டுக்கொண்டு வந்தாலும் கூட அதைவிட நவீனப்படுத்துகின்ற முறையிலே, அப்டுடேட் சைன்டிபிக் டெக்னாலஜி என்ற முறையிலே, இன்றைக்கு வளர்ந்திருக்கின்ற அறிவியல் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய இறைச்சிக் கூடத்தை நிவுறுவதற்காக தமிழகத்தில் 375 லட்ச ரூபாயைக் கொண்ட ஒரு ஆராய்ச்சிக் கூடத்தை அமைக்க, ஆசியக் கண்டத்திலேயே ஒரு நவீனமயமாக்கப்பட்ட ஒரு இறைச்சிக் கூடத்தை, அதுவும் தென்னகத்திலே தமிழ்நாட்டிலே வருவதற்கு, இந்தியாவிலேயே இரண்டாவதாக இது இருக்கும் என்று சொன்னாலும்கூட, இரண்டாவ

தாகக் கட்டப்பட்டாலும் கூட, இந்தியாவிலேயே முதன்மைத் தரத்திலே உள்ளதாக அது வரப்போகிறது. அத்தகைய இந்த இறைச்சிக் கூடத்திற்கு தமிழக அரசு பல்வேறு இடையூறுகளுக்கு இடையேயும், சில பேர்கள் இங்கே ஆராய்ச்சிக் கூடம் வேண்டாம் என்று சொன்னவர்கள் கூட உண்டு. தமிழகத்திலே இந்த ஆராய்ச்சிக் கூடத்தை நிறுவுவதில் சில பேர்கள் பல்வேறு மாநிலங்களிலேயிருந்து இங்கே குடிவந்திருக்கின்ற மார்வாடிகள், ஜெயின்ஸ் போன்றவர்கள் எல்லாம், அதற்கு ஒரு பெரிய எதிர்ப்பை உருவாக்கி, ஏற்கெனவே அதற்காக இடத்தை தேர்ந்தெடுத்த பின்னாலும்கூட, அந்த இடத்தைத் தரக்கூடாது என்று பெரிய பதவிகளிலே உள்ளவர்கள் எல்லாம் இதற்கு இடையூறுகள் உண்டாக்கிய பின்னாலும், மீண்டும் வேறு இடத்தைப் பார்த்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 2 ஆண்டுக் காலம் காலதாமதப் படுத்தியும் கூட, இன்றைக்கு அந்தத திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முனைப்பாக இருந்து, அதைச் செயல்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்த புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் நான் தமிழக மக்கள் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-30)

இறைச்சிக்கூடம் நிறுவியதன் காரணமாக, கிராம ராஜ்யம் அமைப்பேன் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கூறிய கொள்கை இங்கே நிலைநாட்டப்பட்டு இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். கிராமப்புறத்திலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் கிராமப் புறத்திலேயே விவசாயத்தை நம்பி இருந்தாலும், சில நேரங்களில்—குறிப்பாக, வறட்சி வெள்ளம் போன்ற காலங்களில், பாதிக்கப்படுகின்ற காலங்களில்—அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறை மூலமாகத் தான் தங்களுடைய பொருளாதாரத்தை ஓரளவுக்கு சீர்படுத்திக் கொண்டு, குடும்பத்தை நடத்திக்கொள்ள இருக்கின்றனர். அந்த வகையில் அந்த கிராமப் பொருளாதாரத்தை வளப்படுத்தும் வகையில், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு ஆகியவற்றை செய்வதற்கு பல்வேறு உதவிகளை அவர்களுக்குச் செய்து கொடுத்து, அதே நேரத்தில் அவர்களால் அதன் மூலம் செய்யப்படுகின்ற பொருள்களுக்கும் நியாயமான விலை கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. முன்பெல்லம் பணம் இல்லாத நேரத்தில் விவசாயிகள் ஆடுகளை கசாப்புக்கு கடைக்காரரிடத்தில் கொடுக்கும் வாய்ப்புதான் இருந்தது. தற்போது அவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலகாக அதை விற்று, அல்லது இறைச்சிக் கூடங்களில் அவற்றைக் கொடுத்து நல்ல விலை பெறமுடிகிறது. அந்த இறைச்சிக் கூடத்தின்மூலம் அவைகள் வெளி மாநிலங்களுக்கு, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அதன் மூலம் அதிகமாக வருமானம், அந்நியச்செலாவணி ஆகியவற்றைப் பெற்று, அதன் காரணமாக அந்தக் கிராமப் பொருளாதாரம் நல்ல வகையில் முன்னேறுவதற்கு இந்த இறைச்சிக் கூடங்கள் வழிவகுக்கின்றன என்பற்காக இந்த அரசையும், அமைச்சரையும் நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



கால்நடை பராமரிப்புத் துறையிலே ஆண்டு ஒன்றைுக்கு 20 மருத்துவ மனைகள் உருவாக்கப்படுவதாக நிதிநில அறிக்கையில் சொல்லப்பட்டது. இது போதாது. குறைந்த பட்சம் 50 மருத்துவ மனைகளாவது ஆண்டு ஒன்றுக்கு நிறுவினால், ஓரளவிற்கு தமிழகத்திலே வளர்ந்து வரும் கால்நடைகளுக்கு நல்ல முறையில் வைத்திய வசதியை அளிக்க முடியும். கால்நடைகளின் எண்ணிக்கை தற்போது அதிகமாக வளர்ந்து வருகின்றது. தற்போது 20,000-க்கு ஒரு மருத்துவ மனை என்று இருப்பதை 10,000-க்கு ஒரு மருத்துவ மனை என்ற அளவில் அமைக்க வேண்டும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன். இந்த அடிப்படையில் வைக்க ஆரம்பித்தால் தான்—ஆண்டு ஒன்றுக்கு 50 மருத்துவ மனைகள் கால்நடைப் பராமரிப்புத் துறையில் ஏற்படுத்தபட்டால் தான்—ஒரு 10-15 ஆண்டுக்காலத்தில் நல்ல முறையில் கால்நடைகளுக்கு வைத்திய வசதிகளை செய்து தரமுடியும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தற்போது ஆரம்பிக்கப்படும் 25 மருத்துவ மனைகளை கூட கிளை நிலையங்கள் இல்லாத புதிய இடத்தில் அமைக்க வேண்டும். ஏற்கெனவே கிளை நிலையங்களாகச் செயல்படுபவைகளை சப்-சென்டர் என்ற பெயரில் செயல்படுபவைகளை—மருத்துவ மனை என்ற நிலைக்கு உயர்த்த வேண்டும். புதிய இடங்களில் கிளை நிலையங்களை ஏற்படுத்துவதன் மூலம் ஏற்கெனவே மருத்துவ வசதி கிடைக்காத நிலையில் உள்ள கால்நடைகளுக்கு உடனடியாக ஓரளவிற்கு மருத்துவ வசதி தர முடியும். ஏற்கனவே கிளை நிலையங்களாக இருப்பவைகளை மருத்துவ மனைகளாக மாற்றுவதன் மூலம் அதை ஒரு வெட்னரி ஆஸ்பிடல் என்ற வகையில் செய்வதன் மூலம் சிறப்பான வகையில் அந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு மருத்துவ வசதி ஏற்படுத்தித் தர முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, ஏற்படுத்தப்படுகிற புதிய மருத்துவ மனைகள் ஏற்கெனவே கிளை நிலையங்கள் உள்ள பகுதிகளில் ஏற்படுத்தாமல், புதிய இடங்களில் அவற்றை ஏற்படுத்துவதுதான் பொருத்தமுடையதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில், கிளை நிலையங்களுக்கு பொது மக்கள் வந்து அதன் பயனை அறிந்து இருப்பார்கள். அந்த இடங்களில் கிளை நிலையங்களை மருத்துவ மனையாகவும், புதிய இடத்தில் பொதுமக்கள் வந்து அந்தப் பயனை அறிந்து, இங்கே இந்நிலையம் நமக்கு நல்ல வசதிகளைச் செய்து தருகிறது என்பதை அறிந்து கொள்ளவும் முடியும். ஆகவே, அந்த வகையில் இந்தத் திட்டத்தைச் செயல் படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிளை நிலையங்கள் பல்வேறு இடங்களில் இருந்தபோதிலும், அவற்றிற்குச் சொந்தமான கட்டிடங்கள் இல்லை. ஆகவே, கிளை நிலையங்களுக்கு கட்டிடங்கள் கட்ட தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் என். ஆர். இ. பி. மூலம் அனுமதி தந்தாக வேண்டும். பல்வேறு இடங்களில் அப்போதுதான் கட்டிடங்களை விரைவாகக் கட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை வளர்ச்சிக்கென்று ஏற்கெனவே ஒரு ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டு இருந்தது. 5—6 ஆண்டுகளுக்கு முன்னால் ஆலோசனைக் குழு செயல்பட்டு வந்தது. அந்த ஆலோசனைக் குழுவில் அந்தந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், சமுதாயத்தின் நலனில் அக்கறை உள்ளவர்கள், அந்தத் தொழிலில் உள்ள வல்லுநர்கள், கால்நடைப் பராமரிப்புத் துறையில் மிக அனுபவம் பெற்றவர்கள். ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவை மாவட்டந்தோறும் அமைத்து, அவர்கள் மூலம் எந்தெந்த முறையில் கால்நடை வளர்ப்பு, அல்லது பராமரிப்பு அந்தத் பகுதியில் செய்யலாம் என்பதைப் பற்றிய ஆலோசனை பெறலாம். ஆகவே, அந்த வகையில் ஒரு ஆலோசனைக் குழு நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதைப்போன்று இன்றைக்கு மிகப்பெரும் பிரச்சினை ஒன்று இருக்கிறது. நான் 1981 ஆம் ஆண்டு இந்த மன்றத்திலே வெட்டரினரி கவுன்சில் ஆக்ட் வந்தபோது அந்தச் சட்டத்தை ஆதரித்துப் பேசும்போது என்னுடைய கருத்துக்களை வெளியிட்டேன். பல்வேறு சட்ட மன்ற உறுப்பினர்கள் அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே தங்களுடைய கருத்துகளைச் சொன்னார்கள். கால்நடை மருத்துவர் கவுன்சிலுக்கு கால்நடை மருத்துவர் அல்லாத ஒருவர் தலைவராக நியமனம் செய்யப்படுவது கூடாது என்று அப்போது நான் கூறினேன். அப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள். தக்க நேரத்தில் கால்நடை மருத்துவர் ஒருவரை அதில் டைரக்டராகப் போட்டுவிட்டால் வெட்டரினரி கவுன்சிலுக்கு அவரே பிரசிடெண்டாக வரும் சூழ்நிலை வரும்; அப்போது இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று சொன்னார்கள்.

வெட்டரினரி கவுன்சில் பிரசிடென்டாக டைக்டர் ஆஃப் அனிமல் ஹஸ்பன்டரி இருப்பார். கால்நடை மருத்துவர் டைரக்டராக வருகின்ற நேரத்தில் நிச்சயமாக பிரச்சனை தீர்க்கப்படும் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரையில் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு நிலை இங்கே இருக்கிறது. அனைத்து மாநிலங்களிலும் கால்நடை மருத்துவத்தில் பட்டம் பெற்ற, பி.வி.எஸ்ஸி. படித்தவர்கள்தான் கால்நடை பராமரிப்புத் துறைக்கு இயக்குநராக இருக்கிறார்கள். அந்த வகையில் கால்நடை மருத்துவர்தான் வெட்னரி கவுன்சில் தலைவராக இருக்கிறார். ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் அதற்கு மாறுபட்ட நிலை இருக்கிறது. இந்த நிலையை வெகு விரைவில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்றத்திலே வழக்கறிஞர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். வழக்கறிஞர்களை கொண்டிருக்கிற ''பார் கவுன்சிலுக்கு'' ஒரு வழக்கறிஞர்தான் தலைவராக இருக்கிறார். அதைப் போன்று மெடிக்கல் கவுன்சில் இருக்கிறது. அந்த கவுன்சிலுக்கு ஒரு



மருத்துவர், மெடிக்கல் மேன் தான் தலைவராக இருக்கிறார். ஆனால் என்ன காரணத்தாலோ வெட்டரினரி கவுன்சிலுக்கு மட்டும் கால்நடை மருத்துவர் அல்லாத ஒருவர் தலைவராக இருக்கிறார். இதை வெகுவிரைவில் மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கோழி வளர்ப்பைப் பொறுத்த வரையில், கோழி விற்பனை பற்றிய விவரம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. கோழிகள் விற்பனைப் பட்டியலைப்பார்க்கும் போது 1978 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரையில் ஓரளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஆனால் 1981-ல் மிகவும் குறைந்து காணப்படுகிறது. அதற்கு என்ன காரணம் என்று விளக்கப்படவில்லை.

இங்கே பல்வேறு மாவட்டங்களின் தலைநகர்களிலும் கோழி முட்டைகள் விற்பனை, கோழி இறைச்சி விற்பனை கடைகளை அமைப்பது பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். அவற்றை இன்னும் திறம்பட செயல்படுத்த வேண்டும். தனியார் துறையில் எடுத்துக்கொண்டால், நாமக்கல், இராசிபுரம் பகுதிகளில் இந்த கோழி வளர்ப்பின் மூலம் விவசாயப் பெருங்குடி மக்கள் அதிக வளம் பெற்று உயர்ந்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அரசுத் துறையில் அந்த அளவுக்கு முன்னேற்றம் இல்லாவிட்டாலும் ஓர் அளவுக்காவது முன்னேற்றம் இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்று சொல்லலாம். மனம் தளர்வு அடையக்கூடிய நிலையில் தான் இருக்கிறது. இந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும்.

அரசுத் துறையில் ''கேச்சரி சென்டர்ஸ்''—கோழி குஞ்சு பொரிக்கும் நிலயங்களை மட்டும் வைத்துக்கொண்டு, முட்டை உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு வைத்து இருக்கிற நிலையங்களை மூடிவிடலாம், அவை தேவை இல்லை. முட்டை உற்பத்திப் பெருக்கத்தைப் பொறுத்த வரையில் அதை தனியார்களிடம் விட்டுவிடலாம். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஆதரவு தந்து, அவர்கள் இந்தப் பணியை திறம்படச் செய்ய உதவி செய்யலாம். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச் திட்டம், அதைப் போன்ற மற்ற திட்டங்கள் அடிப்படையில் அவர்களுக்கு கடன் வசதி மற்றும் பல்வேறு வகைகள் மூலம் ஊக்கமளித்து, இது பற்றி நல்லவிளம்பரம் தந்து, கோழி வளர்ப்பை விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தந்து அவர்கள் முன்னேற வழி செய்தால் அவர்களும் லாபமடைவார்கள், அராசங்கத்திற்கும் இந்த வகையில் இழப்பும் இருக்காது.

தமிழ்நாடு பால்வள நிறுவனம் செயல்படுவதைப் போன்று, விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து முட்டைகளை வாங்கி, உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கொடுத்து, வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு நியாயமான விலைக்குக் கொடுக்கும் வகையில் ரெகுலேட்டட் மார்க்கெட்டை அமைக்க வேண்டும். அந்த

மார்க்கெட் மூலம் ஓரளவு ''ஃபிக்சட் பிரைஸுக்கு'' முட்டை
களை வாங்க வேண்டும். அதே நேரத்தில் விலையில் இருக்கிற
ஏற்ற இறக்கத்தைக் கட்டுப்படுத்தவும் வேண்டும். ஏன் இதைச்
சொல்கிறேன் என்றால் சென்னையில் வாழ்கின்ற மக்களுக்கு
ஆந்திராவிலிருந்து முட்டைகள் வரவழைக்கப்படுகின்றன. ஆனால்
நாமக்கல், இராசிபுரம் பகுதிகளில் உற்பத்தியாகும் முட்டைகள்
பெங்களூருக்கு அனுப்பப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலை
களைக் கருதிப் பார்த்து, வெளி மாநிலங்களிலிருந்து நாம்
கொண்டு வருவதில் இருக்கின்ற சிரமத்தைப் பார்த்து, அதனால்
முட்டை விலையில் ஏற்ற இறக்கம் ஏற்பட்டு வாங்கிச் சாப்பிடு
கிறவர்களுக்கும் உற்பத்திச் செய்கிறவர்களுக்கும் இன்னல்கள்
ஏற்படுவதால் அதை முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

இன்றைக்கு அப்படி ஒரு முறை நிச்சயமாக கொண்டு
வரப்படுமேயானால் தான், கோழிப்பண்ணைகளை வைத்து,
கோழி வளர்ப்பிலே ஈடுபட்டிருக்கும் விவசாயப்பெருங்குடிமக்கள்,
நம்பிக்கையையும், சுய தைரியத்தையும் பெறுவார்கள். நாம்
பண்ணைகளில் உற்பத்தி செய்கிற முட்டைகளுக்கு நல்ல விலை
கிடைக்கும் என்ற நிலையில், பண்ணைகளை இன்னும் அதிக
அளவில் அமைக்க, ஊக்கம் பெறுவார்கள். தங்களுடைய வாழ்
வில் பொருளாதார முன்னேற்றமும், உயர்வும் கிடைக்கும் என்ற
நம்பிக்கையைப் பெறுவார்கள் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்
படுகிறேன்.

அதே போல மின்சாரத்தை எடுத்துக் கொண்டால், கோழிப்
பண்ணைகளுக்கு மின் கட்டணத்தில் சலுகை அளிக்கப்பட்டிருக்
கிறது. ஆனால், அரசாங்கத் துறையில் வைத்திருக்கிற கோழிப்
பண்ணைகளுக்கு மட்டும் தான் மின் கட்டணத்தில் சலுகை
அளிக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறைகளுக்கு தரப்படவில்லை.
கோழிப் பண்ணையை வைத்திருக்கும் தனியார்கள் பெரிய
முதலாளிகளாக இருந்துவிட முடியாது. கிராமங்களில் இருக்கக்
கூடிய சிறு விவசாயிகள் தங்கள் விவசாயத்திற்கு, இதை ஒரு
துணைத் தொழிலாகத்தான் கொண்டிருக்கிறார்களே தவிர வேறு
அல்ல. வறட்சிக் காலங்களில், வெள்ளப் பெருக்கு வரும் காலங்
களில், ஏற்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வை சரிகட்டிக்
கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் ஆங்காங்கே உள்ள
சிறு விவசாயிகள், 1 ஆயிரம், 2 ஆயிரம் கோழிகளை வைத்து,
கோழிப் பண்ணை அமைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்
களுக்கு எல்லாம் இந்த மின் கட்டணச் சலுகை அளித்தாக
வேண்டும்.

அதே போல கோழி தீவனங்களுக்கு போடப்பட்டிருக்கிற
டாக்ஸ். இப்படி தனியாக அந்த கோழித் தீவனங்களுக்கு
போடப்பட்டிருக்கும் வரிகளை விலக்கி, வரி விலக்கு தந்து, அவர்



களுக்கு உதவ வேண்டும் என்று அரசை வலியுறுத்திக் கேட்டுக்
கொள்கிறேன். அதே போல ஒவ்வொரு கால்நடை மருத்து
வர்களுக்கும், ஏதாவது ஒரு வாகனம், மோட்டாரோ, மோட்டார்
சைக்கிளோ, ஏதோ ஒரு வெஹிகல் தந்தாக வேண்டும். ஒவ்வொரு
கால்நடை மருத்துவ மனையைச் சுற்றிலும், 20 மைல், 25 மைல்,
சுற்று வட்டாரங்கள் அவருடைய லிமிட்டுக்குள் வருவதால், அவர்
ஒவ்வொரு முறையும் 20 மைல், 15 மைல் நடந்து போய்க் கொண்
டிருக்க முடியாது. ஆகவே, அவர்களுக்கு எல்லாம் மோட்டார்
பைக் தந்தால்தான் அவர்களுடைய பணி சுலபமாகும். இனாமாக
தரவில்லை என்றாலும் கூட, வட்டியில்லாத கடனாக தந்தால்,
மோட்டார் பைக் போன்றவை வாங்கிக் கொண்டு, திருப்பிக்
கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள
ஆசைப்படுகிறேன்.

சமூகநலத்தைப் பொறுத்த வரையில், 1975—76-லே 12
இலட்சம் ரூபாய் மட்டுமே இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிலை
மாறி 1 கோடியே 4 இலட்சம் ரூபாய் அளவுக்கு அந்த நிதி
ஒதுக்கம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்றால், அது ஒரு பாராட்டத்
தக்க நிலை ஆகும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அதிலே
கிராமப்புற பெண்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக
பல்வேறு தொழில்களுக்கு நம்முடைய, புரட்சித் தலைவர் அவர்
களின் தலைமையிலான தமிழக அரசு பெருவாரியாக ஊக்கம்
அளித்திருப்பதற்காக, அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கி
றேன். தீப்பெட்டித் தொழிற்சாலை, பனைப் பொருள்கள்
தயாரிக்கும் தொழிற்சாலை, சாக்குக் கட்டி தயாரிக்கும் தொழிற்
சாலை, நோட்டு புத்தகம் தயாரிக்கும் தொழிற்சாலை, கிராம
நூற்பாலைகள் போன்றவற்றை ஏற்படுத்தி அவர்களுடைய
வாழ்வு வளமுறச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததற்காக நான்
அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே, சாக்கட்டி மற்றும் மெழுகுவர்த்தி தயாரிக்கும் கூடங்
களுக்கு உரிமங்கள், 1977-க்கு முன்னாலே பல பேர்களுக்கு
கொடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் மெழுகுவர்த்தி தயாரிக்கி
றோம் என்று சொல்லி, ஒருசில தொழிற் கூடங்களை அரசுக்குக்
காட்டிவிட்டு, கன்ட்ரோல் விலையில், அதற்கான மூலப் பொருள்
களை வாங்குவதற்கான உரிமங்களை சிலர் பெற்று வைத்திருக்கி
றார்கள். உண்மையில் அத்தகைய தொழிற்சாலைகள்
இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. அந்த உரிமங்களைப்
பெற்று வைத்துக் கொண்டு, தீப்பெட்டி போன்ற தொழிற்சாலை
களுக்கு, மெழுகுவர்த்தி மற்றும் அதன் மூலப் பொருள்கள் பெரும்
அளவில் தேவைப்படுவதால், அந்தத் தொழிற்சாலைகளுக்கு இந்த
உரிமங்களை விற்றுவிடுகிறார்கள். நடுவில் அவர்கள் கொள்ளை
லாபம் அடிக்கிறார்கள். இப்படி அரசாங்கத்தை ஏமாற்றுகிற
சூழ்நிலை இருக்கிற காரணத்தால், 1977-க்கு முன்னாலே யார்
யாருக்கு அந்த உரிமங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது
என்று பார்த்து, அந்த நபர்கள் உண்மையாகவே அந்த உரிமங்
களை மெழுகுவர்த்தி தயார் செய்ய உபயோகப்படுத்துகிறார்
களா என்று கண்டறிந்து, அப்படி உண்மையாக பயன்படுத்தாத

வர்களை கண்டுபிடித்து, கடுமையான தண்டனை அளிப்பதோடு மட்டுமல்லாமல், அந்த உரிமங்களையும் பறிக்கின்ற நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். இத்தகைய நடவடிக்கையை அரசாங்கம் வேகமாக ஒரு எமர்ஜென்சி என்று சொல்லக்கூடிய அடிப்படையிலே தீவிரமாக ஆரம்பித்து, இந்தத் துறையில், ஊழலை செய்து கொண்டிருக்கும் இப்படிப்பட்டவர்களை கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும். இதை கட்டாயம் கடுமையாக எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இது இப்போது மிகப் பெரிய ஊழலாகப் பரவியிருக்கிறது. ஆகவே இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பல திட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை, பட்டுப்புழு வளர்ப்பு திட்டம், மற்றும் தையற்கலை சங்கங்கள் என்ற அளவில் பல திட்டங்கள், கிராமப்புறத்தில் இருக்கும் தாய்மார்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல உணவு விடுதிகள் ஆரம்பிக்க விதவைகளுக்கு கடன் உதவி போன்றவற்றை அளித்து அரசாங்கம் ஊக்குவித்து வருவதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதில் முக்கியமாக ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவிலே இன்றைக்கு விஞ்ஞான வளர்ச்சி வெகு வேகமாக ஏற்பட்டு வருகிற காரணத்தால், விஞ்ஞானத் துறையிலே நாம் பெரிதும் முன்னேறியிருக்கிற காரணத்தால், நாகரீக வளர்ச்சியும் நம்மிடையே அதிகமாக பரவி வருகிறது. இந்தச் சூழ்நிலையில், கைவினைப் பொருட்கள் எனப்படும் ஹேண்டிகிராஃப்ட்ஸ் பொருட்களுக்கு எவ்வளவுதான் உதவிகள் செய்து வளர்க்கப்பட்டாலும், வளர்ந்து வரும் நாகரிகத்தின் விளைவாக அந்தத் தொழிலகங்களில் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு நல்ல மார்க்கெட்டிங் விலை இல்லை. ஆகவே இது போன்ற தொழில்களுக்கு உதவிகள் செய்து, ஊக்கம் அளிப்பதை விட்டு விட்டு, இனிமேலாவது நவீன தொழில் முறைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று, இந்த அரசு, மின்சார உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, மின்னணு தயாரிக்கும் தொழிற்சாலை, சிறிய அளவில் இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, போன்ற நவீன தொழிற்கூடங்களுக்கு ஊக்கம் அளித்து, அவைகளை புதியதாக கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இப்படிப்பட்ட திட்டங்களை அமைத்தால்தான் நாளைய நவீன இந்தியாவிற்கு உபயோகப்படுகின்ற நிலைமை இருக்கும். நாளைக்கு தமிழகத்திலே ஏற்படுகின்ற நாகரிக வளர்ச்சியின் அடிப்படையிலே, விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படையிலே இதை வாங்கி உபயோகப்படுத்துகின்ற மக்களுக்கு உபயோகமாக இருக்கும். எனவே தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே தமிழகத் தாய்மார்களுக்கு நவீனத்



தொழில்களிலே பயிற்சி அளிக்கவேண்டும் என்ற வகையில் திட்டங்கள் தீட்டப்படுவதை எண்ணுகின்றபோது நான் மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வாழ்க்கைக்குப் பயன்படுகின்ற தொழில்களான தட்டச்சுத் தொழில், கணக்கிடுவது, சுருக்கெழுத்து போன்றவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படுவது பாராட்டத்தக்கது. இந்தப் பயிற்சிகளைப் பொறுத்தவரையில் இப்போது 50, 70 பேர் என்ற அளவிலேதான் பயிற்சியளிக்கப்படுகிறார்கள். எனவே அந்த எண்ணிக்கையினை அதிகப்படுத்தி படித்த பெண்களுக்கும், படித்த தாய்மார்களுக்கும் இன்னும் அதிகமான பயிற்சியளிக்கவேண்டும். 6,343 குழந்தைகள் நல நிலையங்களை கல்வித்துறையோடு இணைந்து நர்சரிப் பள்ளிகளாக ஆக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அது மட்டுமல்லாமல் சத்துணவுக் கூடங்கள் மற்றும் சமுதாயக் கூடங்கள் அனைத்திலும் குறளமுது ஆசிரியர்களை வைத்து நடத்தச் சொல்லியது போல் அதையும் ஓரளவுக்கு நர்சரிப் பள்ளிகளாக ஆக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ சத்து குறைவதன் காரணத்தால் அவர்கள் பெரியவர்களாக வளர்ந்தபின் கண் நோய்கள் அதாவது மாலைக்கண் போன்ற நோய்கள் ஏற்படுகின்ற சூழ்நிலை இருப்பதன் காரணத்தால் சத்துணவுக் கூடங்களின் மூலமாக மாதம் ஒரு முறை அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை காட்லிவர் ஆயில் என்று சொல்லப்படுகின்ற மீன் எண்ணெய் மாத்திரைகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இப்படிப்பட்ட ஊட்டச்சத்துக்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதேபோல் பீரியாடிக்கல் வேக்ஸினேஷன் என்ற வகையில் முறைப்படுத்தப்பட்ட தடுப்பூசிகளை அவர்களுக்குப் போடுகின்ற வகையில் மக்கள் நல்வாழ்வுத் துறையோடு சமூக நலத்துறை இணைந்து செயல்பட்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். எனவே அங்கே மருத்துவர்களை அனுப்பி அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுகின்ற மருத்துவர்களை மாதம் ஒருமுறை ஒவ்வொரு சென்டருக்கும் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி அனுப்பி அவர்கள் ஜெனரல் செக் அப் செய்து குழந்தைகளுக்கு என்னென்ன நோய்கள் இருக்கின்றன. அவர்களுக்கு என்னென்ன தடுப்பு மருந்துகளைத் தரவேண்டும், பிற்காலத்தில் வருகின்ற இன்னின்ன நோய்களுக்கு இன்னின்ன தடுப்பு ஊசிகளைப் போடலாம் என்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மால் நியுட்ரிஷன் என்று சொல்லப்படுகின்ற வகையிலே பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தினை அளிக்கின்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும்.

எதிர் கால நோக்கத்தோடு நல்ல ஒரு வளர்ச்சித் திட்டங்களோடு தமிழகத்தில் வாழ்கின்ற தாய்மார்களுக்கும், தமிழகத்திலே பாதிக்கப்பட்ட விதவைத் தாய்மார்களுக்கும் உதவுகின்ற வகையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற திட்டங்களை நான் வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து கால்நடை மருத்துவத்துறை, கால்நடை பராமரிப்புதுறை ஆகியவற்றில் பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கால்நடை பராமரிப்புத்துறை, விவசாயத்துறையின் ஒரு துணைத் துறை போன்று செயல்பட்டு வருவது உண்மை. இருப்பினும் கால்நடை பராமரிப்புத்துறை தமிழகத்தில் நல்லதொரு வளர்ச்சியைப் பெறுவதற்காக கால்நடை பராமரிப்புத் துறைக்கு என்று தனியாக ஒரு கமிஷனரை, தனியாக ஒரு செக்ரட்டரியை நியமித்து அதை தனியாக ஒரு துறையாக ஆக்கவேண்டும். அப்படி ஏற்படுத்தினால் இங்கே இருக்கின்ற இயக்குநரை தொழில் வல்லுனராகவும், அனிமல் ஹஸ்பன்டரி கமிஷனராக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியையும் நியமித்தால் பிரச்சினைகள் இரண்டு பக்கமும் எழும்பாது என்று சொல்லி உடனடியாக அதைச் செயல்படுத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் அவர்கள் பேசுகின்ற போது நவீன இறைச்சிக் கூடம் ஆரம்பிப்பதற்கு ஜைன மதத்தைச் சேர்ந்தவர்கள் தடையாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதை ஆரம்பிக்கக்கூடாது என்று ஜைன மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் சொல்லவில்லை. இந்து மதத்தைச் சேர்ந்தவர்களும், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களும், முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவர்களும் எதிர்ப்பைச் தெரிவித்திருக்கிறார்கள். வனச் செல்வத்தை எப்படி காப்பாற்றவேண்டும் என்று சொல்கிறோமோ அதேபோன்று கால்நடைச் செல்வங்களும் அழிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் அந்த எதிர்ப்பினைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

(முற்பகல் 10-50)

*திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கால்நடை, சமூகநலம் என்ற மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைச் சொல்லி என்னுடைய ஒரு சில கருத்துக்களை சொல்லலாம் என விழைக்கிறேன்.



இன்றைய தினம் நாட்டிலே எல்லா அரசியல் கட்சிகளும் விவசாயிகள் தான் நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லிக் கொண்டு அவர்களுடைய வாக்குகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால், விவசாயிகள் என்று சொல்கிறபோது கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் பெரிய அளவில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாக்குகளைப் பெற்றுக்கொண்டு நாம் அவர்களுக்கு சில காரியங்களைச் செய்ய முடியாத சூழ்நிலையில் இருந்துகொண்டு இருக்கிறோம். இன்றைய தினம் கிராமத்தில் உள்ள கால்நடைகள் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்ததால்தான் விவசாயம் மட்டும் அல்லாமல் மக்களும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு கால்நடைகள் மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் விவசாயத்திற்கு கால்நடைகளை நல்ல முறையில் வளர்த்து, பால்வள திட்டங்களுக்கு கறவை மாடுகளை நல்ல முறையில் வளர்த்து நாம் செயல்படுத்திக்கொண்டிருக்கும் நேரத்தில் எல்லா கிராமங்களிலும் இன்றையதினம் வறட்சி ஏற்பட்டு இருந்தாலும் அந்த வறட்சியின் காரணமாக பல ஆயிரக்கணக்கான மாடுகள் இன்றைய தினம் கேரளாவுக்கு அடி மாடுகளாக செல்லும் ஒரு பரிதாபமான நிலையை பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த நிலையைப் போக்கவேண்டும் என்று சொன்னால் இன்றையதினம் கால்நடைகளைப் பொறுத்தவரையில் அதற்கான மிக தீவிரமான ஒரு செயல் திட்டத்தை கொண்டு வரவேண்டும். தீவிரம் தீவிரம் என்று சொல்லிக்கொண்டிருக்கும் நேரத்தில் நாம் தீவிரத்தைக் காட்டாமல் ஏதோ ஒரு மந்தமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம் நம்மிடத்தில் உற்சாகத் திறமையின்மைதான். அதிகாரிகள் மட்டத்தில் உற்சாகம் இல்லாத காரணத்தால் அவைகள் இன்றையதினம் மிகவும் பாழாகிக்கொண்டிருக்கிறது. பொதுவாக எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ராமலிங்கம் அவர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்றையதினம் கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில் அக்ரிகல்சுரல் யூனிவர்சிட்டி என்ற அமைப்பின் கீழ் இரண்டும் சேர்ந்து இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதை மாற்ற வேண்டும். அதை மாற்றி கால்நடை துறையைப் பொறுத்தவரையில் கால்நடைக்கு என்று தனியாக ஒரு யூனிவர்சிட்டியை அமைக்கவேண்டும். அவ்வாறு அமைத்தால்தான் அந்தக் கால்நடைகள் நல்ல முறையில் தரமாக இருந்து கிராம விவசாயிகள் நல்ல வளர்ச்சி அடைவதற்கும் வருவாயைப் பெருக்குவதற்கும் பல கோடி ரூபாய் செலவு செய்து நல்ல முறையில் அமைப்பதற்கான ஒரு வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தால் அவற்றை விவசாயத் துறையிலிருந்து பிரித்து தனியாக அதற்கு யூனிவர்சிட்டி அமைக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். இன்றையதினம் கிராமங்களில் கால்நடைகள் தண்ணீர் இல்லாமல் பட்டினியால் வாடுகின்றன.

பொது மக்களாவது தண்ணீர் இல்லை என்று சொன்னால் எங்காவது போய் தண்ணீர் குடித்துவிட்டு வருகிறார்கள். கால்நடைகளுக்கு இன்றையதினம் குடிநீர் கிடைக்கவில்லை, தீவனம் கிடைக்கவில்லை. ஆகவே அவைகளுக்கு தண்ணீர் தொட்டி திறக்கவேண்டும். அங்கே இருக்கின்ற கால்நடைகளுக்கு அரசாங்கத்தின் மூலமாக வைக்கோல் போன்ற தீவனப் பொருட்களை நியாயமான விலையில் வாங்கிக் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றையதினம் கால்நடைத் துறையில் பணியாற்றக்கூடியவர்கள் பல குறைபாடுகளோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். மருத்துவத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் போன்ற அலவன்ஸ்கள் கார் எல்லாம் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதில் பணியாற்றக்கூடிய அதிகாரிகளுக்கு அவர்களுக்கு 2 வட்ட அளவில் அல்லது 3 வட்ட அளவில் ஒரு உதவி இயக்குநர் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றி ஒவ்வொரு தாலுக்காவுக்கும் ஒரு உதவி இயக்குநர் என்று போட்டு அதன் மூலமாக அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அனைத்து விவசாயிகளுக்கும் அனைத்து கால்நடைகளுக்கும், அனைத்து கோழிகளுக்கும் ஒரு நேரடி பயிற்சி மூலமாக நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டு வந்தால் அவை வளர்ச்சி அடைவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ள கடமைப் பட்டுள்ளேன்.

இன்றைய தினம் கிராமத்தில் இருக்கக்கூடியவர்கள் ஆட்டை மாட்டை பாதுகாகக மருத்துவர்கள் நகரத்திலிருந்து வரவேண்டும் என்று சொன்னால் 10 மைல் 15 மைல் கடந்து வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதன் காரணமாக மருத்துவர்களுக்கு எந்தவிதமான வாகன வசதியும் இல்லாத காரணத்தால் அவர்கள் கிராமத்திற்குச் சென்று பணியாற்றக்கூடிய சூழ்நிலை இல்லாமல் அந்த கிராமத்தில் உள்ள மாடுகளும், ஆடுகளும் இருந்துகொண்டு இருக்கின்றன. அதைப் போக்குவதற்கு அங்கே வட்ட அளவில் தாலுக்கா கிராமத்திற்கு சென்று பணியாற்றக்கூடியசூழ்நிலை இல்லாமல் அந்த கிராமத்தில்உள்ள மாடுகளும், ஆடுகளும் இருந்துகொண்டு இருக்கின்றன. அதைப் போக்குவதற்கு அங்கே வட்ட அளவில் தாலுக்கா அளவில் இருக்கக்கூடிய மருத்துவ மனைகளுக்கு டெலிபோன் வசதி செய்து கொடுக்கவேண்டும். அப்படி டெலிபோன் வசதி செய்து கொடுத்தால் மட்டும் போதாது. அவர்கள் கிராமத்திற்குச் சென்று பணியாற்ற அவர்களுக்கு வாகனங்கள் கொடுக்க வேண்டும். வாகனம் என்று சொன்னால் ஜீப் மட்டும் கொடுத்தால் போதாது அங்கேஇருக்கக் கூடியவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வாங்க வட்டி இல்லாத கடனை அரசு கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் அவர்கள் சம்பளத்தில் இருந்து அதைப் பிடித்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்

கொள்ள கடமைப்பட்டுள்ளேன். அதோடு பணியாற்றக்கூடிய டாக்டர்களுக்கு எல்லாம் அவர்கள் அந்த கால்நடைகளுக்குச் சென்று பணியாற்றுகின்றபோது அந்த கால்நடைகளுக்குள்ள வியாதிகளைப் போக்குவதற்கு அவர்கள் பணியாற்றுகின்றபோது அந்த தொத்து வியாதியால் அந்த டாக்டர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவ்வாறு அவர்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து ரிஸ்க் அலவன்ஸ் போன்றவற்றை எல்லாம் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

அதோடு கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில் அகில இந்திய அளவில் பார்த்தால் அது மிகவும் செம்மையான ஒரு சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்வரையில் அவைகள் எலும்பும் தோலுமாக இருக்கின்றன. அதை ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக அரியானா, பஞ்சாப், வெஸ்ட் பெங்கால், போன்ற மாநிலங்களைப் பார்க்கிறபோது அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் கறவை மாடுகளை வைத்துக் கொண்டு மிக அழகான முறையில் வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மாட்டின் விலையும் 5 ஆயிரம் 10 ஆயிரம் என்று சொல்கிற அளவுக்கு அந்தக் கறவை மாடுகள் அங்கே மிக அழகாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் குடும்பச் செலவுகளுக்கு எல்லாம் அதை வைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். அந்த அளவுக்கு தமிழகத்திலும் கால்நடைத் துறையை மிக மிக வளர்ச்சி அடைய அதை தனி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டும். அப்படி கொண்டு வருகிறபோது அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளை தனித்தனிப் பிரிவாக பிரித்து ஒரு வட்ட அளவில் உள்ள உதவிப் பணியாளர்களை மாற்றி மருத்துவர் என்ற அமைப்பில் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதோடு இன்றைய சமூக நலம் என்ற அடிப்படையின்கீழ் சமூக நலத்துறையிலே குறளாசிரியர்கள் போட்டுக்கொண்டிருக்கிறோம், அது மட்டுமல்ல. சத்துணவு பொறுப்பாளர்களையும் போட்டுக்கொண்டிருக்கிறோம். அவ்வாறு செய்கிறபோது தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆளுங்கட்சியில் இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர்கள், தொகுதி அமைப்பாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள் இவர்களுக்கு எல்லாம் தந்தி கொடுத்து வரவழைத்து உங்களுடைய பகுதியிலே யார் யாரைப் போட வேண்டும், யார் யாரை வேலையில் அமர்த்த வேண்டுமென்று சொல்லி வரவழைத்து தலைமை இடத்திலே வரிசையாக அழைத்துவரச்சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கூட்டி வைத்து அவர்களை நியமனம் செய்யவேண்டுமென்று சொல்லி உத்தரவு வழங்கி அவர்கள் சொல்கிறவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இந்த நிலைமை என்று கேட்க விரும்புகிறேன். நியாயமான முறையிலே கிடைக்க வேண்டியவர்களுக்கு கிடைக்காமல் அங்கே அதிகாரிகளுடைய

பிள்ளைகளாக இருந்தால் அவர்களுக்குக் கிடைக்கிறது. முதலமைச்சர் சொல்கிறார் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு திட்டம் என்ற அடிப்படையில் கொடுக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். யாராவது வேலையிலிருந்தால் அந்தக் குடும்பத்திலே வேலை கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார். அவ்வாறு இருந்தாலும் யார் குடும்பத்திலேயும் வேலை செய்து கொண்டிருக்கிறவர்கள் இருந்தாலும் கூட அதிகாரிகளுடைய பொறுப்பிலே இருந்தாலும் அவர்களுக்கும் வேலை கொடுக்கப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு சிவராமன் அவர்கள் பேசியபோது மாவட்டத்தில் ஒன்றியச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் மற்ற அமைப்பாளர்கள் எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழகத்திற்கு வரவழைத்து அந்தப் பெயர்ப் பட்டியலை அவர்களிடம் வாங்கி அதன் மூலம் வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தலைமைக் கழகம், கட்சி என்று பார்க்கும்போது, ஏதாவது ஒரு காரியத்திற்காக அவர்களை அழைத்து இருக்கலாம். ஆனால் அந்தக் காரணம் என்று அவர்கள் குறிப்பிட்டது தவறான செயலாக இருந்து கொண்டு இருக்கிறது. மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள் அவர்கள் கொடுத்த அடிப்படையில் யாருக்கும் வேலை கொடுக்கவில்லை, தகுதிவாய்ந்தவர்கள் அனைவருக்கும் வேலை கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. சிவராமன் தனக்குக் கிடைத்த தகவல்களை இங்கே சொல்லியிருக்கிறார். முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்கு பொறுப்பாளர்களைப் போடுகிறபோது மாவட்டஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு இங்கே இருந்து தாக்கீதுகள்போய் அங்கே இருந்து பி.ஏ.க்களை எல்லாம் சென்னைக்கு வரச்சொல்லி இங்கே அவர்களை அழைத்து ஒரு இடத்திலே கூட்டிவைத்து ஒரு லிஸ்டைக் கொடுத்து அந்த லிஸ்டை அவர்கள் கொண்டுபோய் மதுரை கலெக்டர் அலுவலகத்திலே அதிகாரிகளை கூட்டிவைத்து டைப்பிஸ்ட், கிளார்க், எஸ்.இ.ஓ.க்கள் பி.டி.ஓ.க்கள் இவர்களையெல்லாம் ஒரே அறையிலே பூட்டி வைத்து அந்தப் பட்டியலை வைத்து ஆட்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதற்கு போதுமான செய்திகள் இருக்கின்றன. நாங்கள் சொல்வதெல்லாம் தகுதியானவர்களை நீங்கள் வேலையில் அமர்த்துங்கள், உங்கள் கட்சியில் தகுதியானவர்கள் இருக்கலாம். எங்கள்கட்சியிலே தகுதியானவர்கள் இருக்கலாம், ஆனால் இதுமாதிரி அதிகாரம் கையில் இருப்பதால் ஒரு குறிப்பிட்டவர்களுக்கு போடுவது முறையோடு என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.



மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அதிகாரம் கையில் இருக்கிறது என்ற அடிப்படையில் நாங்கள் அப்படிச் செய்யவில்லை. தகுதியின் அடிப்படையில் எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் அந்த அடிப்படையில் வேலை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் எங்கெங்கு தகுதியானவர்கள் காணப்படுகிறார்களோ அந்தக் குறிப்பேடும் அரசாங்கத்திற்குக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறோம், அந்த அடிப்படையிலே அதற்காக ஸ்பெஷல் ஆபீசர், கமிஷன் வைத்திருக்கிறபோது அவர்கள் தகுதியானவர்களுக்கு எப்படி வேலைவாய்ப்புக் கொடுக்கவேண்டுமோ அந்த அடிப்படையில் வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கட்சி அடிப்படையில் யாருக்கும் வேலை தருவதில்லை. கட்சி அடிப்படையில் வேலை கொடுத்த ஒரே கட்சி காங்கிரஸ் கட்சிதான்.

(முற்பகல் 11.00)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நாங்கள் ஒன்றைச் சொல்கிறபோது அமைச்சர் அவர்கள் திசை திருப்புவதைப் போல இன்னொன்றைச் சொல்லக் கூடாது. நாங்கள் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிற நிகழ்ச்சிகளை சொல்லிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகளுக்கு முன்னாலே நடந்ததோ நடக்க வில்லையோ அதைச் சொல்கிறார்கள். நடந்ததாகவே வைத்துக்கொண்டாலும், நீங்கள் தான் இன்றைக்கு ஆட்சியில் இருக்கிறீர்கள். அதேமுறையை பின்பற்றுவது பொருத்தமா என்பதைக் கேட்கவேண்டும். கேட்காமல் இருக்க முடியவில்லை என்று சொல்லிவிட்டு மாண்புமிகு சமூகநல அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக் கொள்வேன். இங்கேயிருந்து பட்டியல் மாவட்டத்தலைநகருக்கு போயிற்று. அந்தப் பட்டியல் போனது மட்டுமல்ல. அதிலே இருக்கிற நபர்களை (கூச்சல், குழப்பம்) தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி ஊர்களில் தேர்ந்தெடுக்கவில்லை என்றால் பக்கத்திலே இருக்கிற ஊர்களில் போட வேண்டும். அப்படி போட வில்லையென்றால் என்ன காரணமென்று எழுதி எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாற்றுத்தலைவர் அவர்களே, அரசாங்கம் அப்படிப்பட்டவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று நிபந்தனையோ, தகுதியையோ போட்டிருக்கிறது. அந்தத் தகுதியின் அடிப்படையில் ஆட்கள், விதவைகள், ஆதரவில்லாதவர்கள் என்று இப்படிப்பட்ட தகுதிகளை எல்லாம் போட்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே போட்டியிருக்கிறார்களா என்பதைப் பார்ப்பதிலே நாங்கள் அக்கறை காட்டுகிறோமே தவிர வேறல்ல. நான் காங்கிரஸ் கட்சிக்காரர்களைச் சொன்னது வேடிக்கைக்காகவோ, அல்லது இன்றைக்குச் சொல்லவேண்டும் என்பதற்காகவோ சொல்லவில்லை. காதி கமிஷன் சார்பாக

ஆரம்பிக்கப்பட்ட வேலைகளுக்கும், கிராம சேவக்குகளை அமர்த்துகிறபோதும் காங்கிரஸ் காரர்களைக்கேட்டு அவர்களைத் தான் நியமித்தார்கள். அப்படிப்பட்ட ஒரு தவறான முறையிலே அதிகாரத்தைப் பயன்படுத்திய நிலைமை இந்தியாவிலே வேறு எந்த கட்சியும் செய்யவில்லை. (கூச்சல்; குழப்பம்.)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்லி யிருக்கிறார்கள். நான் மீண்டும் சொல்கிறேன். பல ஆண்டு களுக்கு முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சிகள், உதாரணமாக கதர்த் துறையை எடுத்துக்கொண்டால் கதர்த் துறையிலே அனுபவம் பெற்றவர்கள், நம்பிக்கை உள்ளவர்களைத் தான் போட முடியும். கதர்த் துறையினைப் பற்றி தெரியாதவர் களைப் போடுவதில் என்ன இருக்கிறது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில தகுதியின் அடிப்படையில் ஆட்களைப் போடு கிறோம் என்று சொன்னார்கள். தகுதியின் அடிப்படையில் போடுவதற்கு எந்தவிதமான கேள்வியும் கேட்க தயாராக இல்லை. தகுதியுள்ளவர்களைத்தான் போட வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் இன்றைக்கு அந்த ஊரில் இருப்பவர் களை, அந்த கிராமத்தில் இருப்பவர்களை போடவேண்டு மென்று வருவதைத்தான் குறிப்பிட்டு அதில் தலையீடு இருக் கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கெ. அரங்கநாயகம்: மாற்றுத் தலைவர் அவர்களே, யாருக்காவது கிடைக்காமல் இருக்குமானால் அவர் களுக்கு ஒருவேளை நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம்; அல்லது தகுதியில்லாமல் இருக்கலாம்.

திரு. கோவைத்தம்பி: இதென்ன பெரிய பிரச்னை. இந்தியா முழுவதும் கேஸ் சிலிண்டர் கொடுக்கிறதையா சொல்கிறோம். வேலை வாய்ப்புக் கொடுப்பதிலே என்ன பிரச்னை?

திரு எஸ். சிவராமன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தை குறைக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். சத்துணவுத் திட்டத்தில் பொறுப்பாளர்கள் போடுகிறபோது பல குறைகளைச் சொல்கிறபோது, கல்விஅமைச் சர் அவர்கள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் காங்கிரஸ்காரர்களுக்கு வேலை போட்டுக்கொடுத்தது என்று சொன்னார்கள். மாண்பு மிகு அமைச்சர் அவர்களும் அந்தக் காலத்தில் தான் ஆசிரியர் வேலை பெற்றிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்போது அவர் எந்தக் கட்சியிலே இருந்தார் என்பது தெரியாது. காங்கிரஸ் கட்சிக்காலத்தில் அவருக்கு வேலை கிடைத்தது என் பதை நான் அவருடைய ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன். அதோடு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கட்சி அடிப்படையிலே போடவில்லை. தவறு நடந்தால் சொல்லுங்கள் தீர்த்து வைக்கிறேன் என்று சொன்னார்கள். கட்சித் தலையீடு



இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் ஜெயங்கொண்டத்தில் மட்டு மல்ல, கள்ளக்குறிச்சியில் கூட சத்துணவுப் பொறுப்பாளர் போடப்பட்டு 15 நாட்கள் வேலையில் இருந்தார். 15 நாட்கள் கழித்து அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டு இன்றையதினம் வேறு ஒருவரை அங்கே பணியமர்த்தி இருக்கிறார்கள். இது குறித்து புகார்கள் கொடுத்தும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப் படவில்லை. வேண்டுமானால், அதை அமைச்சரிடத்திலே கொடுக்கிறேன். அதைப் பார்த்து அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சத்துணவு திட்டத்தில் பொறுப்பாளர்களை மேற்பார்வை இடுகிற பொறுப்பு அங்கே இருக்கிற பள்ளித்துறை ஆய்வாளரிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. யாராவது ஒருவர் புரமோஷன் கிடைத்து அங்கேயிருந்து மாற்றப்பட்டு வேறு வேலைக்குப் போய் விட்டால் அங்கே அவருக்கு பதிலாக யார் பொறுப்பாக இருப்பது என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. அதை உடனே மாற்ற வேண்டும். தற்காலிகமாகக் கூட யாரையும் போடமுடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையை மாற்றி புதிய உத்தரவைப் போடவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைத் துறையில் ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி இயக்குந ராக இருந்து வருகிறார். அந்தத் துறையில் பணியாற்று கின்றவர்கள் தங்களுடைய கருத்தை அவரிடத்தில் எடுத்துச் சொல்வதற்கு பயந்து கொண்டிருக்கிறார்கள். சொன்னால் நடக்குமோ, நடக்காதோ என்று அவர்கள் சொல்வதற்கே அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, அந்தத் துறையைச் சேர்ந்த 'டெக்னிக்கல் பெர் சனை' இயக்குநராகப் போட வேண்டும்.

வெட்டரினரி கவுன்சில் இன்றைய தினம் செயல் படாமல் இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் துறையைச் சேர்ந்தவர் தான் அதற்குச் சேர்மனாக வரமுடியும். ஆகவே, வெட்டரினரி கவுன்சிலை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைய தினம் கிராமங்களுக்குச் சென்று, ஊராட்சி ஒன்றியங்களிலே தீவனப் பயிர் கொடுக்கிறார்கள். அங்கே இனாமாகக் கொடுக்க வேண்டிய தீவனப் பயிர்கள், புல்கள் எல்லாம் கொடுக்கப்படாமல் இருக்கின்றன.

இன்றைய தினம், கள்ளக்குறிச்சியிலே இருக்கக் கூடிய சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையிலே, தீவனப் பயிர்கள் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளால் வழங்கப்படாமல், தேங்கிக் கிடக்கின்றன. அங்கே வட்ட அளவிலே உதவி இயக்குநரை நியமிக்கும் போது அவருடைய பார்வையின் கீழ் இதனைக் கொண்டு வர வேண்டும்

யாருக்கும் தெரியாமல், முன்னறிவிப்பு கொடுக்காமல், சிதம்பரம் தாலுக்காவிலுள்ள முதலமைச்சர் சத்துணவுத் திட்டக் கூடம் ஒன்றில் புகுந்து பரிசோதித்திருக்கிறார்கள். பிறகு அவர்கள் சொன்னது இந்தத் திட்டத்திற்கு ஒரு சான்றாக அமையும் முறையில் இருக்கிறது. அவர்கள் சொன்னார்கள், இந்தக் கூடம் அருமையாக அமைக்கப்பட்டிருக்கிறது; இந்தக் கூடத்தில் சமையல் நன்றாக இருக்கிறது; குழந்தைகளுக்கு உள்ளபடியே சத்துணவு கொடுக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, எதிர்காலப் பிரஜைகளை, புதிய தலைமுறையை புதிய சந்ததியினரை உள்ளத்தாலும், உடலாலும் ஆரோக்கியம் உள்ளவர்களாகப் புரட்சித் தலைவரவர்கள் உருவாக்குகிறார்கள் என்று சொன்னால் யாரும் அதை மறுக்க முடியாது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்காக நோபல் பரிசு கொடுக்க வேண்டுமென்று வெளியி ஒரு நல்ல பெண்மணி சொன்னால் அதைக் கேலி செய்யாதீர்கள். ஆன்றோர்களும் சான்றோர்களும் அதைச் சொல்லுகிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்.

சின்னது அழகு, '' ஸ்மால் ஈஸ் பியூட்டி புல் '' (small is beautiful) என்று சூட்சுமேசர் என்பவர் எழுதிய புத்தகத்தில் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தும் பொழுது பல பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது; அதன் காரணமாகப் பலபேர்களுடைய வீடுகளில் அடுப்பில் நெருப்பு எறிய வேண்டும்; உணவு கிடைக்க வேண்டும் என்பதற்காகத் துவக்கப்படுகின்றன.

சில நாட்களுக்கு முன்னால் இந்த மாமன்றத்தில் தொழில் அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தென்தமிழ் நாட்டில் ஆதி திராவிடர்களுக்காக நூல் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்படும் என்று தெரிவித்தார்கள். ஒரு உறுப்பினர் எழுந்து கேட்டார். 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்படும் அந்தத் தொழிற்சாலைகளில் எத்தனை பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று அதற்கு அமைச்சர் சொன்னார் 500 பேர்களுக்கு என்று, 500 பேர்களுக்காக 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்சாலை துவங்கப்படுகிறது என்று சொன்னால், நம்முடைய புள்ளி விவரப்படி 64 இலட்சம்குழந்தைகள் சாப்பிடுவதற்காக, ஒரு கோடி குழந்தைகள் சாப்பிடுவதற்காக 73,787 மகளிர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்றால் பல தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதைப் போல, சூட்சுமேசர் என்பவர், நோபல் பரிசு பெற்றவர் சொன்ன ''ஸ்மால் ஈஸ் ப்யூட்டிபுல்'' என்ற அருமையான கருத்தை புரட்சித் தலைவரவர்கள் அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





இந்த அமைப்பாளர்கள், உதவியாளர்கள் ஆகியவர்களின் நியமனங்களிலே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் காங்கிரஸ் காரர்கள் தான் அதிகாரத்தை பயன்படுத்தி பதவிகளை நிரப்பினார்கள் என்று ஆதாரம் காட்டினால் அது கடந்தகால சம்பவம் என்று சொன்னார்கள். நான் இப்பொழுது நடக்கின்ற ஒரு சம்பவத்தைப் பற்றியே சொல்ல விரும்புகிறேன்.

நான் பாராளுமன்றத்தில் எட்டாண்டுகள் இருந்திருக்கிறேன். அங்கே சின்ன காரைப் பற்றிய பிரச்னை அடிக்கடி எழுப்பப்பட்டிருக்கிறது. பிர்லாவிடம் ஒரு அம்பாசிடர் கார் உற்பத்தியாகிறது. இன்னொருவரிடம் இன்னொரு கார் (பியட்) உற்பத்தி ஆகிறது. கார்களில் டயோடா இருக்கிறது, ரினால்ட் இருக்கிறது, மெர்சிடஸ் பென்ஸ் போன்ற கார்கள் உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அயல் நாட்டிலே உள்ளவர்கள். எனவே, இந்தியாவில் மலிவு விலையில் உயர்தரமான கார்களை உற்பத்தி செய்யவேண்டுமென்று சில இந்தியர்களே கேட்ட நேரத்தில் மத்திய அரசு முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அவர்களுக்கு லைசென்ஸ் மறுக்கப்பட்டது. ஆனால் மாருதி கார் உற்பத்தி செய்யப் போகிறோம் என்று சொல்லி அதனுடைய மாடலையெல்லாம் வைத்தார்கள். ஆனால் அந்த மாருதி கார் சரிவர இயங்காமல் அந்தக் கம்பெனி மூடப்பட்டது. பல இலட்சம் ரூபாய்களைப் போட்டவர்கள் இடம் தெரியாமல் போனபிறகு, இப்பொழுது மாருதிக் காரை கொண்டுவருகிறார்கள். அம்பாசிடர்கார், பியட்கார், என்று இருக்கும் பொழுது இந்த மாருதி காரை அதிக அன்னியச் செலாவணி சலுகைக் கொடுத்து எந்த முறையில் கொண்டு வருகிறார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். தங்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான் இப்படிக் கொண்டு வருகிறார்களே தவிர, வேறொன்றுமில்லை. எனவே, இதற்குக் கடந்தகால உதாரணம் கூடத் தேவையில்லை; நிகழ்காலத்தில் நடக்கின்ற நிதர்சனமான சம்பவங்களே உதாரணத்திற்குப் போதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1970–71 ஆம் ஆண்டில் பிரதமர் அவர்கள் ''கரிபி ஹடோ'' என்று வறுமையை ஒழிப்போம் என்று தேர்தல் முழக்கமாகச் சொன்னார்கள். ஆனால் வறுமை ஒழியவில்லை. ஆனால் அப்படிப்பட்ட வறுமையை ஒழிக்கும் தன்மையில்தான், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டில் இன்றைக்கு புரட்சித் தலைவர் திட்டத்தை அமுல் படுத்துகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு எந்த அதிகாரமும் கொடுக்கக் கூடாது. கால் நடைத் துறையின் உதவி இயக்குநர் கன்ட்ரோலில் அதைக் கொண்டு வரவேண்டும். வெட்டரினரி கவுன்சிலை செயல்படுத்தவேண்டும். கால்நடை மருத்துவரையே இயக்குநராக நியமிக்க வேண்டும். அவர்களுக்கு மோட்டார் வாகன வசதி செய்து கொடுக்க வேண்டும். ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கவேண்டும். பீரியாடிக்கல் அலவன்ஸ் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பை நல்கிய தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூகநல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த சமூக நலம், கால்நடை பராமரிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் சிவராமன் அவர்கள் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டத்தைப் பற்றி விமர்சித்தார்கள். உலகத்தில் ரூசுவோவும் சன்யாட் சென்னும் சமூகத்தில் சம அந்தஸ்து, சமூக தர்மம் நிலவ வேண்டுமென்று விளக்கினார்களே தவிர, அந்தக் கொள்கைகளை அவர்களால் செயல் படுத்த முடியவில்லை. யார் ஒரு கொள்கையைப் போதிக்கிறார்களோ அவர்கள் மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அரசியலைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் ஆளுகிற பொறுப்பிலே இருக்கிறபொழுது, அவர்கள் சொன்ன இலட்சியங்களை அமல் படுத்துகிறார்களா என்பதுதான் முக்கியம். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று இராமலிங்க அடிகள் சொன்னார்கள். ஆனால், அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வில்லை. ஆனால், வள்ளல் தன்மை பொருந்திய எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர், இந்தத் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து சுமார் 1 கோடி குழந்தைகள் பயன்பெற வழி வகுத்துள்ளார்கள். புள்ளி விவரப்படி 64 லட்சம் பேர்கள் என்பார்கள். முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திலே எத்தனை பேர்கள் சாப்பிடுகிறார்கள் என்று எனக்கு தெரியும். நானும் சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் சொல்லுகிறேன். என் தொகுதியில் இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு ஒன்றியங்களில், புவனகிரி, பரங்கிப்பேட்டை ஒன்றியங்களில்—மாத்திரம் சாப்பிடுகிற குழந்தைகளின் எண்ணிக்கை 17,000-க்கு மேலாகும்.

சமூக நலக் கொள்கை விளக்கக் குறிப்பில் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறுவோர்கள்—அந்த அமைப்புகளின் அமைப்பாளர்களாகவும் உதவியாளர்களாகவும் இருக்கிற மகளிருடைய எண்ணிக்கை 73,787 என்றும் அதிலே ஆதி திராவிட மலை வாழ் ஜாதியைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கை 20,531 பேர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல. அவர்களில்



10,507 பேர்கள் விதவைகள் என்றும் மற்றும் 3,416 பேர்கள் ஆதரவற்ற அபலைகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் புள்ளிவிவரப்படி, 73,787 மகளிர் அமைப்பாளர், உதவியாளர்களில், ஆதி திராவிடப் பழங்குடி மக்கள் பெற்றிருக்கிற வேலை வாய்ப்பு சற்றேக்குறைய 28 சதவீதம் ஆகும்.

என்னுடைய புவனகிரி, பரங்கிப்பேட்டை ஒன்றியங்களைப் பொறுத்த வரையில், ஆணையாளர்கள் கொடுத்த கணக்குப் பிரகாரம், ஆதி திராவிடர்கள் அமைப்பாளர்களாகவும் உதவியாளர்களாகவும் இருக்கிற சதவீதத்தைப் பார்த்தால் 50 சதவீதம், 60 சதவீதம் என்பதை மிகப் பெருமையுடன் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தச் சத்துணவுக் கூடங்கள் எல்லாம் ஏதோ சாப்பாடு போடுகிற சிறிய சத்திரங்கள் இல்லை. அங்கே, பள்ளி முன்னிலைக் கல்வி என்ற முறையில் நல்ல ஒழுக்கங்களும், நல்ல பழக்கங்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள். அந்த முறையில், அந்தக் குழந்தைகளுக்கு நல்ல முறையில் நல்ல பழக்கங்கள் அங்கே கற்பிக்கப் படுகின்றன.

அது மாத்திரமல்ல, சமபந்தி போஜனம் என்ற முறையில் ஆண்டிற்கொரு நாள் பெரியவர்கள் ஒன்றாகக் கூடி ஒரு சடங்காக உட்கார்ந்து சாப்பிடுகிறார்களே, அதைவிட மிகச் சிறந்த முறையில் ஆண்டுதோறும் —365 நாட்களும்—பல்வேறு வகுப்பைச் சேர்ந்தவர்களும், குறிப்பாக, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஆதி திராவிட மக்கள், பின் தங்கிய மக்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே அறையில், சமபோஜனம் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னால் சிறு வயதிலேயே சமதர்மத்தையும் சமநீதியையும் போதிக்கின்ற கூடங்களாக அவைகள் இருக்கின்றன என்று நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11—10)

அதுமட்டுமல்லாமல், அவர்களுடைய உடல் நலத்தையும் கவனிக்க வேண்டுமென்று எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் அவர்கள் சொன்னார்கள். பி. எச். சி. எனப்படுகின்ற பிரதம சுகாதார நிலையங்களோடு இணைத்து, அங்குள்ளவர்கள் சத்துணவுக் கூடங்களுக்கும் சென்று, அங்கிருக்கின்ற குழந்தைகளுக்கு உள்ள நோய்களைப் பற்றிக் கண்டறிந்து, அந்த நோயைக் குணப்படுத்தவும், மேலும் நோய்வராமல் தடுக்கவும் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் குழந்தைகள் ஒவ்வொன்றும் 411 கலோரி உணவுப் பொருள்கள் பரிமாறப்படுகிறது என்று கொள்கை விளக்க புத்தகத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. சமீபத்தில் டெல்லியிலுள்ள, மத்தியில் உள்ள, பிளானிங் கமிஷன் உறுப்பினர் ஒருவர்

கொண்டு, வேலை செய்கிற மாடுகள், கட்டை வண்டி மாடுகள் எல்லாம் வாங்கவேண்டும். அதற்குத் தரமான மாடுகளை **நாம்** உற்பத்தி செய்யவேண்டும். அந்த வகையில் கறவை **மாடுகளையும்,** தரமான உழைக்கும் மாடுகளையும் **உற்பத்தி செய்யவேண்டும்.**

கோழியைப் பொறுத்தவரையில், ஆட்டிறைச்சி விலை இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. கோழி இறைச்சி குறைவாக இருக்கிறது என்று சொன்னால், அந்தக் கோழி இறைச்சி உற்பத்தி பற்றி நண்பர் இராமலிங்கம் சொன்னதுபோல், கடந்த ஓரிரு ஆண்டுகளில் மிகக்குறைவாக இருக்கிறது. இது ஏனென்று தெரியவில்லை.

(முற்பகல் 11–20)

என்னுடைய மாவட்டத்தில் வேலைசெய்த, மாவட்ட ஆட்சித்தலைவரை இப்போது அந்த கோழி இன உற்பத்தி நிறுவனத்தின் தலைவராகப் போட்டிருக்கிறார்கள். அவர் வந்த பிற்பாடாவது இதைப் போர்க் கால நடவடிக்கையாகக் கருதி, இந்தக் கோழி இறைச்சியை, கோழி முட்டைகளை அதிகமாக உற்பத்தி செய்வதில், அதிக கவனம் செலுத்துவார் என்று நம்புகிறேன். ஏன் என்று சொன்னால் ஆடு இறைச்சிக்குப் போட்டியாக காம்பெட்டிடிவ்வாக இந்தக் கோழி இறைச்சியாவது கிடைக்கும் படிச் செய்தால்தான் அசைவ உணவு சாப்பிடுபவர்களுக்கு நன்றாகப் பயன்படும். அது மாத்திரம் அல்லாமல் இயற்கை அளித்த அருமையான டானிக்காக இருப்பது பால் ஒன்று, இந்த முட்டை ஒன்று. ஆகவே இந்த முட்டை உற்பத்தியிலேயும், கோழி உற்பத்தியிலேயும் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

அத்துடன் பன்றி வளர்ப்பைப் பற்றி இன்னும் சமூகத்திலே அது மிகவும் கேவலமாக அதைக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியில்லாமல் இந்த மூட நம்பிக்கையை மாற்றி, ஒரு புதிய உணர்வை உண்டாக்குவதற்காக இந்த வெள்ளைப் பன்றி என்று சொல்கிறார்களே, அதை நாம் அதிகமாக புழக்கத்தில் கொண்டு வரவேண்டும். அதற்கு எத்தனை தடவை கால்நடை கண்காட்சிகளை வைத்தாலும் பரவாயில்லை கால்நடை கண்காட்சி வைப்பதன் மூலம் அது ஏதோ ஒரு அலங்காரமாகக் கருதாமல் மக்களுடைய சிந்தனையைக் கிளறுகிற ஒரு நிகழ்ச்சியாக கருதி இந்த வெள்ளைப் பன்றியை அதிகமாக உற்பத்தி செய்ய நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அது மிகவும் குறைவாக உற்பத்தி செய்யப்படுகிறது. அந்தக் கறியைச் சாப்பிட்டால் உடம்புக்கு நல்லது என்ற முறையிலே அதையும் நாம் விளம்பரங்கள் மூலம் செய்யவேண்டுமென்று





கேட்டுக் கொள்கிறேன். பன்றி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு கோழி முட்டை கோழியை இறைச்சிக்காக தயாரித்தல், ஆகிய இவைகளில் தீவிர கவனம் செலுத்தினால்தான் இந்த உணவுப் பற்றாக்குறை இருக்கிற நேரத்தில் நம்முடைய தமிழ்நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஈடு செய்ய உதவும் என்பதோடு, மாடு, ஆடுகளுக்கு நல்ல தீவனம் இல்லாமல் இருக்கிறபோது, பசுந்தீவனம் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை ஒன்று என்று சொல்லுகிறார்கள். அப்படி இல்லாமல் நம்முடைய ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் பார்த்தால்கூட. அனேகமாக எல்லா இடங்களிலேயும் புறம்போக்கு இடம் இருக்கும். அதை எல்லாம் பார்த்து நல்ல கால்நடை தீவனங்கள் உற்பத்தி செய்வதற்காகும், அல்லது வேறு மாநிலத்திலேயிருந்தாலும் அதைக் கொண்டு வந்து மலிவான விலையில் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னும் ஒன்று கடைசியாகச் சொல்ல விரும்புகிறேன். ஏன் என்றால், சமூகநலத்துறைதான் இந்த உத்தரவை போட்டிருக்கிறது. நமது சமூக நலத்துறைதான் 14—1—1981-ல் இந்த ஊனமுற்றவர்களுக்கு உதவ வேண்டிய உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். அந்த முறையிலே ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். அந்த முறையிலே ஒரு உத்தரவின்படி ஆதி திராவிடர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட 18 சதவீதத்தில் 3 சதவீதமும், பிற்பட்ட வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 50 சதவீதத்தில் 3 சதவீதமும், மீதமுள்ள ஒதுக்கப்பட்டுள்ள 50 சதவீதத்தில் 3 சதவீதமும், மீதமுள்ள மற்ற வகுப்பினர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட 32 சதவீதத்தில் 3 சதவீதமும் இந்த ஊனமுற்றவர்களுக்காக கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே உத்தரவின் இணைப்பிலே யார் ஊனமுற்றவர்கள் என்று விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு கை இழந்தவர்; கால் இழந்தவர், இடுப்புக்குக் கீழே கால் இழந்தவர், 2 கை இழந்தவர்கள் என்று எல்லாம் சொல்லி, யார் உண்மையான ஊனமுற்றவர்கள் என்று வருகிறபோது விரலைப் பற்றிக் கூட வருகிறது. யாராவது complete loss of one thumb and four fingers of one hand ஒரு கையிலே ஒரு கட்டை விரலும், நான்கு விரல்களும் இழந்தவர்கள், அடுத்து in s. b-division, loss of f ur fing rs of one hand ஒரே கையிலே 4 விரலை இழந்தவர்கள், அவர்கள்தான் ஊனமுற்றவர்களாகக் கருதவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் இந்தச் சட்டர், இந்த உத்தரவு 1981-ஆம் ஆண்டு உலக ஊனமுற்றவர்கள் ஆண்டாக கொண்டாடப்பட்டபோது வெளியிடப்பட்ட ஒன்றாகும். அந்த உத்தரவைக்கூட மத்திய சர்க்கார் 3 percent in Group C and D post in Central Services and any c mparable post in Central Public Sector ndertakings என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். 1981 ஆம் ஆண்டுபோட்ட உலகஊனமுற்றவர்கள் ஆண்டாகக் கொண்டாடிய போது போட்ட அந்த உத்தரவு இன்னும் இருக்க வேண்டுமா? அதுவும் குறிப்பாக, டாக்டர்கள், என்ஜீனியர்கள்,

இந்த சமையல் கூடங்களுக்கான அமைப்பாளர்கள், உதவியாளர்கள் என்ற முறையில் எழுபது எண்பது சதவிகிதம் சமையல் கூடங்களில் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் சமைக்கிறார்கள். அவர்கள் சமைத்த உணவை சாப்பிட மாட்டோம் என்று இதுவரையில் யாரும் சொல்லவில்லை. எனவே, இது ஒரு மௌனப் புரட்சி என்று தான் நாம் சொல்ல வேண்டும்.

கால்நடை வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய நாட்டில் கால்நடைச் செல்வங்கள் அதிகமாகப் பெருக்கப்பட வேண்டும் என்ற முறையில் ஆடு வளர்ச்சிக்காகப் பல்வேறு கிளைக் கழகங்களும், மாடு உற்பத்திச் செய்வதற்காக பல்வேறு நிறுவனங்களும், கோழி, கோழி முட்டைகள் உற்பத்திக்காக நிறுவனங்களும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால் எப்பொழுதோ பல ஆண்டுகளுக்கு முன்பாக தமிழகத்தினுடைய மக்கள் தொகையை வைத்து, உதக மண்டலத்தில் மாடுகள் வளர்ப்பதற்காக ஏற்படுத்தப் பட்ட பண்ணையையும், தற்பொழுது பட்டுக்கோட்டையிலே உள்ள பண்ணையையும் வைத்து மாத்திரம் கணக்கிடாமல், அந்த இலக்கை, இலட்சியங்களை பரவலாக அதிகமாக்கி, தமிழ்நாட்டிலே தேவையான பால் கறக்கக் கூடிய கன்றுகளையும், மாடுகளையும், தயாரிக்கிற பண்ணையை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாட்டுப் பண்ணையை ஏற்படுத்துமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நண்பர் இராமலிங்கம் கூடச் சென்னார்கள். நம்முடைய நாட்டில் சில பேர் நவீன முறையில் இறைச்சிக்கூடத்தை அமைப்பதற்கு மறுத்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அதில் முக்கியமாக இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள், மறுத்தவர்கள் யார் என்று சொன்னால், நாம் எல்லாம் ஒரு பிளேட் பிரியாணி கேட்டால், 2 பிளேட் பிரியாணி கேட்பவர்கள் தான் அதை மறுத்தார்கள். அதிலே என்ன வேடிக்கை என்றால் தமிழ்நாட்டில் சுமார் 4½ 4¾ கோடி ஜனங்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், அதிலே இறைச்சி சாப்பிடுகிறவர்கள் பாதிபேர் இருப்பார்கள். இவர்களுக்கு உற்பத்தி செய்கின்ற இறைச்சியில், ஆட்டு இறைச்சி தான் 35 சதவீதம் கிடைக்கிறது என்பதை நம்முடைய கால்நடை பராமரிப்பு இலாகா கொடுத்த கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. ஆட்டு இறைச்சியினுடைய விலை இன்று அதிகமாகிக்கொண்டேயிருக்கிறது. ஆகவே அந்த ஆட்டு இறைச்சி உற்பத்தி செய்வதற்காக ஆடுகளை வளர்ப்பதற்காக, இங்கொன்றும் அங்கொன்றுமாக அல்லாது 7, 8, 9 என்று செல்லாமல் தமிழ்நாடு முழுவதும் தீவிரமாக ஆடுகளை வளர்ப்பதற்கும் பாடுபடவேண்டும். பனை மரம், தென்னை மரம் போல் எல்லா உறுப்புகளையும் எப்படிப் பயன் படுத்துகிறோமா அதைப் போல், இந்த ஆடுகளைப் பொறுத்தவரைக்கும், எல்லா உறுப்புகளையும் பயன்படுத்துகிறோம். ஆகவே அதை வளர்ப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதுவும் தென்னாற்காடு மாவட்டம் என்பது மிகவும் எஸ்.சி. எஸ். டி. என்று சொல்கிறார்களே, ஆதிதிராவிடர் மலைவாழ் மக்கள், கிட்டத்தட்ட 9 3/4 லட்சம் பேர் இருக்கிறார்கள். தமிழ்நாட்டினுடைய எல்லா மாவட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், தென்னாற்காடு மாவட்டத்திலே அதிகமான அளவில் ஆதி திராவிடர், மலை வாழ் மக்கள் இருக்கிறார்கள். ஆகவே அங்கு இந்த ஆடுமாடுகளுக்கான தனியாக பண்ணைகளை அதிகமாக ஏற்படுத்தி, கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பும், அதே நேரத்தில் வருமானமும் கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆடுமாடுகளைப் பொறுத்த வரையில், குறிப்பாக கறவை மாடுகளைப் பொறுத்த வரையில், ஒன்றைச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன். கிராம ஒருங்கிணைந்த திட்டத்திலே, மேற்சொன்ன பல்வேறு திட்டங்களிலே, கறவை மாடுகளை வாங்குவதற்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வாங்கி, அதற்கு சர்க்காரும் மானியம் கொடுத்து, மாடுகளை வாங்குகிறோம். ஆனால் அந்த மாடுகளை வாங்குகிற பொறுப்பிலே உள்ளவர்கள், ஒரு குறிப்பிட்ட ஊருக்கு —உதாரணமாக திருவொற்றியூருக்குச் சென்று மாடுகளை வாங்குகிறார்கள். அங்கே வாங்குகிறபொழுது ஆண்டுக்காண்டு விலையேறி விட்டதாக கடன்களையும், மானியங்களையும் அதிகப்படுத்துகிறோம். ஆனால் மாட்டின் தரத்தை உயர்த்தாமல் குறைந்த மதிப்புள்ள மாடுகளை, அதிக விலை என்ற புள்ளிவிவரத்திலே போட்டு, பால் கறக்காத மாடுகளையும், குறைந்து கறக்கிற மாடுகளையும், கன்றே இல்லாத மாடுகளையும் அவர்கள் வியாபாரிகள் மீது, அல்லது அப்பாவி கூட்டுறவு ஸ்தாபன உறுப்பினர்கள் மீது திணிக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. ஆக்சி டோசன் என்ற ஒரு ஊசி இருக்கிறது. அந்த ஊசி முன்பெல்லாம் 35 பைசா. இப்போது 50 பைசா என்று சொல்கிறார்கள். அந்த ஊசி போட்டால், கறக்காத மாடுகள் கூட கறக்கும்படியாக காம்புகள் முனைப்பாகி, பாலைச் சொரியும்படியாகத் தெரிகிறது. அங்கிருந்த கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் சென்று பார்த்து விட்டு, மாடு நன்றாக இருக்கிறது. நன்றாகக் கறக்கிறது என்று எடுத்துக் கொண்டுவருகிறார்கள், மனிதர்களுக்கு விஷ ஊசி போடுவது எவ்வளவு கெடுதலோ அதே போன்று ஆக்சி டோசன் ஊசி போடுவது கெடுதலாகும். ஆனால் யார் போய் பார்த்தாலும் ஆம் என்று சொல்லுவார்கள். அந்த திருவொற்றியூர் மாட்டு சந்தையில் கூடை கூடையாக ஆக்சிடோசன் மருந்துகள் போடப்பட்டு, பெட்டி பெட்டியாகக் கொட்டப் பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். இதை சமூகவிரோத கடுமையான குற்றமாகக்கருதி, அரசாங்கம் தடுப்பு நடவடிக்கை எடுத்து, அது மாதிரி செய்யாமல் பார்த்தால் தான் உண்மையான மாடுகள், உழவர்களுக்கு, சிறு நில விவசாயிகளுக்கு, குறுநில விவசாயிகளுக்கு, வேளாண்மைத் தொழிலாளர்களுக்குப் போய்ச்சேரும் என்று தெரிவித்துக்

போன்ற மிகத் திறமை வாய்ந்த ஒரு பதவியில் அதிக நேரம் ஆப்பரேஷன் செய்வதற்குத் தேவையான கையும், நிற்பதற்கு தேவையான காலும் இருக்கவேண்டிய அவசியம் இருக்கும்போது, இப்படிப்பட்ட உத்தரவு தேவைதானா என்பதை சிந்திக்கவேண்டும். அரியானா மாநிலத்தில் இன்னும் ஊனமுற்றவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் எந்தவித சத வீதமும் ஒதுக்கப்பெறவில்லை என்பதை மனதில் கொண்டு பல்வேறு மாநிலங்களில் தொடர்பு கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதுமாதிரி இந்த ஊனமுற்றவர்களுக்கு முக்கியமாக பொறியியல் கல்லூரியிலேயும், மருத்துவக் கல்லூரியிலேயும் தொடர்ந்து இந்தச் சதவீதம் ஒதுக்க வேண்டுமா என்பதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, சமூகநலத்துறை, கால்நடைத்துறை ஆகிய மானியத்தின் மீது மார்க்கிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தியும் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இப்போது சமூக நலத்துறையால் வழங்கப்படுகின்ற இந்த முதியோர் பென்சன் தொகைகள், ஊனமுற்றவர்கள்தொகை, இவைகள் எல்லாம் ஒருசிலருக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு தாசில்தார் ஆபீசிற்கும் 500 பேர்கள் என்று கோட்டா வைத்துக் கொண்டு பாக்கி பேர்களுக்கு எல்லாம் கொடுப்பதில்லை: எல்லோரையும் கணக்கு எடுத்து, உதவித் தொகை பெறத் தகுதியுடைய அத்தனை பேர்களுக்கும் இந்த உதவித் தொகையை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் அதிகமான அளவிற்கு வேலைவாய்ப்பு இல்லாமல், அங்கேயுள்ள மக்கள் இன்றைக்கு இருக்கும் வறட்சி நிலை காரணமாக, மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த விவசாயத் தொழிலில் ஈடுபட்டு இருந்து, தற்போது உதவித்தொகை வாங்கிக்கொண்டு வருகின்றவர்களுக்கு ஆண் குழந்தைகள் இருந்தால், அவர்களுக்கு உதவித்தொகை கிடையாது என்று அரசு விதி வைத்து இருக்கிறது இன்றைக்கு முதியோராக இருக்கின்ற அந்த விவசாயிகள் அந்தப் பிள்ளைகளை நம்பி வாழமுடியாமல் தத்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். பெற்ற மகன் இருந்தும் அவன் உற்ற துணையாக இல்லாத நிலையில் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இன்றுள்ள நிலையைக் கருத்தில் கொண்டு, இந்த விதியைத் தளர்த்தி, எல்லோருக்கும் பென்ஷன் தொகை அளிக்க அரசாங்கம் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





விதவைகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகைக்கும் வயது வரம்பு வைக்கப்பட்டு இருக்கிறது. 40 வயது எய்திய விதவைகளுக்குத்தான் உதவித் தொகை என்று சொல்லப்படுகிறது. விதவை என்று சொன்னால், அவர்கள் எந்த வயதில் விதவையாக இருந்தாலும்—25 வயது என்று இருந்தால் கூட அவர்கள் எல்லோருக்கும் இந்த உதவித் தொகை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு மையங்களுக்குத் தரப்படும் பொருள்கள் தனியார் வீடுகளில்தான் வைக்கப்படுகிறது. அதன் காரணமாக பல தவறுகள், முறைகேடுகள் ஊழல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தப் பொருள்களையெல்லாம் சேகரித்து வைத்துக் கொள்வதற்கு போதுமான கட்டிடங்கள் கட்டித்தரவேண்டும். பொதுவான இடங்களில் அவை வைக்கப்படுவதற்கு வசதி செய்யவேண்டும். அவைகள் பாதுகாப்பான முறையில் வைப்பதற்கு வசதி செய்யப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவு மையம் ஆரம்பிக்கின்ற நேரத்தில் இத்தனை குழந்தைகள் அந்த மையத்திற்கு வருவார்கள் என்று கணக்கு நிர்ணயித்து இருக்கிறார்கள். அந்த கணக்கின்அடிப்படையில்தான் இன்றைக்கு உணவு தயாரிக்கப்படுகிறது. பொருள்கள் அந்த அடிப்படையில்தான் அவர்களுக்குத் தரப்படுகின்றன. வருகைக்கு ஏற்றாற்போல் இவைகள் செய்யப்படவில்லை, இதனால் பல நஷ்டங்கள் ஏற்படுகின்றன. இப்படிச் செய்வதால் ஏராளமான சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே வருகைக்கு ஏற்றாற்போல் இந்தப் பொருள்கள் வழங்குவதும், சமையல் செய்வதும் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி சொல்லிக்கொள்கிறேன்.

சத்துணவு மையங்களில் சுகாதார வசதிகள் இல்லை. அவைகள் சுகாதாரக் கேடுகளுக்கு இலக்காகியுள்ளன. இதனால் அந்த இடங்களுக்கு வரும் மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே, இந்த சத்துணவுமையங்களில் சுகாதார வசதிகள் சிறப்பான முறையில் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு மையங்களில் கொடுக்கப்படும் உணவுகள் வரையறுக்கப்பட்ட அடிப்படையில் கொடுக்கப்படவில்லை. அங்கே வெறும் சாம்பார் சோறு தான் தரப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்தச் சத்துணவு மையங்களில் பாடங்கள் போதிப்பதாகவும் சொல்கிறார்கள். ஆனால் அப்படி பாடங்கள் போதிப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் காலை 10 மணிக்கு வருகிறார்கள். வந்தவுடன் சமையல் வேலையில் இறங்கி விடுகிறார்கள். கல்வி போதிப்பது இல்லை. கல்வி போதிப்பது அங்கே நடைமுறையில் இல்லை என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

சத்துணவு மையங்களில் அமைப்பாளர்கள், உதவியாளர்கள் என்று இருப்பவர்களை இன்றைக்கு குடும்பக்கட்டுப்பாட்டிற்கு ஆள்பிடித்துக்கொண்டு வரச்சொல்லும் நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு சத்துணவு மையத்தில் உள்ள அமைப்பாளரும், உதவியாளரும் இத்தனை ஆள் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்று நிர்ப்பந்தம் இருப்பதால் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த முறையை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவு மையங்களில் லீவ் நாளைக்கு என்ற வகையில், அந்த நாளைக்கு முன் தினம் ஒரு இனிப்பு பலகாரம் கொடுத்து விடுகிறார்கள். இதனால் எந்தவிதமான பலனும் இல்லை. இப்படிப்பட்ட முறையில் முதல் நாள் கொடுப்பது சரியல்ல. இப்படி முதல் நாள் கொடுக்கின்ற நேரத்தில், அவர்களுக்கு இரண்டு முட்டைகள் கொடுத்தால் வசதியாக இருக்கும். இன்றைக்கு முட்டை ஏராளமாக உற்பத்தியாவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட முறையில் முட்டைகள் வழங்கினால் அவர்களுக்கும் நல்ல சத்துணவாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரதட்சிணை கொடுமை நாட்டில் அதிகமாக இருக்கிறது. இதனால் பல பெண்கள் தொல்லைப்பட வேண்டியிருக்கிறது. பெற்றோர்களும் மிகவும் மனவேதனைப்படுகிறார்கள். பெற்ற பெண்ணை வளர்க்கிறோம், ஆனால் காலாகாலத்தில் திருமணம் செய்து கொடுக்க முடியவில்லையே என்று மிகவும் இடிந்து போய் விடுகிறார்கள். இந்த வரதட்சிணை கொடுமை இருப்பதால் தான் அடிக்கடி திடீர் விபத்துக்கள், நவீன கேஸ் விபத்துகள், அடுப்பு விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த வரதட்சிணை கொடுமை ஒழிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் கடுமையான முறையில் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கொள்கைக் குறிப்பிலே இந்தத் துறை மூலமாக பல்வேறு சலுகைகள் மக்களுக்கு தரப்பட்டு வருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது பற்றி பல்வேறு விவரங்கள் அறிவித்து இருக்கிறார்கள். இது எல்லாம் எப்படி இருக்கிறது என்று சொன்னால், கிராமத்தில் இருக்கிற மக்கள் அஞ்சறைப் பெட்டியில் பலசரக்குச் சாமான்களைப் போட்டு வைப்பது போல், இருக்கிறதே தவிர, இந்தச் சலுகைகள் ஒருமுகப்படுத்தி, இந்தச் சலுகை எவ்வளவு பேருக்கு அளிக்கப்படுகிறது. எந்த அளவிற்கு அளிக்கப்படுகிறது, யார் யாருக்கு அளிக்கப்படுகிறது என்பதை எடுத்துத் தெரிவித்தால், அங்கேயிருக்கும் அதிகாரிகளுக்கும் தெரியும். மக்களுக்கும் நல்ல முறையில் தெரியும் இன்றைக்கு அதிகாரிகளுக்கே அது தெரியாமல் இருக்கிறது. ஆகவே, அந்த வகையில் அதை ஒரு



முகப்படுத்திச் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இதையெல்லாம் முன்வைத்து தமிழ்நாடு ஜனநாயக மாதர் சங்கம் 15-3-1983 அன்று ஒரு மாபெரும் ஊர்வலம் நடத்தி, தமிழக முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு மகஜர் கொடுத்து இருக்கிறார்கள். அதை ஏற்று அமல் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அவர்கள் கொடுத்திருக்கிற பல கோரிக்கைகளில் முக்கியமானவை—பெண்களின் நலனை உத்திரவாதப்படுத்தவும், பெண்கள் சம்பந்தப்பட்ட சட்டங்கள், கொள்கைகள் ஆகியவை அமல் செய்யப்படுவதை கண்காணிக்கவும், கல்வி, பொருளாதாரம் போன்ற பல துறைகளில் பெண்களின் நிலையை பரிசீலனை செய்யவும், தேசீய, மாநில மட்டங்களில் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

வரதட்சிணை, விவாகரத்து, ஜீவனாம்சம் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க, மாவட்டங்களில் குடும்பக் கோர்ட்டுகள் அமைக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

பெண்களுக்கு எதிரான கொடுமைகளைக் கண்காணிக்கவும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவவும், பெண்கள் மற்றும் சமூக நல அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்புக் குழுக்கள் தாலுக்கா, நகர மட்டங்களில் அமைக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

திருமணமான ஐந்தாண்டுகளுக்குள் ஒரு பெண் சந்தேகமான சூழ்நிலையில் இறந்தால், அந்த மரணத்தையொட்டி பகிரங்க நடுவர் விசாரணை நடத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பெண்களுக்கு எதிரான கொடுமைகள் புரிந்தவர்கள் வழக்குகளை விரைவாக நடத்தி தண்டனை உறுதி செய்யப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். இப்படி பல்வேறு கோரிக்கைகளை தமிழக ஜனநாயக மாதர் சங்கம் சார்பிலே கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை ஏற்று உடனடியாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு கால்நடை மருத்துவ மனைகளுக்கு ஏழை எளிய விவசாயிகள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்தால் சரியாகக் கவனிக்கவில்லை. மாடுகளை ஓட்டிக் கொண்டு வரும்போது, அந்த மாடுகளுக்கு ஊசி போட வேண்டுமென்றால் மாடுகளைப் பிடிப்பதற்குக் கூட அங்கே ஆள் இல்லாமல் அவர்கள் திரும்பிப் போகிறார்கள். மருந்துகளை எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் ஏழை எளிய விவசாயிகள், கஷ்டப்படக்

கூடிய விவசாயிகள். 10 ரூபாய், 15 ரூபாய், 20 ரூபாய் விலையுள்ள மருந்துகளை எழுதிக் கொடுத்து விட்டால் அவர்களால் எப்படி அந்த மருந்துகளை வாங்கிக் கொடுக்க முடியும்? இப்படிப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கடுமையான வறட்சி நிலை இருப்பதால் கிராமங்களில் மாடுகளுக்கும் மற்ற கால்நடைகளுக்கும் தீவனம் இல்லாமல் கஷ்டப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. மனிதர்களுக்கு மட்டும்தான் வறட்சி என்று இல்லாமல் கால்நடைகளுக்கும் வறட்சி இருக்கிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் சாதாரண காலங்களில் மாடுகளுக்கு நிறைய வைக்கோல் இருக்கும். இன்றைக்கு இந்தக் கடுமையான வறட்சியில் அங்கேயும் வைக்கோல் இல்லாமல் கால்நடைகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அங்கிருந்து மாடுகளை கேரளாவுக்கு அடிமாடுகளாகக் கொண்டு செல்லும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக வெளி மாநிலங்களிலிருந்து மாட்டுத் தீவனங்களை வரவழைத்து கால்நடைகளுக்கு இனாமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேய்ச்சல் நிலம் ஒரு காலத்தில் நிறைய இருந்தது. இப்போது அவை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, வசதி படைத்தவர்கள் வேலி போட்டு, வளைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் இலட்சக் கணக்கான சிறு விவசாயிகள் தங்களுடைய மாடுகளையும் ஆடுகளையும் மேய்க்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே மேய்ச்சல் நிலங்களை அதிகமாக ஒதுக்கி, கால்நடைகளுக்கு பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விதை விந்து சேகரிக்கும் நிலையங்களை விரிவுபடுத்த வேண்டும். இன்னும் அதிக அளவில் அவற்றை விரிவாக்க வேண்டும்.

அடுத்து, காளைகளுக்கு வழங்கும் பணம் எல்லாம் அந்தக் காளைகளுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்த்தால் அதிலே ஊழலும், ஊதாரித்தனமும் நடக்கின்றன. அத்தகையச் செயல்கள் தடுக்கப்பட வேண்டும். காளைகளுக்கு ஒதுக்கப்படும் பணம் ஒழுங்காக போய்ச் சேர அரசாங்கம் சரியான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோழி வளர்ப்பு நிலையங்களை அதிகப்படுத்த வேண்டும். நடமாடும் கால்நடை மருந்தகங்களை அதிகமாக ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் தெருவுக்கும் சென்று நடமாடும் மருந்தகங்கள் மூலம் வைத்திய வசதி செய்து தரப்பட வேண்டும்.

இந்தக் கால்நடை பராமரிப்புத் துறையில் பணியாற்றும் ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அவர்களுடைய



குறைகளைத் தீர்த்து வைத்து அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தர வேண்டும். இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்க வேண்டும், இரவு காவலர்களை அதிகமாக நியமிக்க வேண்டும்; அவர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டும்; வேலைக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்; என்பன போன்ற பல கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை பரிசீலித்து, உடனடியாகத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவர்கள் பணியிடங்கள் 23 காலியாக உள்ளன. கால்நடை ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து அந்த இடங்களை உடனடியாக நிரப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

தஞ்சை மாவட்டம், ஈச்சங்கோட்டையில் கால்நடைப் பண்ணையில் பணியாற்றும் சுமார் 150 விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மிகக் குறைந்த கூலி வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் பக்கத்தில் இருக்கிற ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு சமீபத்தில் 9 ரூபாய், 7 ரூபாய் என்று கூலி நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அந்த அளவுக்காவது எங்களுக்குக் கொடுங்கள் என்று ஈச்சங்கோட்டையில் பணியாற்றும் தொழிலாளர்கள் கேட்டால் அதிகாரிகள் கொடுக்க மறுக்கிறார்கள்; மேலிடத்திலிருந்து உத்தரவு வர வேண்டுமென்று சொல்கிறார்கள். பக்கத்திலே ஒரு இடத்தில் கொடுக்கிற கூலி அளவுக்கு நிர்ணயம் செய்து, அந்த அளவுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள்.

உடனடியாக அந்தக் கால்நடை பண்ணைகளிலே பணி புரியக் கூடிய தொழிலாளர்களுக்கு அவர்களுக்குத் தேவையான நியாயமான அதிகக் கூலியை கொடுப்பதற்கான உரிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வாசுதேவநல்லூரில் கால்நடைகள் அதிகமாக உள்ளன. ஆனால் அங்கே மருத்துவ வசதி கிடையாது. ஆகவே வாசுதேவநல்லூரில் ஒரு கால்நடை மருந்தகம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல முள்ளிக் குளத்தில் ஒரு கால்நடை மருந்தகம் ஏற்படுத்த வேண்டும் என்று, இடமும், பணமும் வழங்கப்பட்டு விட்டதாக மக்கள் கூறுகிறார்கள். எனவே அந்த இடத்தில், முள்ளிக்குளத்தில் ஒரு கால்நடை மருந்தகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இறைச்சி வாரியம் பற்றி ஒன்றிரண்டு சொல்ல விரும்புகிறேன். இப்போது இறைச்சியின் விலை மிக அதிக அளவுக்கு உயர்ந்துள்ளது; ஆட்டின் இறைச்சி 20 ரூபாய்க்கு மேல் விலை விற்கிறது. கோழி இறைச்சியின் விலை அதை விட அதிகமாகப் போய்விட்டது. இதனால் ஏழைகளுக்கு இறைச்சி என்பது

நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. எனவே இந்த வாரியத்தின் மூலம் இறைச்சிகளை மலிவு விலையில் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்து தந்து, இந்த இறைச்சி சாப்பிடக் கூடிய மக்களின் குறையைப் போக்க வேண்டும். இப்போது இறைச்சி சாப்பிடக் கூடியவர்களுக்கு ஒரு எலும்பு கூடக் கடிக்க முடியாத அளவுக்கு விலைவாசி நிலைமை இருக்கிறது. ஆகவே, இவைகளையெல்லாம் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. பி. துரைராஜ்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களால் அவையிலே வைக்கப்பட்டுள்ள 1983–84-வது ஆண்டுக்கான, சமூகநலம், கால் நடைவளம் குறித்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, வரவேற்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய சிலபல கருத்துக்களை கூற விழைகிறேன்.

1983–84 ஆம் நிதி ஆண்டுக்கு சமூகநல மேம்பாட்டிற்காக, 59 கோடியே, 38 லட்சத்து, 83 ஆயிரம் ரூபாயையும், கால்நடை வளர்ப்பிற்காக, 21 கோடியே 16 லட்சத்து 16 ஆயிரத்திற்கும் ஒதுக்கீடு செய்திருப்பதை குறித்து, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சமுதாய முன்னேற்றத்திலே முக்கியமான பங்கு மகளிருடைய முன்னேற்றத்திற்குத் தான் கொடுக்க வேண்டும் என்று நம்முடைய தேசிய கவியான பாரதியார் கூட சொல்லியிருக்கிறார்கள். ஆண்களுக்கு பெண்கள் இளைத்தவர்கள் அல்ல. பெண்களுக்கும் சமுதாயத்திலே, ஆண்களுக்குச் செய்யக்கூடிய அளவுக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்ற பாரதியாருடைய கூற்றுக்கு இணங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகளிர் நலனுக்காக, 1975–76 ஆம் ஆண்டு, 12·03 இலட்சம் ஒதுக்கியதை விட, அதிகமாக 1982–83 ஆம் ஆண்டு 118·53 லட்சமாக அதை உயர்த்தியிருப்பது குறித்து, இந்த அரசு மகளிருடைய தொழில் முன்னேற்றத்தில் எந்த அளவுக்கு கவனம் செலுத்தி வருகிறது என்பதைக் குறிக்கிறது. அதற்காக நான் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புறங்களிலே வாழும் மகளிருடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, பொருளாதார உயர்வைக் கொடுப்பதற்காக, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகத் தொழில்கள் ஏற்படுத்தி, மகளிருக்கு பொருளாதார முன்னேற்றம் ஏ பட வேலை வாய்ப்பு கொடுத்து உதவி வருவதற்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



உதாரணமாக, தீப்பெட்டித் தொழிற்சாலை, பனைப்பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, நோட்டுப் புத்தகம் தயாரிக்கும் தொழிற்சாலை, சாக்கட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, சாக்கட்டி மற்றும் மெழுகுவர்த்திக் கூடங்களின் அமைப்பு போன்றவைகளை உருவாக்கி அதன் மூலமாக அவர்களுடைய பொருளாதாரத்தை வளம் பெறச் செய்ய நல்ல பல திட்டங்களை இந்த மானியத்தின் மூலம் கொண்டு வந்திருப்பதற்காக, நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும் குறிப்பாக கிராமப்புறங்களில் நூற்பு ஆலைகளை ஏற்படுத்தி, அதிலே பெண்களுக்கு பயிற்சி அளித்து, அந்த மகளிருடைய பொருளாதாரத்தை முன்னேற்றம் செய்ய ஏற்பாடு செய்திருப்பது குறித்து நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுரை மாவட்டத்தில் இந்த 1983–84 ஆம் ஆண்டில் 41,000 ரூபாய் செலவில் ஒரு கிராமப்புற நூற்பு ஆலையை தொடங்க திட்டமிடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள், கொள்கைக் குறிப்பு அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். அது குறித்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன் என்றாலும், மிகப் பெரிய வறட்சிப் பிரதேசமான நெல்லை மாவட்டத்தில், சங்கரன் கோவில் வட்டத்தில், வரும் அடுத்த ஆண்டிலாவது, இதுபோன்ற கிராம நூற்பு ஆலை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கயிறு தயாரிப்பு தொழில், பட்டுப் புழு வளர்ப்புத் தொழில், தையற்கலைத் தொழில், மேலும் உணவு விடுதிகள் அமைக்க விதவைகளுக்கு கடன் உதவி என்று, பல வகைகளில் சமூக நலத்துறையில் மகளிருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்று மேற்கொள்ளப்பட்டிருக்கும் திட்டங்களுக்காக, மிக அதிகமாகவே இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல ஆதரவு அற்ற விதவைகளின் மகள்களுக்கு திருமணம் செய்வதற்காக அரசாங்கம் உதவி செய்ய ஏற்பாடு செய்து அவர்களுக்கு வாழ வழி காட்டியிருப்பதற்காகவும், விதவைகளுக்கு மறுமணத் திட்டம் என்ற பெயரில், அவர்கள் மறுமணம் செய்துகொள்ள உதவி செய்து, அதற்காக 5 லட்சம் நிதி ஒதுக்கியிருப்பதற்காகவும், அவர்களது மறு வாழ்க்கைக்கு வழி செய்திருப்பதற்காகவும், இந்த அரசை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-40]

அடுத்து விதவை மறுமணம் செய்துகொண்டவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காகவும், அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிப்பதற்காகவும் இந்த அரசு அதிகமாக நிதி ஒதுக்கி செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பொதுவாக நம்முடைய தமிழகத்தில் கால்நடை பராமரிப்புக்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டாலும் இந்த ஆண்டு ஏற்பட்டு இருக்கக்கூடிய மிகப் பெரிய வறட்சியால் இன்றைக்கு தமிழகத்தில் இருந்து லட்சக்கணக்கான கால்நடைகள் வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய ஒரு அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட ஒரு நெருக்கடி விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. இப்படி நெருக்கடி இருந்தாலும் கூட இன்றைக்கு இந்த கால்நடைகளை கூட காப்பாற்ற முடியாமல் அவைகளுக்கு குடிநீர் கொடுக்க முடியாத ஒரு அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. போதுமான தீவனம் கூட இன்றைக்கு கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் போர்க்கால நடவடிக்கைகளை எடுத்து கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்க நம்முடைய கால்நடை பராமரிப்பு நிறுவனங்கள் மூலமாக வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பல்வேறு நிலைகள் இருந்தாலும் கூட இப்படிப்பட்ட நிலையில் ஆக்கத்தோடும் ஊக்கத்தோடும் ஒரு செயல்பாட்டை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய கால்நடை வளர்ச்சிக்கான ஆலோசனைக்குழு 1975-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு அது செயலில் இருந்து வந்திருக்கிறது. ஆனால் தற்சமயம் அந்த கால்நடை வளர்ச்சி ஆலோசனைக் குழு செயல்முறைப்படுத்தப்படாமல் இருப்பதால் அங்கே நடக்கக்கூடிய பல்வேறு ஒழுங்கீனங்கள் முறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. அதற்கு ஒரு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மருத்துவ கிளை நிலையங்களைப் பொறுத்த மட்டில் பல்வேறு இடங்களில் சொந்த கட்டிடங்கள் இல்லாமல், வாடகை கட்டிடங்களிலும், இன்னும் சில இடங்களில் புறம்போக்கு இடங்களிலும் அவைகள் மரத்தடி மந்திரி சபை மாதிரி, செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. ஆகவே அவைகளுக்கு நிரந்தர கட்டிடங்களை கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சூழ்நிலையில் என்னுடைய தொகுதியில் கடம்பூரில் கால்நடை மருத்துவ நிலையம் அமைக்கப்பட கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். இன்றைக்கு அங்கே கட்டிடம் கட்டுவதற்கு ஆக்கபூர்வமான பணிகள் நடைபெற்று வருவதை எண்ணி நான் உண்மையிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

இன்றைக்கு கால்நடை மருத்துவ கிளை நிலையங்களில் 15 ஆண்டுகளுக்கு முன்னால் வழங்கப்பட்ட ஆணைப்படி 1,500 ரூபாய்க்கு தான் அவர்கள் மருந்து வாங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். இன்றைக்கு ஏறத்தாழ 15 ஆண்டு காலத்தில் எந்த அளவுக்கு விலைவாசிகள் உயர்ந்து இருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆகவே அந்த அடிப்படையில் இந்த கிளை மருத்துவ நிலையங்களில் இன்றைக்கு குறைந்த பட்சம் 5 ஆயிரம்



ரூபாயாவது மருந்து வாங்குவதற்கான உத்திரவுகளை பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த மருந்துகள் வாங்குவதற்கு முன்னால் மருந்து வாங்கும் குழு 'சென்ட்ரலைஸ் பர்சேஸ் கமிட்டி' என்ற ஒரு கமிட்டி இருந்தது. இன்றைக்கு அந்த கமிட்டி இல்லாமல் அதை கலைத்துவிட்டு 'மெடிக்கல் ஸ்டோர்ஸ் டெப்போ' என்ற அடிப்படையில் இன்றைக்கு அதன் மூலம் தான் மருந்துகள் வாங்கப்படுகின்றன. அதை தடுத்து நிறுத்தி ஏற்கனவே இருந்த பழைய முறையில் சென்ட்ரலைஸ் பர்சேஸ் கமிட்டி என்ற அடிப்படையில் . . .

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மருந்து வாங்குகின்ற முறை மருந்து வாங்கும் குழுவினால் தான் இன்றைக்கும் வாங்கப்பட்டு வருகிறது. இது தனிப்பட்ட முறையில் வாங்கப்படவில்லை.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆனால் அப்படி வாங்குகின்ற அந்த மருந்துகளில் கூட சில மருந்துகள் தரம் அற்றவைகளாக இருக்கின்றன என்ற குற்றச்சாட்டுகள் எங்களுக்கு வந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே அவைகளைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் :** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, எந்த மருந்தாக இருந்தாலும் அந்த மருந்து வாங்கும் குழு என்ன சொல்கிறதோ அந்த அடிப்படையில்தான் மருந்துகள் வாங்கப்படுகின்றன. தனிப்பட்ட முறையில் தனியார் இடமிருந்து கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்த வரைக்கும் வாங்கவில்லை.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வாங்குகின்ற மருந்துகளே தரம் அற்றதாக இருக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அது மட்டும் அல்லாமல் 23 கால்நடை மேற்பார்வையாளர்கள் பணியிடம் இன்றைக்கு நிரப்பப்படாமல் இருக்கின்றன. அவைகளில் ஏற்கனவே இருக்கக்கூடிய பல ஆண்டு காலம் பணியாற்றி இருக்கக்கூடிய கால்நடை ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தரம் அற்ற மருந்துகள் வாங்குவதாக குறிப்பிட்டார்கள். தரம் அற்ற மருந்துகள் வாங்கி போட்டால் கால்நடைகளுக்கு சரியான முறையில் சிகிச்சை அளிக்க முடியாது. இப்போது அரசாங்கத்தைப் பொறுத்த வரைக்கும் தரம் உள்ள மருந்துகளை வாங்கிப் போட்டுதான் சிகிச்சை செய்துகொண்டு வருகிறது. என்ன மருந்து தரம் அற்ற மருந்து என்று அதன் பெயரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டால் அதுபற்றி அதிகாரிகளை ஏன் இப்படி வாங்கினீர்கள் என்று கேட்கமுடியும்.

அடுத்து சத்துணவுத் திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு நல்ல பலன் ஏற்பட்டிருக்கின்றது என்பது நான் சொல்லாமலேயே யாவரும் அறிவார்கள். ஆனால் அதிலே குழப்பங்களும், மாறுபாடுகளும் காட்டப்படுகின்றன என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறினார்கள். ஆனால் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஆளும் கட்சியினைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களால் பரிந்துரை செய்யப்பட்ட நபர்களுக்குக் கூட வேலை கொடுக்கப்படாத நிலையில் தகுதியான நபர்களுக்குத் தான் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கின்றது.

அடுத்து உடல் ஊனமுற்றவர்கள் பல்வேறு வகைகளில் முன்னேற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அவர்கள் இயன்ற தொழில்களைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது குறித்து நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கால்நடை வளர்ச்சிக் குறித்து ஒருசில கருத்துக்களை கூற விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்தில் வன்னிக் கோனேந்தல் என்ற இடத்தில் இலவசமாக நிலம் கொடுத்து அங்கே ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும் என்று பல காலமாக அந்த மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே அங்கே விரைவிலே ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை தீவனத்தைப் பொறுத்தவரையில் அதிகமாக கிராக்கி இருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோயில் வட்டத்தில் கடுமையான வறட்சி ஏற்பட்டு கால்நடைகளுக்கு குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாத நிலைமை இருக்கின்றது. எனவே அந்தப் பகுதிகளில் பல்வேறு நிவாரணத் திட்டங்களின் கீழ், கால்நடைத் துறையின்கீழ் அந்த ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அங்குள்ள சிறு விவசாயிகள் கால்நடைத் தீவனத்தைப் போதிய அளவுக்கு உற்பத்தி செய்கின்ற வகையிலே அவர்களுக்குப் போதிய ஊக்கத் தொகை கொடுக்கவேண்டும்.

அடுத்து கால்நடை ஆய்வாளர்கள் வைத்துள்ள கோரிக்கைகளில் சிலவற்றை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளைக் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏராளமான கால்நடை ஆய்வாளர்கள் பதவி காலியாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அவற்றை நிரப்ப வேண்டும். தற்போது சில ஆண்டுகளாக் கால்நடை ஆய்வாளர் பயிற்சி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. எனவே அந்த பயிற்சி நிலையங்களை மீண்டும் ஆரம்பித்து ஏராளமானவர்களுக்கு பயிற்சி அளித்து கால்நடை துறையிலே அவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதன் மூலம் சிறு விவசாயிகளின் கால்நடைகளை நல்ல முறையில் பராமரிப்பதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். எனவே அந்த பயிற்சி நிலையங்களை மீண்டும் ஆரம்பித்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து இலாக்காவில் புதிய திட்டங்களை உருவாக்கும் போது எல்லாம் கால்நடை ஆய்வாளருக்கு போதிய இடங்களை ஒதுக்க வேண்டும். 10 ஆண்டுகள் பணி செய்து முடித்த கால்நடை ஆய்வாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டும். மாவட்டங்களில் காலியாக உள்ள கிளை நிலையங்களைப் புதுப்பித்து வெளி மாவட்டங்களுக்கு மாற்றலாகியுள்ளவர்களை மீண்டும் அந்த மாவட்டத்திற்கு மாற்றம் செய்து அவர்கள் நல்ல முறையில் பணிபுரிவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

அடுத்து கிளை நிலையங்களுக்குப் போதிய மருந்துகள் கொடுக்க வேண்டும். கிராமங்களிலே உள்ள சிறு விவசாயிகள் கால்நடைகளை அந்த கிளை நிலையங்களுக்குக் கொண்டு சென்றால் அங்கே அவற்றுக்கு என்ன நோய் இருக்கின்றது என்று கண்டு பிடித்து சிகிச்சை அளிப்பதற்கு வசதி இல்லை. எனவே அங்கிருந்து தூரத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைக்குத்தான் அனுப்பவேண்டி இருக்கின்றது. எனவே அந்த நிலைமையை மாற்றி ஒவ்வொரு கிளை நிலையங்களுக்கும் குறைந்தபட்சம் மருந்துகளைக் கொடுத்து அவர்கள் முதலுதவி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கிளை நிலையங்களுக்குக் கட்டிடங்களைக் கட்டித்தர வேண்டும். அநேக கிளை நிலையங்கள் கட்டிட வசதி இல்லாததன் காரணத்தால் தனிப்பட்டவர்களின் கட்டிடங்களில் இருக்கின்றன. அதை மாற்றி தீவிரமான ஒரு திட்டத்தை ஏற்படுத்தி அந்தக் கட்டிட வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

அடுத்து தையல் பயிற்சி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். அப்படி ஆக்கி அவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும். 20 ஆண்டுகளுக்கு மேல் சர்வீஸ் செய்தும் அவர்கள் இதுவரையில் அரசு ஊழியர்களாக்கப்படாத நிலைமை இருப்பதன் காரணத்தால் அந்தப் பெண்களிடையே பெருத்த அதிருப்தி ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே அவ்வாறு ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிபவர்களானாலும் சரி, எந்த வகையில் பணிபுரிபவர்களானாலும் சரி அந்தப் பெண்களின் பணிகளை வரைமுறைப்படுத்தி அவர்களுக்கு கூடுதல் சம்பளம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறை மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கால்நடை மானியத்தின் மீது பல்வேறு கொள்கை விளக்கக் குறிப்புக்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

மிஞ்சி அன்றைக்கே இருக்கக்கூடிய 52 ஊராட்சி மன்றங்களில் 28 பேர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் ஊராட்சி மன்றத் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தொகுதி. அந்த அளவுக்கு அதிகமான ஆதிதிராவிட மக்கள் வாழக்கூடிய பகுதி. இன்றைக்கு நீங்கள் சொல்லக்கூடிய சத்துணவுத் திட்டம் மூலம் எத்தனை பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறீர்கள். நாங்கள் குற்றச்சாட்டுச் சொன்னால் உங்களுக்கு ஆத்திரம் வருகிறது. எனக்குத் தெரியும் நான் அதிகாரப் பூர்வமாகச் சொல்லமுடியும். அந்த அளவுக்கு என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு படித்து முடித்த பெண்கள் அங்கே இருக்கிறபோது பக்கத்திலே தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியிலே இருந்தும் அதைப் போன்று பிற சட்டமன்ற தொகுதியிலிருந்து பணியாளர்களை அமர்த்தியிருக்கிறார்கள். பல்வேறு இடங்களிலே என்னுடைய தொகுதியிலே தகராறு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் விவசாயத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் கொடுப்போம் என்று சொன்னீர்கள். என்னுடைய தொகுதியிலே நூற்றுக்கணக்கான மக்களுக்குக் கிடைக்கவில்லை.

ஆகவே நான் சொல்வதெல்லாம் இன்றைக்கு எத்தனையோ கோடிகளை கொட்டிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி நீங்கள் வண்ண சுவரொட்டிகளைச் நான் ஒட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால் எந்த மக்களுக்காக, எந்த நோக்கத்திற்காக திட்டங்களை தீட்டுகிறோமோ அந்த மக்களுக்கு அதன் பலன் கிடைக்க வேண்டும். குறைந்தபட்சம் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்காவது யாருக்கெல்லாம் தகுதி இருக்கிறதோ அவர்களுக்கு வழங்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்குவதற்கு அரசு முயல வேண்டும்.

அதைப்போல விதவைகளுக்கு, ஊனமுற்றவர்களுக்கு சமூக நலத்துறை மூலம் இட்லி கடைகளை வைப்பதற்கு திட்டங்களை வைத்திருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும் போது குறிப்பிட்டார்கள். அதை பாராட்டுகிறேன். இன்றைக்கு பெரிய மருத்துவமனைகளாக இருந்தாலும், அல்லது தாலுக்கா மட்டத்தில் இருக்கிற மருத்துவமனையாக இருந்தாலும் நோயாளிகளுக்கும் அவர்களுடன் கூட வரக்கூடியவர்களுக்கும் கூட உணவு கிடைப்பதில்லை. குறிப்பாக என்னுடைய ஓட்டப்பிடாரம் தொகுதியில் இருக்கிற தாலுக்கா மருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கு கூட உணவு கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட இடங்களில் சமூகநலத் துறையின் மூலம் அமைக்கப்படக்கூடிய இட்லி கடைகளை வைத்து, இப்படிப்பட்ட பெண்கள் நடத்துவதற்கு அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.





இன்றைக்கு வருடத்திற்கு ஒரு வேஸ்டி, ஒரு சேலை என்று கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் இரண்டு என்று சொல்கிறார்கள். பாராட்டுகிறேன். இரண்டு வேஷ்டி, சேலைகள் வருடம் தோறும் கொடுத்தாலும், தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ காலங்களில் புத்தாடை வழங்குவதற்கு நீங்கள் ஆவனசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தையல் பயிற்சி ஆசிரியர்கள். 20 ஆண்டு காலமாக அவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். பல்வேறு திட்டங்களை அவர்கள் தான் கிராமங்கள்தோறும் சென்று மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. யாருடைய துறையின் கீழ் வேலை செய்கிறோம் என்று அவர்களுக்கே தெரிவதில்லை. சமூக நலத்துறையா, உள்ளாட்சித் துறையா என்ற சந்தேகத்தில் இருக்கிறார்கள். ஆகவே அவர்களை சமூக நலத்துறையின் கீழ் கொண்டு வந்து அரசு ஊழியர்களாக அவர்களை மாற்றி அரசு ஊழியர்களுக்கிருக்கிற குறைந்தபட்ச சம்பளத்தையாவது அவர்களுக்கு வழங்கவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்து அமர்கிறேன்.

திரு. செ. குப்புசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூகநலத்துறை மற்றும் கால்நடை மானியத்தின் மீது எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதி வந்தவாசி. வந்தவாசி என்றால் இந்த சபையிலே உள்ள அனைவருக்கும் தற்போது நடந்த ஒரு நிகழ்ச்சி ஞாபகத்திற்கு வரும் என்று நினைக்கிறேன். அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அதை மிகவும் நன்றாக ஞாபகத்தில் வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். வறட்சி நமது தமிழகத்தை வாட்டிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நாம் பலமுறை மத்திய அரசிற்கு எடுத்துக்கூறி, மத்திய அரசு ஒரு குழுவை அமைத்து தமிழகத்திற்கு அனுப்பி வைத்தது. அந்த குழு விசாரணை செய்து, இடங்களை பார்வையிட்டு அதனுடைய பதிலை அளித்து, மத்திய அரசு ஆட்சி வறட்சி நிறைந்த பகுதியாக ஏற்றுக்கொண்டது வந்தவாசி என்பதை நிருபிக்கிற வகையிலே பிரதமர் அவர்களும், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களும் வந்தவாசிக்கு வருகை தந்து அந்த பகுதியிலே பார்வையிட்டார்கள். அந்த பகுதியிலே வாடிக்கொண்டிருக்கிற மக்களை பார்த்து, அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிற நிவாரண வேலைகளை பார்த்து அவர்களுக்கு ஆறுதல் அளிக்கிற வகையில் அந்த பகுதியை பார்வையிட்டு வந்தார்கள். மத்திய அரசு நாம் கேட்கிற அளவிற்கு கொடுக்கவில்லை என்றாலும், ஓரளவிற்கு இன்றைக்கு கொடுத்திருப்பதை நான் அந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் வரவேற்று பாராட்டுகிறேன். இன்றைக்கு எடுத்துக்

**திரு. மு. அப்பாதுரை:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடம் நான் பர்ட்டிகுலர்ஸ் கொடுக்கிறேன். இன்றைக்கு நம்முடைய மாவட்டங்கள் தோறும் மாவட்ட கால்நடை பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. ஆனால் இன்றைக்கு பல்வேறு மாவட்டங்களில் குறிப்பாக என்னுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் அந்த கால்நடைப் பண்ணை ''கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது'' என்று சொல்வார்கள் ஊரிலே,

(முற்பகல் 11-50).

அதைப்போன்றுதான் கால்நடைப் பண்ணை மிகவும் மோசமான நிலையில் இன்றைக்கு எத்தனை மாடுகள் வாங்கப்பட்டன, எத்தனை ஆடுகள் இருந்தன என்ற கணக்குகள் கூட இல்லாமல் காற்றிலே பறந்து அலங்கோலமாக காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. நான் ஏன் இதை வேதனையோடு சொல்கிறேன் என்றால் புதுக்கோட்டை கால் நடைப் பண்ணையிலே 200 ஆண் பெண்கள் சுமார் 20 ஆண்டுக் காலமாக பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். நம்முடைய அரசாங்கம் ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறது. நாம் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவின் மூலமாக சொல்லப் பட்டு ஏற்றுக்கொண்டு சட்டத்தைப் போட்டிருக்கிறோம். அதன் படி 2 ஆண்டுகளில் 480 நாட்கள் பணிபுரிந்தவர்கள் நிரந்தரம் செய்யவேண்டுமென்ற அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. அந்த அரசாணையை அரசாங்கம் நடத்துகின்ற அந்தக் கால் நடைப் பண்ணையிலேயே அமல் நடத்தவில்லை என்றால் — வேலியே பயிரை மேய்வது போன்ற — இன்றைக்கு உங்கள் சட்டத்தை நீங்களே கொன்றுகொண்டிருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக் கிறேன். ஆகவே அந்த நிலைமைகள் எல்லாம் அகற்றப்பட அமைச்சர் அவர்களாவது அந்த 200 ஆண் பெண் தொழிலாளர் களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இன்றைக்கு நம்முடைய பால்வள நிறுவனத் திலிருந்து ஊர்கள்தோறும் கிராமங்கள்தோறும் பால்பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள் ஆட்டுப் பண்ணைகள் மூலமாக அவைகள் வளர்க்கப்பட வேண்டுமென்று சொல்லி கோடிக்கணக் கான ரூபாயை நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் என்ன நடக்கிறது? நெல்லை மாவட்டத்திலே பால் பண்ணைக்கு மாடுகள் வாங்கவேண்டுமென்றால் ஈரோட்டிலே சென்று வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அங்கே யாரும் வாங்குவ தில்லை. பக்கத்திலே இருக்கிற மாட்டைக் கொண்டுவந்து யாருக்கு மாட்டு லோன் கொடுத்திருக்கிறதோ அவர்கள் வீட்டில் கட்டி நம்முடைய ஆய்வாளர்கள் சீல் குத்திவிடுகிறார்கள். போதுமான தரமான மாடுகள் கிடைக்கவில்லை என்ன காரணம்? இன்றைக்குப் பால் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று கால் நடைகளை வளர்க்க வேண்டுமென்று பல கோடிக்கணக்கான ரூபாய்களை ஒருங்கிணைந்த ஊர்வளர்ச்சித் திட்டம், தன்னிறை வுத் திட்டம், ஏழைகளுக்குத் திட்டம், ஆதிதிராவிடர்களுக்குத் திட்டம், மலைவாழ் மக்களுக்குத் திட்டம் என்று எத்தனையோ



திட்டங்களை சொல்லிக்கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னால் மாவட்டந்தோறும் அமைக்கப்பட்ட இந்த கால் நடைப் பண்ணைகளை முறைப்படுத்தி ஒழுங்குபடுத்தி தரமான போது மான கன்றுகளையும் ஆடுகளையும் உற்பத்தி செய்யக்கூடிய முறையிலே ஒரு நல்ல திட்டத்தை இந்த நேரத்திலாவது எடுத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் சமூக நலத் துறையைப் பொறுத்த வரையில் இன்றைக்கு உங்களுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு பாடல் சத்துணவுத் திட்டம் தான். நன்றாக வரவேற்றுக் கொள்ளுங்கள், வாழ்த்திக் கொள்ளுங்கள், ஆனால் நான் கேட்பதெல்லாம் இன்றைக்கு சத்துணவுத் திட்டம்தான் தமிழகத்தின் சர்வரோக நிவாரணியா? அப்படிப்பட்ட நிலைமையைப் பெற்றிருக்கிறதா? நானும் என்னுடைய தொகுதியிலே—இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றன—அத் தனை சத்துணவு மையங்களுக்கும் சென்று பார்வையிட்டு வந்திருக்கிறேன். எத்தனை குழந்தைகள் வருகிறார்கள்? எப்படிப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள்? எவ்வளவு சத்துணவு சாப்பிடுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். கடந்த 6 மாத காலம் இந்த சத்துணவுத் திட்டம் இங்கே நடை பெற்றிருக்கிறது. 150 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம் என்று மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர் சொன்னார்கள். 100 கோடி செலவு செய்து 500 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்க முடிந்தது, நாங்கள் 150 கோடி ரூபாய் செலவு செய்து ஒரு கோடிப் பேர்களுக்கு வேலை கொடுத்து இருக் கிறோம் என்று சொன்னார்கள். ஒரு கோடி மக்கள் சாப்பிடு கிறார்கள் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். சத்துணவுத் திட்டத்தின் மூலம் ஏதோ சில குழந்தைகள் கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய மக்கள் சாப்பிடுகிறார்கள் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இந்தத் திட்டம் தான் தமிழகத்தின் உயர்வுக்கான ஒரு சமதர்மத் திட்டம் என்று சொன்னால் நீங்கள் அந்த ஏழை எளிய மக்களை ஏமாற்று கிறீர்கள், அவர்களை வஞ்சிக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல் சமூக நலத் துறையிலே ஊனமுற்றோர்கள், விதவைகள் விவசாயத் தொழிலாளர்கள் இவர்களுக்கு எல்லாம் மானியம், பென்ஷன் கொடுக்கப்படும் என்று சொன்னீர்கள். நீங்கள் அறிவித்து ஒரு ஆண்டுகாலமாகிவிட்டது. என்னுடைய தொகுதியிலே நான் கையெழுத்துப் போட்டு, சட்டமன்ற உறுப்பினர் கையெழுத்துப்போட்டு, கொடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மனுக்கள் இன்றைக்கு திருப்பியனுப்பப்படுகின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதி 1952ஆம் ஆண்டிலிருந்து ரிசர்வ் தொகுதியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சொந்தமான தொகுதியாக இருந்துகொண்டிருக்கிறது. அரசாங்கம் அறிவித் திருக்கக்கூடிய இந்த 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த விழுக்காட்டை

கொண்டிருக்கிற மானியக் கோரிக்கை அவர்களின் வருகைக்கு தகுந்தாற்போல் அமைந்திருப்பதை உங்களுடைய ஞாபகத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற சத்துணவுத் திட்டம் சிறப்பான முறையில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய வந்தவாசி பகுதிகளில் இப்போது கால்நடைகளுக்கு தீவனம் சரிவர கிடைக்காத நிலை இருந்து கொண்டிருக்கிறது. பக்கத்து தாலுக்காக்களிலும் போய் கொண்டு வர முடியாத நிலையில் மாட்டுத்தீவனம் கிடைக்காமல் இருக்கிறது. இந்த மானியத்தின்மீது எனக்கு பேச வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன்.

(நண்பகல் 12-00)

அதேபோன்று சத்துணவுத் திட்டத்தால் சமரசம் கிடைத்துவிடுமா என்று கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டார்கள். சுதந்திரம் அடைந்து 36 ஆண்டுகள் கடந்துவிட்ட பிறகும், ஜாதி வித்தியாசம், ஏற்றத்தாழ்வுகள் இருந்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, குழந்தைகளின் பிஞ்சு உள்ளத்திலே அந்த நினைவுகள் வராத வண்ணம் வாழ இந்தச் சத்துணவுத் திட்டம் வழி வகுக்கிறது. நாம் எல்லாம் பள்ளிக்குச் சென்ற பிறகுதான்—பள்ளிப் பிள்ளைகளாக வருகின்ற நேரத்திலேதான் சமமாகப் பழகவேண்டுமென்ற நினைவு பெற்றோம். ஆனால், இப்பொழுது பிஞ்சுக் குழந்தைகள் உள்ளத்திலே, சமரசமாக, வித்தியாசம் இல்லாமல், ஒன்றோடொன்று கூடிக் குலாவிப் பழகிச் சாப்பிடுகின்ற வகையிலே இந்தச் சத்துணவுத் திட்டம் அமைந்திருக்கிறது என்றால், அதிலே சமரசம் இல்லையா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று இன்று ஆடு, பசு மாடு, கோழி வளர்ப்பு போன்ற பல திட்டங்கள் கிராமங்களில் கூலி வேலை செய்து வாழ்கின்ற மக்கள், மற்ற நேரங்களிலே, வீணாக வாழக் கூடாது என்ற வகையில் கொண்டு வரப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக, ஆதிவாசிகள், பொருளாதாரத் துறையில் மிகவும், கீழே வாழ்க்கை நடத்துகின்ற மக்கள், பொருளாதாரத்திலே உயர்கின்ற வகையிலே இந்தத் திட்டங்களைக் கொண்டு வந்து நாட்டிலே பெரும் புரட்சியை உண்டாக்கியுள்ளார்கள்.

இன்றைக்கு மாநிலக் கூட்டுறவு நிறுவனங்களானாலும் சரி வங்கிகளானாலும் சரி, 5 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலமுடைய விவசாயிகள், பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் தான் உதவி பெற முடியும் என்ற நிலை போய், நிலம் அற்றவர்களும், நிலம் குறைவாக உள்ளவர்களும் வங்கி என்றால் என்ன என்று தெரியாதவர்களும், கடனைப் பெறலாம், வங்கிகளுக்குச் செல்ல



செல்லலாம் என்று நிலை வந்துள்ளது. பணக்காரர்கள்தான் செல்லமுடியும் என்ற நிலையை மாற்றி, ஏழை, எளிய மக்களும் அங்கு சென்று வங்கிகளிலே கடனைப் பெறலாம் என்ற ஒரு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்த அரசு இது என்று பெயரை மட்டும் மாற்றினால் போதுமா என்று கேட்டவர்களுக்கு—திராவிடமுன்னேற்றக்கழக உறுப்பினர் கேட்டதற்கு—இது ஒரு மாற்றம் அல்லவா என்ற ஒரு கேள்வியை நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பெயரை மட்டும் மாற்றவில்லை. திட்டத்தை மாற்றுவதற்கு வேண்டிய காரணங்களைச் சொல்லி, அதே நேரத்தில், அப்படிப்பட்ட புரட்சிகரமான, இல்லாதவர்கள் இருக்கின்றவர்களைப் போல் வாழமுடியும், அவர்கள் பொருளாதாரத்தில் உயர முடியும் என்று புரட்சித் தலைவர் ஆட்சி, அதிலும் குறிப்பாக, சமூக நலத்துறை ஒரு திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் சத்துணவு மையங்களுக்கு ஆட்களை நியமிப்பதில் முறைகேடுகள் நடந்ததாக இங்கே காங்கிரஸ் நண்பர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புவதெல்லாம், எந்த ஒரு திட்டத்திலும் ஆளுகின்ற அரசு, அதனுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, பலன் பெற்றது என்ற நிலை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசில் இல்லை. எதிர்க்கட்சியாக இருக்கிற காரணத்தால், மாற்றாந்தாய் மனப்பான்மையோடு, சொல்லவேண்டுமென்ற நிலையிலேதான் சொல்கிறார்களே தவிர, இங்கே ஆளுகிற சர்க்காரும், அதனுடைய தலைவரும் அதிலே உள்ள எங்களைப் போன்ற உறுப்பினர்களும் அதிலே கொஞ்சங்கூட அசிங்கம் ஏற்படக் கூடாது என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறென். இவை எல்லோருக்கும் தெரிந்தாலும் சில அனுபவத்தை நான் சொல்ல வேண்டாமென்ற முறையிலே இருக்கிறேன். முன்னால் நடந்ததை இங்கு கூறுகின்ற நிலை ஏற்பட்டால், அவர்களுடைய மனம் புண்படக் கூடாது என்ற வேண்டுகோளையும் நான் இங்கு வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பொருளாதாரத் துறையிலே கீழ்த்தர மக்கள் முன்னேற வேண்டுமென்பதற்காக, கைம்பெண்கள், கணவன்களால் கைவிடப்பட்டவர்கள், திக்கற்றவர்கள், விதவைகள் மறுமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற புரட்சிகரமான திட்டங்களையெல்லாம் இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அடித்தள மக்கள் முன்னேற இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டவில்லையே. ஏதோ ஒரு பகுதியினர் நலம் பெறுவதற்காக மட்டும் இந்த அரசு திட்ட

மிடுகிறது என்று நீங்கள் நினைப்பீர்களானால், உங்கள் தொகுதியில் நீங்கள் வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறீர்களே, அந்த மக்கள் அடைகின்ற நன்மையை, அவர்கள் பெறுகின்ற வளங்களை நீங்கள் பிரதிபலிக்க மறந்து விட்டீர்கள் என்றுதான் நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல அடித்தள மக்களின் நடுவிலே வாழ்ந்து கொண்டிருக்கிற காரணத்தினால் ஒன்று கூற விரும்புகிறேன்.

இப்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள சத்துணவுத் திட்டத்தின் காரணமாக, பிள்ளைகளைப் பெற்ற தாய், அந்தப் பிள்ளைகளை வீட்டிலே விட்டு விட்டுப் போய், கழனிலே சென்று களை எடுத்து, நடவு நட்டு, அறுவடை செய்து, மாலையிலே வீட்டுக்கு வருகின்ற நேரத்தில் அந்தக் குழந்தைகள் தெருவிலே அலைந்து திரிந்து தெருவிலே நின்று கொண்டிருக்கின்ற நிலைமை மாறி, இப்பொழுது வாடி வதங்கிய முகத்தோடும், விரிந்த தலையோடும் குழந்தைகள் இருக்கின்ற காட்சியைக் காண்பது போய், இப்பொழுது அந்தக் குழந்தைகள் நிம்மதியாகச் சாப்பிட்டு விட்டு, கல்வி கற்று நல்ல நிலையில், சுகாதார முறைப்படி இருக்கின்ற அந்தக் குழந்தைகளைத் தாய் காணுகின்றபொழுது அது முன்பிருந்த நிலைமைக்கு முரணாக இப்பொழுது அமைந்திருக்கிறது. அந்தக் குடிசையிலே வாழுகின்ற ஏழைத் தாய் குழந்தைகள் படும் நிம்மதியைக் காணும்பொழுது இந்த அரசுக்கு நன்றி கூறுவதற்கு நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புறேன்.

விவசாயக் கூலிகளாக இருக்கின்ற ஆதிவாசிகளும், ஆதிதிராவிட மக்களும் பால் மாடுகளை வாங்கி கறவை செய்து பொருளீட்டி, குழந்தைகள் படிப்பதற்கு, உடுக்கின்ற உடை வசதி செய்து கொடுப்பதற்கு வசதி செய்கின்ற நிலைமைகளைக் கிராமங்களில் பார்க்கின்றபொழுது உண்மையிலேயே இந்த அரசு எப்படிப்பட்ட புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது என்று, பேசுவதற்கான இந்த வாய்ப்பை அளித்தமைக்காக நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, கால்நடை வளர்ப்பு மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களை எடுத்து வைக்க முன் வருகிறேன்.

கால்நடைப் பராமரிப்பு நிலையங்கள் கிராமங்களிலே இருந்தாலும் கூட, அந்த நிலையங்களிலே வேலை செய்யக் கூடிய ஆய்வாளர்கள் அங்கே இருக்கின்ற அளவிற்கு அந்த நிலையங்கள் நல்லமுறையிலே அமைக்கப்படவில்லை. மேலும், சில கிராமங்களிலே அந்த நிலையங்கள் இருந்தாலும்கூட, சுமார் ஆறு ஏழு மைல்கள் தூரம் நடந்து சென்று ஆடு மாடுகளுக்கு ஊசி



போடும் சூழ்நிலை இன்றைக்கிருக்கிறது. கிராம மகக்கள் அங்கே சென்றால் ஆடு மாடுகளுக்குப் போடக்கூடிய சரியான ஊசி மருந்துகள் இல்லை என்று சொல்லக்கூடிய அவலநிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே முந்தைய காலங்களில், இந்தக் கிராம நலத் திட்டத்தின் கீழ் இயங்கும் ஆஸ்பத்திரிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,500 ரூபாய்தான் மருந்துகள் வாங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பொழுதுள்ள விலையேற்றத்தின் காரணமாக, இந்தக் கிராம நலத் திட்டத்தின்கீழ் இயங்குகின்ற ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகளுக்கான தொகையை அதிகப் படுத்திக் கொடுக்க வேண்டும். மாடுகளுக்கு வயிற்றுப் பொருமலுக்காகக் கொடுக்கும் மருந்துகளை நல்ல மருந்தாகக் கொடுப்பார்களேயானால் நல்லது. ஆனால் இப்பொழுது சரியான மருந்துகள் கொடுக்கப்படாத காரணத்தால் அந்த மாடுகள் ஜீரண சக்தியைப் பெற முடியாத நிலையில் உள்ளன. எனவே இதுபோன்ற நாளான மருந்துகளை வாங்காமல், நல்ல மருந்துகளை வாங்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

சில கிளைகள் கட்டிடங்கள் இல்லாமலும், பர்னிச்சர்கள் இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கால்நடை வளர்ச்சி நல்ல முறையிலே இயங்க வேண்டுமென்றால் அங்கே நல்ல கட்டிடங்களைக் கட்டி, அந்தக் கட்டிடங்களில் பர்னிச்சர்களை வாங்கிக் கொடுக்க வேண்டும். சில வளர்ச்சி மன்றங்களுக்குப் போன் பிட்டிங் செய்து, அங்கேயுள்ள மேலாளருக்கு வாகன வசதிகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு கால்நடை நிலையம் இருந்தாலும், சில கிராமங்களைப் பொறுத்தமட்டில், அங்கே கால்நடைகள் அதிகமாக இருப்பதன் காரணமாக அந்தப் பகுதிகளுக்கு ஒரு கால்நடை வளர்ச்சித் திட்டத்தை கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கால்நடை பராமரிப்பு வளர்ச்சியைப் பெருக்கும் வகையில், ஏற்கனவே வளர்ச்சித் திட்டக் குழு இயங்கியது. இப்பொழுது அந்தக் குழு சரியான முறையில் இயங்காத காரணத்தால் அந்தக் கால்நடைப் பராமரிப்பு வளர்ச்சி சரியான முறையில் இல்லை. அந்தக் கால்நடை வளர்ச்சி நிர்வாகக் குழுவிற்குச் சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து, அத்துடன் சில விவசாயிகளையும் சேர்த்து அந்த மன்றத்தை அமைத்து அந்தக் கால்நடை வளர்ச்சி நல்லமுறையில் இயங்குவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கால்நடை ஊழியர்களின் பணி முடிவுற்ற காலங்களில் அவர்களுக்கு அடிப்படையான போனஸ் வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில் கால்நடைப் பராமரிப்புத் துறையில் 62 உதவி இயக்குநர் அலுவலகங்கள் உள்ளன. ஏற்கனவே அந்த உதவி இயக்குநர் அலுவலகங்களில் வேலைக்கு ஆள் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அங்கேயுள்ள அதிகாரிகள் சரியான முறையில் செயல்பட முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அங்கே ஒரு உதவி ஆள் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை ஆஸ்பத்திரிகளைப் பொறுத்தமட்டில், என்னுடைய சாத்தான்குளம் தொகுதியில் உள்ள பேய்க்குளம் சென்டரில் ஆடுமாடுகளுக்காக அரசாங்க கால்நடை ஆஸ்பத்திரியை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டம் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், 75 குழந்தைகள் இருக்கும் இடங்களில் ஒரு மையம் என்று உண்டாக்கியிருக்கிறீர்கள். அதேநேரத்தில் ஒரு பஞ்சாயத்து என்று எடுத்துக்கொண்டால், 6 ஊர்கள், 7 ஊர்கள் என்று இருக்கின்றன. கிட்டத்தட்ட 4 மைல் சுற்றளவு கொண்டதாக ஒரு கிராமம் இருந்தாலும்கூட, அந்தக் கிராமத்திலே 100 குழந்தைகள் இருந்தாலும், பக்கத்தில் உள்ள ஊர்களிலே இருக்கும் குழந்தைகள் 75 வரையில் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, அங்கே ஒரு சத்துணவுக்கூடம் வைக்க வேண்டுமென்று கிராமமக்கள் விரும்புகிறார்கள். இருந்தாலும் அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட இடமாக இருப்பதால் அங்கே ஒரு சத்துணவுக் கூடம்தான் கொடுக்க முடியும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே, 100 குழந்தைகள் எண்ணிக்கை கொண்ட இடங்களுக்கு ஒரு சத்துணவுத் திட்ட மையம் என்று ஆரம்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பெண்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்ற செயல்குறிப்புத் திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நர்சரி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் போதாத நிலை இருந்து வருவதாகக் கூறுகிறார்கள்.

(பிற்பகல் 12-10).

மேலும் அவர்களுக்கு மகப்பேறு காலங்களில் அரசு சம்பளத்தோடு அவர்களுக்கு லீவு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். விதவைகளின் குழந்தைகளுக்கு அவர்களுடைய திருமணத்திற்காக, அரசு ரூ. 1,000 ஒதுக்கீடு செய்துள்ளது. அவர்கள் சரியான சான்றிதழ்களைத் தரும் பொழுது, மாவட்ட ஆட்சித் தலைவரே உடனடியாக அந்த ரூ. 1,000 கொடுப்பதற்கு அரசாங்கம் ஆணை இடவேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதியோர் பென்ஷன், ஆதரவற்ற விதவைகள் பென்ஷன் கொடுப்பதால் தாமதம் இருந்து வருகிறது. ஏற்கனவே அந்தப் பென்ஷனில் [illegible] அவர்கள் அதை நீங்கள்





தாசில்தாரிடம் கொடுங்கள் என்று எங்களிடம் தந்து விடுகிறார்கள். நாங்கள் அதைத் தாசில்தாரிடம் சேர்த்து உடனேயே அவர்கள் ஒரு மாதத்திற்குள் எங்களிடம் வந்து ஐயா, உதவித் தொகை இன்னும் வரவில்லையே, வரவில்லையே என்று கேட்டு எங்களை மிகவும் தொல்லைப்படுத்துகிறார்கள். அங்கே தாசில்தாரிடம் கேட்கும்போது, ஒரு ஆள் இறந்தால்தான் மறு ஆட்களைச் சேர்ப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அந்தக் கொடுக்கப்பட வேண்டிய உதவித் தொகையை ஒரு கணிசமான அளவிற்கு அதிகரித்து, உடனுக்குடனே கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனது தொகுதி கருங்கால் பஞ்சாயத்தைச் சேர்ந்த பனைக்கல் என்ற கிராமத்தில் சுமார் 100 குழந்தைகள் இருந்து வருகிறார்கள். அங்கே ஒரு சத்துணவு மையத்தை அமைக்க கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பேசப்பட்டது. இதுவரை அந்த மையம் ஆரம்பிக்கப்பட வில்லை. உடனடியாக அங்கே ஒரு சத்துணவு மையத்தை ஆரம்பித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து கோழி தீவனம். ஏற்கனவே தமிழக அரசாங்கம் இதற்கு 5 பைசா வரியை விதித்திருக்கிறது. இதர மாநிலங்கள் இந்தக் கோழி தீவனத்திற்கு வரி இல்லாமல் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே கோழி வளர்ப்புகளை அதிகரிக்கும் அரசாங்கம், இந்த தீவனத்திற்காக வரியை நீக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் நவீன இறைச்சிக் கூடம் கட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டது. கோடுவள்ளியில் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டதாக சொல்லப்படும் அந்த நவீன இறைச்சிக் கூடம் கட்டுகின்ற இடத்திற்கு சமீபத்தில், சென்னைக்கு குடி நீர் ஏறும் நிலையம் ஒன்று இருந்து வருகிறது. இந்த இறைச்சிக் கூடத்தை அங்கே அமைப்பதன் மூலம் இரத்தம், மூத்திரம் யாவும் பூமியின் வழியாக மேற்படி குடிநீர் நிலையத்திற்குச்சென்று குடிநீர் கெடுவதற்கான வாய்ப்பிருக்கிறது. தொத்து நோய் பரவுவதற்கான வாய்ப்பு உள்ள இடமாக இருக்கிறது. ஆகவே அந்நியச் செலாவணி மூலம் நவீன இறைச்சிக் கூடம் கொண்டு வரும் இந்தத் திட்டத்தை நான் வேண்டாம் என்று சொல்வதற்கு இல்லை. வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கோடுவள்ளி பஞ்சாயத்திலிருந்து பொதுமக்கள் இந்த நவீன இறைச்சிக் கூடத்தை மாற்றி வேறு இடத்தில் அமைக்கும்படி கோரி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு மனுக்கள் மூலமாகவும் நேரடியாகவும் தெரிவித்துள்ளார்கள். அதை கவனிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

[1983 ஏப்ரல் 6

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 22, கால்நடை வளர்ப்பு, கோரிக்கை எண் 30, சமூக நலன் ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக சமூக நலத்துறையின் வரலாற்றில் சென்ற ஆண்டு சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டிய புதிய சரித்திரம் படைத்துள்ள தமிழக முதல்வர், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர், இன்றைக்கு தமிழகத்திலே சுமார் 1 கோடி குழந்தைகளுக்கு வயிறார உணவு படைப்பதன் வாயிலாக தமிழக மக்கள் புரட்சித் தலைவர் அவர்களை உளமாற நன்றியுடன் பாராட்டி வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கே இந்த அவையிலே சத்துணவுத் திட்டத்தைப் பற்றி பேசிய இரண்டு கம்யூனிஸ்டு இயக்கங்களின் மாண்புமிகு உறுப்பினர்கள் செல்லமுத்து அவர்களும், அப்பாதுரை அவர்களும் இந்த சத்துணவுத் திட்டம் சாம்பார் சாதம் என்றும், அதன் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளையும், அது சரிவர இயங்கவில்லை என்றும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்லமுத்து அவர்கள் இது சாம்பார் சாதம் என்றெல்லாம் சொல்வதை விட, இது முதல் அமைச்சருடைய சத்துணவுத் திட்டம் என்பதால் முதல் அமைச்சர் அவர்களே இந்தத் திட்டத்தை, ஒவ்வொரு கூடத்தையும் பார்க்க வேண்டுமென்று நினைப்பார்களானால், மக்களுடைய நல்வாழ்வுப் பணிகளில், நல்வாழ்வுத் திட்டங்களில் அரசு எடுக்கின்ற முயற்சிகளில் அவர்கள் தங்களுடைய கடமைகளை ஆற்றத் தவறுகிறார்கள் என்று தான் நான் சொல்வேன். ஏன் என்றால் அரசு சத்துணவுத் திட்டம், சத்துணவு எப்படி இருக்க வேண்டும் என்று ஆய்ந்து, இந்த சத்துணவிலே என்னென்ன விகிதாச்சாரங்களிலே, காய்கறிகள், பருப்பு, எண்ணெய் வகைகள் எல்லாம் எந்த வீதத்திலே இருந்தால் அது சத்துணவாக இருக்கும் என்று அரசு ஆணையிட்டு இன்னின்ன விகிதங்களில் அது கலக்கப்பட்டு அந்த உணவு பரிமாறப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டு இருக்கிறது. அதை அவரவர்களுடைய தொகுதியிலே உள்ளவர்கள் வாரத்திற்கு ஒரு முறையாவது இந்த உணவுக் கூடங்களுக்குச் சென்று அதைப் பரிசோதித்து வந்தார்களானால் அங்கே குறைபாடுகள் ஏதும் நடைபெறாமல் பார்த்துக் கொள்வார்களானால் இந்தச் சத்துணவுத் திட்டம் உளமார சத்துணவாக இருக்கும், சாம்பார் சாதமாக இருக்காது என்பதை அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடு).

அடுத்து, கால்நடை மருத்துவத் துறையிலே முதலாவதாக என்னுடைய தொகுதிக்கு வேண்டியதைக் கேட்டுவிட விரும்புகிறேன். ஆம்பூர் கால்நடை மருந்தகத்திற்கான நிரந்தரக் கட்டிடம் கட்ட சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஆம்பூர் நகராட்சி தீர்மானம் நிறைவேற்றி நிலத்தைக் கொடுக்க முன் வந்துள்ளது.





ஆனால் வருவாய்த் துறை, தென் பிராந்திய ரயில்வேயிடம் நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட் கேட்டு கடிதம் அனுப்பி சுமார் 1 ஆண்டுக்காலம் ஆகிறது. ஆனால் இதுவரைக்கும் இதற்கு அங்கீகாரம் அளிக்கப்படவில்லை. துறை அதிகாரிகள் பல முறை ரெயில்வே அலுவலகத்தில் உள்ள அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்டதில் தலைமைப் பொறியாளருக்கு சிபாரிசு செய்து அனுப்பியுள்ளோம் என்று கூறி புறக்கணித்து வருகிறார்கள். அரசு இதிலே கவனம் செலுத்தி, விரைவாக ஆம்பூரிலே கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அதே போல் வாணியம்பாடியிலே கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்தும் இன்னும் அதற்கான திட்டங்களை எடுத்துச் செயல்படுத்த முடியாத நிலை இருப்பதால், இதை உடனடியாக ஆரம்பிப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை பராமரிப்புத் துறையிலே ஒரு ஆண்டுக்கு சுமார் 10 ஆயிரம் மதிப்புள்ள மருந்துகள்தான் வாங்க அனுமதி உள்ளது. அத்தியாவசிய மருந்துகள் தேவைப்பட்டால் வாங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே மருந்தகத்திற்குத் தேவையான மருந்துகளை வாங்க ரூபாய் 15 ஆயிரம் என்று உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-:0]

ஒவ்வொரு மருந்தகத்திற்கும் உடனடியாக உறை விந்து சாதனங்களும், உறைவிந்து குழல்களும் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தடுப்பூசி மருந்துகள் மற்றும் சில அத்தியாவசிய மருந்துகளை தற்போது வெளியில் வைக்கின்ற நிலைமை இருப்பதால் அவைகள் விரைவில் கெட்டுவிடும் நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, நகராட்சி மருந்தகங்களில் மட்டுமாவது இந்த மருந்துகளை வைத்துக் கொள்ள குளிர் சாதனப்பெட்டிகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு தாலுக்கா அளவிலும் ஒரு இடத்திலாவது எக்ஸ்ரே ப்ளான்ட் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திலும் ஒரு அவசர சிகிச்சை பிரிவு ஏற்படுத்தி, அதற்கு ஒரு எமர்ஜென்சி வெட்னரி அசிஸ்டெண்ட் சர்ஜன் நியமித்து, அங்கே சிகிச்சை பெற வரும் கால் நடைகளுக்கு குறைந்த செலவில்—அரசாங்கமே அந்தச்செலவை ஏற்றுக் கொண்டு—வைத்திய வசதியைச் செய்து கொடுத்து, அந்த வகையில் பொது மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவப் பேரவை (வெட்னரி கவுன்சில்) துவங்கிட ஆணை பிறப்பித்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன். அதே சமயத்தில் மன்றத்திலே உள்ள எல்லாக் கட்சி உறுப்பினர்

தொழில் நுணுக்க ஆலோசனைகளும் நல்ல நிர்வாகக் கட்டுப்பாடுகளும் செலுத்த முடியவில்லை. எனவே வட்டாரம் தோறும் உதவி இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்த வேண்டும். இயற்கையினால் ஏற்படும் வறட்சி நிவாரணப் பணிகள் மற்றும் வெள்ள நிவாரணப்பணிகள் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக வட்டாரந்தோறும் திறம்பட செயல்பட முடியும். ஆகவே அரசு இதைக் கருத்திற்கொண்டு வட்டாரந்தோறும் உதவி இயக்குநர் அலுவலகங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் அலுவலகத்தில் போதுமான அளவுக்கு அமைச்சுப் பணியாளர்கள் இல்லை. இன்றைக்கு கால்நடைத் துறை வேகமாக வளர்ந்து வருகிற ஒரு துறை. அந்த அளவுக்கு இங்கே இருக்கிற அமைச்சுப் பணியாளர்கள் பதவிகள் இல்லை. என்பதால் அரசு உடனடியாக இயக்குநர் அலுவலகத்தில் தற்போதுள்ள மேலாளர் பதவியினை நேர்முக உதவியாளர் பதவியாக உயர்த்த வேண்டும் மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களில் நிர்வாக அலுவலர் பதவிகளைத் தோற்றுவித்து, தொழில்நுட்ப அலுவலர்கள் ஆற்றிவரும் நிர்வாகப் பணிகளை, நிர்வாக அலுவலர்களுக்கு மாற்ற வேண்டும். துறை அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் பதிவறை எழுத் ர்(ரிக்கார்டு கிளார்க்) பதவிகளைத் தோற்றுவித்த வேண்டும். ஆண்டுக்கு 5 இலட்சம் ரூபாய் செலவினங்கள் ஆகும் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் ஒரு கணக்காளர் பதவியைத் தோற்றுவிக்க வேண்டும். பிரதம மருத்துவ நிலையங்கள், நோய் தடுப்பு உதவி இயக்குநர் அலுவலகங்கள் போன்ற அலுவலகங்களில் தற்போது அமைச்சுப் பணியாளர் பதவி ஏதும் இல்லையாதலால் குறைந்த பட்சம் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் ஒரு உதவியாளர் பதவியாவது வழங்க வேண்டும்.

கால்நடைப் பராமரிப்புத் துறையில் 62 உதவி இயக்குநர் அலுவலகங்கள் உள்ளன. இந்தத் துறையின் திட்டப் பணிகளும் துறையின் பிற பணிகளும் இவ்வலுவலகங்களாலேயே செய்யப்படுகின்றன. இத்துறையின் நிர்வாக அமைப்பின் ஆதார அலுவலகங்களே இந்த உதவி இயக்குநர் அலுவலகங்கள்தான். இந்தத் துறையிலேயே பொதுமக்கள் தொடர்பு கொள்ளும் அலுவலகங்களும் இந்த அலுவலகங்களே. கால்நடைகளுக்கு நேரிடையாக பணிசெய்யும் கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவ மனைகள், கோழியின விரிவாக்க நிலையங்கள் எல்லாம் இந்த உதவி இயக்குநர்களின் நேரடி மேற்பார்வையில் இயங்குகின்றன. எனவே இத்துறையின் சீரான செயற்பாட்டிற்கு இவ்வலுவலகங்களின் செயல் திறனே அடிப்படையாகும். இத்தகைய இவ்வலுவலகங்களுக்குப் போதுமான அமைச்சுப் பணியாளர்கள் பதவிகள் தரப்படவில்லை. எனவே இவ்வலுவலகங்கள் ஒவ்வொன்றிற்கும் கூடுதலாக ஒரு கண்காணிப்பாளர், ஒரு உதவியாளர் ஒரு பதிவறை



எழுத்தர் பதவிகளை வழங்க வேண்டுமென்று கேட்டு, இவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. சந்திரசேகரன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டுக்கான கால்நடை மற்றும் சமூக நலத்துறை மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்தில் சார்பாக சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக கால்நடைச் செல்வங்கள் நம்முடைய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வளவு சிறந்த முறையில் அங்கம் வகிக்கின்றன என்பதை நாம் அறிந்திருக்கிறோம். சிறு விவசாயிகளுக்கும் ஏழை எளிய விவசாயிகளுக்கும் ஒரு உப தொழிலாக கால்நடைகள் உதவுகின்றன என்பதைநாம் மறந்துவிட முடியாது.

(பிற்பகல் 12–30)

பொதுவாக நமது நாட்டிலே இறைச்சி உற்பத்தி மிகக் கம்மியாக இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். ஏனைய நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமது நாட்டிலே இறைச்சி உற்பத்தி எந்த அளவுக்கு குறைந்திருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறோம். அதைப்போலவே கொடுக்கப்பட்டிருக்கும் பாலிசி நோட்டிலே, கோழி வளர்ப்பைப்பற்றி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அண்டை மாநிலமான ஆந்திராவிலே கோழிவளர்ப்பை தீவிரமாக்கி, பரவல் ஆக்கி, அங்கே உள்ள பல பட்டதாரிகள் அதன் மூலம் வேலை வாய்ப்பு பெறும் வகையில் மாற்றி அமைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அளவுக்கு நம்முடைய தமிழகத்திலேயும் கோழி வளர்ப்பு தீவிரமாக்கப்பட வேண்டும். ஏன் என்றால் கிராம மக்கள் முன்னேற வேண்டும் என்று சொன்னால் சிறு விவசாய மக்கள் முன்னேற வேண்டும் என்றால், கோழி வளர்ப்பை நாம் இன்னும் அதிக அளவிலே விரிவு படுத்தி, பரவலாக்கினால்தான் அதிலே வெற்றி பெற முடியும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் கால்நடை மருத்துவத்தைப் பொறுத்த வரையில் என்னுடைய தொகுதியான சோழவந்தானிலே ஒரு கால்நடை மருத்துவ மனை ஆரம்பிக்க வேண்டும் என்று ஒரு கட்டிடம் கட்டப்பட்டு, இதுவரையில் அது திறக்கப்படவேயில்லை. ஏனென்றும் தெரியவில்லை. அங்கே பல அசுத்தமான காரியங்கள் எல்லாம் நடைபெற, அது வாய்ப்பளிக்கிறது. கட்டப்பட்ட கட்டிடத்தை திறந்து வைப்பதற்கு, அரசுக்கு நேரம் இல்லையா என்று சந்தேகப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மற்றும் அது என்னைப்போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய தொகுதி என்ற காரணத்தால்தான், அப்படி புறக்கணிக்கப்படுகிறதோ என்ற ஐயம் கூட எழுகிறது. ஆகவே, அதை உடனடியாக திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

களும் ஒரு மனதாக எடுத்துச் சொன்னது போல், அந்தத் துறைக்கு தலைமைப் பொறுப்பு ஏற்க ஒரு கால்நடை பட்டதாரியையே நியமிப்பது சரியானதாக இருக்கும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். பார் கவுன்சில், மெடிகல் கவுன்சில் எவ்வாறு அத்துறை வல்லுநரை தலைமையாகக் கொண்டுள்ளதோ அதே போன்று வெட்னரி கவுன்சிலுக்கும் அதில் தொழில் நுட்பம் பெற்ற ஒரு பட்டதாரியையே தலைமை பெற்றிட செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தொழில் நுட்பம் பெற்ற பட்டதாரிகளை அங்கத்தினர்களாக கால்நடை மருத்துவப் பேரவையில் நியமிப்பதன் வாயிலாக தமிழகத்தில் சீரான வெட்னரி ப்ராக்டீஸ் ஏற்பட அரசு வழிவகை செய்ததாகஅமையும். தொழில் நுட்ப அறிவு பெறாமல் ப்ராக்டீஸ் செய்து கால்நடைகளை அழிக்க செய்வதை தடுத்திடவும் வழிவகை செய்வதாக அமையும், என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

எனவே மத்திய அரசு ஆல் இந்தியா வெட்னரி கவுன்சில் அமைக்க இருக்கும் இந்தத் தருணத்தில் தமிழக அரசு உடனடியாக தொழில் நுட்பப் பட்டதாரியை இந்தத் துறைக்கு இயக்குநராக்கி, கால்நடை மருத்துவப் பேரவைக்கும் தலைவராக நியமிக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் 1957—ஆம் ஆண்டுக்குப்பின் மீண்டும் கால்நடை மருத்துவ பட்டதாரிகளை ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலராக நியமனம் செய்ய அரசு ஆணை வழங்கியமைக்கு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இலாகாவில் பணிபுரியும் கால்நடை ஆய்வாளர்கள் இன்று பல கோரிக்கைகளை முன்வைத்து கவன ஈர்ப்பு நாள் நடத்தி உள்ளார்கள். அதில் தங்களுக்கும் மருத்துவர்களைப் போன்று சிகிச்சை அளிக்கும் உரிமை கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அப்பாதுரை மற்றும் செல்லமுத்து ஆகியோர் அதனை ஆதரித்து கருத்துச் சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கால்நடை ஆய்வாளர்களின் தகுதிக்கேற்றவாறு அரசு சலுகைகள் அளிப்பதில் எனக்கு ஒன்றும் கருத்து வேற்றுமை இல்லை. ஆனால், அந்த மருத்துவ ஆய்வாளர்களுக்கு, 10 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றியவர்களுக்கு காலியாக உள்ள 23 இடங்களில் மருத்துவப் பணியாளர்களாக நியமிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. (குறுக்கீடு—அப்படிச் சொல்லவில்லை). அவர்களுடைய கோரிக்கை என்னவென்றால் தங்களையும் அந்தக் கால்நடை மருத்துவப் பேரவையில் அங்கம் வகிக்க வேண்டும் என்பதாகும். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால், அது எப்படியிருக்கும் என்றால், பார்



கவுன்சிலில் வக்கில் குமாஸ்தாவை சேர்த்துக் கொள்ளச்சொன்னால் மெடிக்கல் கவுன்சில் நர்ஸ், பார்மசிஸ்ட் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் எப்படியிருக்குமோ அப்படி இருக்கிறது. அப்படி ஒரு சூழ்நிலையை உருவாக்கும் நிலைமையும் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை :—மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஆய்வாளர்களாக இருக்கின்றவர்களை மேற்பார்வையாளர்களாகத்தான் போட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திச் சொன்னேனே தவிர, அவர்களை டாக்டர்களாக போட வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்வது மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்ற நிலைமையை உருவாக்கிவிடும். அந்தக் கருத்து தவறு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : அப்படிச் சொல்லியிருந்தால் மிக்கநன்றி. அவர்கள் பேரவையில் அங்கம் வகிக்கவேண்டுமென்று கேட்பது, நாளை இதுவே முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடும். அது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள கால்நடைச் செல்வங்களை நல்லமுறையில் காப்பாற்ற பி.வி.எஸ்.ஸி. படித்துப் பட்டம் பெற்றவர்களை மட்டுமே அரசாங்கம் நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டையில் உள்ள ஐ.வி.பி..எம்-ல் வேலை செய்யும் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்கிட அரசு ஆணை பிறப்பிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே பாயாலஜிக்கல் ப்ராடக்ட்ஸ், தயாரிக்கும் மூன்றில் ஒன்றாகிய இங்கே வேலை செய்யும் கால்நடை மருத்துவர்களுக்கும் பண்ணையில் வேலை செய்யும் கால்நடை மருத்துவர்களுக்கும் சிறப்பு ஊதியம் வழங்கிட அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளிலிருந்து மனிதர்களுக்கும், குறிப்பாக கால்நடைகளுக்கு, சிகிச்சை செய்யும் மருத்துவர்களுக்கும் டி. பி. போன்ற நோய்கள் பரவுகின்றன. அதனால் தன்னை அர்ப்பணித்து செயல்படும் அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ்' வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறையில் வட்டந்தோறும் ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்த வேண்டும். தற்போது ஒவ்வொரு உதவி இயக்குநரும் குறைந்தது இரண்டு வட்டாரங்களில் உள்ள 15 கால்நடை மருந்தகங்கள், 40 முதல் 60 வரையுள்ள கால்நடைக் கிளை நிலையங்கள், கோழி அபிவிருத்தி நிலையங்கள், ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்கள் ஆகியவைகள் கவனிக்க வேண்டிய கடினமான சூழ்நிலை உள்ளது. அதனால் சிறந்த

குறிப்பாகச் சத்துணவுத் திட்டம் என்பது ஏதோ சாப்பாட்டைப் போட்டு வருகின்ற தேர்தலிலே ஓட்டுக்களைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் செய்யப்படும் காரியமல்ல. ஒரு நல்ல அரசியல்வாதி அடுத்த எலக்ஷனைப் பார்க்கலாம். அரசியல் மேதை அடுத்த சந்ததியினைத்தான் பார்ப்பார். அந்த உணர்வின் அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த இந்த சத்துணவுத் திட்டத்தின் பெருமை 10, 15 ஆண்டுக்காலம் கழித்த பிறகுதான் புரிய இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2 முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு உணவு தருகிறோம். அங்கே ஜாதிமதமற்ற சமுதாயத்தைக் காண்கிறோம். சத்துணவினைப் பல வகையாகப் பிரித்து வாரத்தின் 7 நாட்களும் நாம் இலவசமாகத் தருகிறோம். அவ்வாறு கொடுத்து, அறிவு வளர்வதோடு ஆரோக்கியமும் நல்ல முறையில் இருக்க வேண்டும் என்ற உணர்வோடு இந்தத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் உங்களுடைய ஆலோசனைகளைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் எவ்வளவுதான் நல்ல திட்டங்களைத் தீட்டினாலும் மக்களுக்கும் அரசுக்கும் இடையிலே இருக்கின்ற அதிகாரிகளில் சிலர் எங்கோ தவறு செய்வது என்பது சகஜம். ஆனால் அவற்றை மக்கள் பிரதிநிதிகளாகிய நீங்கள் கண்காணிக்கலாம், சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடத்திலே எடுத்துக் கூறவும் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்ற காரணத்தால் அந்தத் திட்டத்தைக் கேலி செய்வதைக் காட்டிலும் ஆக்க பூர்வமான ஆலோசனைகளைத் தருவதுதான் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பசி வந்தால் பத்தும் பறந்து விடும் என்ற பழமொழியினைப் பொய்யாக்கிய திட்டம் இந்தத் திட்டம். அப்படிப்பட்ட நல்ல திட்டத்தை வரவேற்க வேண்டும், அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

அடுத்து இந்த மானியக் கோரிக்கையினைப் பொறுத்த மட்டில் ஒரு முக்கியமான கருத்தினை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குத் தமிழ் நாட்டில் ஊராட்சி ஒன்றிய நிலைகளில் தையல் ஆசிரியர்கள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறார்கள். ஏறத்தாழ 20 ஆண்டுகள் அவர்கள் சர்வீஸ் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் ஊராட்சி ஒன்றிய மகளிர் மன்றத்தில் ஆசிரியர்களாக 18 ஆண்டுகள் தையல் ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு ஊராட்சி ஒன்றியப் பணிகள் மிக அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக சில பணிகளை மேற்கொள் காட்ட, விரும்புகிறேன். மகளிர் மன்றத் தையல் வேலை, மகளிர் பயிற்சி முகாம், இலவச கண் சிகிச்சை முகாம், குடும்பநல அறுவை சிகிச்சை முகாம், சுகாதாரப் பிரசாரம், சிறு சேமிப்பு விதவைகள் மறுமணம், ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகங்கள் அளிக்க விண்ணப்பங்கள் வாங்குவது, விதவைகளுக்கு தையல் இயந்திரம் வழங்க விண்ணப்பங்கள் பெற்று வருதல், உழவர் பயிற்சி முகாம், குழந்தைகள் கண்காட்சி. குழந்தைகள்



நலக் காப்பகங்களைப் பார்வையிடுதல், பாலசேவிகாக்கள் விடுப்பிலே சென்றால் அந்தப் பாலசேவிகா பணியினைச் செய்தல், ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தையல் வகுப்புகள் நடத்துதல், ஊரக வளர்ச்சித் திட்டத் தையல் வகுப்பைப் பார்வையிடுதல், ஊரக வளர்ச்சித் திட்டத்தில் ஆண்கள் தையல் வகுப்பைப் பார்வையிடுதல் போன்ற பல்வேறு பணிகளில் உதவியாக இருந்து அவர்கள் செய்கிறார்கள். பாரதிதாசன் தன் கவிதையிலே சொன்னாரோ, 'வேரில் பழுத்த பலா இன்று கோரிக்கையற்று கிடக்குதண்ணே, இதிலே யாருக்கும் வெட்கம் இல்லை' என்று அந்தக் கவிதை உயிர்பெற்றுவிடுமோ என்று அச்சப்படுகிறேன்.

[பிற்பகல் 12-40]

அப்படிப்பட்ட சூழ்நிலையிலே அவர்களுக்கு நாம் முன்னுரிமை கொடுத்து 20 ஆண்டு கால சர்வீஸ் பெற்றும் பென்ஷன் மற்றும் எல்லா வகையும் இருந்தும் அவர்கள் அப்படிப்பட்ட நிலைக்கு போய்விடக்கூடாது, பாரதியார் குறிப்பிட்டதைப் போன்று '' புதுமைப் பெண்களடி இந்த பூமிக்கு கண்களடி '' என்று சொல்வதைப்போல் அப்படிப்பட்ட புதுமைப் பெண்களை எல்லாம் உருவாக்குகின்ற பணியில் இருக்கிற அந்த தையல் ஆசிரியர்களை நீங்கள் சமூகநலத் துறையில் ஏற்று அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு தற்காலிக தலைவர் அவர்களே, புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் அவர்கள் ''கோரிக்கை அற்று கிடக்குதண்ணே இந்த வேரில் பழுத்த பலா '' என்று எழுதி வலியுறுத்தியதன் காரணம் விதைவைகளைப் பற்றி குறிப்பிட்டு வேரில் பழுத்த பலா என்றும் அவர்களுக்கு வாழ்வில் ஒளியேற்ற மறுமணம்—விதவாவிவாகம் என்பதற்காக சொன்ன கருத்தே தவிர அவர்களுக்கு வேலையை தரவேண்டும் என்ற கருத்துக்காக அல்ல என்பதை விளக்கத்திற்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : மாண்புமிகு தற்காலிக தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர்கள் குறிப்பிட்டதை ஒப்புக்கொண்டாலும் விதவைகளுக்கு மாத்திரம் பாடப்பட்ட பாட்டு அல்ல அது. பெண்களுக்கு பாதுகாப்புத் தர வேண்டும். அவர்களுடைய பதவிக்கு ஒரு நிரந்தர பாதுகாப்பைத் தரவேண்டும் என்ற உணர்வோடு அந்த அடிப்படையில் அந்த உதாரணத்தைச் சுட்டிக் காட்டினேன். ஆகவே, அது இதற்கும் பொருந்தும் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு அவர்களுக்கு அந்த முன்னுரிமையை அளித்து அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நான் கேள்வி நேரத்தில் கூட ஊனம் உற்ற பெண்கள் கூட மிக அழகாகவும் படித்தவர்களாகவும், அறிவுள்ளவர்களாகவும், ஆற்றல் உள்ளவர்களாக

அடுத்தபடியாக இந்த சத்துணவு திட்டத்திற்கு பொறுப்பாளர்களை போடுவது பற்றி என்னுடைய கட்சியிலே உள்ள பல உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். பொறுப்பாளர்களை அதற்கு நியமிப்பதிலே நீங்கள் என்ன நார்ம்ஸ் வைத்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. என்னுடைய தொகுதியிலே கூட பல படித்த பெண்கள் இருந்தும், தகுதி வாய்ந்த பெண்கள் இருந்தும், வேறு இடங்களிலேயிருந்து இதற்கென பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் அரசின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காக நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நம்முடைய சமூக நல வாரியத்திலே, ஜாயின்ட் செக்ரட்டரியாக இருப்பவர், தொடர்ந்து 14 வருஷங்கள் இருந்து வருவதாகச் சொல்கிறார்கள். அவரை இதுவரையில் மாறுதலே செய்யாமல் இருக்கிறார்கள். ஏன் இன்று தெரியவில்லை. இடையிலே அவருக்கு மாறுதல் கிடைக்கப்பெற்றும் மீண்டும் அவரையே அந்தப் பதவியிலே நீடித்து இருக்கச் செய்துவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த 14 ஆண்டுகாலம் வரையிலும் அவரே தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்று சொன்னால் அதற்கு என்ன காரணம்? அவருக்கு மேலே தகுதியானவர்கள் வேறு எவரும் இந்தத் துறைக்காக இல்லையா என்று கேட்டுத் தெரிந்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் இதற்கெல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து முதியோர் பென்ஷனைப் பொருத்தவரையில் எத்தனையோ பேர்கள் அதற்காக விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எல்லாம் இன்னும் முதியோர் பென்ஷன் கிடைக்கவில்லை. எல்லோருக்கும் இந்த உதவியை அதாவது முதியோர்கள் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, ஊனம் உற்றவர்களுக்கு லோன் கிடைப்பது என்பது மிகக் கடினமான காரியமாக இருக்கிறது. எங்களுடைய தொகுதியில், அவர்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையரிடம் சென்றால், பேங்குக்கு செல்லுங்கள் என்று சொல்லுகிறார்கள். பேங்குக்கு சென்றால், நீங்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையரிடம் தான் கேட்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இப்படியே அவர்களை மாறி மாறி அனுப்புகிறார்கள். ஆகவே, அந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கால்நடையைப் பொறுத்தவரையில், என்னுடைய தொகுதியில் பாலமேடு என்று ஒரு இடம் மிக வறட்சியான பிரதேசமாக உள்ளது. எப்போது வறட்சி வந்தாலும், அங்கே தான் அது அதிகமாக இருக்கும். இந்தப் பகுதி ஒரு ரிமோட் ஏரியாவாக இருக்கிறது. அங்கே கால்நடைகளும் மிகப் பெரிய அளவில்—எண்ணிக்கையில் இருக்கின்றன. ஆகவே, பாலமேடு பகுதியிலே ஒரு கால்நடை மருத்துவமனையைக் கட்டிக் கொடுத்தால், அது அங்கே உள்ள கால்நடைகளுக்கு மிக உதவி



கரமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கால்நடைகளுக்கு அங்கே தண்ணீர் தொட்டிகள் அமைத்துக் கொடுத்தால் மிக நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொண்டு, அந்த அளவிலே என்னுடைய கருததுக்களை நிறைவு செய்து, அமர்கிறேன்

**திரு. ஜி. கே. சுப்பிரமணியன்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983—84 ஆம் ஆண்டு, கால்நடை வளம், சமூக நலத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

நேரம் இன்மை காரணமாக நான் ஒரே ஒரு கருத்தை மாத்திரம் இங்கே குறிப்பிட்டுவிட்டு அமரலாம் என்று கருதுகிறேன். எனக்கு முன்னாலே இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பாக அப்பாதுரை......

**திரு. அ. ரகுமான்கான்** : மாண்புமிகு மன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆளும் கட்சியினைச் சேர்ந்த அருமைச் சகோதரர் அவர்கள் பாடல்கள் மூலம் கருத்துக்களைச் சொல்லக்கூடிய ஆற்றல்களைப் பெற்றவர். எனவே அவர்களுடைய கருத்துக்களைப் பாடல்களின் மூலம் சொல்ல வேண்டும் என்று பெரும்பாலான உறுப்பினர்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்)** நேரம் குறைவாக இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீக்கிரமாக தன் கருத்துக்களைச் சொல்லி முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. கே. சுப்பிரமணியன்** : மாற்றுத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே காலையிலே தாலியைக் கட்டிவிட்டு மாலையிலை பிள்ளையைப் பெற்றுக் கொடு என்று கேட்டால் எந்தப் பெண்ணாலும் பெற்றுக் கொடுக்க இயலாது. மேலும் திட்டங்களைப் போடுகின்ற போது 100 சதவீதம் திட்டங்களைப் போட்டால் அது ஒரு 70 சதவீதம் என்ற அளவுக்காவது வெற்றி வந்தால் போதும் என்றுதான் முன்பும், அதற்கு முன்பும் இங்கே மட்டுமல்லாமல் பாராளுமன்றத்திலே கூட திட்டங்களைப் போட்டார்கள். அந்த வகையிலே ஓரளவுக்கு வெற்றி பெற்று நடத்திக்கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நாடு முழுவதும் இன்றைக்குப் பாராட்டத்தக்க வகையிலே இருக்கின்றது. அண்டை மாநிலங்கள் கூட அது மிக நல்ல திட்டம் என்று பாராட்டக்கூடிய நிலைமை இருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூட ஆங்காங்கு ஆய்வுக் குழுக்களை அனுப்பி அதுபற்றி தெரிந்து வரக்கூடிய அளவிலே அவர்கள் பாராட்டுகின்ற நிலைமை இருக்கின்றது. இன்றைக்கு அந்தத் திட்டம் மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

வும் இருக்கிறார்கள். அவர்களை திருமணம் செய்ய முன்வருகிற ஆடவர்களுக்கு கலப்புத் திருமணத்தில் நமது அரசு என்ன சலுகை கொடுக்கிறதோ அந்தச் சலுகையை அவர்களுக்கும் தர வேண்டும் என்று நான் குறிப்பிட்டு இருந்தேன். அது கூட வேரில் பழுத்தப் பலா தான். கோரிக்கை அற்று கிடக்குதுதான். பாதுகாப்பு இல்லாத பெண்களுக்கு ஒட்டு மாத்தமாக அந்தக் கருத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

பவானி சாகர் தொகுதியைப் பொறுத்தவரையில் காசிப் பாளையத்தில் —தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கவனமாக குறித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மருத்துவ மனைக்கு கட்டிடம் கட்டுவதற்கு ஏறத்தாழ நாலரை ஏக்கர் நிலம் அங்கே ஹைவேஸ் புறம்போக்கு இருக்கிறது. இதை நான் 3 ஆண்டு காலமாக அவர்களைக் குறிப்பிட்டுக் கேட்டேன். புகைப்படம் கூட எடுத்துக் கொண்டு வந்து காண்பித்தேன். நம்முடைய துறை ஹைவேஸ் துறையிடம் கேட்டால் அவர்கள் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். அவர்கள் கொடுக்க முடியாது என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போதே அங்கே மற்ற ஜனங்கள் ஆக்கிரமிப்புச் செய்து அந்த நாலரை ஏக்கர் இரண்டரை ஏக்கராக மாறிக்கொண்டு வருகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த ஹைவேஸ் துறையிலிருந்து நீங்கள் கேட்டு அங்கே மருத்துவமனை கட்டிடத்தை கட்டித்தர தீவிர முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அதைப்போல போடித் தொகுதியில் குளைச்சலூர் கால்நடை மருத்துவ மனை 5, 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதற்காக 5 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் மருத்துவ மனைக் கட்டிடம் இல்லாமல் இருக்கிறது. அதைக் கட்டித் தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பவானி சாகர் பக்கத்தில் உள்ள தத்துப்பள்ளி அதாவது தையல்பள்ளம்பூர் என்ற இடத்தில் கிட்டத்தட்ட 25 கிராமங்கள் சுற்று அடங்கிய அந்தப் பகுதியில் ஆயிரக்கணக்கான கால்நடைகள் அங்கே இருக்கின்ற சூழ்நிலையில் அங்கே ஒரு கால்நடை மருத்துவமனை தேவை என்று நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மானியக் கோரிக்கைகள் மீது இந்த அளவுக்குப் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூற கடமைப் பட்டுள்ளேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் வி[illegible]திற்கு இணங்க— [illegible] போது அல்ல—அடுத்து பட்ஜெ[illegible] நிச்சயமாக [illegible] என்னுடைய கருத்துக்களோடு இங்[illegible]லைப் பாட கட[illegible] பட்டுள்ளன். நன்றி, வணக்கம்.



3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு [illegible] அறிவிப்பு. இன்று (6—4—1983) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று மாலை பேரவைக் கூட்டம் இல்லை.

இன்று மாலை எடுத்துக் கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், 9—4—1983, சனிக்கிழமையன்று எடுத்துக் கொள்ளப் பெறும்.

நாளையும், மறுதினமும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி மானியக் கோரிக்கைகள் எண். 15—காவல் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் ஆகியவை எடுத்துக் கொள்ளப்பெறும்.

9—4—1983, சனிக்கிழமையன்று எடுத்துக் கொள்ளப் பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் மற்றும், மாண்புமிகு நீதிபதி திரு. கே. எஸ். இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் அறிக்கை மீது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆண்டித்தேவர் அவர்கள் கொடுத்துள்ள தீர்மானம் ஆகியவை 15—4—1983 வெள்ளிக் கிழமையன்று எடுத்துக் கொள்ளப் பெறும்.

15—4—1983, வெள்ளிக்கிழமையன்று எடுத்துக் கொள்ளப் பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கைகள் எண். 7—மாநிலச் சட்டமன்றம் மற்றும் எண். 8—தேர்தல்கள் ஆகியவை 16—4—1983 சனிக்கிழமையன்று எடுத்துக் கொள்ளப் பெறும். மேலும் விவாதமின்றி வாக்கெடுப்பு விடப்படும் மானியக் கோரிக்கைகளும் 16—4—1983 அன்று வாக்கெடுப்புக்கு விடப்படும். நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அன்று அறிமுகம் செய்யப்படும்.

18—4—1983, திங்கட்கிழமையன்று நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்று நிறைவேற்றப்படும், மற்ற அரசினர் சட்டமுன்வடிவுகள் எடுத்துக் கொள்ளப் பெறும்.

19—4—1983, செவ்வாயன்றும், 20—4—1983, புதன் கிழமையும், அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்று நிறைவேற்றப்படும்.

நான் மனதார பாராட்டுகிறேன். நமது தேசீயகவி பாரதியார் அவர்கள் எல்லோரும் நன்மை பெறவேண்டுமென்றால் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சரிசமமான வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். இந்த வாய்மொழிக் கேற்ப புரட்சித்தலைவர் ஆண்களுக்கு நிகர் பெண்கள் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். உதாரணமாக காவல் துறையை எடுத்துக்கொண்டால் பெண்கள் அதிகமாக வேலை வாய்ப்பை பெற்று இன்றைக்கு அந்தத் துறையில் பணியாற்றி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இதுநாள் வரையில் ஆண்களே வகித்த வந்த மருத்துவ நிர்வாக. இயக்குநர் பதவியை இன்றைக்கு ஒரு பெண்மணிக்கு கொடுத்து நமது பாரதியார் அவர்களின் கனவை நினைவாக்கி இருக் கிறார்கள் என்பதை கூறிக்கொண்டு அந்த பெருமை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கே போய் சேரும். அதற்காக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை என் சார்பாகவும், தமிழகத்திலே இருக்கிற அனைத்து பெண் களின் சார்பாகவும் பாராட்டி, நன்றி கூற கடமைப்பட்டிருக் கிறேன்.

ஏழைமக்களின்மீது அக்கறைக்கொண்டு அதை வெளிப் படுத்தும் வகையில் இட்லி, தோசை போன்ற உணவு வகைகளை மலிவு விலையில் கொடுக்க கடைகளை ஆரம்பிக்க வித களை ஊக்குவிக்க அரசு முடிவு செய்துள்ளதை நான் பாராட்டு கிறேன். இந்தத் திட்டம் மூலதனச் செலவுத் தொகையில் 25 சதவிகித உதவித் தொகையாக சமூகநலத் துறையும், 75 சதவிகிதம் உதவித் தொகை வங்கிகள் மூலம் குறைந்த வட்டிக்கு தருவதற்கு ஏற்பாடு செய்துள்ளதை நான் வரவேற் கிறேன். இன்றைக்கு தமிழகத்தில் 60 விடுதிகள் செயல் பட்டு வருகிறது என்று தெரிகிறது. இன்னும் அதிகமாக விடுதிகள் செயல்பட ஏற்பாட்டை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் பெண்களுக்காக பலவித குடிசைத் தொழில்கள் இன்று தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது. உதாரணமாக மெழுகுவர்த்தி தயாரிப்பது, சாக்காட்டி தயாரிப்பது கயிறு தொழில் போன்ற தொழில்கள் அமைக்கப்பட்டு இன்று செயல்பட்டு வருகிறது. மேலும் பெண்களுக்கு தட்டழுத்து, சுருக்கெழுத்து, இடைநிலை ஆசிரியர் பயிற்சி போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன மற்றும் ஊனமுற்றோர் களுக்கு வேலை வாய்ப்பிற்கு உபகரணங்கள், விதவைகளின் குழந்தைகளுக்கு புத்தகங்கள் வழங்கும் திட்டம், ஆதரவற்ற விதவைகளின் பெண்களின் திருமணம் செய்ய உதவி போன்ற நல்ல திட்டங்கள் சிறப்பாக தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன். மேலும் மக்கள் நலனுக்காகவும், வளர்ச்சிக்காகவும் பயன்படுகிற வகையிலே கால்நடை வளர்ச்சி ஆலோசனைக் குழு ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சென்ற ஆண்டு கால்நடை உதவி மருத்துவர்களுக்கு வாகன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் கேட்டுக் கொண்டேன். இன்றைக்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டி



ருப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்கு வாகன வசதிகள் விரை வாக செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கால்நடை ஆய்வகங்களுக்கும், கிளை நிலையங்களுக்கும் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த பணியாளர்களுக்கு முதலமைச்சர் அவர்களின் வீட்டிற்கு ஒருவர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கிளை நிலையங்களுக்கு வேண்டிய உபகரணங்கள், மேசை, நாற்காலி போன்றவைகளையும் போதிய அளவிற்கு மருந்துகளை வாங்க நிதியாதாரத்தையும் செய்து கொடுக்கவேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும் 25 ஆண்டுகள் அனுபவம் உள்ள கால்நடை ஆய்வா ளர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து, கால்நடை மேற்பார்வை யாளர் பதவிகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இன்று ஊராட்சி ஒன்றியங்களில் அதிக நாட்களாக பணி புரிந்துவரும் தற்காலிக தையல் ஆசிரியர்களை சமூகநலத் துறையின்கீழ் நியமனம் செய்து, அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சமூகநலன், கால்நடை வளர்ப்பு மானியக் கோரிக்கையின்மீதுதிராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

சமூகநலன் என்கின்ற அந்தத் திட்டத்தின் கீழே இன்றைய தினம் குழந்தைகளுடைய நலன், மாதர்களுடைய நலன், முதியோர் களுடைய நலன், ஊனமுற்றோர்களுடைய நலன், இப்படிப் பட்ட சமுதாயத்தினுடைய அடிமட்டத்திலே இருக்கிற, வறுமைக் கோட்டின் கீழே இருக்கிற, பலபேருக்கு உதவி செய்வதற் காக, இந்தச் சமூக நல இலாகா ஓரளவிற்குப் பணியாற்றிக் கொண்டு வருகின்றது. இன்றைக்கு இந்த இலாகாவினாலேதான் நம்முடைய முதலமைச்சர் குழந்தைகளின் சத்துணவுத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தை இந்தப் பேரவையிலே அறிவித்தபொழுது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் அன்றையதினம் வரவேற்றிருக்கிறார்கள். எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள்கூட இந்தத் திட்டம் செயல்படுகின்ற

5. வரவு-செலவுத் திட்டம் 1983—84 வாக்கெடுப்பு—

தொடர்ச்சி.

பேரவையன் நிகழ்ச்சி நிரல் திருத்தப்பட்டபடி பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

* செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள கால்நடை பராமரிப்புத் துறை சமூக நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை கூறவிழைகிறேன். இன்றும் நம் புரட்சித் தலைவரின் ஆட்சியில் ஏழை கிராம மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதில் பல நல்ல திட்டங்களைத் தீட்டி தமிழகத்திலே செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதுவும் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதை கால்நடை பராமரிப்புத் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்கிறேன். மேலும் கால்நடை செல்வங்களால் மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள் கிடைக்கின்றன. அதாவது பால், முட்டை, இறைச்சி போன்ற உணவுப் பொருட்கள் நல்ல சத்துணவாக இன்றைக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. கால்நடைகளால் விவசாயிகளுக்கு வேண்டிய உரம் மேலும் பல விவசாயிகளுக்கும் நலிவுற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பு இந்தத் துறையிலே இருந்து கிடைக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் ஆடு வளர்ப்பு கிராம மக்களுக்கு குறிப்பாக சமுதாயத்திலே தாழ்வுற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. ஆடு வளர்ப்பு அபிவிருத்தி என்பதில் இன்று தமிழகம் முன்னோடியாக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆடு வளர்ப்பினால் விவசாயிகளுக்கு ஒரு புதிய பாதையை உருவாக்கிக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் ஆடு வளர்ப்பால் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் பயிற்சியும் அளிக்கப்படுகிறது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் கிராமப்புறங்களில் கோழி வளர்ப்பை வளரச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்திலே இன்று சமூக நலத் துறையினால் கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலமாக பல்வேறுமக்கள் வேலை வாய்ப்பை அடையச் செய்திருக்கிறார்கள். கோழி வளர்ப்பு முறை தமிழகத்தில் நல்ல முறையில் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன் மேலும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வேண்டிய உழவு மாடுகள், ஆடுகள், பால் மாடுகள் போன்றவற்றை லோன் மூலமாக வழங்கப்படும் இந்த திட்டம் விவசாயிகளுக்கு மட்டுமின்றி வறுமைக்கோட்டுக்கு கீழேயுள்ள மக்களுக்கும்





இது கொடுக்கப்பட்டு பயன் அளித்து உள்ளது. மேலும் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க இன்று 28 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தக் கால்நடை மருந்தகங்கள் இன்று பொதுமக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத்தலைவர்—தலைமை)

மேலும் 1982—83 ஆம் ஆண்டுகளில் கால்நடை மருந்தகங்கள் 25 ஏற்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தில் என்னுடைய தொகுதியில் உள்ள பெருமாள்கவுண்டன் பட்டியில் ஒரு மருந்தகத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சமூகநலத்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இன்று சமூக நலத்துறையின் மூலம் மகளிர் நலத்திட்டங்களை அமுலாக்குவது தவிர, குழந்தைகள், கர்ப்பிணிகள், வயது முதிர்ந்தோர், ஓய்வு ஊதியம் பெறுவோர் ஆகியோர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த சத்துணவுத் திட்டத்தைப் பற்றி எனக்கு முன்பு பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல கருத்துக்களை இங்கே எடுத்துக்கூறினார்கள்.

(பிற்பகல் 12-50)

அவர்கள் இந்த சத்துணவுத் திட்டத்திற்கு முழுமையாக ஆதரவு தெரிவிக்காமல் பலவிதமான குறைகளை எடுத்துக் கூறினார்கள். இந்த சத்துணவுத் திட்டத்திற்கு இன்றைக்கு தமிழகத்திலுள்ள பொதுமக்கள் நல்ல ஆதரவை கொடுத்திருக்கிறார்கள. ஏனென்றால் இன்றைக்கு அவர்களுடைய குழந்தைகள் நல்ல ஆரோக்கியமாக திகழ மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திட்டத்தைக் கொண்டு வந்து இந்த திட்டம் நல்லமுறையில் செயல்பட்டு வருவதை அவர்கள் கண்ணாறு கண்டு கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் கொடுக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் ஊனமுற்றவர்களுக்கும் தகுதி குறைவு உள்ளவர்களுக்கும் உரிய வேலை வாய்ப்பு அளிப்பதில் சமூக நலத்துறை சிறப்புமிக்க முறையில் பணியாற்றி வருகிறது. சிறப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக பெண்களுக்கு அதிலும் குறிப்பாக ஆதரவற்ற, கைவிடப்பட்ட பெண்களுக்கு வேலை வாய்ப்பு அதிக அளவில் அளிக்கிற வகையில் பல்வேறு தொழிற்சாலைகள் பயிற்சி அளிக்க தமிழ்நாடு மகளிர் வேலை வாய்ப்பு வளர்ச்சி கழகம் துவங்க முடிவு எடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். இவ்வாறு பல்லாயிரக்கணக்கான பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே தான் என்பதை

மதிய உணவு சம்பந்தமாக பொறுப்பாளர்களை நியமித்தீர்கள். நான் ஒரு உண்மையை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலே, ஊராட்சி மன்றங்களிலே கெசடெட் ஆபிசர் நியமித்து, அவர்கள் தான் இதை தேர்ந்தெடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அவர்கள் தேர்ந்தெடுத்துக்கொடுத்த லிஸ்டிலே உள்ளவர்களுக்கு வேலை அளிக்கப்பட்டதா என்றால் இல்லை. மாவட்டங்களிலே பல்வேறு மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள். அதனால்தான் ஊழல்கள் நடைபெறுகின்றன என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல முதியோர்களுக்கு உணவு அளிப்பதாகச் சொல்கிறார்கள். அதை வரவேற்கிறேன். அவர்கள் ஒவ்வொருவருக்கும் 200 கிராம் உணவுதான் அளிக்கப்படுகிறது. ஆக இந்த 60, 65 வயது உள்ளவர்களுக்கு ஒரு வேளை இந்த 200 கிராம் உணவை அளித்தால் போதாது. ஆகவே 60, 65 வயது உள்ளவர்களுக்கு, பெரியவர்களுக்கு, அந்த 200 கிராம் எடையுள்ள உணவு அளித்தாலும், கூட, நிச்சயமாக அவர்களுக்கு போதாது. செலவு அதிகமானாலும், அந்த முதியவர்களுக்கு போதிய அளவுஉணவு அளிப்பதற்கு போதிய அளவு நிதி ஒதுக்கவேண்டும். அதேநேரத்தில், முதியோர்களுக்கு உதவித்தொகை அளிக்கவேண்டுமென்று பல நேரங்களிலே விண்ணப்பம் செய்கின்றார்கள். நான் நேரடியாக அமைச்சரிடம்கூட இது சம்பந்தமாக எடுத்துக் சொன்னேன். பலமுறை ஏராளமான முதியோர்கள், தாய்மார்கள், எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களை அணுகி, தங்கள் கஷ்டங்களைத் தெரிவிக்கின்றார்கள். அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஏராளமான விண்ணப்பங்கள் இருக்கின்றன. அவர்கள் எல்லோருக்கும் முதியோர் உதவித் தொகையை அளிக்க வேண்டிய தொகையை ஒதுக்கவேண்டும். இல்லையென்று சொன்னால், அந்த வயோதிகர்கள் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதைப் போக்குகின்ற முறையில், இதற்கு அதிகமான நிதி ஒதுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோன்று, சமூகத்தில் உடல் ஊனமுற்றோர்களுக்கு 3 சக்கர வண்டி தரப்படுகின்ற பிரச்சினை வரும்போது, காதுகேளாதவர்களுக்கு, கருவிகள் வழங்குகிறபோது, கண் பார்வையற்றவர்களுக்கு இலவச சிகிச்சை முகாம்கள் நடத்துகின்றபோது, அதிக கவனம் இதில் செலுத்தப்படவில்லை. கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்டது என்ற காரணத்திற்காக, இன்றைய தினம் ஓரளவுதான் அந்தத் திட்டங்களை செயல்படுத்துகிறீர்கள். அதிலே அதிக கவனம் செலுத்தவில்லை என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், ஆரம்பிக்கப்பட்ட திட்டமாக அவைகள் இருக்கலாம். ஆனாலும், இந்தக்





குறையை நீங்கள் போக்க வேண்டும். அதேபோன்று தான் வீராணம் குடிநீர்த் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும், மறுவாழ்வு இல்லங்களை எடுத்துக் கொண்டாலும், இப்படிப்பட்ட ஊனமுற்றவர்களுக்கு, கண்பார்வையற்றவர்களுக்கு கண் அறுவை சிகிச்சை முகாம்களை எடுத்துக் கொண்டாலும், கலைஞர் அவர்கள் ஆரம்பித்தார் என்ற காரணத்திற்காக அதை நீங்கள் நல்ல முறையிலே செயல்படுத்தவில்லை. அதை நல்ல முறையிலே செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் கூட நான் இந்த அறிக்கையிலே பார்த்தேன். அதில் ஏற்கெனவே மறுவாழ்வு இல்லத்தைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. சொக்கலிங்கம் அவர்கள் கேட்டதற்கு, அம்மையார் அவர்கள் கூட சொன்னார்கள். எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவல், சரியான தகவலா, இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது. சரியான தகவலை அமைச்சர் அவர்கள் சொன்னால், நாங்கள் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ரூ. 2·30 தந்ததாகவும், பிறகு சென்ற ஆண்டு 2.90-க்கு தரவேண்டும் என்று ஆணையிட்டு பிறகு ரூ. 230 ஆக மாற்றி விட்டார்கள் என்று சொல்கிறார்கள். இப்போதெல்லாம் விலைவாசி எல்லாம் உயர்ந்துவிட்டது. உங்களுக்கு எல்லாம் தெரியும். அப்படியிருக்கும்பொழுது அதை அதிகமான அளவில் அவர்களுக்கு. கொடுக்கவேண்டும்.

இன்னொன்று மறுவாழ்வு இல்லங்கள் சரியான முறையிலே கண்காணிக்கப்படவேண்டும். தொழுநோய் பிடித்தவர்கள், ஏராளமாக இன்றையதினம் தமிழ் மாநிலத்திலே பிச்சை எடுக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் பிச்சை எடுப்பதை தடை செய்ய வேண்டும் அல்லது அவர்களது எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்றால், அந்த இல்லங்கள் நல்லமுறையிலே கண்காணிக்கப்படவேண்டும், அதிகப்படுத்தவேண்டும் அவர்களுக்கு இப்பொழுது 5 நாட்கள் லீவு கொடுக்கப்படுகிறது. முன்பு 15 நாட்களாக இருந்தது என்று சொல்கிறார்கள். அதை 15 நாட்களாக லீவு கொடுக்கலாம். அதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து கடைசியாக என்னுடைய தொகுதியிலே மல்லவாடி என்ற இடத்தில் திருவண்ணாமலைக்கருகில் மறுவாழ்வு இல்லம் இருக்கிறது. அதைக்கூட, அம்மையார் அவர்கள் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அங்கே பெரியவர்களும் இருக்கிறார்கள். அவர்களுடன் குழந்தைகளும் இருக்கின்றன. அவர்களுக்குக் கல்வி வசதி இல்லை. தொலை தூரம் சென்று அவர்களால் கல்வி கற்க அந்த குழந்தைகளால் முடியவில்லை. ஆதலால் அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. அதனால், மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்வது, அந்த மறுவாழ்வு இல்லங்களுக்கு அருகாமையில் தனியாக பாடசாலைகள் இல்லையென்று சொன்னால், அங்கே நீங்கள் ஒரு பாடசாலையை ஆரம்பிப்பதற்கு இலாகா மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இடங்களிலே போய்ப் பார்க்கின்றோம். அதிகாரிகளுக்கு எங்களால் இயன்ற ஆலோசனைகளைக்கூறி வருகின்றோம். இதற்கான விழாக்களிலே, பல நிகழ்ச்சிகளிலே நாங்கள் எல்லாம் சென்று கலந்து கொண்டிருக்கிறோம். ஆனால் வெளியிலேயும், இந்தப் பேரவையிலும் கூட சிலபேர் — நான் பலபேர் என்று சொல்ல மாட்டேன் — ஏதோ சத்துணவுத் திட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் எதிரானது என்று காட்டுகின்ற வகையிலே பேசுவதைக் கேட்கின்றபொழுது அவர்கள் மிகவும் அறியாதவர்கள் — அறியாமையினால் பேசுகிறார்கள் என்று கூறுவதைவிட நான் வேறொன்றும் கூற விரும்பவில்லை.

இந்த ஆண்டு நிதியமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிலே சொன்ன பொழுது கூட இதற்காகச் செலவழிக்கப்படுகின்ற தொகை — பல இலாக்காக்களின் மூலமாக ஆண்டொன்றுக்கு ரூ. 200 கோடியை — தாண்டும் என்றபொழுது, அந்த ரூ. 200 கோடியை செலவழிக்கின்ற திட்டத்தில் இருக்கிற குறைபாடுகளை, எதிர்க் கட்சியாக இருக்கிற நாங்கள் சுட்டிக்காட்டுவது, ஏதோ திட்டமே வேண்டாம் என்பதற்காக அல்ல; திட்டம் இன்னும் நல்ல முறையில் செயல்படுத்தப்பட வேண்டுமென்ற முறையில், அரசாங்கத்திற்கு கூறப்படுகிற ஆலோசனை என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கனவே இந்தத் திட்டம் தமிழகத்திலே இருந்ததா என்றால் இருந்தது. குழந்தைகள் காப்பகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் காப்பகம் என்ற பெயர்களில் இருந்தன. ஆனால், இன்றையதினம் இந்த அரசு அவைகளை எல்லாம் ஒன்றாக்கி, இன்னும் அதிக அளவிலே நிதியை ஒதுக்கி சிறப்பான முறையிலே செய்யவேண்டுமென்ற நல்ல நோக்கத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதிலே குறைகள் இல்லையா என்றால் நிச்சயமாக இன்றையதினம் பல இடங்களில் ஏராளமான குறைகள் இருக்கின்றன. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்பதை நான் சொல்லியாக வேண்டும்.

இன்றையதினம் அரிசி 80 கிராம்; பருப்பு 10 கிராம்; எண்ணெய் 7 கிராம்; காய்கறிகள் மற்றும் தாளிதம் 50 கிராம் என்று ஒவ்வொரு குழந்தைகளுக்கும் உணவு அளிக்கின்றோம்.

இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கின்றபொழுது விரைவாக ஆரம்பிக்க வேண்டுமென்ற தாக்கீது அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற உடனே, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கிற அதிகாரிகள் மிக வேகமாக கணக்கைக் கொடுத்து விட்டார்கள். அதிலே பல கிராமங்களிலே குழந்தைகளுடைய எண்ணிக்கை குறைவாகக் கொடுக்கப்பட்டு மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அதனால், இன்றையதினம் என்ன நிலைமை என்றால், 50 குழந்தைகளுக்கு உணவு சமைக்கப்படுமானால், 60, 75 குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிற கட்டாயமான சூழ்நிலை கிராமங்களிலே ஏற்பட்டிருக்கிறது. அவைகளைப் பரிசீலனை செய்து, விடப்பட்ட குழந்தைகளையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல் 1-00)

இந்தத் திட்டத்தைக் கண்காணிப்பதற்குச் சரியான வகையில் அதிகாரிகள் இருக்கிறார்களா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை. இன்றைக்கு அமைப்பாளர்களுடைய தலைமையிலே நடந்தாலும், கல்வித் துறை மூலமாகக் கவனிக்கப்படுவதற்கோ அல்லது சமூக நலத்துறை மூலமாகக் கவனிக்கப்படுவதற்கோ சரியான ஆட்கள், அதிகாரிகள் இல்லை. இதுதான் உண்மையான நிலைமை.

என்னுடைய தொகுதியிலே நான் சுற்றுப் பயணம் செய்கின்ற கால கட்டங்களில் பல மையங்களைப் பார்க்கும்பொழுது ஒரு சாரார் இந்தத் திட்டம் நல்லபடியாக நடைபெறுகின்றது என்று சொல்கிறார்கள். மற்றொரு சாரார், இந்தத் திட்டத்தில் பல்வேறு முறைகேடுகளும், ஊழல்களும் நடக்கின்றன என்று, கட்சி சார்பற்ற முறையிலே, ஆளுங்கட்சிக்காரர்கள்கூட முறையிடுகிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், அதைக் கண்காணிப்பதற்கோ, மேற்பார்வையிடுவதற்கோ அதிகாரிகள் இல்லை. இதைச் சரியான முறையில் கண்காணிக்க வேண்டிய கட்டாயக் கடமை அரசாங்கத்திற்கு உண்டு, அப்படிக் கண்காணிக்கத் தவறினால் நாம் 200 கோடி ரூபாய்களைச் செலவழித்தால் அந்த முழுத் தொகையும் குழந்தைகளுக்குப் போய்ச்சேராது என்ற நிலைமை ஏற்படும்.

அளிக்கப்படும் உணவைப்பற்றி மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர்கள்கூடச் சொன்னார்கள். என்னிடத்திலேகூட டாக்டர் ஒருவர் ஒன்றைச் சொன்னார்கள். ஏ வைட்டமின் மிகவும் குறைவாக இருக்கிறது, அப்படிப்பட்ட உணவைக் குழந்தைகள் உண்பார்களேயானால் வயதான காலகட்டத்தில் அவர்களின் கண் பார்வை குறையக் கூடிய நிலைமை ஏற்படும் என்று சொன்னார்கள். அதைப்பற்றி அரசாங்கம் கவனித்து, ஏ வைட்டமின் உள்ள உணவைக் குழந்தைகளுக்கு அளிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதில் பல நேரங்களில் தவறுகள் ஏற்படலாம். அதன் காரணமாகக் குழந்தைகள் ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லுகின்றன. அங்கே அவர்களுக்கு வைத்திய உதவி அளிக்கப்பட்டு நல்ல நிலைமையை அவர்கள் அடைந்திருக்கலாம். ஆனால் நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். பல நேரங்களில் அப்படிப்பட்ட நிலைமையில், பாமாயிலின் காரணமாக வாந்தி எடுக்கும் நிலைமை ஏற்படுகிறது; சில நேரங்களில் தரமான அரிசியாக இல்லாத காரணத்தால் அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது; இன்னும் சில நேரங்களில் சமைக்கின்ற பாத்திரங்களில் ஈயம் பூசப்படாத காரணத்தினாலோ அல்லது சரியாக ஈயம் இல்லாத காரணத்தினாலோ இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆனால் பரவலாகப் பார்த்தால், செங்கல்பட்டு மாவட்டத்திலானாலும் வடார்க்காடு மாவட்டத்திலானாலும், மதுரை மாவட்டத்திலானாலும், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுக்கும்பொழுது, இப்படி ஏற்பட்டதற்குக் காரணம் பல்லி விழுந்து விட்டதுதான் என்று எல்லோருமே சொல்கிறார்கள் என்பதை அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கிறேன். அவர்களை அரசாங்கமே சண்டையிட்டுக் கொள்வதற்காக இப்படி மாற்றி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி எல்லாம் இல்லை. அதாவது கால்நடை உதவி மருத்துவர்கள் வேலையில்லாத காரணத்தின் அடிப்படையிலே தான் இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே எல்லாம் கால்நடை மருத்துவர்களை நாம் அமர்த்தியிருக்கிறோம். அதன்படி அரசாங்கம் ஆணை போட்டிருந்தது. ஆனால் கால்நடை ஆய்வாளர்கள். என்னை வந்து சந்தித்து இப்படி எல்லாம் செய்திருக்கிறீர்களே என்றுகூட குறிப்பிட்டார்கள். நானும் அவர்களுக்கு ஆதரவான பதிலைச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று தடை உத்தரவை வாங்கிக் கொண்டார்கள். இப்படி நீதிமன்றம் இன்றைக்கு நமக்கு ஆணை கொடுத்திருக்கிறது. கால்நடை உதவி மருத்துவர்களுக்கு வேலை இல்லாத் திண்டாட்டத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு அரசாங்கமே ஊராட்சி ஒன்றியங்களிலே எக்ஸ்டன்சன் ஆபிசர்கள் என்ற முறையில் அவர்களுக்கு பதவி கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே அரசு செய்திருக்கிறது. இருந்தாலும் அவர்கள் வழக்கு மன்றத்திற்கு கால்நடை ஆய்வாளர்கள் கொண்டு போனாலும், நீதிமன்றத்திலே கால்நடை உதவி மருத்துவர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரியலாம் என்று ஆணை பிறப்பித்து இருக்கிறது. இதற்கு மேல் அரசாங்கம் ஒன்றும் முடிவு எடுக்க முடியாது. நீதிமன்றமே முடிவு எடுத்துவிட்டது.

திரு பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்ல விரும்புகிறேன். இப்போது நடைபெற்றதை நான் இங்கே பேசவில்லை. ஏற்கனவே இந்த அரசாங்கத்திற்கு ஒரு அணுகுமுறை இல்லை. இந்தத் துறையிலே மட்டுமல்ல, வேளாண்மைத்துறை, இப்படி எல்லாத் துறையிலேயும், உங்களுடைய அரசாங்கத்தினுடைய அணுகு முறை சரியில்லாத காரணத்தினால் வேலை பாதிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கங்களை அழைத்துப் பேசியிருக்கிறோம். அவர்கள் எங்களை வந்து அணுகியிருக்கிறார்கள். அதற்கு ஆதரவான பதிலை எல்லாம் நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

திரு பெ. சு. திருவேங்கடம் : சரி, இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். ஊராட்சி ஒன்றியங்களிலே இன்றைய தினம் கால்நடை மருத்துவ அதிகாரிகளை எல்லாம் நியமனம் செய்திருக்கிறீர்கள். அதையாவது அரசாங்கம் ஒழுங்காகச் செய்திருக்கிறதா என்றால், இல்லை. இப்போது என்ன நிலைமை? ஊராட்சி ஒன்றியத்தையும் அவர்கள் பார்க்க வேண்டும். மருத்துவ மனையையும் அவர்கள் பார்க்க வேண்டும். இங்கே கூட பல உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். நம்முடைய கிராம வளர்ச்சித்திட்டத்தில் எல்லாம் ஏராளமான கறவை மாடுகள், இவைகளுக்கு எல்லாம் கடன் பெறவேண்டும், கடன் பெறவேண்டு



மானால் யார் அந்தப் பணியைச் செய்ய வேண்டும்? ஒன்றியத்திலே உள்ள இந்தக் கால்நடை மருத்துவ அதிகாரிகள் தானே பார்க்க வேண்டும். அப்படி அவர்கள் இந்த 2 பணிகளையும் பார்க்கின்றபோது அங்கே குந்தகம் வருகிறது. இதையாவது அரசாங்கம் ஒழுங்காகச் செய்திருக்கிறதா? அதையும் செய்யவில்லை. உங்களிடத்திலே போதிய மருத்துவர்கள் இல்லை என்று சொன்னால், அதை ஆண்டுக்காண்டு கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு வந்தால் இந்தத் திட்டத்தை நல்லமுறையிலே செயல்படுத்தியிருக்கலாம். எனவே உடனடியாக செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதேபோல் அந்த இலாக்காவிற்கு கால்நடை இயக்குநர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கேட்பது என்னவென்றால், எப்படி மருத்துவத் துறையிலே டாக்டர் பட்டம் பெற்றவர்கள் இயக்குநர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் வருகிறார்களோ, அதேபோல் இந்தத் துறையிலேயும் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதிலே என்ன தவறு? செயலாளராக இருப்பவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்கிறார்கள். நீங்கள் கால்நடை மருத்துவத் துறையிலே பட்டம் பெற்றவர்களை இயக்குநர்களாக நியமிப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன் என்றால் அவர்கள் கேட்பது நியாயமான கோரிக்கை. (குறுக்கீடு). இன்றைய தினம் உதவி கால்நடை மருத்துவர்கள் என்று அவர்கள் அழைக்கப்படுவதை, கால்நடை மருத்துவர்கள் என்று அழைக்கப்பட வேண்டும் என்ற முறையில் மாற்றியமைக்க வேண்டும்.

இன்றைய தினம் தமிழகத்திலே கடுமையான வறட்சி நிலைமை இருக்கிறது. இதனால் மின்சாரத் தட்டுப்பாடும் இருக்கிறது. இதனால் பல இடங்களில் என்ன நிலைமை என்று சொன்னால், தற்போது செயற்கை முறை கருத்தரிப்பு முறைதான் பரவலாகக்கையாளப்பட்டு வருகிறது. இந்தச் செயற்கை முறை கரு விந்துகளை குளிர் சாதனப் பெட்டிகளில் வைத்து இருந்தால்தான் அவைகளை நல்ல முறையில் பயன்படுத்த முடியும். ஆனால் தற்போது மின்சாரம் இல்லாத காரணத்தால், குளிர் சாதனப் பெட்டிகள் இயங்க முடியவில்லை. அதனால் அந்த உறைவிந்துகளை மருத்துவ மனைகளில் கொண்டு வந்து வைத்து அவர்களால் பயன்படுத்த முடியவில்லை. இதன் காரணமாக, அந்த விவசாயி 4-5 முறை மருத்துவமனைக்கு மாடுகளை ஓட்டிக்கொண்டு வந்து திரும்பிச்செல்லும் நிலைமை இருக்கிறது. ஆகவே, இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு ஏதாவது செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பொலி காளைகளை விவசாயிகளுக்கு முன்பு மானிய விலையில் கொடுத்து வந்தோம். அதையாவது செய்யலாம்.

அதைப் போலவே, ஒன்றியங்களில் கால்நடைக் கண்காட்சிகள் ஆங்காங்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதே போன்று கால்நடை, கால்நடைத் துறையைப்பற்றிக் கூட பல உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். மருந்துகள் வாங்குவது என்பது, ஏற்கெனவே, மத்திய அரசாங்கத்தின் எம்.எஸ்.டி. என்று சொல்லப்படுகிற அந்த நிறுவனத்தின் மூல மாக தமிழக அரசாங்கம் மருந்துகள் வாங்கிவந்ததாக சொல்லப் படுகிறது. அவர்களுக்கு அந்தத் தரத்தை நிர்ணயிப்பதற்கு அந்த இலாகா அதிகாரிகளுக்கு அந்தப் பொறுப்பு இருந்தது. இப்போது நீங்கள் எப்படி மாற்றியிருக்கிறீர்கள்? இப்போது டெண்டர்கள் மூலமாக வாங்குகிறீர்கள். டெண்டர் மூலமாக வாங்குவது என்றால், டெண்டரில் யார் குறைவாகக் கொடுக்கின்றார்களோ, அவர்களிடமிருந்து தான் அந்த மருந்துகளை வாங்கமுடியும். அப்படி அவர்களிடமிருந்து வாங்குகிறபோது அந்த மருந்துகள் தரமானவையாக இல்லை. தரம் குறைந்த உபகரணங்கள், தரம் குறைந்த மருந்துகள் என்ற நிலையில் தான் அவைகள் காணப் படுகின்றன. அது ஒரு உண்மையான நிலை. அதிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும். நம்முடைய அமைச்சரவர்கள் பூந்தமல்லிக்குச் சென்று அங்கே கூட, உபகரணங்கள் தரம் குறைந்ததாக இருப்பதைப் பார்த்ததாக எனக்குத் தகவல். அது உண்மையாகவும் இருக்கலாம். ஆகவே. பல இடங்களில் அமைச்சரவர்கள் சுற்றிப் பார்த்து தக்க நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று, கேட்டுக் கொள்கிறேன். இன்னொன்று எனக்குக் கிடைத்த தகவல். சுக்குத்தூள் கலந்து கால்நடைகளுக்குக் கொடுப்பார்கள். அதிலே ஏராளமான தவிடு, மரத்தூள் கலந்து குறைந்த டெண்டர் எடுத்தவர்கள் சப்ளை செய்து விடுகிறார்கள். அதைக் கால்நடைகளுக்குக் கொடுப்பார் கள். யார் கேட்கப் போகிறார்கள்? ஆகவே, அரசாங்கம் மருந்து கள் வாங்குவதிலே நடைபெறுகிற ஊழலைத் தடுத்து, நல்ல முறை யிலே, நல்ல தரமான மருந்துகள் கிடைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று கால்நடை வளர்ச்சி ஆலோசனைக் குழு ஒன்று இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைய தினம் அது செயல்படவில்லை. அதை செயல்படுத்துகின்ற நிலை மைக்கு நீங்கள் கொண்டுவரவேண்டும். ஆஸ்பத்திரியில் ரூ.15,000 வரைதான் மருந்துகள் வாங்கப்பட வேண்டும் என்று சொல்லப் படுகிறது. கிளை நிலையங்களிலே கூட கால்நடை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். அங்கே கூட ரூ. 1500 வரைதான் அந்த மருந்து களை வாங்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அந்த வரம்பை உயர்த்தவேண்டும்.

ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியன்கள், ஊராட்சி ஒன்றியங் கள், நீங்கள் ஆரம்பிக்கின்ற ஆஸ்பத்திரிகளுக்கு வாடகை தந்து வந்தார்கள். இப்போது அவர்களுக்கு வாடகை கொடுப்பதற்கு நிதிவசதி இல்லை. ஒன்று உங்கள் இலாகா மூலமாக அந்த வாடகையை நீங்கள் செலுத்த வேண்டும். அல்லது சொந்தக் கட்டிடம் கட்டித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





என்னுடைய தொகுதியிலே ஆதமங்கலத்திலே, போளூர் வட்டத்திலே கலசபாக்கம் தொகுதியிலே அந்தக் கிராமம் இருக் கிறது. அந்த ஆஸ்பத்திரி கூட, வாடகைக் கட்டிடத்திலே இருக்கி கிறது. வாடகை கொடுக்கப்படாததால் ஒரு தகராறு ஏற்பட்டு அந்தக் கட்டிடத்தின் சொந்தக்காரர் அந்த ஆஸ்பத்திரியை காலி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். டாக்டர்கள் கூட என்னி டத்திலே இந்த நிலைமைப்பற்றி சொன்னார்கள். நான் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுடன் பலமுறை தொடர்பு கொண்டும் அது முடியவில்லை. ஆகவே, அதற்குத் தகுந்த ஏற்பாட்டை நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிளை நிலையங் கள் தமிழகத்திலே ஏராளமாக இருக்கின்றன. அங்கே கால் நடை ஆய்வாளர்கள் இருக்கின்றார்களா என்றால் இல்லை. மியூசி கல் சேர் என்று சொல்வார்கள். அதுபோன்று 6 மாதத்திற்கு ஒரு முறை மாற்றுகிறீர்கள். 5 மாதங்கள் தான் இருப்பார்.

(பிற்பகல் 1-10.)

அது எப்போது முடிவடையப் போகிறது? எனவே நீங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் கால்நடை ஆய்வாளர்களுக்கு—உங்களுக்கே கூடத் தெரியும்—அவர்கள் எல்லாம் வழக்கு மன்றத்திற்குப் போனார்கள். இதிலே இந்த அரசாங்கத்திற்கு ஒரு அணுகுமுறை சரியில்லை என்றுதான் என்னுடைய குற்றச்சாட்டு. நீங்கள் ஒன்றியங்களிலே பணியாற்றுகின்ற கால்நடை ஆய்வாளர்களுக்கு பதிலாக உதவி கால்நடை மருத்துவர்களை நியமித்து இருக்கிறீர் கள். இரு சங்கங்களையும் கூப்பிட்டு நீங்கள் பேசி இருக்கலாம். அல்லது ஒரு பர்சென்ட்டேஜ், அதாவது குறைவாக ஆண்டுக்கு இவ்வளவு பேர்கள் என்றுகூட மாற்றியிருக்கலாம். இப்போது என்ன ஆயிற்று? உடனே ஊரிலே இருக்கிற டாக்டர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் சண்டை. அவர்கள் இரண்டு பேரும் ஒன்றாக இருந்தால்தானே ஒருமனதோடு இருந்தால்தானே, கிராமங்களிலே அந்த மருத்துவமனைகளிலே வேலைகள் ஒழுங்காக நடைபெறும். இருவரையும் சண்டைக்கு விட்டு, வழக்குமன்றத்திற்கு சென்ற தினால் அங்கே என்ன நடக்கிறது? இதனால் வேலைகள் பாதிக்கப் படுகின்றன. அரசாங்கத்தினுடைய பணிகள் தடைப்படுகின்றன.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை யைப் பொறுத்தவரைக்கும் கால்நடை ஆய்வாளர்களையும், கால்நடை உதவி மருத்துவர்களையும் ஒன்றாக இணைத்துத் தான், அவர்களுக்காகத்திட்டம் போட்டு, அவர்கள் சலுகைகள் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் இந்தத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கால்நடை உதவி மருத்துவர் களையும் ஒருமனதாகவும் அல்லது ஆய்வாளர்களை ஒதுக்கித் தள்ளியோ இந்தத் துறை இன்றைக்குச் செயல்படவில்லை என் பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்

(திரு.பெ.சு. திருவேங்கடம்) [1983 ஏப்ரல் 6

இன்றைக்கு கடுமையான வறட்சி நிலைமை இருப்பதால், நமக்கு குடிநீர் கிடைப்பது எவ்வளவு கஷ்டமாக இருக்கிறதோ, அதைப் போல கால்நடைகளுக்கும் குடிநீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அவைகளுக்கு தண்ணீர் கிடைக்கவும் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வைக்கோல் மானிய விலையில் கொடுக்க வேண்டும். தவிடு 20 ரூபாய் அளவில் விற்கின்றன. அது குறைவான விலையில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இறைச்சிக் கழகம், கோழி வளர்ப்பு நிறுவனம் ஆகியவை எல்லாம் திறமையான முறையிலே செயல்படுவதாகத் தெரியவில்லை. இறைச்சியின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறது. இறைச்சி சாப்பிடுகிறவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. விலையும் ஏறுகிறது. ஆகவே விலையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக அரசாங்கம் ஆடு வளர்ப்பிலும், கோழி வளர்ப்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடு வளர்ப்புக்காக அதிகமான அளவிற்குப் பணம் தரப்படுகிறது. கிராமத்தில் மாடுகளுக்கு வெக்கை நோய் வருகின்ற காரணத்தால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள். மருந்துகள் கிடைப்பது இல்லை. அப்படி மருந்து கிடைத்தாலும் அதனால் பலன் இல்லை. ஆகவே, அந்தத் துறையில் உள்ள நிபுணர்களைக் கொண்டு அவர்களை நல்ல முறையில் மருந்துகளைத் தயார் செய்யச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, பூவிருந்தவல்லி தொகுதியில் பருத்திப்பட்டி வீரராகவபுரம்என்ற இடத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள்காப்பகத்தோடுசேர்த்து ஒரு பிரசவ விடுதி இருந்தது. அந்தக் குழந்தைகள் காப்பகத்தை பிறகு சமூக நலத்துறை எடுத்துக்கொண்டுவிட்டது. அந்த பிரசவ விடுதியையும் சேர்த்து எடுத்துக்கொண்டு இருந்தால் பரவாயில்லை. ஆனால் அது மூடப்பட்டு விட்டது. அந்தப் பகுதி மக்கள் இதனால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஏற்கனவே அந்த பிரசவ விடுதியை மருத்துவத் துறையோடு இணைத்து அதை நல்ல முறையில் இயங்கச் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கால்நடை உதவி மருத்துவர்களும், கால்நடை ஆய்வாளர்களும் கால்நடைகளோடு இருந்து அதனுடைய நோய்களை குணப்படுத்தவும், அவற்றிற்கு மருந்துகள் போடவும் என்ற முறையில் இருப்பதால், அந்த கால்நடைகளுக்கு வரும் நோய் அவர்களுக்கு தொத்திவிடும் வாய்ப்பு இருக்கின்ற ரிஸ்க் இருப்பதால், அவர்களுக்கு ரிஸ்க் அலவன்சு கொடுக்க வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.



1983 ஏப்ரல் 6]

*மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கால்நடை பராமரிப்பு துறை மற்றும் சமூக நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது இங்கே 14 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தமட்டில் 29 மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் அவர்களுடைய உணர்வுகளையும் பரிசீலித்து, அவர்கள் சொன்ன அடிப்படையில் என்ன என்ன செய்ய வேண்டுமோ அதை இந்த அரசு கண்டிப்பாகச் செய்து கொடுக்கும் என்பதை இங்கே நான் குறிப்பிட கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-20).

கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது என்பதைப் பற்றியும் இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றியும் நாம்பார்க்கும்போது, இன்றைக்கு 21,16,16,000 ரூபாயை கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்து இருக்கிறது இந்த அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இங்கே குறிப்பிட்டமாதிரி உப தொழிலாக கூட இன்றைக்கு கால்நடைகளை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை இங்கே எடுத்து வைத்தார்கள். அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் 21 கோடி ரூபாயை அதற்காக ஒதுக்கீடு செய்து, வறட்சியை முன்னிட்டு அதற்காக இன்றைக்கு 17,65,60,000 ரூபாயை ஒதுக்கீடு செய்து அதன் மூலம் கால்நடை பராமரிப்புத் துறையில் நல்ல சிறப்பான திட்டங்களைத் தீட்டியிருப்பது பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மலை மேம்பாட்டுத் திட்டம், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம், கேந்திர கிராமத் திட்டம், இன்னும் பல திட்டங்களைப் பற்றியும் கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ள கருத்துக்களை எடுத்துக்காட்டியும் இப்படி சிறந்த திட்டங்களைத் தீட்டித் தந்து, அவை மூலமாக நல்லமுறையில் இனவிருத்தி செய்வது மட்டுமல்ல; செயற்கை முறையில் இனவிருத்தி செய்து, உயர் ரக பசுக்களை உற்பத்திச் செய்து, அதன் மூலமாக 33 சதவீதம் பால் உற்பத்தியை கூடுதலாக தமிழ்நாட்டில் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் கால்நடை பராமரிப்புத் துறையை இந்த அரசு மிகவும் சிறப்பாக கவனித்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(திருமதி கோமதி சீனிவாசன்) [1983 ஏப்ரல் 6

செயற்கை இன விருத்தி மூலம் உள்ளூர் கால்நடைகளை தரம் உயர்த்துவது இன்றைக்கு ஒரு முக்கியமான பணி. சாதாரண உள்ளூர் கால்நடைகளை—அவை சாதாரண பசுக்களாக கூட இருக்கலாம்.—செயற்கை இனவிருத்தி மூலம் தரம் உயர்த்த வேண்டும். இரண்டாவதாக கன்று வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டும்; பால் பெருக்கு விநியோகப் பணியை விஸ்தரிக்க வேண்டும்; அதன் மூலம் இந்தத் திட்டத்தைப்பற்றி ஆராய்ச்சியும் மதிப்பீடும் செய்து பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் கால்நடை பராமரிப்புத் துறைக்கு 1983–84-ஆம் ஆண்டுக்கு 24·7 இலட்சம் ரூபாய் அளவுக்கு ஒதுக்கீடு செய்து, தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறோம்.

தமிழ்நாட்டில் ஏற்கனவே 9 தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. 1983–84-ஆம் ஆண்டில் புதிதாக ஒரு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் சிதம்பரத்தில் ஒரு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் அதைச் சுற்றியுள்ள 50 கிளை நிலையங்களில் 50,000 இனவிருத்தி கால்நடைகளை உள்ளடக்கிச் செயல்படுத்துவது மட்டுமல்லாமல் 20,000 கால்நடைகள் இனவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு நாம் இந்த தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக எதிர்காலத்திலே என்ன எதிர்பார்க்கிறோம் என்றால் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 2500 முதல் 3000 வரை தரம் உயர்த்தப்பட்ட கிடேரி கன்று கூடுதலாக கிடைக்கும். ஐந்தாண்டு காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 35·5 இலட்சம் லிட்டர் பால் கூடுதல்உற்பத்தி கிடைக்கும். 5 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பகுதிகளிலுள்ள கால்நடைச் செல்வங்களின் மதிப்பு சுமார் 1·50 கோடி ரூபாய்க்கு அதிகரிக்கும் என்று கூட மதிப்பிடப்படுகிறது. அந்த அளவுக்கு இன்றைக்கு இந்த தீவிரக் கால் நடை அபிவிருத்தி திட்டத்தின் மூலமாக, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் அமைந்த தமிழக அரசினர் அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் உறை விந்து நிலையத்தைப் பற்றி பேசினார்கள். உறைவிந்தின் தன்மையைப் பற்றிக் கூறி, திரவ நைட்ரஜன் உறைவிந்தை செயல்படுத்த வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி எல்லாம் சொல்லவேண்டும் என்ற எண்ணத்தோடு தான் இந்த அறிக்கையை நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். தஞ்சாவூருக்கு அருகிலே உள்ள ஈச்சங்கோட்டையில் டென்மார்க்கின் உதவியோடு, திரவ உறைவிந்து நிலையம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. திருநெல்வேலியில் உள்ள அபிஷேகப் பட்டியின் அருகில் அந்த திரவ உறைவிந்து நிலையம்



1983 ஏப்ரல் 6] (திருமதி கோமதி சீனிவாசன்)

அமைப்பதற்காக ஏற்பாடுகள் செய்து, அதன் மூலமாக 50 ஆயிரம் இன விருத்திக் கால்நடைகளை அதிக அளவில் உருவாக்கக்கூடிய வகையில், 50 கிளை நிலையங்கள் மூலமாக இன்றைக்கு, இந்த அரசு கால்நடை இனவிருத்தி செய்து வருகிறது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைக்கூட ஒரு முன்னோடி திட்டமாகத்தான் செயல்படுத்தி வந்தோம். இன்றைக்கு மத்திய அரசும் தமிழகத்தில் கால்நடைகளை அதிகமாக பெருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு 119·31 லட்சம் ரூபாய் செலவில், அதாவது கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் செலவில், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில், 7 லட்சம் கால்நடைகளை இனவிருத்தி செய்வதற்கும், 400 கால்நடை பராமரிப்பு நிலையங்கள் அமைக்கவும், உறை விந்து தொழில் முறையினை மேலும் விஸ்தரிக்கவும் திட்டங்கள் ஆரம்பிப்பதற்காக செயலாக்கத்தில் இருந்துக் கொண்டிருக்கிறது. இந்த திட்டம் 1983–84-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த திட்டத்திற்காக ஈச்சங்கோட்டை, அபிஷேக பட்டி போன்ற இடங்களில் 65 லட்சம் உறை விந்து குழல்கள் உற்பத்தி செய்யப்படும். இந்த உறைவிந்து குழல்களை உற்பத்தி செய்வதன் மூலமாக, அந்த திரவ நைட்ரஜன் மூலமாக விந்து பதப்படுத்தப்பட்டு—ஏனென்றால் உறைவிந்து கூட 48 மணி நேரம் தான் தாக்கு பிடிக்கும். பிறகு அதனுடைய ஆக்ஷன் குறைந்து விடும். ஆனால் இப்படி பதப்படுத்த பட்டு குழல்களில் அடைக்கப்படும் உறைவிந்தை மாடு இறந்ததற்குப் பிறகும் பயன்படுத்த முடியும். மாடு கூட இறந்து விடும். ஆனால் ஆண்டாண்டு காலத்திற்கு அது பயன்படும். பயன்படுவதோடு மட்டும் அல்லாமல், உயர்ரக கால்நடைகளை இனவிருத்தி செய்வதற்கும் இது ப்யன்படும் இதை ஒரு சிறந்த திட்டமாக அமைத்து, தமிழகத்தில் நாம் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். அதாவது 1983–84 ஆம் ஆண்டிலே கொண்டு வருகிறோம் என்று குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல ஒருங்கிணைந்த கிராம வள அபிவிருத்தித் திட்டத்தைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். அந்த ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி திட்டத்தின் அடிப்படையில் 173 நிலையங்களில், 107 நிலயைங்களுக்கு உறைவிந்து முறை, 82–83 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு விட்டது. இன்னும் இருக்கிற 66 நிலையங்களில், 83–84ல் அம்முறை பின்பற்றப்படும். அத்திட்டத்தின் கீழ் சுமார் 1 லட்சம் கால்நடைகளுக்கு, இனப்பெருக்கத்தின் மூலமாக உறைவிந்து பலன் கிடைக்கும் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். உறைவிந்து முறை மூலம் எத்தனை கால்நடை இன அபிவிருத்தி எதிர் பார்க்கலாம் என்றுகூட நாம் ஒரு கணக்கினை இந்த திட்டத்தின் மூலமாக, செயல்படுத்தி கொண்டுவந்து இருக்கிறோம்.

தற்போது உறைவிந்து முறை மூலமாக 39 ஆயிரம் கருதரிப்புகள் செய்யப்படுகின்றன. இந்த திட்டத்தின் மூலம் கால்நடைகள் பெருக, பெருக, மேலும் இத்திட்டத்தின் மூலம் கருத்தரிப்புகள் ஆண்டு ஒன்றுக்கு 3 இலட்சமாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டு எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கால்நடை மருந்தகங்களைப் பற்றி குறிப்பிட்டுப் பேசும்போது, இந்த ஊரில் கிடையாது, அந்த ஊரில் கிடையாது. என்று சொல்லி, அந்தந்த இடங்களுக்கும் மருந்தகங்கள் வேண்டும் என்று கேட்டார்கள் 10 ஆயிரம் கால்நடைகள் இருந்தால் கூட அந்த ஊருக்கு, கால்நடை மருந்தகம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கூட மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம், 20 ஆயிரம் கால்நடைகள் எங்கெங்கே காணப்படுகிறதோ, அந்த அடிப்படையில் 100 கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை ஏற்று செயலாக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இப்போது 55 கால்நடை மருந்தகங்களை தமிழக அரசு திறந்திருக்கிறது.

(முற்பகல் 1—30)

இன்னும் இந்த ஆண்டு 25 கால் நடை மருந்தகங்களைத் திறக்க இருக்கிறோம். அடுத்த ஆண்டு 20 கால்நடை மருந்தகங்கள் திறக்கப்படும். ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் எங்கெங்கு கால்நடைகள் காணப்படுகிறதோ அங்கங்கு கால்நடை மருந்தகங்கள் திறக்க வேண்டும் என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அவையின் முன் அனுமதியுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்** : அந்த அடிப்படையில்தான் கால்நடை மருந்தகங்களைத் திறந்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய அந்தக் கருத்துக்களை அரசு ஏற்றுக்கொண்டு, பத்தாயிரம் கால்நடைகள் எங்கெங்கு காணப்படுகின்றதோ அங்கெல்லாம் கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்தவேண்டும் என்ற கருத்தினைக் கண்டிப்பாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மருந்துகளின் அளவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றைக்குக் கிளை நிலையங்களுக்கு 1,500 ரூபாய் மதிப்புள்ள மருந்துகளைக் கொடுக்கிறோம். மருந்தகங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மருந்துகளைக் கொடுக்கிறோம். மருத்துவமனைகளுக்கு 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மருந்துகளைக் கொடுக்கிறோம். பிரதம மருத்துவமனைகளுக்கு 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மருந்துகளைக் கொடுக்கிறோம். அது போதாது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டு,



இருக்கிறார்கள். அந்த மருந்துகள் கொடுக்கின்ற அளவினை அதிகப்படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவிலேயே மற்றைய மாநிலங்களை விட கால்நடை மருந்தகங்களுக்கும் கால்நடை கிளை நிலையங்களுக்கும், கால்நடை மருத்துவமனைகளுக்கும், பிரதம கால்நடை மருத்துவமனைகளுக்கும் அதிகமாக மருந்துகள் கொடுக்க அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்தது தமிழகம்தான். மற்றைய மாநிலங்களில் இவ்வளவு அதிகமாக அதற்கெல்லாம் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. நீங்கள் வேண்டுமானால் அதுபற்றிக் கேட்டுப் பார்த்துக்கொள்ளலாம். எனவே இந்தியாவிலேயே இன்றைக்குத் தமிழகத்திலே தான் அதிகமான அளவிலே மருந்துகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மருந்துகளுக்காக 1982—83-ஆம் ஆண்டிலே 1·32 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு 1983—84-ஆம் ஆண்டிலே மருந்துக்கு எவ்வளவு கொடுக்கப் போகிறோம் என்றால் 1·55 கோடி ரூபாய் அளவுக்குக் கொடுக்கப் போகிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. குலசேகரபாண்டியன் அவர்கள் ஒரு எக்ஸ்ரே பிரிவினை கால்நடை மருத்துவமனைகளில் அமைத்தால் கால்நடைகளின் நோய்களைக் கண்டறிய உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் 3.3 இலட்சம் ரூபாய் செலவில் மதுரையில் உள்ள தல்லாகுளத்தில் உள்ள கால்நடை மருத்துவமனையில் எக்ஸ்ரே கதிரியக்கப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் 900 கால்நடைகள் பயன் அடைகின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

அடுத்து, கால்நடை நோய்ப் புலனாய்வு நிலையம் அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 8 புலனாய்வு நிலையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. சாதாரணமாக தொண்டை அடைப்பான் போன்ற நோய்கள் ஒரு பகுதியிலே உள்ள கால்நடைகளுக்கு ஏற்படுகின்றது என்றால் அது மற்ற பகுதிகளுக்குப் பரவாமல் இருப்பதற்காக தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. மேலும் அது குறித்து செய்தித்தாள்கள் மூலமும், வானொலி மூலமும் விளம்பரம் செய்து விவசாயிகள் பயன் அடைகின்ற வகையில் இந்த கால்நடை நோய் புலனாய்வு நிலையங்கள் சிறந்த முறையில் செயல்படுகின்றன. 1983—84 ஆம் ஆண்டில் 9.64 இலட்சம் ரூபாய் செலவில் 3 கால்நடை நோய் புலனாய்வு நிலையங்கள் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றை எல்லாம் தீவிரப்படுத்தவேண்டும், அதிகரிக்கவேண்டும் என்பதை பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதற்காக இந்த ஆடு வளர்ப்புத் திட்டத்திற்கு சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை வகுத்து அதன் மூலமாக ஆடு உற்பத்தித் திட்டம், கன்று உற்பத்தித் திட்டம், கோழி உற்பத்தித் திட்டம், பன்றி உற்பத்தித் திட்டம் போன்று 4 உற்பத்தித் திட்டங்களை இன்றைக்கு இந்த அரசு செயலாற்றி வருகிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

இந்த ஆடு உற்பத்தித் திட்டத்தின் மூலமாக சென்ற ஆண்டு 1982—83-ல் 15,683 நபர்கள் பயடைந்து இருக்கிறார்கள். இந்த ஆண்டு 1983—84-ல் 1,500 நபர்கள் ஆடு உற்பத்தித் திட்டத்தின் மூலமாக ஷிப் சொசைட்டி அமைப்பதற்கு ஏற் பாடுகளை இந்த அரசு கையாண்டு வருகிறது. அதன் மூலமாக ஒரு நபருக்கு 20 பெட்டை ஆடும், ஒரு கிடா ஆடும் என்ற விதத்தில் 1,500 நபர்களுக்கு ஆடு வளர்ப்பு உற்பத்தித் திட்டத் தின் மூலமாக ஆடுகள் வழங்கப்படும்.

கன்று வளர்ப்புத் திட்டத்தின் மூலம் சென்ற ஆண்டு 1982—83-ல் 28,795 நபர்களுக்கு கன்றுகள் கொடுக்கப்பட்டி ருக்கின்றன. இந்த ஆண்டு 5,000 நபர்களுக்கு கன்று வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக கன்றுகள் வழங்கப்படும் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கோழி உற்பத்தித் திட்டத்தின் மூலமாக இந்த சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டம் தற்போது புதிய பண்ணைகளை ஆரம்பிப்பதை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக சென்ற ஆண்டு 3,618 நபர்கள் பயனடைந்து இருக்கிறார்கள். பன்றி வளர்ப்புத் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். வெள்ளைப் பன்றியை கொடுத்து அந்தத் திட்டத்தை ஊக்குவிக்கவேண்டும். அதிகரிக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதன் மூலமாக சென்ற ஆண்டு 50 நபர்களுக்கு பன்றிகள் கொடுக்கப்பட்டன. இந்த ஆண்டும் 50 நபர்களுக்கு பன்றி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் பன்றிகள் கொடுக்கப்படும். ஒரு நபருக்கு 3 பன்றிகள் வீதம் 50 நபர்களுக்கு கொடுக்கப்படும் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொரு மிக சிறப்பு என்னவென்றால் இந்த ஆடு வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக சென்ற ஆண்டு பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. உதவியற்றோர், விதவைகள், தாழ்த்தப்பட்டோர் போன்றவர்கள் சென்ற ஆண்டு இதனால் பயன்பெற்று இருக்கிறார்கள். பெண்கள் எவ்வளவு பேர் என் றால் 226 பேர். தாழ்த்தப்பட்டவர்கள் 377 பேர்கள். அந்த அளவுக்கு கால்நடை பராமரிப்புத்துறை எல்லாம் அந்த ஷிப் சொசைட்டி ஆடு வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் [illegible] க்கிறேன்.





அடுத்து, இந்த ஆடு வளர்ப்புத் திட்டத்தைப் பற்றி நாம் குறிப்பிட வேண்டும் என்றால் இன்றைக்கு தமிழகத்தில் 784 ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் இயங்கிக்கொண்டு வருகின்றன. உலக வங்கியைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் நம் தமிழகத்தில் இருக்கின்ற ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்களைப் பார்த்து விட்டு இந்த சங்கங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன என்று நமக்கு பாராட்டுகளை கொடுத்து இருக்கிறார்கள். ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் சிறப்பான முறையில் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்று நமக்கு மத்திய அரசும் பாராட்டை, கொடுத்து இருக்கின்றன. உலகவங்கியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் வந்து பார்த்துவிட்டு நமக்கு பாராட்டுக்களை கொடுத்து இருக்கிறார்கள்.

அதோடு மட்டும் அல்லாமல் இன்றைக்கு இந்த ஆடு வளர்ப் போர் கூட்டுறவு சங்கங்களை நாம் பார்க்கின்றபோது அந்த விவசாயிகளை ஆய்வு செய்கின்றபோது மத்திய அரசால் வெளி யிடப்படுகின்ற குருசேத்திரா என்ற பத்திரிக்கை மூலமாக 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் தேதி பத்திரிகையில் மிகவும் சிறப்பாக இந்த ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன என்று நமக்கு பாராட்டை தெரிவித்து இருக்கிறார்கள்.

அதோடு மட்டும் அல்லாமல் மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் நம்முடைய தமிழகத்தில் உள்ள ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களைப் பார்த்துவிட்டு இந்த மாதிரியான கூட்டுறவு சங்கங்களை நம் மாநிலத்திலும் செயல்படுத்தலாம் என்று கூட அவர்கள் எல்லாம் கருத்துக்கள் தெரிவித்து அதன் மூலமாக இந்த திட்டத்தை அவர்கள் கூட செயல்படுத்தக்கூடிய ஒரு உத்தேசம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் ஆடு வளர்ச்சிக்கான வாய்ப்பினைக் கருத்தில் கொண்டு செங்கற்பட்டு, வடாற்காடு, தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் பிரித்தியேகமாக ஒரு ஆடு வளர்ப்புத் திட்டம் விரைவான முறையில் தயாரிக்க 15.9 கோடி ரூபாய் உலக வங்கியின் நிதியுடன் செயல்படுத்த மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. 15 கோடி ரூபாய் உலக வங்கி நிதியுடன் மத்திய அரசுக்கு ஒரு அறிக்கையை கொடுத்து இருக்கிறோம்.

(பிற்பகல் 1–40)

தமிழகத்தில் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தர்மபுரி, சேலம் போன்ற மாவட்டங்களில் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்களை அமைக்கவேண்டுமென்று நாங்கள் ஒரு அறிக்கையை கொடுத் திருக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் ஆணையை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கம் நல்ல ஆணையைக் கொடுத்தால் ஆரம்பிக்கவேண்டுமென்ற

ஆணையைக் கொடுத்தால் நாம் கண்டிப்பாக உலக வங்கியிட மிருந்து 15 கோடி ரூபாயைப் பெற்று ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள இத்தனை மாவட்டங்களிலே சிறப்பாக செயல் படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு வங்கிகள் கடன் கொடுப்பது பற்றியும் சில வங்கிகள் மூலமாக கடன் கொடுக்க மறுக்கிறார்கள் என்பதைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். பழங் குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக கறவை மாடுகள், ஆடு வளர்ப்பு, கோழிவளர்ப்பு, பன்றிவளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு போன்றவையெல்லாம் இந்தத் திட்ட்டத்தின் வாயிலாக நாம் கொண்டுவந்து இன்றைக்கு 1983–84 ஆம் ஆண்டில், இந்த வருடம், 1,500 நபர்களுக்கு 33.30 இலட்சம் என்ற அளவுக்கு, இன்றைக்கு நாம் செயல்படுத்த இருக்கிறோம். வங்கி களிலே கடன் கொடுக்க மறுக்கிறார்கள் என்று குறிப்பிட்டார் கள். தமிழகத்திலே சேலம், வட ஆற்காடு, தர்மபுரி, தென் ஆற்காடு, திருச்சி போன்ற மாவட்டங்களிலே உள்ள 9 மலைப்பகுதிகள் இருக்கின்றன. அதிலே 8 மலைப்பகுதிகளிலே 50 சதவீதம் 50 சதவீதம் என்ற விகிதத்தில் வங்கிகள் 2 ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தால் 2 ஆயிரம் ரூபாய் அரசு மானியம் கொடுக்கவேண்டும். நாலாயிரம் ரூபாய் ஒருவருக்கு கோழி வளர்க்கவேண்டுமென்று உதவி செய்தால் 2 ஆயிரம் வங்கி கடன் கொடுத்தால் அரசு சரிசமமாக 2 ஆயிரம் ரூபாய் மானியமாகக் கொடுக்கவேண்டுமென்று அந்தத் திட்டத்தை அரசு கையாண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வராயன் மலையில் 75 சதவீதம் அரசு மானியமாக அவர்களுக்குக் கொடுத்து 25 சதவீதம் வங்கிகளின் மூலமாகக் கடன் கொடுக்க வேண்டுமென்ற முறையில்—காரணம் கல்வராயன் மலைப் பகுதி மிகவும் பிற்போக்கான பகுதியாக இருப்பதால்—அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு 75 சதவீதம் அரசு மானியமும் 25 சதவீதம் வங்கிகள் மூலமாகக் கடனும் கொடுக்கப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆடுகளின் இறைச்சி உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்றும் ஆரோக்கியமான நிலையில் பாதுகாத்தால் இறைச்சி உற்பத்தி அதிகரிக்கும் என்பதைப்பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் இன்றைக்கு நாம் ஒரு திட்டம் வகுத்திருக்கிறோம். ஆடுகள் தீவிர ஆரோக்கிய பாது காப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை வகுத்து ஆடுகளுக்கு எல்லாம் குடல் புழுக்கள் ஏற்பட்டால், இறைச்சி குறைந்து விடும், பளு குறைந்துவிடும் குடல் புழுக்களை நீக்கிவிட்டால் இறைச்சி அதிகரிக்கும் வேண்டிய அளவுக்கு இறைச்சி கிடைக்கும் என்ற அளவுக்கு 1984-ஆம் ஆண்டில் ஆடு களுக்கான இறைச்சி உற்பத்தித் திட்டம் தர்மபுரி மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் 17.4 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட இருக்கிறது. அதன் மூலமாக



சுமார் 12 இலட்சம் ஆடுகள் பயன் அடைய உள்ளன. செங்கற் பட்டு, தர்மபுரி மாவட்டங்களில் 6.42 இலட்சம் ஆடுகள் பயன்படும் என்ற வகையில் 1983–84-ஆம் ஆண்டு செயல் படுத்தப்பட உள்ளது. இன்றைக்கு ஒரு ஆட்டுக்கு ஒரு கிலோ இறைச்சி கூடுதலாக ஆகிறது என்று வைத்துக்கொள்வோம், ஒரு ஆடுக்கு ஒரு கிலோ வீதம் 4.62 இலட்சம் கிலோ இறைச்சி உற்பத்தி செய்யப்படும். அதன் மூலமாக 128.40 இலட்சம் கூடுதலாக வருமானம் அரசுக்குக் கிடைக்கும் என்பதை மாமன் றத்தின் மூலமாக உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

நவீன இறைச்சிக் கூடம் பற்றிக் குறிப்பிட்டார்கள். கோடுவள்ளியில் நவீன இறைச்சிக் கூடம் ஆரம்பிக்கப்பட இருக் கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசாமி அவர்கள் கூட அந்த இடத்தை மாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டு இருக் கிறார்கள். அதைச் சுற்றி வாழ்கிற மக்களுக்கு மிகவும் இடை யூறாக இருக்கும், சுகாதாரமற்ற முறையில் காணப்படும். ஆகவே அதை மாற்றியமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டர்கள். அந்த இடம் தான் சிறந்த இடம், முதலிலே மாதவரத்திலே இடம் பார்த்தோம். அந்த இடம் நமக்கு வசதியான முறையில் அமையவில்லை. பிறகு கொடுவல்லியை தேர்ந்தெடுத்தோம். அந்தஇடத்திலே 82 ஏக்கர் நிலம் கிடைத்துள்ளது. பெரம்பூரில் 11 ஏக்கர் தான் இருக்கிறது. அங்கே சந்தை வைக்கவேண்டும்; மாடுகள் தங்குவதற்கு இடம் வேண்டும் ; தீவனம் வைப்பதற்கு இடம் வேண்டும்; தண்ணீர் வசதி வேண்டும்; கழிவு நீர் வெளி யேற்றப்படவேண்டும். இப்படியெல்லாம் நாம் பார்க்கிறபோது பெரம்பூரில் இடம் போதுமானதாக, வசதியானதாக இல்லை. அந்த வகையில் தான் நவீன இறைச்சிக் கூடத்தை இங்கே ஆரம்பித்திருக்கிறோம். உறுப்பினர்கள் சொல்கிறபோது இதற்கு ஜைன சமயத்தைச் சார்ந்தவர்கள் எதிர்ப்பு தெரிவித் திருப்பதாகச் சொன்னார்கள். நாம் எல்லா சமயத்தினரையும் ஒட்டுமொத்தமாகத் தான் பார்க்கவேண்டும். சைவம் சாப்பிடு கிறவர்கள் காய், கனிகளை சாப்பிடுகிறார்கள். மாமிசம் சாப் பிட நினைக்கிறவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். ஒவ்வொரு வருக்கும் இதில் அவர்களுடைய விருப்பம், இலட்சியம், கொள்கை என்று இருக்கிறது. இறைச்சி உண்ணக்கூடாது என்று சொல் வதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அவரவர்களுக்கு என்ன விருப்பமோ அதைத்தான் உண்பார்கள். அதை நாம் தடை செய்ய முடியாது. பெரும்பான்மையான மக்கள் எப்படி செயல் படுகிறார்களோ அதைப் பார்த்து தான் நாம் திட்டத்தைச் செயல்படுத்த முடியும்.

அடுத்து, இன்றைக்கு ஒரு கோரிக்கை மனுவை கொடுத்திருக் கிறார்கள். பெரம்பூரில் பணியாற்றுகின்ற பணியாட்களுக்கு வேலை போய் விடுமா என்று கேட்டிருக்கிறார்கள். பெரம் பூரில் வேலை பார்க்கிறவர்களுக்கு கொடுவல்லியில் வேலை கொடுக்கப்படும். அவர்களது வேலை நிரந்தரமாக்கப்படும்.

அடுத்து, அவர்கள் சொல்கிறபோது அதிக ஆடு, மாடுகளை வெட்டுவார்களே என்று கூட சொல்லியிருக்கிறார்கள். உயிர் வதை செய்யக் கூடாது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை பார்த்தால் இப்போது என்னென்னமோ செய்து கொண்டிருக்கிறார்கள். மனிதர்களை கூட வதை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி பார்த்தால் நாம் தாவரத்தை கூட சாப்பிட முடியாது. எல்லாவற்றிற்கும் உயிர் இருக்கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால் உயிர் வதை செய்யக்கூடாது என்றால் நாம் சாப்பிடவே முடியாது. நெல்லைக்கூட அரிசியாக மாற்றி சாப்பிட முடியாது. ஏனென்றால் நெல்லிற்கும் உயிர் இருக்கிறது. அந்த அளவிற்கு உயிர் வதை என்று பார்த்தால் நாம் எதையும் உட்கொள்ள முடியாது.

இன்றைக்கு பெரம்பூரில் 2,500-லிருந்து 3,000 ஆடுகள் வெட்டப்படுவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே அளவு ஆடுகள் தான் கொடுவல்லியிலும் வெட்டப்படும். 200 மாடுகள் பெரம்பூரில் வெட்டப்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே அளவு மாடுகள் தான் கொடுவல்லியிலும் வெட்டப்படும். 40 பன்றிகள் பெரம்பூரில் வெட்டப்படுவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே அளவு பன்றிகள் தான் கொடுவல்லியிலும் வெட்டப்படும்.

வல்லுநர்கள் எல்லாம் ஆராய்ந்து ரூபாய் ஒரு கோடி அளவில் அங்கே கட்டிடம் கட்டுகிற அளவிற்கு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. மாடுகள் தங்குமிடம், ஆடுகள் தங்குமிடம், ஆடுகள் சந்தை நடத்துமிடம், மாடுகள் சந்தை நடத்துமிடம், சிறிய விடுதி, தீவிர சேமிப்பு கிடங்கு, பரிசோதனை கூடம், நீர் வழங்கும் தொட்டிகள், கழிவு நீர் செல்லும் குழாய் கேணிகள், மின்னொளி இப்படிப்பட்ட வேலைகள் ஒரு கோடி ரூபாய் அளவில் திட்டமிடப்பட்டு நடைபெற்று வருகின்றன என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இறைச்சிக் கூடத்தைப் பற்றியும், உயிர் வதை செய்யக்கூடாது என்பதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அது அவரவர்களின் விருப்பம் என்பதை மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். அரசு என்ன முடிவு எடுக்கிறதோ அதைத் தான் செயல்படுத்த முடியும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இராணிப்பேட்டையில் பணி புரியும் மருத்துவர்களுக்கு சிறப்பு ஊதியம், 'நான்-பிராக்டீசிங் அலவனஸ்' கொடுக்க வேண்டுமென்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

(பிற்பகல் 1–50)

அதே போல, கிடேரி உற்பத்தி பற்றியும் குறிப்பிட்டார்கள். புதுக்கோட்டையிலும் உதகமண்டலத்திலும் அந்தத் திட்டம் செயல்படுகின்றது. அது எந்த முறையில் இருக்கும் என்பதைப் பற்றி யெல்லாம் கேட்டிருக்கிறார்கள். உதக மண்டலத்தில் 100 கிடேரிகள் பெறப்பட்டு, வாங்கப்பட்டு, இன்றைக்கு 23 கிடேரிகள் கன்று ஈன்றக்கூடிய அளவுக்குச் செயல்படுத்தி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாகப்





பயன்பெறுவதற்கு விற்கப்படும் என்பதைக் குறிப்பிட்டு அதே போல புதுக்கோட்டையில் 255 கிடேரிக் கன்றுகள் வாங்கப்பட்டு 50 கிடேரிக் கன்றுகள் ஈன்றுள்ளன. மேலும் 38 கிடேரிகள் கருவுற்று கன்று ஈன்றக்கூடிய நிலையில் உள்ளன. இது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் பயன்பெறுவோருக்கு விற்கப்படும் என்பதையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

வறட்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். வறட்சியைப் பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது, இன்றைக்கு நமது தமிழகத்தில் 1.51 கோடி மாடுகளும், 95 இலட்சம் ஆடுகளும் இருக்கின்றன. அந்த ஆடுகளையும் மாடுகளையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. வறட்சி வேறு கடுமையாக இருக்கிறது. நோய்கள் அதிமாகும். அந்த நோய்களையும் தடுக்க வேண்டும்; அதற்கு மருந்து கொடுக்க வேண்டுமென்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளார்கள். அதற்காகத்தான் ரூ. 3.11 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசுக்கு ஒரு பிரேரணையை தமிழக அரசு வறட்சியை முன்னிட்டு அனுப்பியிருக்கிறது. தானியமும் வைக்கோல் விநியோகமும் என்பதற்காக ரூ. 96.46 இலட்சமும், தடுப்பு மருந்துகள் வாங்குவதற்காக ரூ. 49.65 இலட்சமும், சிகிச்சை மருந்துகள் வாங்குவதற்காக ரூ. 154 இலட்சமும், மொத்தம் ரூ. 300.11 இலட்சம் செலவில் மத்திய அரசுக்கு ஒரு பிரேரணையை அனுப்பியிருக்கிறோம். இப்பொழுது கடும் வறட்சி வந்து கொண்டேயிருக்கிறது. அந்தக் கடுமையான வறட்சியை முன்னிட்டு, நாங்கள் மறுபடியும் ஒரு அறிக்கையை அனுப்ப இருக்கிறோம். வைக்கோல் வாங்கி விநியோகிப்பதற்காக ரூ. 415 இலட்சம்; அதாவது போக்குவரத்துச் செலவு வாங்கிக் கொண்டு வருகின்றோம் அல்லவா, அந்தப் போக்குவரத்துச் செலவு போன்ற மற்றவற்றையும் கூட்டினால் மொத்தம் ரூ. 1,543 இலட்சம், இந்த வைக்கோல் வாங்குவதற்கும் விநியோகிப்பதற்கும் செலவாகும் என்று நாம் எண்ணுகின்றோம். இன்றைக்கு மருந்து வாங்குவதற்காக ரூ. 49.65 இலட்சம், சிகிச்சை மருந்துகள் வாங்குவதற்காக ரூ. 154 இலட்சம், ஆக மொத்தம், ரூ. 17 கோடியே 45 இலட்சத்து 65 ஆயிரம் இன்றைக்கு வறட்சிக்காக, கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு ஒதுக்கவேண்டுமென்ற அடிப்படையில் நாம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். அதையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு 1,100 டன் வைக்கோல் வாங்குவதற்கான ஒரு பிரேரணை அரசின் ஆய்விலுள்ளது. ரூ. 20.1 இலட்சம் செலவில் 1,100 டன் வைக்கோல் வாங்குவதற்கு பிரேரணை பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

7.5 இலட்சம் டோஸ் கோமாரி நோய் தடுப்பு மருந்து வாங்குவதற்காகவும், அவற்றைப் பாதுகாக்க 75 குளிர் சாதனப் பெட்டிகள் ரூ. 49.65 இலட்சம் செலவில் வாங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் முறையாக ரூ. 16 இலட்சம் செலவில்

2 இலட்சம் டோஸ் கோமாரி நோய் தடுப்பு மருந்துகள் வாங்கப்படும். ரூ. 155 இலட்சம் செலவில் தீவிர சிகிச்சைக்கான மருந்துகள் வாங்குவதற்கான பிரேரணை அனுப்பப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சேதுராமன் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். ஏதோ மாடுகள், கால்நடைகள், தீவனம் வாங்கப் போகின்றோம், இதோ செய்கின்றோம், அதோ செய்கின்றோம் என்று தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகள் கவனக் குறைவா ? அல்லது நிர்வாகக் கவனக் குறைவா என்றெல்லாம் அவர்கள் கேட்டார்கள். ஒன்றும் நடைபெறவில்லை யென்றார்கள். அப்படி அல்ல. வேலை நடந்து கொண்டிருக்கிறது. கால்நடைப் பராமரிப்புத்துறை இயக்குநர் அவர்கள் இந்த வறட்சியை முன்னிட்டு ஆந்திராவுக்குச் சென்று அங்குள்ள அலுவலர்களைச் சந்தித்து, தமிழகத்திலிருக்கிற வறட்சிக்கு வைக்கோல் வாங்குவதைப் பற்றியெல்லாம் பேசியிருக்கிறார்கள். அவர்களும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஓரளவுக்கு நிர்வாக முன்னேற்பாடுகள் எல்லாம் முடிந்துவிட்டன. வறட்சிக்கான நிதி கிடைத்த உடனே, தீவனத்தையும் மருந்துகளையும் வாங்க உடனே ஏற்பாடு செய்ய முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆந்திராவிலிருந்து வைக்கோல் வாங்கும்போது, லாரியில் கொண்டு வர வேண்டாம், ரெயிலிலே அந்த வைக்கோலைக் கொண்டு வரலாமா என்று கூட யோசித்து, ரெயில்வே அலுவலர்கள் கூட, இயக்குநர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாநிலத்திலேயிருந்து வைக்கோல் வெளி மாநிலங்களுக்குப் போகிறது, அதைத் தடை செய்ய முடியுமா என்பதைப் பற்றியெல்லாம் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிப்பிட்டார்கள். அதைத் தடை செய்வதற்கு ஒரு பிரேரணை கூட அரசின் ஆய்வில் இருந்து கொண்டு வருகிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வெளி மாநிலங்களுக்கு, கேரளாவுக்குக்கூட கால்நடைகளைக் கடத்திச் செல்வதாகவும், அதையும் தடை செய்ய வேண்டுமென்பதைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காகக் கூட, நான் சென்ற ஆண்டு இந்த மாமன்றத்தில் பசு வதைத் தடைச் சட்டம் என்றவொரு சட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறேன். அந்தச் சட்டத்தில்கூட இது வருகிறது. கால்நடைகள் கேரளாவிற்குச் செல்வதைச் தடை செய்ய வேண்டுமென்று கூட வந்திருக்கிறது. இந்தச் சட்டம் பொறுக்குக் குழுவில் இருந்து கொண்டிருக்கிறது. பொறுக்குக் குழுவிலுள்ள உறுப்பினர்கள் என்ன சொல்கிறார்களோ அந்த அடிப்படையிலே இந்தச் சட்டமன்றத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வரும் சூழ்நிலை ஏற்படலாம். அந்த அளவிற்கு இன்றைக்கிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.



சாதாரணமாக இராமநாதபுரம் மாவட்டமும், தர்மபுரி மாவட்டமும் எப்பொழுதுமே வறட்சியாகத்தான் இருக்கும். அந்த அடிப்படையில் வறட்சிக்காகவே சில திட்டங்கள் அந்த மாவட்டங்களுக்கு வகுக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 4 கால்நடை மருந்தகங்களுக்குக் கட்டிடம் கட்டுவதற்காக 6 இலட்சம் ரூபாய் ஒடுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது ; 8 குளிர் சாதனப் பெட்டிகள் வாங்குவதற்காக 68,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்வதற்காக 1.8 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். இயங்கும் கால்நடை மருந்தகங்கள் அமைப்பதற்காக 2.24 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். மொத்தம் 10.77 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

தர்மபுரி மாவட்டத்தில் 6 கால் நடை மருந்தகங்களுக்குக் கட்டிடம் கட்டுவதற்காக 15.30 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். விளம்பரப் பொருள்கள் மற்றும் உறைவிந்து சாதனங்கள் வைப்பதற்காகக் கட்டிடம் கட்டுவதற்கு 3 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். உறைவிந்து குழல்கள் வாங்குவதற்காக 2.5 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். அயல் இனக் கன்றுகள் வாங்குவதற்காக வசதிகள் செய்து கொடுத்தலுக்காக 85,000 ரூபாய். ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களைப் பார்வையிட தனிப் பார்வையாளர்கள் அமைத்தலுக்காக 2.4 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். 4 கால்நடை மருந்தகங்களைத் தொடர்ந்து நிர்வகிப்பதற்கு 5.40 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். மொத்தம் 29.45 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தையும் இங்கே இன்றைக்குக் குறிப்பிட்டார்கள். இந்தக் கால்நடை ஆய்வாளர்கள் பதவிகளெல்லாம் காலியாக இருக்கின்றன ; அவற்றையெல்லாம் நிரப்ப வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மொத்தம் தடுப்பு ஊசியாளர்கள் நமது தமிழகத்திலே எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்றால், 304 பேர்கள். அதில் 100 தடுப்பு ஊசியாளர்களுக்கு நாம் பயிற்சி கொடுத்து, கால்நடை ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு கொடுத்து கால்நடை ஆய்வாளர்கள் காலியிடங்களை நிரப்பி விட்டோம். அந்த 100 தடுப்பு ஊசியாளர்கள் பதவி காலியாக இருக்கின்றன. அதைக் கூட நாம், தடுப்பு ஊசியாளர்களை வேலைக்கு எடுத்து அந்தக் காலியான யிடங்களில் நிரப்ப வேண்டுமென்பதற்காக இந்தக் கருத்து அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அது மிக விரைவில் செயல்படுத்தப்படும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, கோழி அபிவிருத்தியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தத் தீவனத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். அதற்காகத்தான் நாம் இன்றைக்கு ஒரு திட்டத்தைப் போட்டிருக்கிறோம். தீவன விற்பனை விலையை மாற்றி, தீவனம் மார்க்

கெட்டில் எவ்வளவு விலைக்கு விற்கிறதோ அதே அளவுக்கு நமது தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்திலும் தீவன விலையைச் சமமாக நிர்ணயிக்க வேண்டுமென்று நியதியை இன்றைக்குக் கையாண்டு வருகிறோம். இந்தத் தீவன விற்பனையைக் கூட ஏஜன்சி மூலமாக விற்கலாமா என்று நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அதைக் கூட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் செங்கற்பட்டு, வட ஆற்காடு மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செயல் முறை எடுத்துக் கொள்ளப்படும் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

குஞ்சு பொறிப்பகம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அரசூர், கப்பலூர் போன்ற இடங்களில் குஞ்சு பொறிப்பகத்தை அதிகரிக்க வேண்டுமென்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கே ஒரு மூன்றாவது முட்டையிடும் கோழிக் கொட்டகை கட்டாமல் இருக்கிறது. அந்தக் கொட்டகையைக் கட்டியதற்குப் பிறகு 11 இலட்சம் குஞ்சுகள் உற்பத்தியாகும் என்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு டாப்கோவில் விற்பனை பிரிவு சாதனங்களில் குறைவாக இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். அதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். முட்டைகளும், கோழிகளும் அதிக அளவில் வாங்க வேண்டும் ; வாங்குவதற்காக என்னென்ன நடவடிக்கைகளைச் செய்யவேண்டுமென்றால் விற்பனை அதிகரிக்க நாம் சில்லறைவிற்பனை நிலையங்களை அதிகரிக்க வேண்டும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக நாம் முட்டைகள் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற அடிப்பை யில் இந்தத் திட்டத்தை கையாண்டு வருகின்றோம்.

(பிற்பகல் 2.00.)

இன்னொரு கருத்தைக் கூட இங்கே குறிப்பிட்டார்கள். இந்த கோழி முட்டைகளும், தீவனங்களும் மிகவும் குறைவாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதற்காத்தான் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்தில் ஒரு திட்டம் கொடுத்தார்கள். அந்தத் திட்டம், செங்கற்பட்டு, வடாற்காடு, மதுரை சேலம் போன்ற மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டன. ஒரு நபருக்கு 100 கோழி வீதம், 6,000 கோழிப்பண்ணைகளை வைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். சிறப்புக் கால் நடைத் திட்டத்தின் மூலமாக 3,618 கோழிப்பண்ணைகளை நிறுவி இருந்தோம். அதற்கு ஒவ்வொருவருக்கும் மானியம் வகுத்துக் கொடுத்திருக்கிறோம். 509 சிறு விவசாயிகள், 2,062 குறு விவசாயிகளும், 965 விவசாயத் தொழிலாளர்களும் பயன் அடைந்திருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு மானியத்தைப் பார்க்கின்றபோது 25 சதவீதம் சிறு விவசாயிகளுக்கு மானியமாகவும் குறுநில விவசாயிகளுக்கு 33⅓ சதவிகித மானியமாகவும் கொடுத்து



துக்கொண்டு வருகின்றோம். இந்த தீவனத்தினுடைய மானியத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வில்லை. இந்த மானியத்தினுடைய தொகையை மத்திய அரசு எற்றுக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் ஒரு கருத்து தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் அடிப்படையிலே வங்கிகளும் மயற்றுக் கோழி கொடுப்பது கூட நிறுத்தி விட்டார்கள். அதன் அடிப்படையிலே அந்தத் திட்டம் ஓரளவிற்கு நிறுத்தப்பட்டதால் தான் கோழி முட்டைகளும், தீவனங்களும் 'டாப்போ' மூலமாக நல்லமுறையில் செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை செயல்படுத்த முடியவில்லை. அதற்காகத் தான் நான் இன்றைக்குக் குறிப்பிட்டேன். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் அந்தத் திட்டங்கள் மிகவும் விரைவாகச் செயல்படுத்தப்படும் என்று குறிப்பிட்டேன். தென்னாற்காடு, வடாற்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களில் இந்த ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலமாக கோழிப்பண்ணைகள் அமைக்கப்படும், 350 கோழிப் பண்ணைகள் அமைக்கபபடும். ஒவ்வொரு கோழிப்பண்ணையிலும் 200 கோழிகள் இருக்கும். இந்த 350 கோழிப் பண்ணைகளிலும், ஒரு நாளைக்கு 42,000 முட்டைகள் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த அளவிற்கு முதலீடு எவ்வளவு போட வேண்டும் என்றால் ரூ. 10,000/– 200 கோழிகள் வைப்பதற்காக அந்த ஒரு பண்ணைக்கு ரூ. 10,000 முதலீடு போட வேண்டும். (குறுக்கீடு).

திரு. இரா. கருப்பையா : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இன்னும் கால்நடை வளத்தையே முடிக்கவில்லை. அடுத்து சமூகநலத்துறை கோரிக்கை இருக்கிறது. ஆகவே எப்போது முடிப்பது என்பது சம்பந்தமாக உங்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது முடித்து விடுவோம்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அந்த அடிப்படையில் இன்றைக்கு இந்த கால்நடைப் பராமரிப்புத் துறை மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உடுப்பினர் அவர்கள் மருந்தகங்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதற்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அதை அரசு செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இங்கே சமூகநலத்துறையைப் பற்றி தெரிவித்தார்கள். சமூகநலத்துறையைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு 59 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, பெண்கள் நலத்திற்காகவும், குழந்தைகள் நலத்திற்காகவும். ஊனமுற்றோர், முதியோர் நலத்திற்காகவும், சிறப்பு கவனம்செலுத்தி வருகின்றார்கள் என்றும், இந்த அரசும் செலுத்தி வருகிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

சமூகநலத்துறையைப் பொறுத்த வரையில், 25 உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். 14 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். பல கருத்துக்களைப் பேசியிருக்கிறார்கள். முதியோர் உதவித்தொகையை அதிகரிக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்து முதியோர் உதவித் தொகை என்று பார்க்கும்போது, இப்போது மத்திய அரசாங்கம் ஒரு ஆணையை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது ஒவ்வொரு மாநிலத்திலேயும், ஒரு சதவீதம், ஒரு சதவீதம் என்றால் 42 ஆயிரம் முதியோருக்கு உதவித் தொகை கொடுக்கவேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு, நம் தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும், எவ்வளவு பேர்களுக்கு முதியோர் உதவித் தொகை கொடுத்திருக்கிறோம் என்றால், 1,99,158 பேர்களுக்கு உதவித் தொகை கொடுத்திருக்கிறோம். அதோடு மட்டுமல்லாமல், உதவித் தொகை 60 ரூபாயாக இருக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கம் நிர்ணயம் செய்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு தமிழக அரசின் சார்பாக நாம் ஒரு நபருக்கு கொடுத்துக் கொண்டிருக்கின்ற தொகை எவ்வளவு என்றால் 71 ரூபாயாகும். மாதம் ஒன்றுக்கு 35 ரூபாய் உதவித் தொகை கிடைக்கிறது. அவர்களுக்கு அரை கிலோ அரிசி கிடைக்கிறது. வருடத்திற்கு 2 முறை வேஷ்டி, சேலைகள் கொடுக்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு எல்லாம் மதியஉணவும் கொடுக்கப்படுகிறது. இதையெல்லாம் ஒரு மாதத்திற்கு என்று நாம் கணக்கிட்டுப் பார்க்கின்றபோது ஒரு நபருக்கு 71 ரூபாய் செலவிடப்படுகிறது. இன்றைக்கு நாம் இந்த மத்திய அரசாங்கம் தந்துள்ள குறிப்புப்படி தொகைகளை வைத்துப் பார்க்கின்றபோது, இந்த ஒரு சதவீதம் என்ற அடிப்படையிலே பார்க்கும்போது 42 ஆயிரம் முதியோர்களுக்கு உதவித் தொகை கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலே பார்த்தால்கூட, 3.43 கோடி. ரூபாய்த்தான் செலவு செய்யவேண்டும் என்று நமக்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நாம் எவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம் என்று பார்த்தால், 17.13 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். அவர்களுக்கு ஒரு வருடத்திற்கு எவ்வளவு கிடைக்கிறது, ஒரு நபருக்கு எவ்வளவு ரூபாய் பயன் கிடைக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, ரொக்கமாக உதவித் தொகை 35 ரூபாய் என்று பார்க்கிறபோது, 420 ரூபாய் ஒரு நபருக்கு ஒரு ஆண்டுக்குக் கிடைக்கிறது. அரிசி வகையிலே 53 ரூபாய் கிடைக்கிறது. வேஷ்டி சேலை வகையிலே 60 ரூபாய். மதிய உணவு வகையிலே 328 ரூபாய். மொத்தம் 860 ரூபாய். ஒரு நபருக்கு ஆண்டு ஒன்றுக்கு அவர்களுக்கு பணம் கிடைக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மற்ற மாநிலங்களைவிட நம்முடைய தமிழகம்தான் முதியோர் உதவித் தொகை கொடுப்பதில் மிகவும் சிறப்பான முறையிலே அதிகமாக பணம் கொடுத்து, அது எல்லோருக்கும் கிடைக்கவேண்டுமென்ற வகையிலே சிறப்பாக செயல்பட்டு வருகிறது



என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எல்லோருக்கும் இந்த உதவித் தொகை கிடைக்கவேண்டும் என்று கூட இங்கே குறிப்பிட்டார்கள். எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்றால் நிதிநிலைமையை பார்க்கவேண்டும். நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே கேட்டிருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் எவ்வளவு பேர்கள் முதியோர்களாக இருக்கிறார்கள், அதையெல்லாம் பட்டியல் போட்டு எங்களுக்கு அரசுக்கு அனுப்பவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதைப் பார்த்து, நிதிநிலைமையைப் பார்த்து எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கலாம் என்று நாங்கள் பரிசீலனை செய்துகொண்டு இருக்கிறோம். அந்த அடிப்படையிலே தகுதி வாய்ந்தவர்களுக்கு கொடுக்கின்ற வகையிலே இந்த அரசு முழுமையாக பரிசீலித்து இதைப் பற்றி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, விதவைத் தாய்மார்கள் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். விதவை மகள் திருமணம் பற்றியும் குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையிலே விதவைகள் மகள் திருமணத்திற்காக ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து. 10 லட்சம் ரூபாய் சென்ற ஆண்டு ஒதுக்கீடு செய்தார்கள். இதற்கு முந்தைய ஆண்டும் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் என்று 10 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அவர்களை நல்ல முறையிலே கவனித்தார்கள். அதைப் போல இந்த ஆண்டும் விதவைகளுக்காக ஒரு நபருக்கு ஆயிரம் ரூபாய் வீதம் ஆயிரம் நபர்களுக்கு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, சத்துணவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். முதலமைச்சர் சத்துணவு திட்டத்தைப் பற்றி குறிப்பிடுகின்றபோது, அங்கே சிறப்பான முறையில் உணவு கொடுக்கவில்லை என்பதைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். கல்வி கொடுக்கவில்லை என்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் அடிப்படையிலே, 27,840 மையங்களின் மூலமாக 26 லட்சம் குழந்தைகள் பயன் அடைந்திருக்கிறார்கள். இதன் மூலமாக 76,346 பேர்கள் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் சத்துணவு மையங்கள் சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகின்றன. குழந்தைகளுக்கும் சத்துணவு கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் குறிப்பிட்டார்கள். முதியோர்களுக்கு அதிகமாக சத்துணவு கொடுப்பதற்காக அதிகமாக நிதி ஒதுக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இது போதுமானதுதான், 200 கிராம் அரிசி, 15 கிராம் பருப்பு, [illegible] கிராம் எண்ணெய், 50 கிராம் காய்கறி, எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து இணைக்கின்றபோது அதிகமான உணவு கிடைக்கும். அந்த அடிப்படையிலேதான் குழந்தைகளுக்கு

(திருமதி கோமதி சீனிவாசன்] (1993 ஏப்ரல் 6

இன்றைக்கு சத்துணவு கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஏ வைட்டமின் போன்ற உணவு கூட கொடுக்க வேண்டு மென்று குறிப்பிட்டார்கள். ஏ வைட்டமின்கூட குழந்தை களுக்கு கொடுக்க வேண்டுமென்ற முறையிலே இந்த சத்துணவுத் திட்டத்தில் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 2–10).

சத்துணவு மையத்தில் கொடுக்கப்படுகின்ற உணவை தாய்மார்கள் வீட்டிற்கு எடுத்துச்சென்று விடுகின்றனர் என்ற ஒரு குறை இங்கே சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட நிலைமை இல்லை. அந்த மையத்திலே உள்ள குழந்தைகளுக்கு போதுமான உணவை .கொடுத்துவிட்டுத்தான் அவர்கள் செல்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள்கேட்டு இருப்பது நல்ல கோரிக்கை யாகத்தான் இருக்கிறது. இதை மத்திய அரசுக்கும் நீங்கள் எடுத்துச் சொன்னால் வர்கள் மக்கு நிதி அதிகம் கொடுத்து, ஒதுக்கீடு செய்தால் இந்தத் திட்டத்தை மேலும் நல்ல முறையில் நாம் நிறைவேற்றமுடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

ஊனம் உற்றோருக்குச் செய்யவேண்டிய சிலவற்றைச் சொன்னார்கள். அவர்களுக்கு கல்வி வசதி அளிக்கவும்;, தொழிற் பயிற்சி அளிக்கவும் வேண்டும் என்று சொன்னார்கள். அவர்களுக்கு பல்வேறு திட்டங்களின் மூலமாக இந்த அரசு அந்த வசதிகளைச் செய்துகொண்டு தான் இருக்கிறது. அவர்களுக்கு நல்ல சலுகைகளைக் கொடுத்துக் கொண்டுதான் வருகிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

முட்டுக்காடு தொழில் பயிற்சி நிலையத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். அந்த நிலையத்தை தொழில் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் என்ற வகையில் மாற்றி, அங்கே இரண்டு ஆண்டுகள் தொழில் பயிற்சி பெற்றவர்கள் அங்கேயே நிரந்தர வேலை வாய்ப்பைப் பெறவேண்டும் என்று சொன்னார்கள். நாங்கள் அதை ஓரளவிற்கு ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறோம். அது தொழில் பயிற்சி நிலையமாக இருப்பதால் அங்கேயிருக் கின்றவர்கள் அந்தப் பயிற்சிகளைப்பெற்று, வேறு அரசு அல்லது மற்ற நிறுவனங்களில் வேலைக்கு அமர்ந்துவிடுகிறார்கள். இதுவரையில் 55 பேர் அந்த மாதிரி அரசு மற்றும் பிற நிறுவனங்களில் பணியில் சேர்ந்து இருக்கின்றனர். பாக்கி யிருக்கும் 26 பேர்களுக்கும் விரைவில் வேலையில் அமர்த்தப் படும் சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள் கிறேன்.



[திருமதி கோமதி சீனிவாசன்] [1983 ஏப்ரல் 9

70 குழந்தைகள் அல்லது 100 குழந்தைகள் இருக்கக்கூடிய இடங்களில் சத்துணவு மையங்கள் அமைக்கப்படுகின்றன. சில இடங்களில் அப்படி அமைக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில்தான், நாம் குறைந்தபட்சம் எவ்வளவு குழந்தைகள் ஒரு கிராமத்தில் வசிக்கிறார்கள் என்பதைக் கணக்கில் எடுத்து, அங்கே 70 குழந்தைகள் குறைந்த பட்சம் இருந்தால் மையங்கள் அமைத்துக்கொண்டு வருகிறோம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள் கிறேன்.

மறுவாழ்வு இல்லங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில் 10 மறுவாழ்வு இல்லங்கள் இருக்கின்றன. அங்கே கொடுக்கப்படக் கூடிய உணவு போதுமானதாக இல்லை என்று சொன்னார்கள். அந்த இல்லத்தில் உள்ளவர் களே சொல்கிறார்கள், அங்கே கொடுக்கப்படுகின்ற உணவு போதுமானதாக இருக்கிறது என்று. நான் அவர்களிடத்தில் கேட்ட தகவலைத்தான் இங்கே தருகிறேன். இந்த மறு வாழ்வு இல்லங்களில் தொழில் பயிற்சிகூட கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். அவர்களுக்கு 5 நாள் லீவு என்பதை 15 நாள் என்று ஆக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களுக்கு லீவே வேண்டாம் என்பது என்னுடைய எண்ணம். காரணம் அவர்கள் வெளியே சென்று திரும்பி வந்தால் தங்களை அசிங்கப்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். அந்த இல்லங்களிலேயே அவர்கள் சந்தோஷமாக இருக்க வானொலிப் பெட்டி, தொலைக்காட்சி பெட்டி வைத்து இருக்கிறோம். அவர்கள் உல்லாசமாக அங்கே இருந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே, லீவு தேவையில்லை. அந்த தொழுநோய்க் காரர்களின் பிள்ளைகளுக்கும் படிப்பு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதையும் அரசு ஆலோ சனை செய்யும். அவர்களுடைய உடல்நலம் பேணவும், சிகிச்சை அளிக்கவும் அரசு ஏற்பாட்டைச் செய்யும் என்பதை நான் இங்கே குறிப்பிடக்கடமைப்பட்டு இருக்கிறேன்.

இவ்வாறு இந்த சமூக நலத்துறை சம்மந்தமாகவும், கால்நடை பராமரிப்புத்துறை சம்மந்தமாகவும் பல உறுப் பினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சில உறுப்பினர்களுக்கு பதில் கிடைத்திருக்கும்; சில உறுப் பினர்களுக்கு பதில் கிடைக்காமலும் இருக்கும்.

தையல் பயிற்சி பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதை சமூக நலத்துறையின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கவேண்டும், ஏனென்றால் அவர்கள் கிராமங்களுக்குச் சென்று பணிபுரிய வேண்டியிருக்கிறது என்று கேட்டி ருக்கிறார்கள். அதுபற்றி அரசு ஆலோசனை செய்யும். ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதையும் அரசு பரிசீலனை செய்யும்.

கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு.

திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், கே. ஆர். சுந்தரம், தி. கா. நல்லப்பன், எஸ். என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. கே. கல்லன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 22—கால் நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 21,16,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 30—சமூக நலன்.

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், பொ. உத்திராபதி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திரு. எம். செல்லமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 59,38,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 7–4–1983 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.22 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

234. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக உள் துறையின் 30–11–1981 ஆம் தேதியிடப் பெற்ற 2858 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

154. கோரிக்கை எண் 22—கால்நடைப் பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1983–84 (தமிழ்-ஆங்கிலம்).

155. கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1983–84 (தமிழ், ஆங்கிலம்).

156. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான பணிகள் விவரம் பற்றிய அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

157. தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் 1982–83 ஆம் ஆண்டு நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

158. கோரிக்கை எண் 30—சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1983–84 (தமிழ், ஆங்கிலம்).

159. சமூக நலம் பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1983–84 (ஆங்கிலம்).

160. கோரிக்கை எண் 29—தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1983–84 (தமிழ், ஆங்கிலம்).

இன்றைக்கு கால்நடை பராமரிப்புத் துறை, சமூக நலத்துறைகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு தமிழக அரசு நிறைவேற்றி வருகின்ற பணிகள் மூலம், புதிய திட்டங்கள் மூலம் பெண்களுக்கு நிறைய வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது. மேலும் அலுவலர்கள் நலன் கருதி கீழ்க்கண்ட சில பணிகளைச் செய்யவும் அரசு முடிவுசெய்திருக்கிறது.

சமூக நல இயக்குநரகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு தொலைபேசி இணைப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.

சமூக நல இணை இயக்குநர்கள், மற்றும் துணை இயக்குநர்கள் இல்லங்களுக்கு தொலைபேசி இணைப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.

மாவட்டங்களிலுள்ள சமூக நலத்துறை அலுவலங்களுக்கு தொலைபேசி இணைப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.

மகளிர் மன்றங்களை சீர்படுத்தி, மேம்படுத்துதல்.

சமூக நல இயக்குநரகத்தில் உள்ள வழிகாட்டி நிலையத்தை வழிப்படுத்துதல்.

மேலும் 4 மாவட்டங்களில் வழிகாட்டி நிலையங்களை ஏற்படுத்துதல். அனாதை இல்லங்களை வழிப்படுத்துதல்.

திருச்சி மாவட்டம், திருச்சி வட்டம், அபிசேகபுரம் கிராமம் சர்வே எண் 201/1–இ–யிலுள்ள நிலம் மற்றும் கட்டடங்களை அரசின் பெண்கள் பாதுகாப்பு இல்லத்திற்கு என்று அரசுக்கு சொந்தமாக வாங்குதல்.

சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையில் நன்னடத்தைப் பிரிவை வலுப்படுத்துதல்.

அது மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்லமுத்து அவர்கள் ஒரு கருத்தை இங்கே பிரதானமாகக் குறிப்பிட்டார்கள். வரதட்சிணைக் கொடுமை பற்றி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும், சிறப்பாகக் கண்காணிக்க வேண்டும்; நாடெங்கும் இந்த வரதட்சிணைக் கொடுமை அதிகரித்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த வரதட்சிணைக் கொடுமை பற்றி மகளிர் கருத்தரங்குகள் மூலம் சொல்லிக் கொண்டு வருகிறோம். நானே மகளிர் மன்றங்களில் இதை வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். கருத்தரங்குகளில் பேசும்போது சமூகநலத் துறையில் இருக்கிற பெண்கள் வரதட்சிணைக் கொடுமையை வலியுறுத்த வேண்டுமென்று சொல்லி, அந்த வகையில் செய்து வருகிறோம். வரதட்சிணை வாங்குகின்ற ஆண்களை திருமணம் செய்யக் கூடாது என்று சொல்கிறோம். நான் இதைச் சொல்லும்போது ஆண்கள் கோபப் படக்கூடாது. முதலிலே இதை நான் சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன். இருந்தாலும் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.





இந்த வரதட்சிணை என்பது ஆண்கள், பெண்கள் இரு சாராராலும் மறைமுகமாக நடைபெறுகிறது. முதலிலே எதுவும் வேண்டாம் என்று சொல்லி திருமணம் செய்துக் கொள்கிறார்கள். திருமணம் முடிந்து, வீட்டுக்கு அழைத்து வந்த பிறகு உன் தகப்பனார் வீட்டிலிருந்து அதைக் கொண்டு வா, இதைக் கொண்டு வா என்று சொல்லி, துன்புறுத்தி, சில நேரங்களில் அந்தப் பெண்கள் அடித்துக் கொல்லப்படுகிறார்கள். ஆண்கள் மட்டும் தான் வரதட்சிணை கேட்கிறார்கள் என்று அல்ல; பெண்களும் கேட்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், பெண்கள் தான் இதிலே முக்கியமாக ஈடுபடுகிறார்கள். ஏனென்றால் மாப்பிள்ளை வீட்டிலிருந்து பெற்றோர்கள் பெண்ணைப் பார்க்கப் போகும்போது முதலிலே அந்த அம்மையார் தான் பெண்ணைப் பார்க்கப் போகிறார். பெண் நிறம் எப்படி, தோற்றம் எப்படி, எவ்வளவு பணம் கொடுப்பார்கள், எவ்வளவு நகை போடுவார்கள். எவ்வளவு வெள்ளிப் பாத்திரங்கள் கொடுப்பார்கள் என்பதை எல்லாம் கணக்கிட்டுக் கொண்டு வருவார்.

வரதட்சிணை வாங்கக் கூடாது என்று சட்டம் போட்டு, செயல் படுத்துகிறோம். சட்டம் இருந்தாலும் விளம்பரம், கருத்தரங்குகள், மகளிர் மன்றங்கள் மூலம் இந்த கொடுமையைப்பற்றி எடுத்துச் சொன்னால்தான் படிப்படியாக இந்தக் கொடுமையை நீக்க முடியும். இந்தப் பணியிலே தயவு செய்து ஆண்களும் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போன்று பெண்களுக்கும் அதை ஒரு கோரிக்கையாக நான் இந்த மன்றத்திலே வைக்க விரும்புகிறேன். ஏழைப் பெண்ணாக இருந்தால் 'அவளும் பெண்தானே' என்ற அடிப்படையில் ஏற்றுக் கொண்டு அவளுக்கு வாழ்க்கை அளித்தாலே சிறப்பாக இருக்கும். பொன்னையா அனுபவிக்கப் போகிறோம்.

(பிற்பகல் 2–20).

பெண்களைத்தானே நாம் வாழவைக்கப் போகிறோம். ஆகவே அவர்களுடைய குண நலன்களைத் தான் பார்க்க வேண்டும். எப்படி நல்ல முறையில் குடும்பத்தை நடத்துவாளா? குடும்பத்தினுடைய புகழை கட்டிக் காக்கும் வகையில் நல்ல முறையில் குடும்பத்தை நடத்திச் செல்வாளா என்று தான், பார்க்க வேண்டுமே தவிர, இதில் பணத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கக் கூடாது என்று குறிப்பிட்டு, இந்த வரதட்சிணைக் கொடுமை ஒழிய வேண்டுமானால், ஆண்களும், பெண்களும் இதில் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொண்டு, சமூக நலத்துறை வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில உறுப்பினர்களுக்கு பதில் கூட சொல்லாமல் இருக்கலாம். தற்காக வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த வகையில் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 6

## II. வளர்ச்சித் திட்டங்கள் :

மேலே கூறப்பட்டுள்ள கொள்கை அடிப்படையில் கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. பல்வேறு கால்நடை வளர்ச்சித் திட்டங்களைப் பற்றிய சுருக்கம் கீழ்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன :—

### 2. கேந்திர கிராமத் திட்டம் :

செயற்கைமுறை இனவிருத்தி மூலம் சிறந்த பால் உற்பத்திக்கும் உழைப்புக்கும் ஏற்ற நாட்டினங்களின் தரமுயர்த்துவதே கேந்திர கிராமத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் விரைவில் பருவம் எய்தச் செய்தல், பால்வற்றும் நாட்களைக் குறைத்தல், கன்று பிறப்பு இடைவெளியைக் குறைத்து கருத்தரிப்பு வீதத்தை அதிகரித்தல், ஆவினங்களில் கன்று பிறப்பு மற்றும் பால் உற்பத்தி வீதத்தையும் உழைப்பு வர்க்கங்களில் வேலைத் திறனையும் அதிகரிக்கச் செய்வதேயாகும்.

இனப் பெருக்கத்திற்கேற்ற சுமார் 10,000 பசுக்கள் மற்றும் பெண் எருமைகளைக் கொண்ட கிராமங்களை இத்திட்டம் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ளடக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், தரமற்றக் காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல், தொழில் நுட்பங்களை அறியும்படிச் செய்தல், சிறந்தபசுந்தீவனஉற்பத்தியை அதிகரித்தல் விஞ்ஞான ரீதியில் ஆவினங்களைப் பராமரித்தல் கன்று வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு கன்று மான்யம் வழங்குதல் போன்ற பணிகள் விவசாயிகளுக்காகவும் மற்றவர்களுக்காகவும் மேற்கொள்ளப்படுகின்றன. அயலினக் காளைகளின் விந்தைக் கொண்டு செயற்கை கருத்தரிப்பு மூலம் உள்ளூர் ஆவினங்களுக்கு கலப்பின விருத்திசெய்யப்படுகிறது.

தற்போது தமிழகத்தில், 620 கிளை நிலையங்களுடன் கூடிய 62 கேந்திர கிராம வட்டாரங்கள் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

### 3. தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டம் :

அயலினம் மற்றும் கலப்பினக் காளைகளின் விந்தைக்கொண்டு கலப்பின விருத்தி மூலம் உள்ளூர் இனங்களின் தரமுயர்த்தும் கொள்கையின்படி பால் வளப்பகுதிகளில் 5 ஆண்டு காலத்திற்குள் 33.33 சதவீதம் பால் உற்பத்தியைப் பெருக்குவதே தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும்.

செயற்கை முறை இனவிருத்தி மூலம் ஆவின் அபிவிருத்திக்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளுதல், நோய்த் தடுப்பு, பால் வள விஸ்தரிப்புப் பணிகள், பசுந்தீவனப் பயிர் அபிவிருத்தி, கன்று வளர்ப்பு போன்றவைகள் இத்திட்டத்தின் பணிகளாகும்.



1983 ஏப்ரல் 6]

நம் மாநிலத்தில் 9 தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் முறையே மதுரை, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, பண்ருட்டி மற்றும் தாம்பரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. மதுரை திட்டத்தின்கீழ் 4 மண்டல செயற்கை முறை இனவிருத்தி நிலையங்கள் மற்றும் 100 கிளை நிலையங்கள் மூலம் சுமார் 1 இலட்சம் இனப்பெருக்கப் பசுக்களும், எருமையினங்களும் பயன்பெறுகின்றன. இதர தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் ஒவ்வொன்றின் கீழும் 2 மண்டல செயற்கை இன விருத்தி நிலையங்களும், 50 கிளை நிலையங்களும் உள்ளன. இவை ஒவ்வொன்றும் சுமார் 50,000 இனப்பெருக்க ஆவினங்களை உள்ளடக்கியுள்ளது. இத்திட்டத்தின் வெற்றி, சிறந்த தீவனமிடுதல், சிறந்த பராமரிப்பு, விஞ்ஞான முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றை சார்ந்திருப்பதால் கால்நடை வளர்ப்போர் சத்துள்ள புல் வளர்ப்பு முறைகளை அறிந்துகொள்ளும்படி செய்யப்படுகிறது. ஆவின வளர்ப்பை வளமுறச் செய்யும்பொருட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட கிடேரிக் கன்றுகளுக்கு, கன்று ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் அளிக்கப்படுகிறது.

நடைமுறையிலிருக்கும் வரையறை நிபந்தனைகளின்படி செயற்கை முறை இனவிருத்தி மூலமாக ஈன்ற கிடேரி கன்றுகளை சரியானபடி பராமரிப்பதற்கு, கன்று ஈன்ற நாள் முதல் ஆறுமாத காலம் பூர்த்தியானதிலிருந்து ஒரு கன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் மூன்று ஆண்டுகள் வரையிலோ அல்லது கன்று பருவம் அடையும் வரையிலோ எது முன்போ அதுவரை பெற தகுதி உண்டு. பருவம் அடையும் வரை மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதமும், பசுவாகும்பொழுது மீதமுள்ள தொகையான ரூ. 5 மொத்த தொகையாக இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

### 4. பொலிகாளை நிலையங்களும் உறைவிந்து தொழிற் நுட்ப விஸ்தரிப்பும் :

செயற்கை முறை இனவிருத்திக்காக துறை நிலையங்களுக்கு வழங்கப்படும் விந்தை அளிக்கும் உயர்ரக காளைகளைப் பராமரிப்பதே பொலிகாளைகளை நிலையங்களின் நோக்கமாகும். தற்போது, இம்மாநிலத்தில் 59 பொலிகாளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. செயற்கைமுறை இனவிருத்திப் பணிக்கான போதுமான விந்து கிடைக்கச் செய்யும் பொருட்டு அயலினம் இந்திய இனம் மற்றும் கலப்பினக் காளைகள் இப்பொலிகாளை நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றன. இந்நிலையங்கள் அனைத்திலும் மொத்தமாக 551 காளைகள் உள்ளன.

திரவ விந்து 72 மணி நேரத்திற்குப் பின்னர் செயற்கைமுறை இனவிருத்திப் பணிக்குப் பயன்படுத்த முடியாததால், கணிசமான அளவு திரவ விந்து வீணாகிறது. இக்காரணமும், பிற பிரச்சினைகளின் காரணமாகவும் திரவ விந்து முறையிலிருந்து உறைவிந்து தொழில்நுட்பத்திற்குச் செல்ல வேண்டியது

[1983 ஏப்ரல் 6

இணைப்பு 1.

(611ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண். 22.

கால்நடைபராமரிப்பு.

கொள்கை விளக்கம்.

## I. முன்னுரை.

கால்நடைச் செல்வத்தின் வளர்ச்சியை மேம்படுத்தி அதன் மூலம் கிராமப்புற மக்களின், குறிப்பாக சிறு விவசாயிகள், குறு நில விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள், பழங்குடியினர் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள இதர பிரிவினர் போன்ற சமுதாயத்தின் நலிந்த வகுப்பினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையே கால்நடை பராமரிப்புத்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மக்களுக்குத் தேவையான சிறந்த புரத உணவுப்பொருட்களான பால், முட்டை மற்றும் இறைச்சி போன்றவற்றை கால்நடைச் செல்வம் நமக்கு அளிக்கிறது. மேலும் கிராமப்புறங்களில் வேளாண்மைக்குத் தேவையான உழைப்புக் காளைகள், சிறந்த இயற்கை உரம் ஆகியவற்றையும் அளிக்கின்றது. கால்நடை பராமரிப்பு, வேலையற்ற ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. மேலும், இத்தொழில், துணைத் தொழிலாக விளக்கி கிராமப்புறங்களில் கூடுதல் வேலைவாய்ப்பளித்து கிராம மக்களின்வருவாயை கணிசமான அளவில் உயர்த்துகிறது.

கால்நடைச் செல்வத்தின் மேம்பாட்டிற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அளிக்கும் வகையில் கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அளிக்கப்பட வேண்டிய அடிப்படைத் தேவைகளாவது, அதிகமான பால் உற்பத்திக்காக சிறந்த மரபில் தோன்றிய தரமுள்ள பொலிகாளைகள் கிடைக்கச் செய்தல், அவற்றிற்குத் தேவையான பசுந்தீவன உற்பத்தியை மேம்படுத்துதல் போன்றவைகளாகும். இத்தகைய வசதிகளை அளிக்கும் நோக்குடன், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள், கேந்திர கிராம வட்டாரங்கள் போன்றவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவை தவிர கன்று வளர்ப்பு, ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல் போன்ற இதர கால்நடைப் பராமரிப்புத் திட்டங்கள், சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம், வறட்சி பகுதி நிவாரண திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதித் திட்டம்,



1983 ஏப்ரல் 6]

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு சிறப்புத் திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களினால் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள நலிந்த பிரிவினர் பெரிதும் பயன்பெறுகின்றனர்.

கால்நடை வளர்ப்பு :

சமீப ஆண்டுகளில், நம் மாநிலத்தில் கால்நடை வளர்ப்பு பெரிதும் முன்னேறியுள்ளது. இக்குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தில் கால்நடை வளர்ப்புக் கொள்கையினை மேலும் வற்புறுத்திக் கூறவேண்டிய அவசியமில்லை. பால்வளம், ஆட்டினப் பராமரிப்பு பன்றியின மற்றும் கோழியின வளர்ப்புத்துறைகள் ஆகியவற்றை உயர்த்துவதே கால்நடை வளர்ப்புக் கொள்கையின் நோக்கமாகும். நமது கால்நடை வளர்ப்புக் கொள்கையின் முக்கிய அம்சங்கள் :

(அ) சிறந்த பால் உற்பத்தியும், நோய் எதிர்ப்புத் திறனும் கொண்ட 50 சதவீதம் அயலினம் மற்றும் 50 சதவீதம் நாட்டின மரபுடைய கலப்பினங்களைப் பெறும் நோக்குடன், சமவெளிப் பகுதிகளில் அயலினமான ஜெர்ஸி காளையின் விந்தைக் கொண்டும் மலைப் பகுதிகளில் ப்ரீஸியன் இனத்தைக் கொண்டும், கலப்பின விருத்தி செய்யப்பட்டு நாட்டினங்களின் தரம் உயர்த்தப்படுகிறது.

(ஆ) காங்கேயம், உம்பளாச்சேரி, சிந்தி மற்றும் ஹலிக்கார் இனங்களைப் பாதுகாத்து, அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அதன் இனவிருத்திப்பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு இனவிருத்தி செய்யப்படுகிறது.

(இ) உழைப்புத் திறனின் உறைவிடமாக இருக்கும் உழைப்பு வர்க்கங்களின் வேலைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன், அந்தந்த இனத்தின் இனவிருத்தி இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இனவிருத்தி முறை கையாளப்படுகிறது.

(ஈ) நாட்டு எருமையினங்களான முர்ரா மற்றும் சுருத்தி இன எருமை இனங்களைக் கொண்டு தரம் உயர்த்தப்படுகிறது.

(உ) மாநிலத்தில் இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகள் அவற்றின் தோற்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இனவிருத்தி செய்யப்படுகிறது.

(ஊ) கால்நடை வளர்ப்பில் முக்கிய அம்சம் கால்நடைத் தீவனப்பயிர் மற்றும் கால்நடைத் தீவன புல்நாற்றுகள், விதைகள் அபிவிருத்தியாகும்.

(எ) மாநிலம் முழுமையும் படிப்படியாக உறைவிந்து தொழில் நுட்பம் விஸ்தரிக்கப்படும்.

கால்நடை வளர்ப்புக் கொள்கையில் தவிர்க்க முடியாத தேவையாகும். இத் தேவையை அரசு மிகவும் உணர்ந்து செயலாற்றியுள்ளது. ஆண்டுகள் பல ஆயினும் சக்தி குறையாது பயன்படும் தனிச்சிறப்பு உறை விந்துக்கு உண்டு. நமது முழுமையான செயல் திறன் முறையில் ஒரு பகுதியாக வறட்சிப் பகுதி நிவாரணத் திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்திலும் மற்றும் சைதாப்பேட்டை, செங்கற்பட்டு, காஞ்சீபுரம், இராணிப்பேட்டை வேலூர் ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளிலும் உறை விந்து முறை கையாளப்படுகிறது. ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 173 கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களில் புகுத்தப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையில் அமைக்கப்பட்டிருக்கும் உறைவிந்து வங்கியும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அபிஷேகப்பட்டியிலுள்ள திரவ நைட்டிரஜன் மற்றும் உறைவிந்து நிலையத்திலும் நடப்பு ஆண்டில் பணி துவக்கப்பட்டு, பெருவாரியான நிலையங்களில் உறைவிந்து முறை கையாளப்படும் பால் பெருக்குத் திட்டப் பகுதியைச் சாராத பிற பகுதிகளில் உறைவிந்தைக் கொண்டு அயிலின கறவைப் பசுக்களுக்கும் சிறந்த எருமைகளுக்கும் கலப்பின விருத்தி செய்வதற்கு மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ. 117.31 இலட்சம் மொத்தச் செலவிலான உறைவிந்து வங்கித் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் முடிவுற்றதும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள சுமார் 7 இலட்சம் இனப் பெருக்க பசுக்கள் மற்றும் பெண் எருமைகளுக்கு 400 கால்நடை மருத்துவ நிலையங்களின் மூலம் உறை விந்து வழங்கப்படும். வரும் ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் மீதமுள்ள பிற பகுதிகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும்.

உறைவிந்து விஸ்தரிப்பு திட்டத்தை வெற்றிகரமாக்கும் பொருட்டு கள அலுவலர்களுக்கு உறைவிந்து தொழில் நுட்பத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 571 கால்நடை மருத்துவர்களுக்கும், 397 கால்நடை ஆய்வாளர்களுக்கும் இந்நுட்பத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. விஸ்தரிப்பு முறைகள் மூலம் இத்திட்டத்தின் பயன்களையும் பலன்களையும் பற்றி கால்நடை வளர்ப்போர் பயிற்சிவிக்கப்படுகின்றனர்.

5. வம்சாவழி ஆய்வுத் திட்டம்:

ஹோசூரிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் இயங்கி வரும் வம்சாவழி ஆய்வுத் திட்டத்தின் நோக்கம் சிவப்பு சிந்தி காளைகளின் இனவிருத்தித் திறனை மதிப்பீடு செய்வதாகும். பிரிவு ஒன்றுக்கு ஆறு காளைகளைக் கொண்ட 4 பிரிவு காளைகளின் சோதனை முடிவடைந்துள்ளது. ..ந்தாம் பிரிவைச் சார்ந்த ஆறு காளைகளின் சோதனை தற்போது நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பராமரிக்கப்படும் கிடேரிகளிலும் பசுக்களிலும், சில 1981–82 ஆம் ஆண்டு மராட்டிய மாநிலத்தில் நடைபெற்ற மண்டல கால்நடை மற்றும் கோழி கண்காட்சியில் முதற் பரிசுகளைப் பெற்றுள்ளன.



முர்ரா இனத்திற்கான இத்தகையத் திட்டமொன்று ஓரத்தநாட்டிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தில் தற்போது 150 முர்ரா மாடுகள் பராமரிக்கப்படுகின்றன. இவற்றிலிருந்து பிறக்கும் 5 காளைகள் சோதனை செய்யப்பட்டு செயற்கை முறை இனவிருத்திக்காகப் பயன்படுத்தப்படும்.

6. கால்நடை கண்காட்சிகளும் விளக்கக் காட்சிகளும்.

கால்நடைக் கண்காட்சிகள் மற்றும் விளக்கக் காட்சிகள் மூலமாக கால்நடை வளர்ப்போரும் இதர விவசாயிகளும், விஞ்ஞான ரீதியில் கால்நடை பராமரிப்பு, இனவிருத்தி செய்தல், தீவனமிடுதல் போன்றவற்றை நன்கு அறிந்து கொள்ளுகின்றனர். விவசாயிகளை விழிப்புறச் செய்து அவர்களிடையே சிறந்த தரமுள்ள கால்நடைகளை வளர்ப்பதற்கான ஊக்கமும் போட்டி மனப்பான்மையும் உருவாக்கி, நவீன கால்நடை வளர்ப்பிலுள்ள ஊக்கத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டப்பகுதிகளிலும் கேந்திர கிராமத் திட்டப் பகுதிகளிலும் அவ்வப்போது கன்று அணிவகுப்புகள் நடத்தப்படுகின்றன. 1982–83-ம் ஆண்டில் தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 9 கால்நடை கண்காட்சிகள் மற்றும் கன்று அணிவகுப்புகளும் கேந்திர கிராம வட்டாரங்களின் கீழ் 62 கன்று அணிவகுப்புகளும் நடைபெற்றன. இவை தவிர, கோயம்புத்தூர், உதகமண்டலம், பெரியார், வடஆற்காடு, தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் மாவட்ட கால்நடை கண்காட்சிகள் நடைபெற்றன. இது போன்ற கால்நடை கண்காட்சிகள் மற்றும் கன்று அணிவகுப்புகள் 1983–84-ம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெறும்.

7. செம்மறியாடு வளர்ப்பு

ஆட்டின வளர்ப்பு பெருவாரியான கிராமப்புற மக்களுக்குக் குறிப்பாக சமுதாயத்தில் தாழ்வுற்றோருக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கிறது. சென்னை சிவப்பு, திருச்சி கருப்பு, மாண்டியா கீழக் கரிசல், இராமநாதபுரம் வெள்ளை, வேம்பூர், மேச்சேரி மற்றும் நீலகிரி போன்ற செம்மறியாட்டினங்கள் தமிழகத்தில் காணப்படுகின்றன. இறைச்சி இன செம்மறியாடுகள் சமவெளிப் பகுதிகளிலும் கம்பளி இன செம்மறியாட்டினங்கள் மலைப் பகுதிகளிலும் வளர்க்கப்படுகின்றன. நமது ஆட்டின வளர்ப்புக் கொள்கையின்படி அதிகமான இறைச்சி அளிக்கும் பொருட்டு அவற்றின் திறனை மேம்படுத்துவதற்கான பெரு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றின் தரமுயர்த்தி உடல் நலனைப் பாதுகாப்பதற்கான வகைகளும் பெருமளவில் செய்யப்படுகின்றன.

நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. அப்பகுதிகளில் வாழும் கிராமப்புற மக்கள் கோழி வளர்ப்பு முறைகளை அறியச் செய்யும் வகையில் இந்நிலையங்கள், மாதிரி நிலையங்களாக இயங்குகின்றன. தற்போது, இம்மாநிலத்தில் 2 கோழிக்குஞ்சு பொரிக்கும் நிலையங்களும், 29 கோழியின விரிவாக்க நிலை யங்களும் உள்ளன.

சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் செயற்படும் கோழியின உற்பத்தித் திட்டத்தின் மூலம் செங்கற்பட்டு, வட ஆற்காடு, சேலம் மற்றும் மதுரை மாவட்டங்களில் கோழி வளர்ப்பு அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் தமிழ்நாடு கோழியின நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகிறது. வறட்சிப் பகுதி நிவாரணத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், கோழி வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெருகிவரும் கோழியினத் தொழிலின்பொருட்டு, ஈரோட்டில் கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாயிகளுக்கு நோய் கண்டறியத் தக்க வசதிகள் அளிக்கப்படுவதுடன், இம்மாநிலத்துக்குள் கொண்டு வரப்படும் கோழிகளினால் உண்டாகும் நோய்கள், பல்வேறு கோழி நோய்கள் பரவுதல் ஆகியவையும் கண்காணிக்கப்படுகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தின் முட்டை உற்பத்தி, 17.3 சத வீதம்மாக உயர்ந்துள்ளது.

10. பன்றி வளர்ப்பு.

இம்மாநிலத்தில் ஆறு பன்றி வளர்ப்புப் பிரிவுகள் உள்ளன. இவைகளில் அயலினமான பெரிய வெள்ளை யார்க்ஷையர் இனங்கள் பராமரிக்கப்படுகின்றன. சைதாப்பேட்டையிலுள்ள நிலையம் தவிர, பிற நிலையங்கள் மாநில கால்நடைப் பண்ணைகளில் உள்ளன. பன்றி வளர்ப்பில் ஈடுபட விரும்பும் விவசாயிகளுக்குத் தேவையான இனவிருத்தி பன்றிகளை இப்பிரிவுகள் வழங்குகின்றன. மக்களின் புரதச் சத்து தேவையை ஈடுசெய்யும் பொருட்டு பன்றி இறைச்சி உண்ணும்படி ஊக்கும் அளிக்கப்படுகிறது. தேவையான விளம்பரங்களும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டத்ன் கீழ், பன்றிகள் வளர்ப்புக்கும் தனிக்கவனம் செலுத் தப்படுகிறது. 1981—82-ல், அரசு மானியத்துடன், யார்க் ஷையர் பன்றிகள் வளர்க்கும் 50 நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. 1981—82-ல் பன்றி வளர்க்கும் விவசாயிகளுக்கு ஆண் பன்றி ஒன்று இலவசமாக வழங்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்தது. இத்திட்டத்தின் கீழ் 125 ஆண் பன்றிகள் வழங்கப்பட்டன.



11. நாய் இன விருத்தி.

தமிழகத்தின் புகழ்பெற்ற இனத்தைச் சார்ந்த நாய்களை பாதுகாப்பதே சைதாப்பேட்டையிலுள்ள நாய் இனவிருத்தி நிலையத்தின் நோக்கமாகும். தற்போது, 15 இராஜபாளையம் இன நாய்களும், 8 கோம்பை இன நாய்களும், 2 ராம்பூர் இன நாய்களும் உள்ளன. 1981—82-ல், விருப்பமுள்ளோருக்கு 8 நாய்க்குட்டிகள் இந்நிலையத்திலிருந்து விற்கப்பட்டு ரூ. 2,299 வரவு செய்யப்பட்டது.

12. பசுந்தீவனப் பயிர் வளர்ப்பு.

எந்தவொரு கால்நடை அபிவிருத்தித் திட்டத்தையும் முழுமையாக்கும் பகுதி, பசுந்தீவனப் பயிருக்கான மூலவளத்தை மேம்பாடு செய்வதேயாகும். ஆகவே, தீவனப் பயிர் உற் பத்தியை அதிகரிக்கப்படுவதற்கான வெவ்வேறு வகையான தீவனப் பயிர் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படு கின்றன.

பண்ணைகளிலுள்ள கால்நடைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, மாவட்டக் கால்நடைப் பண்ணைகள் அனைத்திலும் தீவனப் பயிர் உற்பத்தி செய்யப்படுகிறது. 1982—83-ல், அபிஷேகப்பட்டி, செட்டிநாடு, கொருக்கை ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலும், சாத்தூரிலுள்ள ஆட்டுப் பண்ணையிலும் தீவனப் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ரூ. 19.08 இலட்சம் செலவில் கூடுதல் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இரண்டாவதாக, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், உதகமண்டலத்திலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் கூடுதல் தீவனப் பயிர் உற்பத்திக்கான வசதிகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. மூன்றா வதாக, இத்துறையின்கீழ், படப்பை, புதுக்கோட்டை, சின்ன சேலம், அபிஷேகப்பட்டி, ஈச்சங்கோட்டை மற்றும் செட்டிநாடு ஆகிய இடங்களிலுள்ள 6 பசுந்தீவன விதை உற்பத்தி நிலையங் களிலிருந்து தீவன விதைகள் மற்றும் புல் நாற்றுகள் போன்றவைகள் விநியோகிக்கப்படுகின்றன. மேலும், தீவிர கால் நடை அபிவிருத்தித் திட்டம், மற்றும் கேந்திர திட்டப் பகுதிகளில் புல் நாற்றுகள், விதைகள் போன்றவைகள் குறை வான விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன், தீவனப் பயிர் பயிரிடும் முறைகள் பற்றி இலவசமாக கற்றுக்கொடுக்கப் படுகிறது. குறைந்த விலையில் விதைகள், புல் நாற்றுகள் கொடுக்கப்படுவதுடன், புல் பாத்திகள் ஏற்படுத்துதல், அவற் றைப் பாதுகாத்துச் சிக்கனமாகச் செலவிடல் போன்றவற்றுக்கு மானியங்கள் வழங்குவது போன்ற பல்வேறு வகையான ஊக்கத் தொகைகளும் வழங்கப்படுகின்றன. புல் வெட் டிகள் வழங்கவும், சைலோ உரக் குழிகள் அமைக்கவும் மானி யங்கள் வழங்கப்படுகின்றன. தீவிர கால்நடை அபிவிருத்தி

திட்டப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு, சிறு முதலுதவிப் பெட்டிகளும் வழங்கப்படுகின்றன. தீவனப் பயிர் மரக்கன்று களும், சிறப்பாக சூபாபுல் மரக்கன்றுகளும் பெருமளவில் விநியோகிக்கப்படுகின்றன.

மேற்கண்டுள்ள தீவனப் பயிர் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் நம் மாநிலத்தில், பசுந்தீவன அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அளித்துள்ளது.

13. சிறப்புத் திட்டங்கள்.

மேற்கண்டுள்ள பொதுவான திட்டங்கள் தவிர, சிறப்புத் திட்டங்களின் வாயிலாக, குறிப்பிட்ட கால்நடை இனத்தில் வளர்ச்சிக்காக தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. கிராமப்புறங் களில் கூடுதல் வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும், கால்நடைச் செல்வங்களிடமிருந்து பெறும் மிக விலைமதிப்புள்ள பால், இறைச்சி மற்றும் முட்டைகள் போன்றவற்றின் உற்பத்தியை அதிகரிப்பதுமே சிறப்புத் திட்டங்களின் நோக்கமாகும். முக்கிய மான திட்டங்களின் விவரம் பின்வருமாறு :—

(1) சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம்.

தமிழக கிராமப்புறங்களிலுள்ள சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகி யோரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதில், சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டங்கள் கவனம் செலுத்துகிறது. இத் திட்டத்தின்கீழ் செயற்படுத்தப்படும், பல்வேறு திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு :—

| திட்டப்பெயர். (1) | செயற்படுத்தப்படும் நிறுவனம். (2) | செயற்படும் மாவட்டங்கள். (3) |
|---|---|---|
| அ. ஆடு உற்பத்தி | கால்நடைப் பராமரிப்புத் துறை. | சேலம், வட ஆற்காடு, திருநெல்வேலி. |
| ஆ. கன்று வளர்ப்பு | தமிழ்நாடு பால்வள அபிவிருத்தி நிறுவனம். | சேலம், வட ஆற்காடு, மதுரை, கோயம்புத்தூர், தென்னாற்காடு. |
| இ. கோழி உற்பத்தி. | தமிழ்நாடு கோழியின அபிவிருத்தி நிறுவனம். | சேலம், வட ஆற்காடு, மதுரை செங்கற்பட்டு. |
| ஈ. பன்றி உற்பத்தி. | கால்நடை பராமரிப்புத் துறை. | வட ஆற்காடு மதுரை. |



பன்றி உற்பத்தித் திட்டம் 1981—82ஆம் ஆண்டிலிருந்தும் இதர திட்டங்கள் அனைத்தும், 1976—77ஆம் ஆண்டிலிருந்தும் செயற்படுத்தப்படுகின்றன.

ஆடு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 20 பெட்டை ஆடுகளும், 1 கிடாவும் அடங்கிய ரூ. 4,000 முதலீட்டில் ஆடு வளர்ப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்த உதவியளிக்கப்படுகிறது. இத் தொகையில் 25 சதவீதம் (ரூ. 1,000) சிறு விவசாயிகளுக்கும், 33—1/3 சதவீதம் (ரூ. 1,330) குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மானியமாகக் கொடுக்கப் படுகிறது. 1981—82 ஆம் ஆண்டில் 3,000 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. 1982—83-ல் மாவட்டம் ஒன் றுக்கு 500 அலகுகள் வீதம் வடஆற்காடு, சேலம் மற்றும் திரு நெல்வேலி ஆகிய 3 மாவட்டங்களிலும் மொத்தம் 1,500 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டு வருகிறது.

கன்று வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மானியத் தீவனம் பெறும் பொருட்டு தரமுள்ள கலப்பினக் கிடேரிக் கன்றுகள் சேர்க்கப் படுகின்றன. கிடேரி ஒன்றுக்கு 4 மாத வயது முதல் 32 மாத வயது வரை தீவன மானியம் அளிக்கப்படுகிறது. இதற்கு ஆகும் செலவாகிய ரூ. 1,920—ல் 50 சதவீதம் (ரூ. 960) சிறு, குறு நில விவசாயிகளுக்கும், 66-2/3 சதவீதம், (ரூ. 1,280) வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் மானியமாக கொடுக்கப் படுகிறது. 1981—82-ம் ஆண்டில் கன்று வளர்ப்போர் 4,380 பேருக்கு ரூ. 50.09 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. 1982—83-ம் ஆண்டில் மாவட்டம் ஒன்றுக்கு 1,000 கன்றுகள் வீதம் வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில் மொத்தம் 5,000 கன்றுகள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்படுகின்றன.

கோழி உற்பத்தித் திட்டத்தின்கீழ் 100 முட்டையிடும் கோழிகள் அடங்கிய கோழி வளர்ப்புப் பிரிவு ஒன்று ரூ. 5,865 செலவில் ஏற்படுத்துவதற்கு உதவியளிக்கப்படுகிறது. இதில் 25 சதவீதம் (ரூ. 1,466) சிறு விவசாயிகளுக்கும் $33\frac{1}{3}$ சதவீதம் குறுநில விவசாயிகள், மற்றும் வேளாண்மைத் தொழிலாளர் களுக்கும் மானியமாக வழங்கப்படுகிறது. இதுவரை தமிழ் நாடு கோழியின வளர்ச்சி நிறுவனத்தால் 3,611 பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பன்றி உற்பத்தித் திட்டத்தின் கீழ், பிரிவு ஒன்று ரூ. 4,500 பெறுமான பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துவதற்கு உதவி யளிக்கப்படுகிறது. இதில் 25 சதவீதம் (ரூ. 1,125) சிறு விவ சாயிக்கும், 33.1/3 சதவீதம் (ரூ. 1,500) குறுநில விவசாயிக்கும் வேளாண்மைத் தொழிலாளருக்கும் மானியமாக வழங்கப்படு கிறது. 1981—82-ம் ஆண்டில் ரூ. 0.36 இலட்சம் மானியமாக 50 பேருக்கு வழங்கப்பட்டுவிட்டது. 1982—83ஆம் ஆண்டில் மேலும் 50 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் மதுரை மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறப்புக் கால்நடை வளர்ப்பு திட்டத்தின்கீழ், ஆட்டின் உற்பத்தித் திட்டம் சேலம், வடஆற்காடு, மற்றும் திருநெல்வேலி ஆகியமாவட்டங்களில் சிறு,குறு நிலவிவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோரின் நலன் கருதி செயற்படுத்தப்படுகிறது. ''ஆடுகள் அபிவிருத்தியில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது.'' மற்றும் ''ஆடுகள் வளர்ப்பு விவசாயிகளுக்கு ஒரு புதிய பாதையைத் திருப்பி இருக்கிறது'' என்ற தலைப்புகளின் கீழ் முறையே ''குருசேத்ரா'' மற்றும் ''கூட்டுறவுச் செய்திகளின் சாரம்'' ஆகிய செய்தி இதழ்களில் வெளியான கட்டுரைகள் வாயிலாக இத்திட்டம் இம்மாநிலத்தில் போதிய அளவு முன்னேற்றமும் சாதனையும் அடைந்துள்ளதுஎன்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள ஆடுகளுக்கு தீவிர குடற்புழு மற்றும் நோய்க் நீக்கப்பணிகள் அளிப்பதற்கான திட்டம் 1982–83ல் ரூ.34.53 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் சிறந்த தரமுள்ள இறைச்சி, கம்பளம், மற்றும் தோல் உற்பத்திக்கு ஊறு விளைவிக்கும் ஒட்டுண்ணிகள் மற்றும் குடற்புழுக்கள் போன்றவைகள் அறவே நீக்கப்படும். சாத்தூர் மற்றும் சின்ன சேலம் ஆகிய இடங்களில் இயங்கிவரும் 2 ஆட்டுப் பண்ணைகள் மற்றும் மாவட்டக் கால்நடைப் பண்ணைகளுடன் இணைக்கப்பட்டுள்ள நான்கு ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஆகியவைகள் ஆடு வளர்ப்போருக்கும், பல்வேறு திட்டங்களின் மூலம் இயங்கிவரும் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களுக்கும் இனவிருத்திக்கான உயர்ரக சிறந்த இன ஆடுகளை வழங்குகின்றன.

714 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு கூட்டுறவு முறையில் ஆட்டின வளர்ப்புக்கான அதிக பட்ச உதவிகள் அளிக்கப்படுகின்றன. இதில் 39 சங்கங்கள் வேளாண் மறுநிதிக்கழகத்தின் கீழும், 260 சங்கங்கள் சிறப்புக் கால்நடைத் திட்டத்தின் மூலமாகவும், 185 சங்கங்கள் வறட்சிப்பகுதி நிவாரணத்திட்டத்தின் கீழும், 4 ரங்கங்கள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் 3 சங்கங்கள் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், மற்றும் 223 சங்கங்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்றவற்றின் கீழும் செயற்படுகின்றன. ஆடு வளர்ப்புப் பிரிவுகள் அமைப்பதற்கான வசதிகள் பெற்றவர்கள் பொதுவாக இச்சங்கங்களின் அங்கத்தினர்கள் ஆவர். கால்நடை பராமரிப்புத் துறையின் அலுவலர்கள் மூலமாக ஆடுகளின் உடல் நலப்பணிகள் ஆற்றப்படுகின்றன. ஆடு வளர்ப்பில் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வசதிகளும் உள்ளன. இப்பயிற்சியில் கற்றுக்கொடுக்கப்படுபவைகள் ஆட்டின பராமரிப்பு, குடற்புழு நீக்கம் செய்தல், சாதாரண நோய்களுக்கான அடையாளங்களைக் கண்டறிதல் மற்றும் அவற்றைத் தடுப்பதற்கான முறைகள் ஆகியவற்றின் கருத்தியல் மற்றும் செய்முறைப்பயிற்சிகள் ஆகும். 1981–82-ல் 400 இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 1982-83-ல் மேலும் 400 இளைஞர்கள் பயிற்றுவிக்கப்படுவர். 1983–84-ம் ஆண்டு இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். **செயற்**





படுத்தப்படும்படி உத்தேசிக்கப்பட்ட ஆடு அபிவிருத்தித் திட்டத்திற்கான தொழில்திறன் அறிக்கை வேளாண்—மறுநிதிக் கழகம் பம்பாய் அலுவலகத்தினரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட வரைவின் ஆய்வு முடிவுற்றதும், மத்திய அரசின் மூலம் வெளிநாட்டு உதவி வேண்டப்படும்.

8. வெள்ளாடு வளர்ப்பு.

வெள்ளாடுப், பால், இறைச்சி, தோல் மற்றும் உரம் ஆகியவற்றை அளிப்பதால், நமது கால்நடைச் செல்வங்களுள் முக்கிய இடம் வகிக்கிறது. வெள்ளாடுகள் விரைவில் இனப்பெருக்கம் அடைபவைகள். வெள்ளாடு வளர்ப்பு பெரும்பாலும் வேளாண்மை சமுதாயத்தின் எளிய பிரிவினரின் கரங்களிலேயே உள்ளன. நமது மொத்த இறைச்சித் தேவையில் கிட்டத்தட்ட 35 சதவீதம் இறைச்சி வெள்ளாடுகளின் மூலமே கிடைக்கின்றன. எனவே, வேளாண்மைக்கும், வனப்பகுதிகளுக்கும் ஊறு ஏற்படாத இடங்களில் வெள்ளாடு வளர்ப்பு ஊக்குவிக்கப்படுகிறது.

வெள்ளாடு அபிவிருத்தியில் முதற்கட்டமாக, புதுக்கோட்டையில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் ''வெள்ளாடு வளர்ப்பு பிரிவு'' ஒன்றுஏற்படுத்தப்பட்டு, தெல்லிசேரிச்வெள்ளாடுகள் வளர்க்கப்படுகின்றன. சின்ன சேலத்திலுள்ள ஆட்டுப் பண்ணையில் ஜமுனாபாரி இன வெள்ளாடுகள் வளர்க்கப்படுகின்றன. உள்ளூர் வெள்ளாடுகளின் தரம் உயர்த்தும் நோக்குடன் தேர்ந்தெடுக்கப்பட்ட கால்நடை மருத்துவ நிலையங்களில் இனப்பெருக்கத்திற்காக ஜமுனாபாரி மற்றும் தெல்லிச்சேரி கிடாக்கள் பராமரிக்கப்படுகின்றன. இதுவரை 30 வெள்ளாட்டுக் கிடாக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வெள்ளாடு வளர்க்கும் விவசாயிகளிடையே இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது.

இராமேஸ்வரம் தீவிலுள்ள உள்ளூர் வெள்ளாடுகளின் தரமுயர்வதற்கான திட்டமொன்று 1982–83–ல் ரூ.0.51 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 50 சதவீதம் விலையில் உயர்ரக ஜமுனாபாரி கிடாக்கள் விநியோகிக்கப்பட்டு, இனவிருத்திக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இத்தீவிலுள்ள தங்கச்சிமடம் பகுதியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆடு வளர்ப்போர் 50 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஜமுனாபாரி கிடா வழங்கப்படும்.

9. கோழி வளர்ப்பு.

நவீன கோழி வளர்ப்பு முறைகளைப் பரவச் செய்து, விவசாயிகள் இதனைத் துணைத் தொழிலாகக் கொள்ளும்படி ஊக்கமளிக்கும் நோக்குடன், இம்மாநிலத்தில் கோழி விரிவாக்க

1981-82-ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் அடைந்த சாதனைகளின் விவரம் பின்வருமாறு :

| திட்டத்தின் பெயர். (1) | எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. கறவை மாடுகள் வழங்கப்பட்டது .. | 161 |
| 2. ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டது | 529 |
| 3. உழைப்புக் காளைகள் வழங்கப்பட்டது .. | 624 |
| 4. வெள்ளாடு வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டது. | 20 |

1982-83-ல் கால்நடைகள் வழங்குதல், நடமாடும் கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்துதல், உறைவிந்து தொழில் நுட்ப முறையைப் புகுத்துதல், மற்றும் கால்நடை மருந்தகக் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களுக்காக அரசு ரூ. 24.22 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

அரசு 1983-84-ல் மாநிலத்திலுள்ள பழங்குடியினரின் அபிவிருத்திக்காக சிறப்பான பல திட்டங்களுக்காக ரூ. 33.30 இலட்சங்கள் ஒதுக்கியுள்ளது. கீழ்க்கண்டுள்ளவைகள் உத்தேசிக்கப்பட்ட திட்டங்களாகும் :—

| வரிசை எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | பொருள் இலக்கு. (3) | நிதி மூலதனம் (4) (ரூபாய் இலட்சத்தில்.) | செயற்படுத்த படும் இடங்கள். (5) |
|---|---|---|---|---|
| 1. | கறவை மாடுகள் வழங்குதல். | 200 யூனிட். | 4.20 | சேலம், தர்மபுரி, தென்னாற்காடு. |
| 2. | ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல். | 337 யூனிட். | 4.49 | வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி. |
| 3. | வேலை மாடுகள் வழங்குதல். | 375 யூனிட். | 4.37 | மாவட்டங்களில் உள்ள 9 பழங்குடியினர் வாழும் பகுதிகள். |
| 4. | கன்று வளர்ப்பு .. | 80 யூனிட். | 1.66 | |
| 5. | கழுதைகள் வழங்குதல். | 10 யூனிட். | 0.05 | |



| வரிசை எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | பொருள் இலக்கு. (3) | நிதி மூலதனம். (4) (ரூபாய் இலட்சத்தில்.) | செயற்படுத்தப்படும் இடங்கள். (5) |
|---|---|---|---|---|
| | பால்வள அபிவிருத்தி. | | | |
| 6. | பால்வளத்திற்கான வசதிகள் அமைத்தல். | .. | 1.23 | (கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு சம்பந்தப்பட்டதல்ல.) |
| | கால்நடை பராமரிப்புக்கான வசதிகள். | | | |
| 7. | உறைவிந்து முறையைப் புகுத்துதல் நிலையங்கள். | 3 | 0.81 | அருணனூத்து மலை, கொல்லி மலை, கல்ராயன்மலை, (தென்னாற்காடு). |
| 8. | தோமூர் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக உயர்த்துதல். | 1 | 4.01 | பச்சைமலை (திருச்சிராப்பள்ளி). |
| 9. | உத்தேசிக்கப்பட்டுள்ள தோமூர் மருந்தகத்தில் நடமாடும் ஊர்தி ஏற்படுத்துதல். | 1 | 1.48 | பச்சைமலை (திருச்சிராப்பள்ளி). |
| 10. | கால்நடை மருந்தகம். | 1 | 7.36 | (தற்போதுள்ள மருந்தகம் தொடர்ந்து செயல்படுவது அடங்கும்). |
| 11. | கிளை நிலையம் | 1 | 2.01 | ஏலகிரிமலை. |
| 12. | நடமாடும் ஊர்திகள் | 1 | 1.15 | கல்ராயன் மலை. |
| 13. | அலுவலர் குடியிருப்புகள். | 1 | 0.48 | |
| | | | 33.30 | |

5. வறட்சிக்கு இலக்காகும் பகுதி நிவாரணத் திட்டம்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் வாழும் நலிந்த சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, பல்வேறு வகையான கால்நடை வசதிகளை நிரந்தரமாக ஏற்படுத்துவதே வறட்சிப்பகுதி நிவாரணத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்

1983 ஏப்ரல் 6

(2) மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம்.

மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கன்று வளர்ப்புத் திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டம் செயற்படுத்தப்படும் இடங்கள் பின்வருமாறு :—

| | மாவட்டம். | வட்டங்கள். |
|---|---|---|
| 1. | மதுரை .. .. | பழனி, திண்டுக்கல், கொடைக்கானல், பெரியகுளம், உசிலம்பட்டி, உத்தமபாளையம். |
| 2. | கோயமுத்தூர் .. | கோயமுத்தூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, அவிநாசி, மேட்டுப்பாளையம். |
| 3. | நீலகிரி .. .. | கூடலூர், கூனூர், உதகமண்டலம், கோத்தகிரி. |
| 4. | திருநெல்வேலி .. | செங்கோட்டை, தென்காசி, அம்பாசமுத்திரம், நாங்குநேரி. |
| 5. | கன்னியாகுமரி .. | தோவளை, விளவங்கோடு, அகஸ்தீஸ்வரம். |

இத்திட்டத்தின் கீழ் மானியமாக கால்நடைத் தீவனம் கொடுக்கப்படுகிறது. கன்று ஒன்றை 3 மாதம் முதல் 28 மாதங்கள் வரையுள்ள 25 மாத காலத்திற்குப் பராமரிப்பதற்கு சுமார் 16 குவிண்டால் தீவனம் தேவைப்படும். தீவனத்திற்காகும் செலவான ரூ. 1920-ல் சிறு/குறுநில விவசாயிகளுக்கு அதிகப்படியாக ரூ. 960-ம், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு அதிகப்படியாக ரூ. 1,230-ம் மானியமாக கொடுக்கப்படுகிறது. மீதித் தொகை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்/கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிலிருந்து பெறுவதற்கு வழி செய்யப்படுகிறது. அதன்படி 1981-82 ஆம் ஆண்டில் கன்றுகள் வைத்திருந்த 1,987 பேர் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளார்கள், ரூ. 8.60 இலட்சம் திட்ட செயற்பாட்டிற்காக செலவு செய்யப்பட்டுள்ளது. 1982-83-ம் ஆண்டிலும் இக்கன்றுகளைத் திட்டத்தில் தொடர அரசு ரூ. 11.27 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இது தவிர கீழ்க்கண்டுள்ள இடங்களில் 1982-83-ம்ஆண்டில், மேலும் பயன்பெறுவோர் 500 பேரைச் சேர்ப்பதற்கு ரூ. 2.57 இலட்சத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

| | |
|---|---|
| இராமநாதபுரம் மாவட்டம் .. | இராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர் வட்டங்கள். |
| பெரியார் மாவட்டம் — | தாராபுரம் வட்டம். |



1983 ஏப்ரல் 6]

திருநெல்வேலி மாவட்டம் .. சங்கரன்கோவில் வட்டம்.

1983-84-ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து மேலும் விஸ்தரிக்கப்படும்.

(3) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மலைப்பகுதிகளின் மேம்பாட்டிற்காக, நீலகிரி மாவட்டத்தில் நிரந்தரமான கால்நடை பராமரிப்பு வசதிகளை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணை வலுப்படுத்தப்பட்டது. உதகமண்டலத்தில் கால்நடைப் புலன் ஆய்வு நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 4 ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் 415 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் துவங்கப்பட்டன. 1981-82-ம் ஆண்டில் கீழ்க்கண்ட கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் உதகமண்டத்திலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், குருத்துக்குளியிலுள்ள தீவனப் பயிர் உற்பத்திப் பண்ணையிலும், தீவனப்பயிர் உற்பத்திக்காக ரூ. 5 இலட்சம் செலவில் புதிய திட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(4) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம்.

மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டினைக் கருதி பல்வேறு கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் கீழ்க்கண்டுள்ள பழங்குடியினர் வாழும் பகுதிகளில் செயற்படுத்தப்படுகின்றன.

| | மாவட்டம். (1) | பழங்குடியினர் வாழ் பகுதிகள். (2) |
|---|---|---|
| 1. | சேலம் .. .. | ஏற்காடு மலை, ஆருனூத்து மலை, கொல்லிமலை, கல்ராயன்மலை, பச்சைமலை. |
| 2. | வடஆற்காடு .. .. | ஜவ்வாது மலைகள். |
| 3. | தருமபுரி .. .. | சிதேரி (சித்தேரி). |
| 4. | தென்னாற்காடு .. | கல்ராயன். |
| 5. | திருச்சிராப்பள்ளி ... | பச்சைமலை. |

களில் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. பல்வேறு வகை யான கால்நடை பராமரிப்புத் திட்டங்களை 1982–83ஆம் ஆண் டில் மேற்கொள்ளும் பொருட்டு அரசு ரூ. 45.50 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்தது. மேலும் தற்போதுள்ள திட்டங்களைத் தவிர புதிய திட்டங்கள் 1983–84ஆம் ஆண்டில் இம்மாவட்டங் களில் செயற்படுத்தப்படும்.

(6) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:

ஊராட்சி ஒன்றியங்கள் கால்நடை வளர்ப்புத் துறை மற்றும் வங்கிகள் ஆகியவற்றின் கூட்டு முயற்சியின் மூலம் பல திட்டங்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி அமைப்பால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. கால்நடை பராமரிப்பு சம்பந்தமான திட்டங்கள், மானிய விலையில் பால்மாடுகள், ஆடுகள் மற்றும் எருதுகள் போன்றவைகள் வழங்குவதாகும். இத்திட்டங்கள், வேளாண் சமுதாயத்தினருக்கு மட்டுமின்றி, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பத்தினருக்கும் பெரிதும் பயனளிக்கின்றன. அவர் தம் வருமானத்தைக் கணிசமான அளவு அதிகரிப்பதற்கு இத் திட்டங்கள் உதவுகின்றன. கால்நடைகள் வாங்குதல், அவற்றுக் கான நோய் நீக்கப்பணிகள் அளித்தல், கடன் வசதிப் பெற உதவுதல் போன்றவற்றை கால்நடை பராமரிப்புத்துறை கவனிக் கிறது. கால்நடை வளர்ப்போரின் வீட்டிலேயே கால்நடை களுக்கு சிகிச்சை செய்யும் பொருட்டு 28 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் இயங்குகின்றன. இத்திட்டம் கிராம மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகின்றது. கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் ஏற்படுதலுவதிலுள்ள இடர்களை நீக்கி முன்னேற்றம் காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(7) ஒருங்கிணைந்த மாதிரி பொருள் ஆய்வுத் திட்டம்:

முக்கிய கால்நடை உற்பத்திகளான பால், இறைச்சி மற்றும் முட்டை ஆகியவற்றின் உற்பத்தியை ஒரே ரீதியில் மதிப்பீடு செய்யும் நோக்குடன், மத்திய அரசின் நிதி உதவியுடன் 1977–78 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம் துவக்கப் பட்டது. இத்திட்டம் தற்போது மாநிலத் திட்டமாக செயற் படுத்தப்படுகிறது

இத்திட்டத்தின் துவக்கம் முதல் 1981–82ஆம் ஆண்டு வரை மொத்தம் 1,125 கிராமங்களில் அளவீடுகள் எடுக்கப்பட்டுள்ளன. நம் மாநிலத்தில், 1977–78ஆம் ஆண்டைக் காட்டிலும் தற் போது பாலின் உற்பத்தி 12.14 சதவீதமும், முட்டை உற்பத்தி 34.46 சதவீதமும் அதிகரித்துள்ளதாக மேற்படி மதிப்பீடுகள் மூலம் அறியப்படுகிறது.

(8) **கால்நடை** இடைக்கால கணக்கெடுப்புத் திட்டம்.

ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை எடுக்கப்படும் கால்நடை கணக்கெடுப்புகளுக்கிடையில், ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் வளர்ச்சி, இதர ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றை ஆய்வு செய்யும் நோக்குடன் கால்நடை இடைக்கால கணக்கெடுப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது.



1982–83ஆம் ஆண்டில், தமிழகத்திலுள்ள 10 சதவீதம் கிராமங்களில் (அதாவது 1,770 கிராமங்களில்) கணக்கெடுப்புப் பணி முடிவுற்றுள்ளது.

வெவ்வேறு கால்நடை இனங்கள், கால்நடைகளின் வளர்ச்சி மற்றும் ஏற்றத் தாழ்வுகள் ஆகியவை தற்போது ஆய்வு செய்யப் பட்டு வருகின்றன. கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கால்நடை வளர்ச்சி, வீத பொருளாதார அறிக்கை ஆகியவை உருவாக்குவதில் வளர்ச்சி வீத விவரங்கள் பெரிதும் உதவும். இதனால், கால்நடை மற்றும் கால்நடை உப பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும்.

(9) 13ஆவது ஐந்தாண்டுக் கால்நடைக் கணக்கெடுப்பு 1982.

13ஆவது ஐந்தாண்டுக் கால்நடைக் கணக்கெடுப்பு 1982, பணியை தமிழ்நாட்டில் மேற்கொள்ளுமாறு புள்ளியியல் துறைக்கு அரசு ஆணையிட்டது. கால்நடைக் கணக்கெடுப்பு நடத்து வதற்கு ரூ. 5·6 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

III. கால்நடைப் பண்ணைகள்.

தற்போது இம்மாநிலத்தில் 7 மாவட்டக் கால்நடைப் பண்ணைகளும், ஒரு பால்பண்ணையும் இயங்கி வருகின்றன. இவைகள், துறையின்கீழ் இயங்கும் 59 பொலி காளை நிலையங்களுக்கும் தேவையான பொலி காளைகளை உற்பத்தி செய்து விநியோகிக்கின்றன. அங்கீகரிக்கப்பட்ட இனங்களான சிந்தி, தார்ப்பார்க்கர், முர்ரா, ஜெர்ஸி மற்றும் ப்ரீஸியன் போன்றவைகள் இப்பண்ணைகளில் பராமரிக்கப்படுகின்றன.

பண்ணைக் கால்நடைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், பண்ணைகள் அனைத்திலும், தீவனப் பயிர் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. செட்டிநாடு, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி மாவட்டப் பண்ணைகளில் தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

அயலின கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங்கோட்டை.

கலப்பின விருத்திக்குத் தேவைப்படும் அயலின ஜெர்ஸி பொலி காளைகளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் நோக்கத் துடன், ஈச்சங்கோட்டையில் அயலின கால்நடை வளர்ப்புப் பண்ணை ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்போது, இப் பண்ணையில் 326 ஜெர்ஸி இன மாடுகள் உள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் 105 ஜெர்ஸி கன்றுகள் பிறந்துள்ளன. 20 ஜெர்ஸி மாடுகள் இனவிருத்திக்காக விற்கப்பட்டுள்ளன.

அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இயங்கும் 500 கிளை நிலையங்களிலும், கேந்திர கிராமந் திட்டத்தின்கீழ் இயங்கும் 620 கிளை நிலையங்களிலும் பிற பகுதிகளில் இயங்கும் 1,181 கால்நடை கிளை நிலையங்களிலும் இதரப் பணிகளுடன் நோயுற்ற கால்நடைகளுக்கும் முதலுதவி அளிக்கப்படுகிறது.

நோய்கள் பற்றிய முன்னறிவிப்பு கொடுப்பது மட்டுமன்றி கால்நடை நோய் திடீர் கிளர்ச்சிகள் பற்றி கண்டறிந்து, அவைகள் பரவுவதைத் தடுப்பதற்கும் இந்நிலையங்கள் உதவு கின்றன.

சாணம், இரத்தம் போன்ற மாதிரிப் பொருட்களை ஆய்ந்து நோய்க் காரணங்களைக் கண்டறிய 13 சோதனைக் கூடங்கள் உள்ளன.

1981–82 ஆம் ஆண்டில் 13 பேர் எம். வி. எஸ். ஸி. மேற் படிப்புக்காக அனுப்பப்பட்டனர். 56 பேர் மலடு நீக்க சிகிச்சை பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். 1982–83 ஆம் ஆண்டில் 13 பேர் எம்.வி.எஸ்.ஸி. மேற்படிப்புக்கும் 59 பேர் மலடு நீக்கப் பயிற்சிக்கும் அனுப்பப்பட்டனர்.

(ii) மருந்து கிடங்குகள் :

4 மருந்து கிடங்குகள் முறையே, செங்கற்பட்டு, நாமக்கல், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் கட்டு வதற்கு அரசு இரண்டு இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளித்தது. களப்பணி அலுவலர்களுக்கு விநியோகிக்கும்படியான மத்திய மருந்து வாங்கும் திட்டத்தின் கீழ் வாங்கப்படும் மருந்துகள் உபகரணங்கள் ஆகியவை இக்கிடங்குகளில் பத்திரப்படுத்தி வைக்கப்படும். இக்கிடங்குகளுக்கான கட்டிடப் பணி முடிவுறும் நிலையிலுள்ளது.

(iii) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம் :

கால்நடைகளிடையே பெரும் இறப்பையும், சேதத்தையும் விளைவிக்கும் கொடிய வெக்கை நோயை ஒழிப்பதற்கான வசதிகளை வலுப்படுத்த வேண்டியது அத்தியாவசியமென உணரப்பட்டது. எனவே, 1982–83 ஆம் ஆண்டில் 3 வெக்கை நோய் சோதனைச் சாவடிகள் முறையே நீலகிரி மாவட்டத்தி லுள்ள மொய்யார், தல்லார் மற்றும் ஆணைக்கட்டி ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. தற்போது 17 மாவட்ட வெக்கை நோய் குழுக்களும், 16 சோதனைச் சாவடிகளும் மற்றும் 13 கண்காணிப்பு நிலையங்களும் வெக்கை நோய்க் கிளர்ச்சி மற்றும் நோய் பரவுதலை ஒழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இது தவிர 1982–83-ல் 3 மாவட்டக் குழுக்களுக்கு ஒவ்வொரு ஊர்தி அளிக்கப்பட்டது. மற்றும் 2 சோதனைச் சாவடிகளுக்குக் கூடுதல் பணியாட்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.





(iv) மருந்து தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்துதல்

கால்நடை மருந்துகளை தயாரிப்பதற்காக மருந்து தயாரிக்கும் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந் நிலையத்திற்கான கட்டிடப்பணி இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய வளாகத்தில் விரைவில் துவங்கப்படும்.

(v) கோமாரி நோய்த் தடுப்புப் பணி

1981–82 ஆம் ஆண்டில் கோமாரி நோய்த் தடுப்புப் பணி களுக்காக 7.40 இலட்சம் ரூபாய் செலவிற்கு அரசு ஒப்புதல் அளித்தது. இதில் 1,15,150 டோஸ் ''பல்முனைகிருமித்'' தடுப்பு மருந்துகளும், 1,06,840 டோஸ் ஒருமுனை கிருமித் தடுப்பு மருந்துகளும் வாங்கப்பட்டு தடுப்பூசி போடும் பணி நடை பெற்று வருகிறது.

(vi) கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் இராணிப்பேட்டை

இராணிப்பேட்டையில் அமைந்துள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் பல்வேறு தடுப்பு மருந்துகள், ஊனீர் எதிர்ப்பான், கரைசல்கள் மற்றும் கலவைகள் தயாரிக்கப் பட்டு துறை நிலையங்களுக்குத் தேவைப் பட்டியலுக்கேற்ப அனுப்பப்படுகின்றது. மேலும் தடுப்பு மருந்து கோரும் அண்டை மாநிலங்களுக்கும் தேவைப்பட்டியலின்பேரில் விற்கப்படுகின்றன. சமீப காலத்தில் இந் நிலையத்தில் பல்வேறு பிரிவுகளும் வலுப் படுத்தப்பட்டன. 1982–83 ஆம் ஆண்டின் டிஷ்யூ கல்சர் வெக்கை நோய் தடுப்பு மருந்து தயாரிக்கும் பிரிவுகளுக்குத் தேவைப்படும் சிறுநீரகங்கள் தொடர்ந்து கிடைப்பதற்காக இடைவெளியின்றி சீரான ரீதியில் கன்றுகள் கிடைக்கச் செய்வதற்கான புதிய திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

(v) கால்நடைப் பராமரிப்புத் துறை நிர்வாக அமைப்பு

கால்நடைப் பராமரிப்புத் துறை இந்திய ஆட்சிப்பணி அலுவலர் ஒருவரை இயக்குநராக கொண்டுள்ளது. தலைமை யகத்தில் இவருக்குத் தொழில் நுட்ப விஷயங்களில் உதவி செய் வதற்கு இரண்டு கூடுதல் இயக்குநர்களும், நிர்வாகத்தில் உதவி செய்வதற்கு முதன்மை நிர்வாக அலுவலர் ஒருவரும் உள்ளனர். திட்டம் மற்றும் புள்ளி விவரங்களில் உதவி புரிய கால்நடைப் பரா மரிப்பு புள்ளி விவரம் இணை இயக்குநர் ஒருவரும் மற்றும் கணக்குகள், வரவு-செலவுக் கணக்குகள், போன்றவற்றில் கணிப்ப தில் உதவி செய்வதற்கு முதன்மை கணக்கு அலுவலர் ஒருவரும் தலைமையகத்திலேயே உள்ளனர்.

நிர்வாக வசதியின் பொருட்டு இம் மாநிலம் 10 மண்டலங் களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும், கால்நடை பரா மரிப்பு இணை இயக்குநர் ஒருவரின் பொறுப்பிலுள்ளது. மேலும்,

[1983 ஏப்ரல் 6

கிடேரி உற்பத்தி நிலையங்கள்.

ஒரு வயதுக்குட்பட்ட சிறந்த இளங்கன்றுகளைப் பொது மக்களிடமிருந்து வாங்கி அவற்றைப் பருவம் எய்தும் வரை வளர்த்த பின்னர், உயர்ரக விந்தின் மூலம் கருவுறச் செய்து, அவை கன்று ஈன்றதும், "இலாப நஷ்டமற்ற" அடிப்படையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்வதே இத்திட்டம் ஏற்படுத்தப் பட்டதின் நோக்கமாகும். இரண்டு கிடேரி உற்பத்தி நிலையங் கள் முறையே புதுக்கோட்டை மற்றும் உதகமண்டலம் பண்ணைகளில் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் பராமரிக்கப் பட்ட கன்றுகளில் 15 கிடேரிகள் கன்றுகள் ஈன்றுள்ளன. 38 கிடேரிகள் கன்றுகள் ஈனும் நிலையிலுள்ளன. இவைகள் விவ சாயிகளுக்கு விநியோகிக்கப்படும். உதகமண்டலம் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் பராமரிக்கப்பட்ட கன்றுகளில் 23 கிடேரிக் கன்றுகள் ஈன்றதும் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த, ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் நோக்கம் சிறந்த மரபுகளுடைய பசுக்களை வளர்க்கச் செய்வதேயாகும்.

ஓங்கோல் கால்நடை வளர்ப்புப் பிரிவு.

இரட்டைப் பயனுள்ள ஓங்கோல் இன மாடுகளை உற்பத்தி செய்து அவற்றை விவசாயிகளுக்கு விநியோகிக்கும் நோக்குடன் 20 ஓங்கோல் இனப் பசுக்களையும் 2 காளைகளையும் கொண்ட ஓங்கோல் கால்நடை வளர்ப்பு நிலையம் ஒன்று சின்னசேலத்தி லுள்ள ஆட்டுப்பண்ணையில் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந்நிலைய இருப்பு 34 ஆகும். இங்கு பராமரிக்கப்படும் பசுக்களின் மூலம் 1981–82ஆம் ஆண்டில் 12 ஓங்கோல் கன்று கள் பிறந்துள்ளன.

காளைகள் வாங்குதல்.

செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படும் கால்நடைகள் உடனே கருவுற்றால் மட்டுமே செயற்கை முறை இனவிருத்தித் திட்டம் வெற்றியடையும். எனவே மாவட்டங்களில் இயங்கும் பொலிகாளை நிலையங்களிலுள்ள பயனற்ற காளைகளை அகற்றி தரமுள்ள முர்ரா காளைகளை வாங்கி பராமரிக்கும் பொருட்டு 1981–82-ல் மூன்று இலட்சம் ரூபாய் செலவிற்கு அரசு ஒப்புதல் அளித்தது. சிறந்த செயற்கை இனவிருத்திப் பலனுக்காக தரமற்ற காளைகளை அகற்றி விட்டு அவ்விடங் களில் புதிய காளைகளைக்கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கால்நடைப் பண்ணைகளின் சீரமைப்பு.

பெரும்பான்மையான மாவட்டக் கால்நடைப் பண்ணைகள் பரந்த நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. மேற்படி நிலங்களை



1983 ஏப்ரல் 6]

உரிய முறையில் பயன்படுத்தும் நோக்குடன், அபிஷேகப்பட்டி, செட்டிநாடு, கொருக்கை ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளுக்கும் சாத்தூரிலுள்ள ஆட்டுப்பண்ணைக் கும் கூடுதல் நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் இப்பண்ணைகளில் தீவனப் பயிர் உற்பத்தி அதிகரிக்கக் கூடும்.

IV கால்நடை நோய் நீக்கப் பணிகள்:

(i) கால்நடை மருத்துவ நிலயங்கள்:

எண்ணிறந்த மருத்துவ நிலையங்களை நிறுவி, இம் மாநிலத்தி லுள்ள கால்நடை அனைத்திற்கும் சிறந்த நோய் நீக்கப் பணிகளை ஆற்றுவதில் அரசு அக்கறை கொண்டுள்ளது. மருத்துவ நிலையங்கள் விவரம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | பிரதம மருத்துவ நிலையங்கள் .. .. | 18 |
| 2. | கால்நடை மருத்துவமனைகள் .. .. | 52 |
| 3. | மருத்துவ மனைகள் மற்றும் கேந்திர கிராம நிலையங்கள் .. .. .. .. | 3 |
| 4. | கால்நடை மருந்தகங்கள் .. .. .. | 577 |
| 5. | கால்நடை மருந்தகங்கள் மற்றும் கேந்திர கிராம நிலையங்கள் .. .. .. | 72 |
| | மொத்தம் .. | 722 |

இதில் 1982–83ஆம் ஆண்டில் 25 மருந்தகங்கள் திறக்கப் பட்டுள்ளன. ஐந்து மருந்தகங்கள் மருத்துவமனைகளாக தர முயர்த்தப்பட்டுள்ளன. 3 கால்நடை மருத்துவமனைகள் பிரதம மருத்துவமனைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன. இந்நிலையங் களில் நோயுள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. பல்வேறு தொத்து நோய்களைத் தடுப்பதற்கான முன் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தரமற்ற காளை களுக்கு ஆண்மை நீக்கம் செய்யப்படுகின்றன. பெருமளவில் கலப்பினக் கால்நடைகள் உற்பத்தி செய்யப்படும்போது கால் நடைகளிடையே மலட்டுப் பிரச்சினையும் உருவாகிறது. எனவே இதனைக் களைந்து பசு பராமரிப்பை இலாபகரமாக இயங்கச் செய்வதற்காகத் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

மாநிலத்தில் ஆங்காங்கே தோன்றும் நோய் நிலைகளை ஆய்ந்து, நோய்த் தோற்றம் பற்றிய முன்னறிவிப்பை களப் பணியாளர்களுக்குக கொடுக்கும் நோக்குடன் இம்மாநிலத்தில் 8 கால்நடை நோய் புலனாய்வு நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இந்நிலையங்கள் திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர், கடலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை மற்றும் நீலகிரி ஆகிய இடங்களில் உள்ளன. தீவிர கால்நடை

[1983 ஏப்ரல் 6

இணைப்பு II

.........611ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

சமூக நலத்துறை.

I

கோரிக்கை எண் 30-ன்கீழ் 1983–84 ஆம் ஆண்டிற்கு ரூ. 59,38,83,000 நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

இத் துறை 1973 ஆம் ஆண்டு சமூக நலத் துறை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதற்கு முன் இத் துறை மகளிர் நலத் துறை என்ற பெயரில் இயங்கி வந்தது. 1955-ல் இத்துறை ஆரம்பித்ததிலிருந்து, இந் துறையின் செயல்பாடுகள் பன்மடங்காக அதிகரித்துள்ளன.

மகளிர் நலத் திட்டங்களை அமுல் படுத்துதல் தவிர, குழந்தைகள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வயது முதிர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்கள் ஆகியோருக்கு உணவு வழங்கும் சத்துணவுத் திட்டத்திற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

2+ முதல் 9+ வயதுவரையிலான குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் தமிழக முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் புறநகர் பகுதிகளில் 1—7—1982 முதலும், நகர்ப்புற பகுதிகளில் 15—9—1982 முதலும் மிகப் பெரிய அளவில் சமூக நலத் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. 15—1—1983 முதல் இச்சிறப்புத் திட்டம் வயது முதிர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் விரிவு படுத்தப் பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோர்க்கும், தகுதிக்குறை உடையவருக்கும் உரிய வேலை வாய்ப்பு அளிப்பதில், சமூகநலத் துறை சிறப்புமிக்க வகையில் பெரும் பங்காற்றியுள்ளது. சிறப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக பெண்களுக்கு அதிலும் குறிப்பாக ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட பெண்களுக்கு, வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆதலின் பெண்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் அளிக்கும் வகையில் பல்வேறு தொழிற்சாலைகளில் பயிற்சி அளிக்க தமிழ்நாடு மகளிர் வேலை வாய்ப்பு வளர்ச்சிக் கழகம் தொடங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

II நிர்வாக அமைப்பு.

மாநில அளவில் சமூக நலத்துறை இயக்குநர் இத்துறைக்கு தலைவராவார். இவருக்கு உதவியாக இரண்டு இணை இயக்கு



நர்களும், ஐந்து துணை இயக்குநர்களும், எட்டு உதவி இயக்குநர்களும், தனிப்பள்ளிகளுக்கு பொறுப்பு வகிக்கும் மேற்பார்வையாளர் ஒருவரும், உடல் ஊனமுற்றோர் மாநில வாரியத்திற்கு பொறுப்பு வகிக்கும் செயலாளர் ஒருவரும், நல அலுவலர்கள் இருவரும் பெட்டிக்கடை வைக்கக் கடன் வழங்கும் தனி அலுவலர் ஒருவரும், வழிகாட்டி நிலையத்திற்கு பொறுப்பு வகிக்கும் தனி அலுவலர் ஒருவரும், கோட்ட வளர்ச்சி அலுவலர் ஒருவரும், கணக்கு அலுவலர்கள் மூவரும், உதவிக் கணக்கு அலுவலர் ஒருவரும் இயக்ககத்தில் இயக்குநருக்கு உதவி புரிகின்றனர்.

மாவட்ட அளவில், மாவட்ட சமூக நல அலுவலர்கள் துறைத் திட்டங்களுக்கும், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணி திட்டங்களுக்கும் பொறுப்பு வகிக்கின்றனர். விரிவாக்க வளர்ச்சி பணி அலுவலர் (சமூக நலம்) மற்றும் ஊர்நல அலுவலர் (மகளிர்) ஊராட்சி ஒன்றிய அளவில் பணிபுரியும் பணியாளர்கள் ஆவர். கைவினைப் பயிற்சியாளர்கள், பயிற்சி நிலையங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்களை நடத்தி வருகின்றனர். குழந்தைகள் நல அமைப்பாளர்கள், குழந்தைகள் நல உதவியாளர்களின் உதவியுடன் பல்வேறு குழந்தை நல மையங்களுக்குப் பொறுப்பேற்றுள்ளார்கள்.

சமூக நலத் துறை இயக்கத்தல் நடைபடும் சேவை இல்லங்கள், கண்காணிப்பாளர்களால் நிருவகிக்கப்படுகின்றன, இதைத் தவிர உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டத்தில் சமூக நலத் துறை உதவி இயக்குநருக்கு சமமாக ஒரு மாவட்ட திட்ட ஊட்டச்சத்து அலுவலரும் அவருக்கு உதவியாக, மதுரை, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில், வட்டார அளவில் 36 வட்டார திட்ட ஊட்டச் சத்து அலுவலர்களும், ஒன்றிய அளவில் 85 பயிற்சியாளர்களும், 430 மேற்பார்வையாளர்களும் ஊட்டச்சத்து மைய அளவில் 4,100 ஊட்ட சத்துப் பணியாளர்களும் 4,100 உதவியாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

மகளிர் நலம்.

தேசியக் கவிஞர் பாரதியார் ''உலகம் நன்மை பெற வேண்டுமெனில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரிசமமான வாய்ப்புக்கள் கொடுக்கப்பட வேண்டும்'' எனக் கூறியுள்ளார். இக்குறிக்கோளை அடைய வேண்டுமானால், பெண்களின்பால் கடைப் பிடிக்கப்படும் சமுதாய அமைப்பின் பழக்க வழக்கங்கள் ஒட்டு மொத்தமாக மாற்றப்பட வேண்டும். அரசு, தனியார் சேவை நிலையங்கள் மற்றும் சமுதாயத்தில் ஒவ்வொரு தனி நபரும் இம்மாதிரியான மாற்றம் நிகழ்ந்திட திடமாக செயல்படல் வேண்டும்.

[1983 ஏப்ரல் 6

இம்மாநிலம் 63 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும் கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர் ஒருவரின் பொறுப்பின் கீழ் உள்ளது. அவர் அக்கோட்டப் பகுதிகளில் நடைபெறும் துறை நடவடிக்கைகளைக் கவனித்து வருகிறார். ஒவ்வொரு கோட்டமும் ஒன்று அல்லது இரண்டு வருவாய் வட்டங்களைக் கொண்டுள்ளது.

இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு நிலையம், ஈச்சங்கோட்டையிலுள்ள அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணை மற்றும் புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணை ஆகியவை கூடுதல் இயக்குநர் ஒருவரின் பொறுப்பின்கீழ் உள்ளது. மாதவரத்திலுள்ள அரசு பால் பண்ணை இணை இயக்குநரையும் ஒரத்தநாட்டிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையையும், இதரதீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கேந்திர கிராம திட்டங்கள் அனைத்திலும், துணை இயக்குநர் ஒருவரின் தலைமையின் கீழ் உள்ளது. இதர பண்ணைகள் அனைத்தும் உதவி இயக்குநர் நிலையிலுள்ள கண்காணிப்பாளர் ஒருவரின் தலைமையின் கீழ் உள்ளது.

(V) வருங்காலத் திட்டங்கள்

1983–84 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டுள்ள திட்டங்களை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்) | எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | புதிய கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்துதல் .. .. | 17.50 | 25 |
| 2. | மருந்தகங்களை, மருத்துவமனைகளாக உயர்த்துதல் .. .. | 6.40 | 3 |
| 3. | மருத்துவமனைகளை, பிரதம மருத்துவமனைகளாக உயர்த்துதல் .. .. | 7.18 | 2 |
| 4. | கால்நடை நோய் புலனாய்வு நிலையங்கள் ஏற்படுத்துதல் .. | 9.64 | 3 |
| 5. | தீவிர கால்நடைப் அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்படுத்துதல் .. | 24.07 | 1 |
| 6. | மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே வசதிகள் அளித்தல் .. .. | 3.30 | 1 |
| 7. | மாவட்டக் கால்நடை பண்ணைகளை வலுப்படுத்துதல் .. | 3.86 | 1 |
| 8. | பண்ணைகளில் அதிக அலுவலர்கள் நியமனம் செய்தல் .. .. | 0.72 | 1 |
| 9. | தலைமையகத்தில் திட்டப் பிரிவு | 0.19 | 1 |
| 10. | தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்துதல் | 4.29 | 2 |
| 11. | எம்.வி.எஸ்.ஸி., பட்டப் படிப்புக்கு அலுவலர்களை அனுப்புதல் .. | 0.77 | அலுவலர்கள் 4 கால்நடை உதவி மருத்துவர்கள் 4 |
| 12. | மலடு நீக்க சிகிச்சையில் பயிற்சியளித்தல் .. .. .. | 0.68 | கால்நடை உதவி மருத்துவர்கள் 60 |
| 13. | கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சியளித்தல் .. .. | 0.01 | 400 |
| 14. | ஆடுகளுக்கு நோய் நீக்கப் பணிகள் அளித்தல் .. .. .. | 17.40 | 2 |
| 15. | இராணிப்பேட்டை கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையில் குளிர்சாதன நிலையம் ஏற்படுத்துதல் .. ... | 3.00 | 1 |
| 16. | இராணிப்பேட்டை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் ஏர்கண்டிஷன் வசதி செய்தல் .. .. | 0.71 | எண்ணிக்கைகள் 5 |
| 17. | கூட்டுறவு பயிற்சிக்கு அலுவலர்களை அனுப்புதல் | 0.80 | அலுவலர்கள் 20 கால்நடை உதவி மருத்துவர்கள் 40 |
| | தொடர் இனச்செலவு மற்றும் தொடரா இனச் செலவுகளின் மொத்தம் | 100.52 | |



[1983 ஏப்ரல் 6]

அரசின் கீழ்க்கண்ட விரிவான திட்டங்களை செயல்படுத்துவதின் மூலம் மகளிர் பொருளாதார ரீதியில் தனித்துவம் பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது :—

(1) கூட்டுறவு மற்றும் உற்பத்தி நிலையங்களில் சமுதாய பொருளாதார அடிப்படையில் முழு நேரம் மற்றும் பகுதி நேரம் வேலை வாய்ப்பளித்து ஊதியம் பெற வகை செய்கிறது.

(2) தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களில் பெண்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு பெறும் திறனை அதிகப்படுத்துதல்.

(3) தகுதியும் தேவையும் உள்ள பெரும் எண்ணிக்கையிலான பெண்களுக்கு பல புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி தருதல்.

(4) பணி புரியும் பெண்கள் இல்லம், சேவை இல்லம், விதவைகளுக்கு தனி உதவி அளித்தல், விதவை மறுமணம் போன்ற பல திட்டங்கள் மூலம் பெண்களுக்கு பல்வேறு வசதிகள் பெற்றிட வாய்ப்பளித்தல்.

(5) மகளிர் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் சட்ட சம்பந்தமான நடவடிக்கைகளை மகளிர் மன்றங்கள் உட்பட பல்வேறு மகளிர் அமைப்புகள் மூலம் எல்லோருக்கும் விளங்கும்படி எடுத்துச் சொல்லுதல்.

1975–76 ஆம் ஆண்டில் மகளிர் நலத்திற்கு என ரூ. 12.03 இலட்சமாக இருந்த நிதி ஒதுக்கீடு 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 118.53 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டில் செய்யப்பட்டு வரும் இந்த சீரான அதிகரிப்பு, பெண்களின் நலம் மற்றும் முன்னேற்றத்திற்கு இந்த அரசு அளித்து வரும் முக்கியத்துவத்தை புலப்படுத்தும்.

**மகளிர் நலத்திற்கான திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு வேலை வாய்ப்பில் மகளிருக்குகான சிறப்புத் திட்டங்கள்**

பெரும்பாலான மகளிர் தொகையில், குறிப்பாக கிராமப் புறங்களில் வசிக்கும் மகளிர் வேலை வாய்ப்பின்றியோ அல்லது தகுதிக்கு குறைந்த வேலையுடனோ இருக்கிறார்கள்.

இவ்வாறு வேலை வாய்ப்பின்றி இருக்கும் மகளிர் பற்றிய பெரும் பிரச்சினை அரசின் கவனத்தை சில காலமாக ஈர்த்து வந்துள்ளது. எனவே, அதிக அளவிலான கிராமப் புற பெண்களுக்கு பயிற்சி அளித்து வேலை வாய்ப்பை அதிகப்படுத்



தும் சிறப்பு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் அவர்களது குடும்ப வருமானத்தை குறைந்தது ஆண்டுக்கு ரூ. 700-க்காவது உயர்த்த வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்காக எளிதாக விற்பனை செய்யக்கூடிய பொருட்களையும் கிராமப் புறங்களில் கிடைக்கும் மூலப் பொருட்களின் உதவியுடன் சிறிய மூதலீட்டுடன் குறைந்த அளவு தொழில் நுட்பம் கொண்ட சில பொருட்களை உற்பத்தி செய்யக் கூடிய தொழில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இம்மாதிரியான திட்டங்கள் மூலம் கிராமப் புற மகளிர்களுக்கு கிராம குடிசைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து, வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி காலங்களில் கிராமப் புற மகளிர், மாதம் ரூ. 50 முதல் ரூ. 75 வரை உதவித் தொகையாக பெறுகிறார்கள். பயிற்சி மற்றும் மூலப் பொருள்களின் செலவினங்களை அரசே ஏற்றுக் கொள்கிறது.

தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான மூலதனம் மற்றும் இயந்திரங்கள், உதிரிப் பாகங்களை வாங்குவதற்கு அரசு மானியம் அளிப்பதோடு நிர்வாக உதவியும் அளிக்கிறது. இது வரை இத்திட்டத்தின் மூலம் 4,747 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2,682 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(1) **தீப்பெட்டித் தொழிற்சாலை**

இது வரை 258 மகளிர் தீப்பெட்டி தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களும், 7 தீப்பெட்டி தொழிற் சங்கச் சேவைக் கூடமும் பதிவு செய்யப்பட்டுள்ளன. சுமார் 3,782 மகளிர் இத்துறையில் தொழில் பயிற்சி பெற்றுள்ளார்கள். மதுரை, இராமநாதபுரம், தருமபுரி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற் கூடங்கள் உற்பத்தியை தொடங்கிவிட்டன. இது வரை, 92 தீப்பெட்டி தொழிலாளர் கூட்டுறவு தொழிற் சங்கங்கள் தீப்பெட்டிகளை தயாரித்து வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மேலும் ஒரு தொழிற்சங்க சேவைக் கூடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. விற்பனை தேக்கம் ஏற்பட்ட காரணத்தால் இத்தொழில் கூடத்தினை விரிவு செய்யும் திட்டம் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். மீதமுள்ள சங்கங்களில் தீப்பெட்டி உற்பத்தியை தொடங்குவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

**4. உணவு விடுதிகள் ஆரம்பிக்க விதவைகளுக்கு உதவி.**

ஏழை மக்களின்பால் அரசு கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்தும் வகையில் இட்லி, தோசை, தயிர்சாதம், எலுமிச்சை சாதம் போன்ற அன்றாட உணவு வகைகள் மலிவு விலையில் கிடைப்பதற்கு, பெரிய தொழிற் கூடங்கள், கல்லூரிகள், பேருந்து நிலையங்கள், அலுவலகங்கள் போன்ற இடங்களில் உணவு விடுதிகள் ஆரம்பிக்க விதவைகளை ஊக்குவிக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. இத்தகைய உணவு விடுதிகளை ஆரம்பிக்க விரும்பும் விதவைகளுக்கு உணவு தானியங்கள், எண்ணெய் மற்றும் பிறபொருட்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்கப்படும். இதைத் தவிர, இத்திட்ட மூலதன செலவுத் தொகை 25 சதவீதம் உதவித் தொகையாக சமூக நலத்துறை வழங்கவும் மீதமுள்ள 75 சதவிகித மூலதனத் தொகையை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 60 விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

**5. தொழில் துறையில் பெண்களுக்கு அதி நவீனமான பயிற்சி அளித்திடும் திட்டம்.**

மின்சாரம், மின்னணு மற்றும் சிறு இரசாயன பொருட்கள் தயாரித்தல் போன்ற மிக அதிநவீனமான துறைகளில் பெண்களுக்கு பயிற்சி அளித்தும், இத்திட்டத்தில் அவர்கள் இதற்கான தொழில்துறையில் சிறந்து விளங்கிடவும் அதிக அளவில் சுய வேலை வாய்ப்பு நிறுவனங்களின் உடமையாளர்களாக ஆக வேண்டியதை உணர்ந்து கீழ்க்கண்ட திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

**5. (i) மின்னணுத் தொழில்:**

மின்னணுத்துறையில் 30 பெண்களுக்கு பயிற்சி அளித்திட ரூபாய் 63,000 செலவில்இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 29 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மின்னணுவில் நேரடி பயிற்சி தந்திடவும் தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி, ஒலிபெருக்கி, இசைத்தட்டுப் பெட்டி ஆகியவைகளைப் பழுது பார்ப்பதிலும் மற்றும் டிரான்சிஸ்டர் வானொலிப் பெட்டிகள் பொருத்துவதிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிக் காலத்தில் பெண்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100 வீதம் 9 மாதங்களுக்கு உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. இதற்கான ஒரு பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதில் வியாபார நிர்வாகம், நிதி, விற்பனை மற்றும் விற்பனைத்திறன் முதலிய பாடங்கள் சேர்க்கப்பட்டு இவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னை போன்ற நகரங்களில் இத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற பெண்களுக்கு





வேலை வாய்ப்பு அதிகம் உள்ளது. இதன் மூலம் பெண்கள் தங்களுக்கென்று ஒரு தொழிற்கூடம் நிறுவிட வாய்ப்புண்டு. இப்பெண்கள் தொழிற் துறையில் முன்னேறிட தேவையான உதவிகள் செய்திடவும் திட்டம் உள்ளது.

**5. (iii) சிறிய அளவில் இரசாயனப் பொருட்கள் தயாரித்தல்.**

ரசாயனப் பொருட்களான சலவைச் சோப்புகள், எழுதும் மை, கிருமி நாசினிகள், கற்பூர வில்லைகள், பால் பாயிண்டு பேனாக்களுக்கு உபயோகப்படும் ரீபில்கள், துப்புரவு தூள்கள் முதலியவற்றை தயாரிப்பதில் 30 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதற்கான ஒரு திட்டம் சென்னையில் கிண்டியிலுள்ள சிறு தொழில் சேவை நிலையத்துடன் இணைந்து செயல்பட அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது 1983-84 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும். இப் பயிற்சித் திட்டம் மேற்கூறிய இரசாயனப் பொருட்களைத் தயாரிப்பதில் கருத்தியல் மற்றும் செயல்முறை பயிற்சிகள் கொண்டுள்ளது. இப்பயிற்சித் திட்டத்திற்கு மொத்தச் செலவுத் தொகை ரூபாய் 16,000 ஆகும்.

**8. பெண்களுக்கான மற்ற வாழ்க்கைத் தொழில் பயிற்சிகள்.**

**1. தட்டச்சுப் பயிற்சி.**

ஆண்டு வருமானம் ரூபாய் 3,000-க்கு குறைவாக உள்ள குடும்பங்களிலிருந்து வரும் 16 முதல் 30 வயது வரையிலான பெண்களின் நலன் கருதி 1977-78-ல் இத்திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் அனைவருக்கும் மாதம் ரூபாய் 15 வீதம் பத்து மாதங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ரூபாய் 1.52 இலட்சம் செலவில் 1,000 ஏழைப் பெண்கள் பயன் பெறுகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் 5,700 பெண்கள் இதுவரையிலும் பயனடைந்துள்ளார்கள்.

**2. கணக்குப்பதிவு மற்றும் கணக்குத் துறையில் பயிற்சி அளித்தல்.**

ஆண்டொன்றுக்கு ரூபாய் 3,000-க்கு குறைவான வருவாய் பெறும் குடும்பத்திலுள்ள மகளிருக்கு கணக்குத் துறையில் பயிற்சி அளிப்பதற்காக 1981-82-ம் ஆண்டில் அரசு இத்திட்டத்தை அங்கீகரித்தது. பயிற்சித் தொகை தேர்வுக் கட்டணம் மற்றும் எழுது பொருட்களுக்கான செலவு தொகையாக ஆறுமாத கால பயிற்சிக்கு (கீழ்நிலை) நபர் ஒருவருக்கு ரூ. 165 கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 1,000 பெண்கள் பயன்

(2) பனை பொருள் தொழில்கள்

தருமபுரி மாவட்டத்தில் 10 தொழில் கூட்டுறவு சங்கங்களில் பனை பொருள் தொழில் சம்பந்தமாக பதிவு செய்யப்பட்டு, 250 மகளிருக்கு வேலை வாய்ப்பளிக்கத் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பத்து கூட்டுறவு சங்கங்களும் சமீப காலத்தில் உற்பத்தியை ஆரம்பித்து 142 மகளிருக்கு வேலை வாய்ப்பளிக்கின்றன.

(3) நோட்டு புத்தகம் தயாரிப்பு

இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 15 தொழிற்கூடங்கள் 750 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவைகளில், எட்டு தொழிற் கூடங்கள் சென்னை நகரம், தாம்பரம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, காஞ்சிபுரம் மற்றும் ஈரோடுஆகிய இடங்களில் உற்பத்தியைத் தொடங்கி இதுவரையில் 300 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 தொழிற் கூடங்கள் வருகின்ற ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

(4) சாக்கடி உற்பத்தி

அரசால் அனுமதிக்கப்பட்ட 10 தொழிற் கூடங்களில் 9 கூடங்கள் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளன. இவைகளில் 7 தொழிற் கூடங்களில் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 200 மகளிர் பயன் பெறுவார்கள். மீதமுள்ள ஒரு தொழிற் கூடமும் பதிவு செய்யப்படவுள்ளது. மற்ற இரண்டு தொழிற் கூடங்கள் 1983-84-ல் உற்பத்தி தொடங்க இருக்கின்றன.

(5)கிராம நூற்பாலைகள்

மதுரை மாவட்டத்தில் 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 41,000 செலவில் ஒரு கிராமப்புற நூற்பு ஆலை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 25 கிராமப்புற மகளிர் பயனடைவார்கள்.

(6) சாக்கட்டி மற்றும் மெழுகுவர்த்தி கூடம்

3 சாக்கட்டி மற்றும் 3 மெழுகுவர்த்தி தொழிற் கூடங்கள் இராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 120 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் திட்டமிடப்பட்டு அவைகள் உற்பத்தியை தொடங்கியுள்ளன.



(7) மற்ற திட்டங்கள்.

(1) கயிறு தயாரிப்பு.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூபாய் 6.61 இலட்சம் செலவில் ஒரு கயிறு தயாரிக்கும் தொழிற் கூடமும் ஒரு கயிறு தயாரிக்கும் பயிற்சி நிலையமும் தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது. இது வரை 75 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது பயிற்சியின் 4-வது அணியாக மேலும் 25 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி பெற்ற மகளிருக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக தஞ்சாவூர் மாவட்டம் நல்லூரில் கயிறு தயாரிக்கும் சங்கம் ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்கூடம் இவ்வாண்டில் உற்பத்தியைத் தொடங்கி 40 மகளிருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது.

(2) பட்டுப்புழு வளர்ப்பு.

கழிவு பட்டிலிருந்து நூல் தயாரிக்க ஒரு திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 50 மகளிருக்கு பட்டுநூல் தயாரிப்பதில் பயிற்சி அளிக்கப்பட்டு பின்னர் அவர்கள் வேலை வாய்ப்பினை பெற்றிட பட்டுத் தொழில் வளர்ச்சி இயக்குநரால் இது வரையில் இரண்டு பட்டுப்புழு வளர்ப்பு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் 1983-84-ல் உற்பத்தி தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(3) தையற் கலைச் சங்கம்.

ஆதரவற்ற மற்றும் விதவை மகளிருக்கு சமூகநலத்துறையில் இலவசமாக வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களின் மூலம் போதுமான வேலை கிடைக்கப் பெறாமையால் இவர்களுக்கு வருமானம் கிடைத்திட மாநிலம் முழுவதும் மண்டல ரீதியாக தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவ தீர்மானிக்கப்பட்டு உள்ளது. அனுமதிக்கப்பட்ட 4 சங்கங்களில் ஒன்று சென்னை நகரில் பதிவு செய்யப்பட்டு 1981-82-ம் ஆண்டு முதல் துவங்கப்பட்டு இலாபகரமாக இயங்கி வருகிறது. இதன் மூலம் 250 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இரண்டாவது தையற்கலை கூட்டுறவுச் சங்கம் தஞ்சாவூரை தலைமையகமாகக் கொண்டு டிசம்பர் 1982-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 தையற் கலைக் கூட்டுறவுச் சங்கங்கள் மதுரையிலும், ஈரோட்டிலும் இந்த ஆண்டு முடிவுக்குள் பதிவு செய்யப்பட உள்ளன. இந்த நான்கு சங்கங்களும் 1,000 பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பிற்பட்டோர் நலத்துறைகளைச் சார்ந்த மாணவியர்களுக்குச் சீருடைகள் தைக்கும் பணி இந்தத் தொழிற் கூட்டுறவு சங்கங்களிடம் ஒப்படைக்கப்படும். தவிர, இச் சங்கங்கள் தனியார் மூலம் கிடைக்கும் வேலைகளையும் ஏற்றுச் செய்யும்.

அடைகின்றனர். 1982-83-ல் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ. 1.65 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1,455 பெண்கள் இதுவரை இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

3. சுருக்கெழுத்துப் பயிற்சி.

ஆண்டொன்றுக்கு ரூ. 3,000-க்கு குறைவான வருவாய் பெறும் குடும்பத்திலுள்ள மகளிருக்கு சுருக்கெழுத்துப் பயிற்சி அளிப்பதற்கான ஒரு திட்டம் 1982-83 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பயிற்சித் தொகை தேர்வுக் கட்டணம் மற்றும் எழுது பொருட்களுக்கான செலவுத் தொகையாக ஒரு வருட கால பயிற்சி நபர் ஒருவருக்கு ரூ. 220 கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டு தோறும் 500 பெண்கள் பயனடைவர். இத்திட்டத்திற்காக 1983-84 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.01 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்கள்.

தையல், கம்பளி நெசவு, பனை ஓலை, பாய் பின்னுதல், ஐமுக்காளம் நெய்தல், மூங்கில் மற்றும் பிரம்பு பொருட்கள் உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தி கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் ஆதரவற்ற 18 முதல் 35 வயதுக்குட்பட்ட மகளிருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியானது வேலை வாய்ப்பினை அளிப்பதோடு, அவர்களது குடும்பத்தின் வருமானத்தினை அதிகரிக்கவும் வகை செய்கிறது. இப் பயிற்சியின்போது பயிற்சியாளர்களின் சில்லரை செலவினங்களுக்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 30 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

ஒரு வருட கால பயிற்சி முடித்தவர்கள் ஒவ்வொரு டிசம்பர் மாதத்தில் அரசால் நடத்தப்படும் தொழில் நுட்ப தேர்வுகளை எழுத வழிவகை செய்யப்படுகிறது. இத்தேர்வில் வெற்றியடைவோர் அரசு நிறுவனங்களில் வேலைகள் பெறும் வாய்ப்பினைப் பெறுவர்.

தற்போது 53 உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களும், 4 உற்பத்தி நிலையங்களும் சமூக நலத் துறையின்கீழ் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக 1983-84 ஆம் ஆண்டிற்கு ரூ. 16.76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 900 பெண்கள் இவ்வுற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி பெறுகிறார்கள். இதைத் தவிர பழங்குடியினர் பகுதிகளில் 4 தையல் பயிற்சி நிலையங்கள், அத்திப்பட்டு (வட ஆற்காடு மாவட்டம்) கொல்லிமலை, கல்ராயன் மலை மற்றும் ஏற்காடு (சேலம் மாவட்டம்) ஆகிய இடங்களில் நடத்தப்படுகின்றன.



9. சேவை இல்லங்கள் :

(1) அரசினரால் நடத்தப்படும் சேவை இல்லங்கள்.

தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களில் ஐந்து சேவை இல்லங்கள் இத்துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவை 18 முதல் 40 வயதிற்குட்பட்ட விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் சமூக பொருளாதார நிலையில் பின்தங்கிய மகளிர் ஆகியோரின் நலனுக்கென செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கூறிய தகுதியுள்ள மகளிருக்கு, எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு கல்வி பயிற்சி, குறுகியகால பயிற்சி, தையற்கலை, ஆடை தயாரித்தல், சித்திரப்பூ தையல் மற்றும் நெசவு ஆகிய தொழிற் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. பயிற்சியாளர்கள், தங்களுடைய இரண்டு குழந்தைகளுடன் அதிகபட்சம் மூன்று ஆண்டுகள் தங்கி படிக்க பயிற்சிபெற அனுமதிக்கப்படுகிறார்கள். பயிற்சி காலத்தின்போது ஒவ்வொரு மகளிருக்கும் ரூ. 50-ம் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 36-ம் மாத உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இது தவிர உடைகள் வாங்குவதற்கென ஒவ்வொரு மகளிருக்கும் வருடத்திற்கு ரூ. 60-ம் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 35-ம் வழங்கப்படுகிறது.

ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் பயிற்சியாளருக்கு புத்தகம் மற்றும் குறிப்புப் புத்தகம் வாங்குவதற்கென வருடத்திற்கு ரூ. 40-ம் ஒன்பதாம் மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலுவோருக்கு வருடத்திற்கு ரூ. 60-ம் பயிற்சியாளரின் குழந்தைகள் ஐந்தாம் வகுப்புவரை படிக்க புத்தகங்களுக்கென ரூ. 15-ம் வழங்கப்படுகிறது. இத்தகைய பயன்களை ஐந்து சேவை இல்லங்களிலும் உள்ள 630 மகளிர் மற்றும் 250 குழந்தைகள் பெறுகின்றனர். இந்த திட்டத்திற்காக ரூ. 17.19 இலட்சங்கள் 1983-84 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

தாம்பரம் சேவை இல்லத்தில் 30 உடல் ஊனமுற்ற மகளிரும் 20 உடல் ஊனமுற்ற சிறார்களும் சேர்க்கப்பட்டு ஒரு தனிப் பிரிவாக இயங்கி வருகிறது. அவர்களில் எட்டாம் வகுப்புகூட முடிக்க இயலாதவருக்கு வீட்டு வேலை மற்றும் வீட்டைக் கண்காணிக்கும் கலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை இரண்டு பிரிவுகளில் மொத்தம் 50 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். பயிற்சி காலத்தின்போது ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

சேவை இல்லத்தில் தங்காமல் வீட்டிலிருந்து வந்து போகும் மகளிரின் நலனுக்கென ஒவ்வொரு இல்லத்திற்கும் 20 மகளிர் என்ற அளவில் தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூரில் தட்டச்சு

[1983 ஏப்ரல் 6

சுருக்கெழுத்து மற்றும் செயலகப் பயிற்சி வழங்கப்படுகிறது. ஓராண்டிற்கான இப்பயிற்சிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

தாம்பரம் சேவை இல்லத்தில் நாளொன்றுக்கு நபருக்கு ரூ. 3 என்ற கூலி விகித அடிப்படையில் ஆயத்த ஆடைகள் தயாரிப்புக் கேந்திரம் ஒன்று 15 மகளிருடன் நடத்தப்படுகிறது.

1981—82-லிருந்து மேல்நிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் மூன்றாம் பிரிவு பாடத்திட்டத்தில் 30 பயிற்சியாளருக்கு மேல்நிலைக் கல்வி வழங்கப்படுகிறது. இத்திட்டம் இவ்வில்லத்தில் ஆகஸ்டு 1981-லிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகள் மட்டும் நடத்தப்படும் இப்பயிற்சி பிரிவினருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50 உதவித் தொகையாகவும் ஆண்டொன்றுக்கு ரூ. 60 ஆடைகளுக்கான படியாகவும் வழங்கப்படுகிறது.

(2) இடைநிலை ஆசிரியை பயிற்சித் திட்டம், பல்லாவரம்.

இடைநிலை ஆசிரியைப் பயிற்சியளிக்க பல்லாவரத்தில் சமூக நலத் துறையினால் ஒரு பள்ளி நடத்தப்படுகிறது. சேவை இல்லங்கள் மூலமாகவும் அரசு உதவிபெறும் தனியார் நிறுவனங்கள் மூலமும் பத்தாம் வகுப்பு தேர்வு பெற்ற வயதடைந்த மகளிர் இப்பயிற்சியில் சேரத் தகுதி பெற்றவர்கள். இப்பயிற்சி வகுப்புகள் பிரிவு ஒன்றுக்கு 40 பேர் கொண்ட இளநிலை மற்றும் முதுநிலைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டாண்டு பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

(3) மதுரை மற்றும் ஈரோடு சேவை இல்லங்கள்.

மதுரையில் மதுரை சேவாசிரமம் மற்றும் பெரியார் மாவட்டத்திலுள்ள கஸ்தூரிபா சேவிகாசிரமம், ஈரோடிலும் முறையே ஜூன் 1981-லும் நவம்பர் 1981-லும் சேவை இல்லம் துவக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு சேவை இல்லத்திலும் 10-ம் வகுப்புத் தேர்ச்சிக்கென இரண்டாண்டு குறுகிய காலக் கல்விப் பயிற்சி 40 பெண்களுக்கு அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ. 50 உதவித் தொகையாகவும், ரூ. 15 மொத்த மான்யமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.



1983 ஏப்ரல் 6]

ஒரு பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியை மற்றும் ஒரு தமிழாசிரியருக்கு வழங்கப்படும் ஊதியத் தொகையும் மான்யமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1983—84 ஆம் ஆண்டுக்கு ரூ. 1.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(4) சேவை இல்லம் நடத்த தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி அளித்தல் :

சமூக மற்றும் பொருளாதார நிலையில் பின் தங்கிய மற்றும் உடல் ஊனமுற்ற பெண்களின் நலனுக்காக நடத்தப்படும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிப்பதும் சமூக நலத்துறையின் பணிகளில் அடங்கும்.

சேவை இல்லங்கள் நடத்த தனியார் நிறுவனங்களுக்கு மான்யம் அளிக்கப்படுகிறது. மதுரை மாவட்டம் காந்தி கிராமத்திலுள்ள கஸ்தூரிபா சேவிகாசிரமம் என்னும் நிறுவனத்திற்கு சேவையில்லத்தில் வயது வந்த சமுதாயத்தில் பின்தங்கிய மகளிருக்கு 10-ம் வகுப்பு குறுகிய காலக் கல்விப் பயிற்சி அளிப்பதற்காக மாணவிகளின் உதவித் தொகை மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் ஊதியத் தொகை ஆகியவை மான்யமாக அளிக்கப்பட்டு வருக்கிறது. ஒரு மாணவிக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 50 வீதம் உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

சமூகத்தில் பின் தங்கிய பெண்களுக்கு தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து போன்ற வாழ்க்கை தொழிற்கல்விப் பயிற்சி, சென்னையிலுள்ள ஸ்திரி சேவா மந்திர் என்னும் தொண்டு நிறுவனத்தில் அளிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு 1983—84 ஆம் ஆண்டுக்காக ரூ. 2.66 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(5) வருடாந்திர மான்யம் :

சமூக நலப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தொண்டு நிறுவனமான இந்தியன் கவுன்சில் ஆப் சோஷயல்வெல்பேர் (தமிழ் நாடு) சென்னைக்கு வருடாந்திர மான்யமாக ரூ. 2,000 கொடுக்கப்பட்டு வருகிறது.

10. விடுதிகள் :

(i) பணிபுரியும் மகளிருக்கென அரசால் நடத்தப்படும் விடுதிகள்

குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவைச் சேர்ந்த பணிபுரியும் மகளிருக்கு உணவு மற்றும் தங்கும் வசதிகளை, அளித்திட பணிபுரியும் மகளிருக்கான விடுதிகளை அரசு இத்துறை மூலம் நடத்தி வருகிறது. மாநில அளவில் பணிபுரியும்

மகளிருக்கென 6 விடுதிகள் உள்ளன. சென்னை எழும்பூரில் உள்ள விடுதியில் 35 பணிபுரியும் மகளிரும், சென்னை (கிண்டி), திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் உள்ள விடுதிகள் ஒவ்வொன்றிலும் 50 மகளிரும் இதன்மூலம் பயன்பெறுகிறார்கள். மொத்தம் 285 பணிபுரியும் மகளிர்கள் இந்த சலுகையினால் பயன் பெறுகின்றனர்.

இவ்விடுதியை நடத்துவதற்கென நிர்வாகப் பணியாளர்கள், ஒரு கண்காணிப்பாளர், இரண்டு சமையலாளர்கள், ஒரு அடிப்படை பணியாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு துப்புரவு பணியாளர் ஆகியவர்களின் ஊதியம் விடுதி கட்டிட வாடகை ஆகிய செலவுகளை அரசு மேற்கொள்கிறது. உணவுச் செலவு, மின்சாரக் கட்டணம் மற்ற இதர செலவுகளை பணிபுரியும் மகளிரிடமிருந்து சம அளவில் பகிர்ந்து வழங்கும் முறையின் மூலம் பிடித்தம் செய்து ஈடு செய்யப்படுகிறது. விடுதியின் வாடகைத் தொகையும் விகிதாசார முறைப்படி பணிபுரியும் மகளிரிடமிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

1983-84-ம் ஆண்டிற்கு இந்தத் திட்டத்திற்காக ரூ. 3.11 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) பணிபுரியும் பெண்கள் விடுதி கட்டுதல்.

மத்திய அரசானது எந்த இடங்களில் 2 இலட்சத்துக்குமேல் ஜனப்பெருக்கம் உள்ளதோ அந்த இடங்களில் உள்ள தொண்டு நிறுவனங்கள், நகராட்சிகள் மற்றும் கூட்டுறவு இயக்கங்கள் ஆகியவற்றிற்கு பணிபுரியும் பெண்கள் விடுதி கட்டுவதற்கான மான்யம் கொடுத்து வருகின்றது. பணிபுரியும் பெண்கள் விடுதி கட்ட முன்வரும் தொண்டு நிறுவனங்கள் அந்தந்த நகராட்சி/மாநகராட்சியிலிருந்து முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். மற்றும் இவ்விடுதி கட்டுவதற்கென ஏற்கனவே அரசிடமிருந்தோ பிற நிறுவனங்களிடமிருந்தோ மான்யம் பெற்றிருக்கக் கூடாது. கட்டிட மதிப்பில் 75%ஐ மத்திய அரசும் 15%ஐ அல்லது ரூ. 35,000 இதில் எது குறைவோ அத்தொகையை மாநில அரசும் மான்யமாக கொடுத்து வருகிறது. மீதி 10% தொகையை தொண்டு நிறுவனங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

11. மகளிர் நலத்திற்கான இதரத் திட்டங்கள்.

(i) மகளிர் மன்றம்.

மாநில அளவில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் 11,250 மகளிர் மன்றங்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் வருடத்திற்கு மகளிர் மன்ற பணிகளுக்கு ரூ. 4,000 நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மகளிர் மன்ற அமைப்பாளருக்கு ஒரு காலாண்டுக்கு ரூ. 15 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது.



1983-84-ம் ஆண்டிற்கு ரூ. 15.04 இலட்சம் இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மகளிர் மன்றங்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த மகளிர் மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 1,000, ரூ. 600 மற்றும் ரூ. 400 என மூன்று வகையான ஊக்கப் பரிசு வழங்கப்படுகிறது. இதற்கென ரூ. 75,000, 1983–84-ம் வருடத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(ii) விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் வழங்கும் திட்டம்.

ஆண்டு வருமானம் ரூ. 3,000க்கும் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் வழங்கப்படும் திட்டம் 1978-79-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

ஆரம்பப் பள்ளியில் பயிலும் விதவைகளின் குழந்தைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 15-ம் நடுநிலை பள்ளியில் பயிலுவோருக்கு ரூ. 40ம் உயர்நிலைப்பள்ளியில் பயிலுவோருக்கு ரூ. 60ம் வழங்கப்படுகிறது. இது வரை 12,830 குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளார்கள். ஆண்டொன்றுக்கு ரூ. 1,01,000 வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேலும் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் விதவைகளின் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் இத் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 100 என்ற அளவில் ரூ. 1 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுதோறும் 1,000 விதவைகளின் குழந்தைகள் பயன்பெறுவார்கள். இது வரை 1,384 குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர். வருடத்திற்கு ரூ. 1 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் தொடரும்.

(iii) ஆதரவற்ற விதவைகளின் மகள்களுக்குத் திருமணம்செய்ய உதவி.

வருட வருமானம் ரூ. 3,000க்கும் குறைவாக உள்ள விதவைகள் குடும்பத்தில் அவர்களுடைய 18 முதல் 30 வயதிற்குட்பட்ட பெண்களுக்குத் திருமணம் நடக்கும் பொழுது திருமணச் செலவினங்களை சமாளிக்கும் பொருட்டு இத்திட்டம் 1981-82-ம் ஆண்டு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,000 குடும்பங்கள் பயன் பெறும். ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 வழங்கப்படும். ஒரு விதவையின் ஒரே ஒரு மகள் (மணமகள்) இவ்வுதவி பெறத் தகுதியுடையவர் ஆவர். சென்னை நகரத்தில் சமூக நல இயக்குநராலும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளராலும் இந்த உதவி பெற தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## VI குழந்தைகள் நலன்.

1962 ஆம் ஆண்டு தமிழகத்தில் தொடங்கப்பட்ட பள்ளி
முன்னிலை கல்வித் திட்டம் காலப்போக்கில் வளர்ச்சியடைந்து,
30-6-1982 அன்று தமிழகம் முழுவதும் 4,343 குழந்தை நல
நிலையங்கள் செயல்பட்டு வந்தன. 1-7-1982 முதல் இக்குழந்தை
நல நிலையங்கள் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்
திட்டத்துடன் இணைந்தன.

### 1. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்:

ஊட்டச் சத்தின்மையால், ஏழைக் குழந்தைகளிடையே
காணும் சுகாதார கேடுகளை போக்கும் வகையில் வறுமைக்
கோட்டுக்குக்கீழேவாழும் குழந்தைகளின் நலன்கருதிமுதலமைச்சர்
குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்
திட்டத்தின் கீழ் 2 வயது முதல் 4 வயது வரையிலான குழந்தை
களுக்கு ஒவ்வொரு நாளும் இலவச மதிய சத்துணவு வழங்கப்
படுகிறது. அரசு விடுமுறை நாட்களான தீபாவளி, கிருஸ்துமஸ்,
பொங்கல் போன்ற முக்கிய பண்டிகை தினங்களைத் தவிர வரு
டத்தில் மற்ற எல்லா நாட்களுக்கும் குழந்தைகளுக்கு மதிய சத்
துணவு வழங்கப்படுகிறது. இந்த பண்டிகை தினங்களில் மட்டும்
தயார் செய்யப்பட்ட உணவு பொட்டலங்கள் முதல் நாளே
வழங்கப்படுகின்றன. நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறங்களிலும்
வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் குடும்பங்களிலிருந்து வரும்
குழந்தைகள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில்
அமைந்த இத்தனி சிறப்புத் திட்டத்தால் தமிழகம் முழுவதிலும்
வாழும் அனைத்து ஏழைக் குழந்தைகளும் பயன்பெறுகின்றனர்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 1-7-1982
முதல் கிராமப்புறங்களிலும் 15-9-1982 முதல் நகர்ப்புறங்களி
லும் செயல்பட்டு வருகிறது. சமூக நலத்துறை 2 வயது
முதல் 4 வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவச மதிய
உணவை இத்திட்டத்தின்கீழ் அளித்து வருகிறது.

சத்துணவில் இருக்கவேண்டிய உணவுப் பொருட்களின
அளவுகள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| அரிசி .. .. .. | 80 கிராம் |
| பருப்பு .. .. | 10 கிராம் |
| எண்ணெய் .. .. | 7 கிராம் |
| காய்கறிகள் மற்றும் தாளிதம் .. | 50 கிராம் |

இந்த உணவு சாம்பார் சாதம், தயிர் சாதம், கிச்சடி போன்ற
வகைகளில் வழங்கப்படுகிறது. மேலே காணும் உணவுப்பொருட்
கள் ஒவ்வொரு குழந்தைக்கும் 411 கலோரியை அளிக்கும்.





முப்பது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப்
பகுதிகளை உள்ளடக்கிய இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு
வரும் 27,840 குழந்தை நல நிலையங்கள் மூலம் 2 முதல்
4வயதுவரையிலான 22.66 இலட்சம் குழந்தைகள் பயன் பெறு
கின்றனர்.

#### அ. பள்ளி முன்னிலைக் கல்வி.

மதிய சத்துணவு அன்றி கல்வி உகரபணங்கள் மூலம் பள்ளி
முன்னிலை கல்வியும் இக்குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்றது.
குழந்தை கல்வியில் பயிற்சி பெற்ற குழந்தைநல அமைப்பாளர்கள்
சுகாதார பழக்க வழக்கங்கள், மொழி, விளையாட்டு, கதை மற்
றும் பாடல்களை இக்குழந்தைகளுக்கு கற்பிக்கின்றனர்.

#### இ. சுகாதாரம்.

ஆரோக்கியமான குழந்தைகளை உருவாக்கும் பொருட்டு
சுகாதார பணிகளும், குழந்தை நல நிலையங்கள் மூலம் செய்யப்
படுகின்றன. ஒவ்வொரு நிலையத்திற்கும் வழங்கப்படஇருக்கிற
எடை காட்டும் கருவி மூலம் குழந்தைகளின் எடைகள் எடுக்கப்
படுவதுடன் மருத்துவ சோதனைகளும் அவர்களுக்கு செய்யப்
படும்.

இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்காக
சமூக நலத்துறைக்கு 1982-83 ஆம் நிதியாண்டிற்கு ரூபாய் 21.04
கோடியும் 1983-84 ஆம் நிதியாண்டிற்கு ரூபாய்
29.56 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் பயனாக
73,787 மகளிர், குழந்தை நல அமைப்பாளர்களாகவும், குழந்தை
நல உதவியாளர்களாகவும் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.
இவர்களில் 20,531 பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி
வகுப்பைச் சேர்ந்தவர்கள். 10,507 பேர் விதவைகள், மற்றும்
3,416 பேர் ஆதரவற்றவர்கள்.

உடலாலும் உள்ளத்தாலும் ஆரோக்கியமான குடிமக்களை
உருவாக்கும் நற்பணிக்காக ஏராளமான பொருட் செலவிலான
இததிட்டத்தை தமிழக அரசு தொடங்கி உள்ளது. ஆரோக்கிய
மான குடிமக்களை உருவாக்க குழந்தைகளுக்கு அளிக்கப்படும்
சத்துணவு மாநில அரசின் தேசிய கடமையாக அமைந்த
தோடன்றி ஏழை எளியோரின் ஏற்றத்திற்கு பாடுபடவேண்டும்
என்ற மாண்புமிகு தமிழக முதல்வரின் உன்னத இலட்சியத்தின்
ஓர் வடிவாகவும், மாண்புமிகு பாரதப் பிரதமரின் 20 அம்ச பொரு
ளாதாரத் திட்டத்தின் அடிப்படை வெற்றியாகவும் அமைந்
துள்ளது.

### 2. பழங்குடியினருக்கான உப திட்டத்தின்கீழ் குழந்தைநல நிலையங்கள்.

பழங்குடியினர் குழந்தைகளுக்கென்று தனிப்பட்ட முறை
யில் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலை,
வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலை, சேலம்

1983-84ம் ஆண்டிற்கு இந்தத் திட்டத்திற்காக ரூ.10 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(iv) விதவை மறுமணத் திட்டம்.

இத்திட்டத்தில் விதவை மறுமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு கணவன் மனைவி இருவர் பெயரிலுமாக ரூ. 5,000-க்கான 7 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 18 முதல் 30 வயதிற்குள்ளாக உள்ள விதவைகளை மறுமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு மட்டுமே பொருந்தும். கணவனால் விவாகரத்து செய்யப்பட்ட அல்லது கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுதல் இயலாது. இத்திட்டம் 1975-76-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1981-82ம் ஆண்டு வரை 894 தம்பதிகள் பயனடைந்துள்ளனர். 1982-83ம் ஆண்டில் 100 தம்பதிகள் இத்திட்டத்தின்கீழ்பயன்பெற்றுள்ளனர். 1983-84-ம் ஆண்டிற்கு ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(v) தையல் இயந்திரங்கள் வழங்குதல்.

இத்திட்டத்தின் கீழ் 20 முதல் 40 வரையிலான வயதுடைய ஆதரவற்ற கைம்பெண்கள் சமூகத்தில் பின்தங்கிய மகளிர், உடல் ஊனமுற்ற மகளிர், ஆடவர் ஆகியோர் தையல் கலையில் பயிற்சிப் பெற்றிருப்பின், இவர்கள் பிழைப்புக்கு வழிதேடும் பொருட்டு தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1983-84ம் ஆண்டிற்கு ரூ. 6 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 5,500 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

(vi) பிச்சைக்காரர் விடுதி, மேல்பாக்கம்.

மேல்பாக்கத்திலுள்ள விடுதியானது பிச்சைக்காரர்களுக்காக நடத்தப்பட்டு வருகிறது. இவ்விடுதியில், தமிழ்நாடு பிச்சை எடுப்பதை தடுக்கும் சட்டம் 1945-ன் கீழ் பிடிக்கப்பட்டு தண்டனை அடைந்த பிச்சைக்காரர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். 1973-ம் ஆண்டிலிருந்து இவ்விடுதி சமூக நலத்துறையின்கீழ் செயல்பட்டு வருகிறது. இவ்விடுதிக்கென்று ஒப்பளிக்கப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கை 770 ஆண்கள், 180 பெண்களாகும். ஆனால் தற்போதுள்ள எண்ணிக்கை 178 ஆண்கள், 54 பெண்கள் மட்டுமே ஆகும். விடுதி உறுப்பினர்களுக்கு நெசவு, தச்சு வேலை தையற்கலை போன்ற வாழ்க்கைக்கு உதவிகரமான பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது. 1983-84-ம் ஆண்டிற்கு ரூ. 8.37 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(vii) சமூக நலத்துறை வழிகாட்டி நிலையம்.

சமூக நலத்துறையின் கீழ் 1978 பிப்ரவரி திங்கள் முதல் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் வழிகாட்டி நிலையங்கள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.



விதவை பெண்களுக்கு அவர்களின் இறந்துபோன கணவன்மார்களுக்கு சேரவேண்டிய ஆயுள்கால வைப்புநிதி மற்றும் ஆயுள் காப்புத் தொகை ஆகியவற்றை பெற்றுத்தர உதவி செய்தல், கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் பற்றிய அறிவுரை அளித்தல், சமூக நல நிலையங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் விதவைப் பெண்களின் குழந்தைகளுக்கு இடம் பெற உதவுதல், ஆகியவை இவ்வழிகாட்டி நிலையத்தின் நோக்கங்களாகும்.

முக்கியமாக, பெண்கள் மாதச் சம்பளத்தில் வேலை வேண்டுமென்று கேட்டு இவ்வழிகாட்டி நிலையத்தை அணுகுகின்றனர். பெரும்பாலோர் கல்வி அறிவு அற்றவர்கள் அல்லது குறைந்த அறிவு பெற்றவர்களாக உள்ளனர். வேலையற்ற ஆண், பெண் அனைவருக்கும் வேலையளிக்க உதவும் வேலை வாய்ப்பகத்தின் செயல்பாடுகளை தவிர மிக அதிகமாக உள்ள வேலையில்லாத திண்டாட்டத்தைக் கருத்தில் கொண்டு இவ்வழிகாட்டி நிலையத்தை அணுகும் வறிய நிலையிலுள்ள விதவைகள் ஆதரவற்ற பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவி பெற்றுத்தந்து சுய வேலை வாய்ப்புகளுக்கு வசதி செய்து தரப்படுகிறது. 4 சத விகிதம் என்ற குறைந்த வட்டி விகிதத்தில் 200 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை சிறுகடன் தொகை பெற்று சுயதொழில் மூலம் தங்களது வாழ்க்கையினை நடத்தி வாங்கிய கடனையும் திரும்பக்கட்டி வருகின்றனர்.

1978 முதல் 1982 வரை சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவைச் சார்ந்த சுமார் 10,000 பெண்கள், 20 இலட்சம் ரூபாய் வரை வங்கிகள் மூலம் கடனாகப்பெற்று சுயவேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

இத்துடன், இவ்வழிகாட்டி நிலையங்களை அணுகும் நூற்றுக்கணக்கான பெண்கள் சமூக நல நிலையங்கள், அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் அவர்களது குழந்தைகளுக்கு இடம் பெறுவதுடன், ஆயுள் காப்புத்தொகை, ஆயுள் வைப்புத் தொகை மற்றும் ஓய்வூதியும் பெறுதல் முதலிய உதவிகளை பெற்று வருகின்றனர்.

பெண்களுக்கான இவ்விதசேவைகள் செய்துவரும் வழிகாட்டி நிலையத்தால் அரசுக்கு அலுவலர்களின் சம்பளம், பயணப்படி மற்றும் சில்லறைச் செலவினங்கள் தவிர வேறு செலவு ஏதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1983-84 நிதி ஆண்டில் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் மேலும் 4 வழிகாட்டி நிலையங்கள் துவக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 1983-84 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 2.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள பச்சை மலை, கல்ராயன் மலை, ஆரணூத்து மலை, தர்மபுரி மாவட்டத்திலுள்ள சித்தேரி மலை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பச்சை மலை ஆகிய இடங்களில், 169 குழந்தை நல நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. 1983–84 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 4.95 இலட்சம் இந்நிலையங்களின் செயல்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதே போன்று, புராதன பழங்குடியினரின் குழந்தைகளுக்காக தென்னாற்காடு, மதுரை, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் 1978–79 ஆம் ஆண்டில் 25 குழந்தை நல நிலையங்கள் தொடங்கப்பட்டன. 1982 ஆம் ஆண்டு பழங்குடியினர் குழந்தைகளின் நலன் பேணும் பொருட்டு தென்னாற்காடு, சேலம் மாவட்டங்களில் மேலும் 22 குழந்தை நல நிலையங்கள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, 1983–84 ஆம் நிதியாண்டில் ரூ. 1.02 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டபின் இந்நிலையங்கள் யாவும் அத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு விட்டன.

3. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு விரிவுபடுத்துதல்.

மாநில சமூக நல வாரியத்திடம் மானியம் பெற்று நடத்தப்படும் தனியார் தொண்டு நிறுவன குழந்தை நல நிலையங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 14 தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் குழந்தை நல நிலையங்களுக்கு 2 முதல் 4 என்ற வயது வரம்பிலுள்ள குழந்தை ஒன்றுக்கு 44 பைசா வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1,510 குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர்.

4. நர்சரி பள்ளிகள் தொடங்குதல்.

தற்போது தமிழகமெங்கும் இயங்கி வரும் 4,343 குழந்தை நல நிலையங்களிலும் முதல்படியாக நர்சரி பள்ளிகளை 1982–83 ஆம் நிதியாண்டு முதல் தொடங்க முடிவெடுக்கப்பட்டது. இந்த குழந்தை நல நிலையங்கள் மற்றும் நர்சரி பள்ளிகள் அனைத்தும் சமூக நலத்துறை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும். இந்த நர்சரி பள்ளிகளின் பாடத் திட்டப் பணிகளை மேற்பார்வையிடும் பொறுப்பை பள்ளிக் கல்வித்துறை மேற்கொள்ளும். நர்சரி பள்ளி பாடத் திட்டங்களே இப்பள்ளிகளிலும் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் பள்ளிக் கல்வி இயக்குநரால் தேர்வு செய்யப்பட்ட திறமை வாய்ந்த நபர்களுக்கு கோயம்புத்தூரிலுள்ள அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் 21 நாட்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. இப் பயிற்சிக்குப்பின் திறமை மிகு இப்பயிற்சியாளர்கள் 4,343 குழந்தை நல அமைப்பாளர்களுக்கும் அணி அணியாக ஒரு மாத பயிற்சியளிப்பார். இதுவரை இரு அணியினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



மூன்றாவது அணியினர் பயிற்சி பெற்று வருகின்றனர். மொத்தம்
உள்ள 4,343 நிலையங்களுக்கும் விளையாட்டுக் கருவிகள், புத்த
கங்கள், அலுவலக பயன்படு பொருட்கள், உபகரணங்கள் வாங்க
நிலையம் ஒன்றுக்கு ரூ. 1,500 ஒதுக்கீடு செய்யப்படும். திறமை
மிகு நபர்களுக்கான பயிற்சி, குழந்தை நல அமைப்பாளர்களுக்
கான பயிற்சி, ஆசிரியர்களின் கைப்பைகள், அலுவலக பயன்படு
பொருட்கள், பாடத் திட்டம் அச்சிடுதல், கையேடுகள் ஆகியவற்
றுக்காக ரூ. 76.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்
குறித்த பணிகளுக்காக 1983–84 ஆம் நிதியாண்டில் ரூ. 65.75
இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

குழந்தைப் பருவ பணிகளைச் சீரிய முறையில் அளிக்கும் உன்
னத நோக்கத்தின் உயர்வாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்
பணிகள் திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.
1975–76 ஆம் நிதியாண்டில் இந்தியா முழுவதும் 33 இடங்களில்
இத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இவற்றில் தமிழ் நாட்
டில் சென்னை (நகர்ப்புறம்), மதுரை மாவட்டத்திலுள்ள நிலக்
கோட்டை (புறநகர்), தர்மபுரி மாவட்டத்திலுள்ள தளி (மலை
புறநகர்) ஆகிய மூன்று இடங்களிலும் திட்டப் பகுதி. ஒன்றுக்கு
100 அங்கன்வாடிகள் வீதம் 300 அங்கன்வாடிகள் இத்திட்டத்தின்
கீழ் தொடங்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் பின்வரும்
பயன் தரும் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

1. துணைச் சத்துணவு
2. நோய்த் தடுப்பு
3. மருத்துவ சோதனை
4. மேல் மருத்துவ சோதனை
5. சத்துணவு மற்றும் சுகாதாரக் கல்வி
6. முறை சாராக் கல்வி
7. மகளிர்க்கான நடைமுறைக் கல்வி

மேற்குறித்த பணிகள் யாவும் 1,000 மக்களுக்கு ஒன்று
வீதம் நிறுவப்பட்டுள்ள அங்கன்வாடிகள் மூலம் செயல்படுத்தப்
படுகின்றன. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் 1,00,000 மக்கள்
இத் திட்டத்தால் பயன் பெறுகின்றனர். முதலில் 3 இடங்களில்
அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் 1982–83 ஆம் நிதியாண்டில்
மேலும் 27 இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது
இத் திட்டம் அமுல்ப்படுத்தபட்டுள்ள 27 இடங்களும் ஒரு லட்சக்

திற்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள நகராட்சிகளாகவோ
மாநகராட்சிகளாகவோ இருப்பதுடன் இவை இதற்கு முன்
சிறப்புச் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்திய பகுதி
களுமாகும்.

இத் திட்டத்தில் அங்கமாகிய மகளிர்க்கான நடைமுறைக்
கல்வியின் மூலம் திட்டப் பகுதி ஒவ்வொன்றிலும் 3,000 பேர்
வீதம் முதலில் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்ட 3 இடங்களிலும்
9,000 பேர் பயனடைகின்றனர். அங்கன்வாடி ஊழியர்களுக்
கான முறையான பயிற்சி முடிந்தபின் மகளிர்க்கான நடைமுறைக்
கல்வி மற்ற 27 இடங்களுக்கும் விரிவு படுத்தப்படும்.

மத்திய அரசால் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் நடை
முறைக் கல்விக்கும். சுகாதார பணிகளுக்குமான செலவு முழு
வதும் மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்படும். அதே வேளையில்
சத்துணவுக்கான செலவு முழுவதும் மாநில அரசால் ஏற்றுக்
கொள்ளப்படுகிறது. இதுவரை 30 இடங்களில் அமுல் படுத்தப்
பட்ட இத்திட்டம் தமிழ் நாட்டில் 15—9—1982 முதல்,
முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்துடன்
இணைக்கப்பட்டுவிட்டது. இத் திட்டத்தின் கீழ் அங்கன்வாடி,
ஒன்றுக்கு 2 முதல் 4 வயது வரையிலான 100 குழந்தைகள்
வீதம் மொத்தம் 3,00,000 குழந்தைகளுக்கு குழந்தை ஒன்றுக்கு
80 கிராம் அரிசி 10 கிராம் பருப்பு, 7 கிராம் எண்ணெய் காய்கறி
கீரை வகைகள், 44 பைசா செலவில் வழங்கப்படுகின்றன.
ஜனவரி 1983 முதல் திட்டப்பகுதியிலேயே, போதனையாளர்
களால், அங்கன்வாடி ஊழியர்களுக்கு அளிக்கப்படவிருக்கும்
முறையான பயிற்சி முடிந்த பின் தற்போது தொடங்கப்பட்
டுள்ள 27 இடங்களிலும் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும்,
கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் இத்திட்டத்
தின்கீழ் சத்துணவு வழங்கப்படும். 1983–84 ஆம் நிதியாண்டில்
மேலும் 9 இடங்களுக்கு இத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.
1983–84 ஆம் நிதியாண்டில் மொத்தம் 36 இடங்களில் செயல்
படவிருக்கும் இத்திட்டத்திற்கான செலவினை மதிப்பீடு ரூ. 499
இலட்சத்தில் ரூ. 270 இலட்சம் மத்திய அரசாலும், ரூ. 229
இலட்சம் மாநில அரசாலும் செலவிடப்படும்.

## 6. உலக வங்கி ஆதரவில் சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெறும் தாய்சேய் நலப் பணிகள் திட்டம்.

உலக வங்கி ஆதரவில் சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தின்
கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் தாய்சேய் நலப் பணிகள்
திட்டம் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமாகும். இத் திட்
டத்தின்படி 6 மாதங்களிலிருந்து 3 வருடங்கள் மற்றும் 3
வருடங்களிலிருந்து 6 வருடங்கள வயதுள்ள குழந்தைகள் மற்
றும் கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்களுக்கான பணிகள் செயல்
படுத்தப்பட்டு வருகின்றன.



இத் திட்டத்தில் துணை ஊட்டச்சத்து, நோய்தடுப்பு, மருத்துவ சோதனை, மேல் மருத்துவ சோதனை, சத்துணவு மற்றும் சுகாதாரக் கல்வி மற்றும் முறைசாராக் கல்வி போன்ற பணிகள் ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தப்படுகின்றன. சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (திட்டம் 1-ன் கீழ்) மொத்தம் 129 குழந்தை நல நிலையங்கள் சென்னை நகரத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. துணை மருத்துவ அலுவலர்களின் உதவியுடன் நலத் திட்டங்களைப் பொறுப்பேற்றிருக்கும் மருத்துவ அலுவலர்களைக் கொண்டு நடமாடும் மருத்துவ மனை ஒன்றும் நடைபெற்று வருகிறது. 'கேர்' நிறுவனத்திலிருந்து துணை ஊட்டச் சத்துக்காக இதுவரை விநியோகம் செய்யப்பட்டு வந்த பாலஹாருக்குப் பதிலாக 15—9—1982 முதல் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்படி துணை ஊட்டச் சத்து மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் கட்டிடங்கள் கட்டும் பணியும் இடம் பெற்றுள்ளது. தற்போது நடைபெற்று வரும் 129 நிலையங்களில் 99 நிலையங்களுக்கு நிரந்தர கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இக் கட்டிடங்கள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்டவையாகும். சென்னை நகர வளர்ச்சித் திட்டம் II-ன் கீழ் 1982—83-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வரும் 20 நிலையங்கள் தவிர்த்து 1983—84-ம் ஆண்டில் மேலும் 80 நிலையங்கள் ஆரம்பிக்கப்படும். இத்திட்டத்தின்படி ஒவ்வொரு நிலையத்திலும் 2 + முதல் 4 + என்ற வயது வரம்பிற்கு உட்பட்ட 100 குழந்தைகளும், 30 கைக்குழந்தைகளும், 30 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் மொத்தத்தில் பயன்பெற்று வருகின்றனர். அதன்படி மொத்தம் 149 நிலையங்களில் 2 + முதல் 4 + என்ற வயது வரம்பிற்குட்பட்ட 1,49,000 குழந்தைகளும் 3,120 கைக்குழந்தைகளும், 3,120 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் மொத்தத்தில் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்கு 1983—84 ஆம் ஆண்டிற்கு ரூ. 45.59 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. ஆதரவற்ற குழந்தைகள் நலத்திற்கான திட்டம்.

### (i) அரசால் நடத்தப்படும் ஆதரவற்றோர் இல்லங்கள்

5 முதல் 18 வயது வரையிலான ஆதரவற்ற குழந்தைகளுக்கு இல்லம் ஒன்றுக்கு 250 நபர்களைக் கொண்ட 4 ஆதரவற்றவர் இல்லங்களை சென்னை, மதுரை, கன்னியாகுமரி, சேலம் ஆகிய 4 இடங்களில் சமூக நலத்துறை நடத்தி வருகிறது. இவ்வில்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு உணவு, உறையுள், உடை, மருத்துவம் மற்றும் கல்வி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. 5 ஆம் வகுப்பு வரையிலான கல்வியை அவர்கள் தங்கியுள்ள இல்லங்களிலேயே பெறும் இக்குழந்தைகள், அதற்கு பிறகு பிந்தைய கல்வியை பெறுவதற்கு அரசு பள்ளிகளுக்கோ மாநகராட்சி பள்ளிகளுக்கோ அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

1983–84-ம் நிதியாண்டிலிருந்து தற்போது செயல்பட்டுவரும் ஆதரவற்றோர் இல்லங்களில் ஊழியர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் இவ்வில்லங்களின் செயல்பாட்டை சிறப்பாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக 1983–84-ம் நிதியாண்டில் ரூ.8.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ii) ஆதரவற்ற குழந்தைகளை கவனித்தல்

ஆதரவற்ற குழந்தைகளை கவனித்துக் கொள்ளும் மற்றும் நிர்வகிக்கும் பொறுப்பை, தனியார் சேவை நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தும் முறையினை முன்னோடித்திட்டமாக மத்திய அரசு தொடங்கியது. அதிகப்படியான நிர்வாக செலவுகளை குறைக்கும் பொருட்டு குடில் ஒன்றுக்கு 25 குழந்தைகள் தங்கும் வசதி கொண்ட குடில்முறை அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இவ்வாதரவற்ற குழந்தைகள் தாங்கள் சார்ந்துள்ள சமுதாயத்தில் இயல்பான குடிமக்களாய் வாழ வழிவகை செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம், உணவு, உறையுள், உடை, மருத்துவம், கல்வி, மனமகிழ்ச்சி, பண்பாட்டு வளர்ச்சிக்கான வசதிகளுடன் தொழிற்பயிற்சியையும், இக்குழந்தைகளின் எதிர் கால வேலைவாய்ப்பு கருதி அளித்து வருகிறது. இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தும் வகையில், மத்திய மாநில அரசுகளுடன் தனியார் சேவை நிறுவனங்களும் மொத்த செலவினை 45 : 45 : 10 என்ற விகிதத்தில் பிரித்துக்கொள்ளும் முறையில் தாராளமான நிதியுதவி இந்நிறுவனங்களுக்கு அளிக்கப்படுகிறது. 1–4–1979 முதல் இத்திட்டம் அமுலில் இருந்து வருகிறது. 1–4–1979-க்கு முன் தொடங்கப்பட்ட நிறுவனங்களுக்கான மானியம் முழுவதும் (அதாவது 90% ) மாநில அரசாலேயே அளிக்கப்பட்டு வருகிறது. பலப்படுத்தப்பட்ட கான்கிரிட் கூரை கொண்ட குடில் ஒன்றுக்கு ரூ. 1,61,700-ம் அஸ்பெஸ்டாஸ் கூரை கொண்ட குடில் ஒன்றுக்கு ரூ. 1,18,500-ம் மானியமாக மாநில அரசால் தனியார் சேவை நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. இன்றைய தேதியில் 120 தனியார் சேவை நிறுவனங்கள் குடில்களுக்காகவும் குழந்தைகள் நலனுக்காகவும் ஆகும் செலவின் பகுதியை மானியமாக பெறுகின்றன. மொத்தம் 8,210 குழந்தைகள் பயனடைகின்றனர். இப்பணிகளுக்காக 1983–84-ம் நிதியாண்டில் ரூ. 78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8;1 குழந்தைகளுக்கான பல்வேறு சத்துணவுத் திட்டங்களுக்கான பயிற்சி

எந்த ஒரு திட்டத்தின் வெற்றியும் சரியான நோக்கும் அறிவு மனோதிடம் ஆகியவற்றை களப்பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் அளிப்பதிலேயே அடங்கியுள்ளது. எனினும்.



நிர்வாகக் கொள்கை உலகறிந்த ஒன்றே. கடின உழைப்பு' நேர்மை ஆகிய கொள்கைகளுடன் சரியான அறிவு, தகவல் ஆகியவற்றையும், பயிற்சியாளர்களுக்கு அளிப்பதையே நோக்கமாக கொண்ட சக்தி வாய்ந்த ஒரு பயிற்சி மூலமே இதனை சாதிக்க இயலும். சமுதாயத்தின் நலிந்த பிரிவினரிடையே காணும் ஊட்டச்சத்தின்மைக்கு எதிராக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் அடிப்படையில் நோக்குங்கால் இப்பயிற்சி பன்மடங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. குழந்தைப் பருவ பணிகளான சத்துணவு சுகாதாரம், உடல் மன வளர்ச்சி ஆகியவற்றை ஒருங்கிணைந்த முறையில் அளிக்கும் வகையில் சமீப வருடங்களில் சமூகநல நடவடிக்கைகள் திருப்பிவிடப்பட்டுள்ளன, இதனைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளுக்கு சரியான சத்துணவு, வளர்ச்சிப் பணிகள் ஆகியவை கிட்டும் வகையில் பல திட்டங்களை தமிழக அரசு அறிமுகப் படுத்தியுள்ளது. இத் திட்டங்கள் பலரும் போற்றும் வகையில் அமைந்த போதிலும், இவற்றின் இறுதி வெற்றி, மாநிலத்தின் மூலை முடுக்கெல்லாம் பணியாற்றும் சத்துணவு பணியாளர்கள் மற்றும் அமைப்பாளர்களின் அறிவு, நோக்கம், நம்பிக்கை ஆகியவற்றைப் பொருத்து அமைந்துள்ளது. இக்குறிக்கோளை ஈடேற்றும் வகையில் முறையானதும், தெளிவானதுமான பணி முன் மற்றும் உட்பணி பயிற்சிகளை அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக தற்போது மூன்று சத்துணவுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன :

1. உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து உணவுத் திட்டம்.

2. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

3. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

### (i) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம்

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவு திட்டத்தைப் பொறுத்த வரையில் மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு கிராம சத்துணவு மையமும் சமுதாய ஊட்டச்சத்துணவு ஊழியர்கள் பொறுப்பில் இருந்து வருகிறது. இவர்களது பணி, ஊட்ட சத்துணவுத் திட்ட அலுவலர்களால் வழி நடத்தப்படும். மேற்பார்வையாளர்களால் மேற்பார்வை இடப்படுகிறது. இந்த மூன்று மாவட்டங்களிலும், ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள அனைத்து சத்துணவுத் திட்டப் பகுதிகளும் ஒருமாவட்டச் சத்துணவுத் திட்ட

அலுவலரின் பொறுப்பில் இருந்து வருகிறது. மாவட்ட
சத்துணவுத்திட்ட அலுவலர், சத்துணவு குறித்த நுட்ப அறிவும்
அனுபவ முதிர்ச்சியும் பெற்ற சமூக நலத்துறை இயக்கத்தின்
முதுநிலை அலுவலர் ஆவார். மாவட்ட சத்துணவுத் திட்ட
அலுவலர்களுக்கு தொடர் இடைவெளியில் மறு பயிற்சியும்,
நிர்வாகப் பயிற்சியும் அளிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு
வருகிறது. வட்ட சத்துணவுத் திட்ட அலுவலர்கள் 3 வார
திட்டப்பயிற்சியும். 3 வார நிர்வாகப் பயிற்சியும் முறையே
கோயம்புத்தூர் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலும்,
பவானிசாகர் குடிமுறை பணிப்பயிற்சி கழகத்திலும் பெறு
கின்றனர். இது போன்று மேற்பார்வையாளர்கள் 2 மாத
திட்டப்பயிற்சியை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலி
ருந்தோ காந்திகிராம ஊரக கழகத்திலிருந்தோ பெருகின்ற
னர். சமுதாய சத்துணவு ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்
பதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள போதனாசிரியை
கள் ( Instructresses ) அவினாசிலிங்கம் மனையியல்
கல்லூரியிலோ அல்லது காந்திகிராம ஊரக கழகத்திலோ ஒரு
மாத பயிற்சி பெறுகின்றனர். இப்போதனாசிரியைகள்,
சமுதாய சத்துணவு ஊழியர்களுக்கு வட்டார மட்டத்திலேயே
இருமாத பயிற்சி அளிக்கின்றனர். சமுதாய சத்துணவு
ஊழியர்கள் வேலைத்திறனையும் திட்ட அறிவையும் மேம்
படுத்தும் வகையில் தொடர் இடைவெளி உட்பணிப்பயிற்சி
யும் ( inservice training) அளிக்கப்படுகிறது. சத்துணவுத்
துறையில் அவ்வப்போது கண்டுள்ள புதுமைகளை உணர்த்தும்
வகையிலும் தெளிவடைந்த அறிவை நவீனமயமாக்கும் வகை
யிலும் அமைந்த ஏராளமான நூல்கள் ஒரு முகப்படுத்தும்
அலுவலர் மூலம் அவர்களுக்குக் கிடைக்க வழிவகை செய்ய
பட்டுள்ளது.

(ii) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்தைப்
பொறுத்தவரையில் 4 மேற்பார்வையாளர்களால் மேற்பார்வை
யிடப்படும். ஒவ்வொரு திட்டப் பகுதியும் அங்கன்வாடி
ஒவ்வொன்றும் அங்கன்வாடி ஊழியர் ஒருவரால் நடத்தப்படும்
வகையில் நூறு அங்கன்வாடிகளைக்கொண்டது. ஒவ்வொரு
திட்டப்பகுதியும் ஒரு குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலரின்
பொறுப்பில் இருக்கிறது. இத்திட்டத்தின் மூன்று முக்கிய
அம்சங்களை முதல் நிலைக் கல்வியுடன் சத்துணவு மகளிர்க்
கான நடைமுறைக் கல்வி சுகாதார பராமரிப்பு ஆகியவற்றை
அறிந்து கொள்ளும் வகையிலும் இத்திட்டத்தில் தங்களை
ஈடுபடுத்திக் கொள்ளும் வகையிலும் குழந்தை வளர்ச்சித்
திட்ட அலுவலர்களுக்கு ஆறு (6) வாரகால பயிற்சி
அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி புது டெல்லியிலுள்ள பொது
மக்கள் கூட்டுறவுக்கும் குழந்தை வளர்ச்சிக்குமான தேசிய



கழகத்தினரால் அளிக்கப்படுகிறது. சமூக நலத்தின் முதுநிலை விரிவாக்க அலுவலர் களாக இருக்கும் இக்குழந்தை வளர்ச்சிதிட்ட அலுவலர்க.. பயிற்சி காலத்திலேயே சரியான நோக்கத்தை வளர்த்துக்கொள்வதுடன் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளுதல் அவசியம்.

களப்பணியை தொடங்குமுன், மேர்பார்வையாளருக்கு, அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் ஆறு வார கால பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்கன்வாடி ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கும் வகையில் போதானாசிரியைகளுக்கு காந்திகிராம ஊரக கழகத்தில் ஒரு மாத பயிற்சிளிக்கப்படுகிறது. அங்கன்வாடி ஊழியர்கள் முறையே வட்டார மட்டத்திலோ அல்லது நகராட்சி மட்டத்திலே போதனாசிரியைகளால் 3 மாத காலம் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இச்சத்துணவுத் திட்டம் குறித்த ஒரு உட் பணிப்பயிற்சி அங்கன்வாடி ஊழியர்களின் திட்ட அறிவு தெளிவடைவதற்கு பெரிதும் உதவுகிறது. முறையே சத்துணவு மற்றும் முதுநிலைக் கல்வி குறித்த ஒரு வார பணி முன் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 1982—83 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் 27 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்.பணிகள் திட்டப் பகுதிகளுக்கு54 போதானாசிரியைகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(iii) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

இந்த பிரும்மாண்டமான சத்துணவுத் திட்டம் 1—7—1982 முதல் கிராமப் புறப் பகுதியிலும் 15—9—1982 முதல் நகர்ப்புற பகுதியிலும் செயல்படுத்தப்பட்டது. இப்புதிய திட்டம், சாதி மத பேதமற்ற ஒரு சமுதாய அமைப்பை உருவாக்குவதுடன், மேலான ஆரோக்கியமான மகிழ்ச்சியான குழந்தைகள் சமுதாயத்தையும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டு முழுமையு அளிக்கப்படும் சத்துணவின் மூலம் குழந்தையின் மன, உட வளர்ச்சியோடு பல்வேறு வளர்ச்சிகளையும் மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டு செயல்படும். குழந்தை வளர்ச்சி நிலையம் ஒவ்வொரு கிராமத்திலும், நகர் புறத்தின் ஒவ்வொரு பகுதியிலும் இயங்குகிறது. சாதி, வர்க்கமற்ற சமுதாய சகாப்தத்தை தோற்றுவிக்க உத்தரவாதமளிக்கும் இத்திட்டத்தின் கீழ் குழந்தை நல அமைப்பாளர்கள் மற்றும் குழந்தை நல உதவியாளர்களின் அன்பை மட்டுமன்றி, ஒத்த வயதுடைய குழந்தைகளின் சகோதர பாசத்தையும், உணரும் வாய்ப்பினை குழந்தைகள் பெறுகின்றனர். சத்துணவு, முதனிலைக் கல்வி, தடுப்பூசி போடுதல், அடிப்படை சுகாதாரம் போன்றவற்றில் கவனம் செலுத்துவதின் மூலம் நல்ல பழக்க வழக்கங்களை நாடும் நற்குடி மக்களாய் குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள். இம்மகத்தான பணியில் பெரும்பங்கு வகிக்கும் குழந்தை நல அமைப்பாளர்கள் இப்பொறுப்பினை ஏற்கும் வகையில் போதிய பயிற்சியளித்தல் அவசியம்.

முறையே குழந்தை சத்துணவு, சுகாதாரப்பணி தொடர்பாக அனைத்து கோட்பாடுகளையும் உள்ளடக்கிய இருவார பணி முன் பயிற்சி குழந்தை நல அமைப்பாளர்களுக்கு இரு கட்டங்களில் அளிக்கப்படுகிறது. குழந்தை நல அமைப்பாளர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளுக்காக கோயம்புத்தூர் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியின் ஆலோசனையுடன் வழி காட்டி என்னும் பெயரில் மூன்று தொகுதிகளாய் தொகுக்கப்பட்ட விரிவான அறிவுரைகள் அடங்கிய புத்தகங்கள் குழந்தை நல அமைப்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ரூ. 450—20—590—25—740—30—800 சம்பள ஏற்றமுறையில் நூறு போதனாசிரியைகள் இதுவரையில் நியமிக்கப்பட்டுள்ளனர். மனையியல் விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றுள்ளவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு முதனிலைக்கல்வி உள்ளிட்ட குழந்தை கவனிப்பு அனைத்துக் கோட்பாடுகளிலும் 5—11—1982 முதல் 4—12—1982 முடிய ஒரு மாதபயிற்சி பெறும்பொருட்டு கோயம்புத்தூர் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரிக்கு அனுப்பப்பட்டனர். யூனிசெப்பால் ஈடு செய்யப்படும் இப்பயிற்சி செலவுக்காக அரசால் ரூ. 44,450 அனுமதிக்கப்பட்டது.

இதுவரை பயிற்சி முடிந்து 88 போதனாசிரியைகள் பணியில் சேர்ந்துள்ளனர். பயிற்சி முடிந்த இவர்கள் மாநிலத்தின் வெவ்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பணியாற்றும் 3 மாத காலத்தில், ஊராட்சி ஒன்றியம், நகரியம், நகராட்சி ஆகியவற்றில் பணியாற்றும் குழந்தை நல அமைப்பாளருக்கு இரு அணிகளில் 35 பணிநாட்களில் மறு பயிற்சி அளிப்பர். பணி முடிந்தபின் அவர்கள் அடுத்த ஊராட்சி ஒன்றியத்துக்குச் சென்று, அங்கு பணியாற்றும் 3 மாத காலத்தில் இரு அணிகளுக்கு பயிற்சியளிப்பர்.

இதுபோன்று, அவர்கள் இன்னும் இரு ஊராட்சி ஒன்றியங்களில் முறையே 3 மாத காலத்திற்கு பணியாற்றுவர். இவ்விதம் அனைத்து குழந்தை நல அமைப்பாளர்களுக்கும் பயிற்சி அளிக்கும் வகையில் ஆண்டு முழுவதும் 4 ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிவார்கள்.

குழந்தை நல அமைப்பாளர்களின் பயிற்சி கீழே குறிப்பிட்டவாறு 8 அணிகளாக நடத்தப்பெறும்:



| | | |
|---|---|---|
| முதல் அணி .. | .. | 13—12—1982 முதல் 23-1—1983 முடிய. |
| இரண்டாம் அணி | .. | 24—1—1983 முதல் 6—3—1983 முடிய. |
| மூன்றாம் அணி | .. | 14—3—1983 முதல் 24—4—1983 முடிய. |
| நான்காம் அணி | .. | 25—4—1983 முதல் 5—6—1983 முடிய. |
| ஐந்தாம் அணி .. | .. | 13—6—1983 முதல் 24—7—1983 முடிய. |
| ஆறாம் அணி .. | .. | 25—7—1983 முதல் 4—9—1983 முடிய. |
| ஏழாம் அணி .. | .. | 12—9—1983 முதல் 23-10—1983 முடிய. |
| எட்டாம் அணி .. | .. | 24—10—1983 முதல் 4-12-1983 முடிய. |

யுனிசெப்பினரால் ஈடு செய்யப்படும் குழந்தை நல அமைப்பாளர்களின் பயிற்சி செலவுக்காக அரசால் ரூ. 49,40,740 அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த உட்பணி பயிற்சி குழந்தை நல அமைப்பாளர்களின் நம்பிக்கையை அதிகப்படுத்துவதுடன், குழந்தைகளின் சத்துணவு மற்றும் சுகாதார பிரச்சனைகளில் புதியதோர் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும். இது பிரச்சினைகளை அடிமட்டத்திலேயே தீர்ப்பதற்குரிய அறிவையும் நுட்பத்தையும் அளிக்கிறது.

II நர்சரி பள்ளி பயிற்சி

தற்போது மாநிலம் முழுவதும் ஏற்கெனவே இயங்கிவரும் 4,343 குழந்தை நல நிலையங்களிலும் 1982—83 ஆம் நிதியாண்டில் முதற்படியாக நர்சரி பள்ளிகளை தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது. இந்த 4,343 குழந்தை நல அமைப்பாளர்களுக்கும் கல்வித்துறையால் தேர்வு செய்யப்பட்டு பயிற்சிக்கு அனுப்பப்பட்ட 50 முக்கிய திறமைமிக்க நபர்களால் பயிற்சியளிக்கப்படுகிறது. இந்த முக்கிய திறமைமிக்க நபர்கள் சிறந்த புகழ்மிக்க கல்வி நிறுவனங்களை சேர்ந்தவர்களாய் இருப்பதுடன் 4,343 குழந்தை நல அமைப்பாளர்களுக்கு புறநகர் பகுதிகளைச் சார்ந்த இளம் குழந்தைகளுக்கு நர்சரிப் பாடங்களை போதிக்கும் நுட்ப அறிவையும் புதியதோர் பொறுப்புணர்ச்சியையும் ஊட்ட

வல்லவர்கள்,. 31 நிலையங்களில் குழந்தை நல அமைப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக இதுவரை ரூ. 10,14,585 செலவிடப்பட்டுள்ளது.

III மத்திய உணவு அமைப்பாளர்கள் பயிற்சி:

5* முதல் 9* வயது வரையிலான பள்ளிக்குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் பணியிலிருந்து பள்ளிக் கல்வித்துறையைச் சார்ந்த ஆசிரியர்களை விடுவிக்கும் வகையில் பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த உணவு மையங்களுக்கு 33,500 மதிய உணவு அமைப்பாளர்களை நியமிக்கும் ஆணையை அரசு வெளியிட்டது. மதிய உணவு அமைப்பாளர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காக, அரசு ரூ. 20 இலட்சம் செலவிட அனுமதி அளித்து ஆணையிட்டுள்ளது. இந்த அமைப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொறுப்பும் சமூக நலத்துறையைச் சேர்ந்த பின்வரும் அலுவலர்களின் பால் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

(1) அனைத்து குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள்.

(2) அனைத்து உதவி மாவட்ட சமூக நல அலுவலர்கள்.

(3) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தைச் சேர்ந்த அனைத்து மேற்பார்வையாளர்கள்.

(4) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டத்தைச் சேர்ந்த அனைத்து மாவட்ட ஊட்டச் சத்துணவுத் திட்ட அலுவலர்கள்.

(5) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டத்தைச் சேர்ந்த அனைத்து வட்ட ஊட்டச் சத்துணவுத் திட்ட அலுவலர்கள்.

(6) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டத்தைச் சேர்ந்த அனைத்து சமுதாய ஊட்டச்சத்து போதனாசிரியைகள்.

இந்த பயிற்சி முடிவடைந்து, 1983 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒன்றாம் தேதி முதல் மதிய உணவு அமைப்பாளர்கள், தங்கள் பணியை பள்ளிகளில் தொடங்கிவிட்டனர்.

9 தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம்

உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம், தமிழ் நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மதுரை, இராமநாதபுரம் புதுக்கோட்டை, திருநெல்வேலி, வட ஆற்காடு மற்றும் செங்கல்பட்டு ஆகிய ஆறு மாவட்டங்களில் படிப்படியாக செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் குறிக்கோள்



மக்களின் உடல் நலம் மற்றும் ஊட்டச் சத்து நிலையினை மேலும் படுத்த அரசு எடுத்துவரும் முயற்சிகளை மேலும் திறன் உடையன வாக்கி, அம்முயற்சிகளின் பலனை அதிகப்படுத்துவதாகும். ஊட்டச்சத்து குறைவினால் அதிகமாக பாதிப்பு ஏற்படக்கூடிய 6 முதல் 36 மாதம் வரையிலான வயதுத் தொகுதியிலுள்ள குழந்தைகளின் ஊட்டச் சத்துக் குறைவினை போக்குவதின் மூலம் இத்திட்டத்தின் குறிக்கோளை அடைய முதன் முறையாக முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மேலும் மற்ற வயதுத் தொகுதியில் உள்ள, குறிப்பாக ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், பள்ளி செல்லும் வயதை அடையாத குழந்தைகள் இவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 55.78 கோடியாகும். இத்திட்டத்திலுள்ள இனவாரியாக செலவிடப்படவிருக்கும் தொகை கீழே தரப்பட்டுள்ளது.

| இனவகை. | செலவிடப் படவிருக்கும் தொகை. |
|---|---|
| (1) | (2) (ரூ. கோடியில்) |
| (1) ஊட்டச்சத்து வழங்கும் பணிகள் .. | 25.87 |
| (2) கிராம சுகாதாரப் பணிகள் .. .. | 24.40 |
| 3) ஊட்டச்சத்து பற்றிய செய்தி அறிவிப்பு | 3.29 |
| (4) திட்டக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு .. | 1.08 |
| (5) திட்ட ஒருங்கிணைப்பு .. .. .. | 1.14 |
| மொத்தம் .. | 55.78 |

திட்டத்தின் மொத்த மதிப்பீடாக ரூ. 55.78 கோடியில் உத்தேசமாக 50 விழுக்காடான, சுமார் ரூ. 26.88 கோடியினை உலக வங்கி கொடுத்துதவுகிறது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் சோதனைத் திட்டமாக 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டாவது கட்டமாக மதுரை மாவட்டத்திலுள்ள, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (I.C.D.S.) செயல்பட்டு வருகின்றது. நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் நீங்கலாக ஏனைய எல்லா ஊராட்சி

[1983 ஏப்ரல் 6

ஒன்றியங்களிலும் 1982-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் செயல் பட்டு வருகிறது. இந்த இரண்டாவது கட்டத்தில் 361 சுகாதார சார்பு நிலையங்கள், 51 கிராம சுகாதார பயிற்சி நிலையங்கள், 9 செவிலியர் பயிற்சி பள்ளிகள் மற்றும் ஒரு பெண் சுகாதார மேற்பார்வையாளர் பயிற்சி பள்ளி ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவை விரைவில் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

மூன்றாவது கட்டமாக இத்திட்டம் இராமநாதபுரம் மற்று புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் (பொன்னமராவதி ஒன்றியம் தவிர) 1982-83 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மூன்றாவது கட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் இடங்களில் 346 சுகாதார சார்பு நிலையங்களின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்றுவருவதுடன், ஊட்டச்சத்துணவுப் பற்றிய செய்திகளை விளம்பர சாதனங்கள் வாயிலாக பரப்பும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நான்காவது கட்டமாக திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களிலும், 1983-84-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 6.28 கோடி நிதி 1983—84 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## V. ஊனமுற்றோர் நலம்.

தமிழ்நாடு அரசு ஊனமுற்றோரின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்சாகவும், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அத்திட்டங்கள் குறிப்பாக கல்வி, தொழிற்பயிற்சி வேலைவாய்ப்பு மற்றும் சுய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி ஊனமுற்றோரை தன்னிச்சையாகச் செயல்படவும் தன்னம்பிக்கையுடன் வாழ்விக்கவும் உதவி புரியும் நோக்கம் உடையவை ஆகும். ஊனமுற்றோர் நலனுக்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடு ஆண்டுடுக்கு - ஆண்டு உயர்ந்திருக்கிறது. 1980—81-ல் ரூ. 65 இலட்சமாக இருந்த நிதி ஒதுக்கிடு 1981—82-ல் ரூ. 125 இலட்சமாக உயர்ந்தது. 1982—83-ஆம் ஆண்டில் ரூ. 109.79 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஊனமுற்றோருக்கு சமத்துவம் அளித்தலும், அவர்களை சமுதாயத்தில் முழு பங்கேற்கச் செய்வதுமே ஊனமுற்றோர் ஆண்டான 1981-ன் குறிக்கோளாகும். ஐக்கிய நாடுகளும் மத்திய அரசும் வகுத்த குறிக்கோள்கள் மற்றும் திட்டத்தின்படி சிறப்புக் கல்வியை விரிவுபடுத்தல், பயிற்சிகள் அளித்தல், வேலை வாய்ப்புக்கு வழி வகைகள் செய்தல் மற்றும் ஊனமுற்றோரின்



1983 ஏப்ரல் 6]

மறுவாழ்விற்கான வழிவகைகள் செய்தல் ஆகியவற்றில் தற்போது நடைமுறையிலிருக்கும் பல்வேறு திட்டங்களுடன், 1981—82-ல் மாநில அரசு 17 புதிய திட்டங்களைச் செயல்முறைக்கு எடுத்துக் கொண்டது.

ஊனமுற்றோர் நலனுக்காக தொடங்கப்பட்ட புதிய திட்டங்கள் யாவும் செயல்படுத்தப்பட்டு 1981—82-ல் சுமார் 43,400 ஊனமுற்றோர் மறுவாழ்வு உதவி பெற்றிருக்கின்றனர். எல்லா திட்டங்களும் 1982—83-ல் தொடர்ந்து செயல் படுத்தப்படுகின்றன. தற்போது நிறைவேற்றப்படும் திட்டங்கள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் பின்வருமாறு :—

1. ஊனமுற்றோருக்குக் கல்வி வசதிகள்.

(அ) சிறப்புப் பள்ளிகள்—

பார்வை இழந்தவர்கள், காது கேளாதவர்கள், கைகால் ஊனமுற்றவர்கள், மன வளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் தொழு நோயால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தவர்கள் ஆகிய ஊனமுற்றவர்களுக்காக 23 அரசுப் பள்ளிகள் நகராட்சிகளால் நடத்தப்படும் 2 காதுகேளாதோர் பள்ளிகள் மற்றும் 25 அரசு மானியம் பெறும் தனியார் பள்ளிகள் மூலமாக சிறப்புக் கல்வி வசதி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வருகின்ற சிறப்புப் பள்ளிகள் வருமாறு :—

| எண். | பள்ளியின் வகை. | அரசுப் பள்ளிகள் | அரசு மான்யம் பெறும் பள்ளிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (2) | (4) |
| 1 | பார்வையற்றோர் பள்ளி .. | 12 | 9 |
| 2 | காதுகேளாதோர் பள்ளி | 9 | 10 |
| 3 | தொழுநோயால் பாதிக்கப்பட்டோருக்கான பள்ளி. | .. | 1 |
| 4 | மன வளர்ச்சி குன்றியவர்க்கான பள்ளி. | .. | 2 |
| 5 | ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் .. | 1 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 6 | கை கால் ஊனமுற்றோர்களுக்கான பள்ளி. | 1 | |
| 7 | காரைக்குடி மற்றும் கோயம்புத்தூரி லுள்ள நகராட்சி காது கேளா தோர் பள்ளி. | 2 | |
| | மொத்தம் .. | 25 | 25 |

இதைத் தவிர இளம்பிள்ளை வாதம், முடக்குவாதம் முதலிய நோய்களால் பாதிக்கப்பட்டு சென்னை அரசினர் பொது மருத்துவ மனை தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசினர் மருத்துவ மனைகளில் முடநீக்கியல் பகுதிகளில் நீண்ட நாள் சிகிச்சைப்பெற்று வருகின்ற குழந்தைகளுக்கு கல்வி வசதிகள் அளிப்பதற்காக தனிப் பள்ளிகள் இம்மருத்துவ மனைகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இப் பள்ளிகள் அனைத்தும் மருத்துவமனைகளின் தலைமை அதிகாரிகளின் பொறுப்பில் உள்ளன. இந்தத் தனிப்பள்ளிகள் மூலம் 4,400 ஊனமுற்ற மாணவர்கள் பயனடைகின்றனர். 1982--83-ல் ரூ. 37.96 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1983-84-ல் இதற்காக ரூ. 42.41 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஆ) மத்திய அரசின் கல்வி உதவித் தொகை.**

மத்திய அரசின் திட்டத்தின் கீழ் ஊனமுற்ற நபர்களுக்கு கல்வி மற்றும்தொழில் நுட்பக் கல்வியைத் தொடரவும் தொழிற் சாலையில் பயிற்சி பெறவும் கல்வி உதவித் தொகை வழங்கப் படுகிறது. கல்வியின் தன்மையைப் பொறுத்து மாதம் ஒன்றுக்கு ரூபாய் 60 முதல் 170 வரை படிப்புதவித் தொகை வழங்கப் படுகிறது. 1981-82—ல் 1,387 பேருக்கு ரூபாய் 719 இலட்சம் கல்விஉதவித் தொகையாக வழங்கப்பட்டது. 1982-83-ல் கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு ரூபாய் 12.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. மத்திய அரசு இதுவரை ரூ. 5 இலட்சம் விடுவித்துள்ளது. சுமார் 1,800 ஊனமுற்ற மாணவர்கள் இதனால் நடப்பு ஆண்டில் பயனடைவர்.

**(இ) தமிழ்நாடு அரசின் உதவித் தொகை**

முதல் வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்பு வரை பயிலும் ஊனமுற்ற மாணவர்களின் பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்புப் புத்தகங்கள் வாங்குவதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25 வழங்கப் படுகிறது. இத்திட்டம் 1981-82 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்



பட்டுள்ளது. ஊனமுற்ற மாணவர்கள் 8,000 பேர் 1981-82ல் பயனடைந்தனர். இதே போல் 1982-83—லும் 8,000 ஊன முற்ற மாணவர்கள் பயனடைந்தனர். 1983-84-ம் ஆண்டில் இத்திட்டத்தை செயல் படுத்த ரூ. 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**(ஈ) மனவளர்ச்சி குன்றியோருக்கான நிலையங்கள்.**

100 மனவளர்ச்சி குன்றிய ஏழை குழந்தைகளுக்கு தக்க வசதியும் கல்வியும் அளிக்கும் பொருட்டு ஒரு நிலையம் நிறுவுவதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது.

**(எ) காது கேளாத மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல்,**

காது கேளாத குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் காது கேளாத குழந்தைகளுக்கு நவீன முறையில் கல்வி கற்பதற்கு சென்னையில் இருக்கும் காது கோளாதோர் பள்ளி மூலமாக ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி காலத்தில் பயிற்சி ஆசிரியர்களுக்கு அவர்கள் கடைசியாக வாங்கிய சம்பளம் வழங்கப்படுகிறது, 1981—82-ம் ஆண்டில் 18 ஆசிரியர்களும் 1982-83-ல் 14 ஆசிரியர்களும் பயிற்சி பெற்றனர் 1982—83—ம் ஆண்டிற்கு ரூ. 87,000 நிதி ஒதுகிகீடு செய்யப் பட்டது இத்திட்டம் 1983—84-ம் ஆண்டில் தொடர்ந்து செயல் படுத்தப்படும். இதற்காக ரூ. 50,000 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்காக ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்க ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் இயங்கி வரும் பாலவிகார் குழந்தைகள் காப்பகத்திற்கு மான்யம் வழங்கப்படுகிறது. பயிற்சி காலம் ஓராண்டாகும். பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்கள்ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 உதவித் தொகை வழங்கப் படுகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 177 ஆசிரியர்கள் பயன் அடைந்துள்ளனர். 1983-84—ம் ஆண்டில் 20 ஆசிரியர்களுக்கு ரூ. 45,600 செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டம் 1983,84-ல் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**(ஏ) பார்வையற்றோருக்கு கல்வி கற்பிக்கும் வட்டார ஆசிரியர் பயிற்சி நிலையம்.**

பார்வையற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வட்டார நிலையம் 2969-ம் ஆண்டில் பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசு மேநிலைப் பள்ளியில்

அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இங்கு நான்கு தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், மற்றும் கேரள அரசுகள் தேர்ந்தெடுத்து அனுப்புகிற ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி ஆண்டு தோறும் அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 10 மாதங்களாகும். ஒவ்வொரு ஆண்டும் 12 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்கள் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தால் பயிற்சி காலத்தில்அவர்களுக்கு உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ. 110-ம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தால் மாதம் ஒன்றுக்கு ரூ. 25 ம் வழங்கப்படுகிறது. பயிற்சியாளர்கள் கண் பார்வையற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கு படிப்புதவித் தொகையாக ரூ. 50 கூடுதல் உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

1981—82ல் பார்வையற்றோருக்குக் கல்வி கற்பிக்கும் 10 பணி புரியும் ஆசிரியர்களுக்கும் 5 புதிய ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்க ஒரு தனிப்பிரிவு பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசினர் பள்ளியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக 1982—83-ல் ரூ. 94,000 நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டது. 1983—84ல் ரூ. 59,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. ஊனமுற்றோருக்கு வாழ்க்கை தொழிற் பயிற்சி.

(அ) நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி பணி மனை, முட்டுக்காடு.

1975-ம் ஆண்டு ஜூன் திங்களில் செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில், ரூ. 30 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட இப் பணிமனை உருக்குப் பொருள்கள் தயாரிப்பு, பெட்டிக்கடை தயாரித்தல், மூன்று சக்கரவண்டி தயாரித்தல் போன்ற தொழில்களில் 77 ஊனமுற்றோருக்கு பயிற்சியை அளித்துள்ளது. இப்பணி மனை 1980 முதல் உற்பத்திக் கூடமாக மட்டுமே செயல்பட்டு வருகிறது. 1981—82-ல் ரூ. 4·50 இலட்சம் பெறுமான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. 1983—84 முதல் இப்பணி மனை குறிப்பிட்ட .பொறியியல் பிரிவுகளில் பயிற்சி அளிக்கும் பொருட்டு தொழில்பயிற்சி நிறுவனமாக மாற்றப்படும்.

இப்பணிமனையில் பயிற்சி பெற்றோருக்கு அரசு அச்சகம் தமிழ்நாடு மின் வாரியம் அரசு போக்குவரத்துக் கழகங்கள் போன்ற அரசு சார்பு நிறுவனங்களில் தக்க வேலைவாய்ப்பு வசதிகள் செய்து தர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஸ்ரீ.சேவா மந்திரில் பயிற்சி அளித்தல்.

ஊனமுற்ற மகளிர் சென்னையில் உள்ள ஸ்ரீ சேவா மந்திரிலும் 1976 முதல் தட்டச்சு, சுருக்கெழுத்து, உடைகள் தயாரித்தல் பூந்தையல் வேலை, பொம்மைகள் செய்தல்,



முதலியவற்றில் 1980—81 வரை பயிற்சி பெற்றனர். பயிற்சிபெறும் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 75 உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

1981—82-ம் ஆண்டில் ஊனமுற்ற மகளிர் 15 நபர்களுக்கு உணவு செய்முறை பாதுகாத்தலில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதுவரை 156 ஊனமுற்ற மகளிர். மேற்குறிப்பிட்ட பயிற்சி பெற்றுள்ளனர்.

(இ) வயது வந்த பார்வையற்றோருக்கு எளிய பொறியியல் பயிற்சித் திட்டம், கிண்டி..

வயது வந்த பார்வையற்றோருக்கு கனரகப் பொறியியல் அல்லாத எளிய பொறியியல் தொழில்களில் பயிற்சி அளிக்கும் திட்டம் கிண்டியில் 1967 ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. பயிற்சியாளர்களுக்கு தங்க வசதியும் உண்ண உணவும் இலவசமாக வழங்கப்படுகிறது. அவர்கள் கைச் செலவுக்கு வாரத்திற்கு ஒவ்வொருவருக்கும் 2 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. 1967 முதல் 1982 வரை 453 பார்வையற்றோர் பயிற்சி பெற்றனர். அதில் 248 பேர் பொது மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். 1982—83-ம் ஆண்டில் இப்பிரிவை அரசு அரசினர் தொழிற்பயிற்சி நிறுவனமாக உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது. இப்பயிற்சிப் பள்ளியில் அடிப்படை பொறியியல் பணியாளர் பைண்டிங் மற்றும் புத்தகம் கட்டுதல் ஆகிய பணிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 30 பார்வையற்றோர் இப்பணிகளில் பயிற்சி பெறுகின்றனர்,. 1982—83ம் ஆண்டில் ரூ. 1·76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1983—84ம் ஆண்டில் ரூ. 1·96 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(ஈ) தற்போதுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் காது கோளாதவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக தனிப்பிரிவு.

குறிப்பிட்ட சில பணிகளில் காது கோளாதவர்களுக்கு தனிப் பயிற்சி அளிக்க இயலும் வண்ணம், கிண்டி, மற்றும் மதுரையிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் காது கேளாதவர்களுக்கு பொறிப் பகுதி பொருத்துபவர் மற்றும் மின் கம்பியாள் ஆகிய பணிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொன்றிலும் 16 எண்ணிக்கையைக் கொண்ட இரண்டு தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தில் பொறிப் பகுதி பொருத்து

பவர் தொழில் பயிற்சியும் மதுரையில் உள்ள தொழில் பயிற்சி நிறுவனத்தில் மின் கம்பியாள் பயிற்ச்சியும் அளிக்கப் படுகிறது.

25. காது கேளாதவர்கள் இந்த இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் 1981-82 முதல் பயிற்சி பெறு கின்றனர். 1982—83ல் ரூ. 34,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1983—84ம் ஆண்டிற்கு ரூ. 49,000 ஒதுக்கீடு செய்யப்பட் டிருக்கிறது.

3. ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு.

(அ) ஊனமுற்றோருக்கு சிறு கடைகள் அமைப்பதற்கு உதவி அளித்தல்.

வங்கிகளின் மூலம் கடனுதவி பெற்று மாநிலத்தில் பல்வேறு இடங்களில் சிறுகடைகள் அமைக்க ஊனமுற் றோருக்கு உதவி அளிக்கப்படுகிறது. கடனுதவியோடு அரசு மான்யத் தொகையாக ரூ. 250 முதல் ரூ. 500 வரை வழங்கப்படுகிறது. ஊனமுற்றோர் சிறு கடைகள் அமைப்ப தற்குத் தக்க இடங்கள் ஒதுக்கும் பொருட்டு சென்னையில் காவல்துறை, மாநகராட்சி அதிகாரிகளுடனும் கலந்து ஆலோசித்து இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. மாநில அளவில் இட ஒதுக்கீடு மாவட்ட ஆட்சியாளரால் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. இதுவரை 523 ஊனமுற்றோர்கள் கடை கள் அமைக்க உதவி பெற்றுள்ளனர். 1982—83ம் ஆண்டில் ரூ. 94,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத் திற்கு 1983—84ம் ஆண்டு ரூ. 94,000 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது.

(ஆ) பயிற்சி பெற்ற ஊனமுற்றோரை தொழிலில் பழகு வோராக நியமனம் செய்தல்.

இத்திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்புக்காக தமிழ்நாடு வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள பயிற்சி பெற்ற ஊனமுற்றோர் சுமார் 1,500 பேர் பல்வேறு நிறுவனங்களில் தொழில் பழகுவதற்கும், அதன்பின் அவர்களை நிரந்தரப் பணியில் அமர்த்தும் நோக்குடனும் இத்திட்டம் செயல் படுத்தப்படுகிறது. தொழில் பழகும் ஓராண்டு காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ. 150 உதவித்தொகை யாக வழங்கப்படுகிறது. தொழில் பழகும் காலம் முடிந்த வுடன் பல்வேறு தொழில் நிறுவனங்கள் அந்த பயிற்சி யாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ளும். இதுவரை 1,137 ஊனமுற்றோருக்கு உதவி செய்யப்பட்டுள்ளது. 1982—83ம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்காக 1983—84ல் ரூ. 3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



(இ) பார்வையற்றோருக்கான கூட்டுறவு நெசவுப் பயிற்சிக் கூடம்.

பார்வையற்றோருக்காக கூட்டுறவு நெசவு பயிற்சி கூடம் ஒன்று பூவிருந்தவல்லி அரசு பார்வையிழந்தோர் மேல்நிலைப் பள்ளியில் செப்டம்பர் 1981 முதல் தொடங்கப் பட்டுள்ளது. இந்த கூடம் பார்வையற்றோருக்கு அரசு மருத்துவ மனைகளுக்கு தேவைப்படும் படுக்கை விரிப்புகள், கட்டுத்துணிகள், மேல் துண்டுகள் போன்றவற்றை நெய்வதற்கு ஆறு மாதகாலம் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 உதவித்தொகை யுடன் பயிற்சியளிக்கிறது. பயிற்சி முடிந்தவுடன் பயிற்சி பெற்றவர்களை ஒன்றாகச் சேர்த்து கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதில் உறுப்பினர்களாக்கி சுயமாக சம்பாதிப்ப தற்கு வழிவகை செய்யப்படுகிறது. 1982—83 வரை இந்தக் கூடத்தில் 50 பார்வைய்ற்றோர் பயிற்சி பெற்றனர். 1983—84-ல் இதற்காக ரூ. 1.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு உள்ளது.

(ஈ) பார்வையற்ற மகளிருக்கு தொழில் கூடங்களுடன் கூடிய மறுவாழ்வு இல்லம்.

பார்வையற்ற மகளிருக்காக சென்னையில் மறுவாழ்வு இல்லம் 1978-ம் ஆண்டு முதல் செயல்பட்டுவருகிறது. 40 வயதுக்குக் குறைந்த பார்வையிழந்து வறுமையில் வாடி ஆதரவு அளிக்க யாரும் இல்லாத நிலையில் உள்ள மகளிர் கல்வித் தகுதி என்னவாயிருப்பினும், அவர்கள் இந்த இல்லத் தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அவர்களுக்கு நெய்தல், சாக்கட்டி செய்தல் போன்ற தொழில்களில் ஆறு மாத காலத்துக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50 உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு அங்கேயே வேலை அளிக்கப்பட்டு, தினமும் அவர்கள் செய்யும் வேலைகளுக்கேற்ப ஊதியம் வழங்கப் படுகிறது. உணவுக்காகும் செலவு அவர்கள் ஈட்டும் ஊதியத் திலிருந்து கொடுக்கப்படுகிறது. தற்போது 32 பார்வையற்ற மகளிர் இந்த இல்லத்தில் உள்ளனர். இதுவரை 55 பார்வை யற்ற மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர். 1982—83-ம் ஆண்டில் ரூ. 1.76 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. 1983—84-ல் ரூ. 1,97 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(உ) ஊனமுற்றோருக்கான வட்டார மறுவாழ்வு மையங்கள்.

மத்திய அரசால் நடத்தப்படும் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிலைய அமைப்பைபோல் ஒரு வட்டார மறு வாழ்வு ஊன முற்றோர் மையம் மதுரையில் மார்ச், 1981—ல் நிறுவப்பட்டது 1981—82—ல் நான்கு கூடுதல் வட்டார மறுவாழ்வு மையங்கள் சென்னை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், வேலூர் ஆகிய 4 ாவட்ட தலைமை இடங்களில், எஞ்சியுள்ள மாவட்டங்களும் யன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த லையங்கள் ஊனமுற்றோரின் உள்ளாற்றலை ஆய்வு

செய்து அவர்களுக்குத் தேவையான உதவிகள், மருத்துவ வசதி, வாழ்க்கைக் கல்வி வசதி தொழிற்பயிற்சி, மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவற்றை வழங்குகிறது. இந்த நிலையங்கள் ஊனமுற்றோருக்குத் தேவையான உதவிகளை குறைந்த பட்சம் மாதம் தோறும் 100 ஊனமுற்றோருக்கு வழங்கி வருகிறது.

இத்திட்டத்திற்காக 1982—83-ம் ஆண்டு ரூ. 11.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1983—84-ம் ஆண்டிற்கு ரூ. 11.71 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,

(ஊ) வேலையின்றி உள்ள பார்வையிழந்தோருக்கு, வேலையற்றோருக்கு வழங்கப்படும் படியை

அளித்தல்.

வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலை இல்லாமலுள்ள பார்வையிழந்தோருக்கு வழங்கப்படும் உதவித்தொகை அல்லது படியை நீட்டிக்கும் திட்டம் ஒன்றை 1981—82-ல் அரசு அறிவித்தது. அதன்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் பார்வையற்றவர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது. வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து மூன்றாண்டு காலம் அப்பதிவேடுகளில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராக இருந்தால், 45 வயதுக்கு கீழும், மற்றவராக இருந்தால் 40 வயதுக்குக் கீழும் உள்ள பார்வையிழந்தவர்கள் எஸ். எஸ். எல். சி. அல்லது தொழில் பயிற்சி நிலையங்களில் பயின்று தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தால் அவர்கள் இந்தப் படியைப் பெறத்தகுதி பெறுகின்றனர். இத்திட்டம் வேலை வாய்ப்பு மற்றும் தொழில் பயிற்சித்துறை இயக்குநரால் சமூக நலத்துறை நிதி ஒதுக்கீட்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. 1981—82-ம் ஆண்டில் 194 பார்வையிழந்தோர் பயனடைந்தனர். ரூ. 6 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் 1982—83-ல் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. 1983—84—ல் ரூ. 6 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.



(எ) ஊனமுற்றோர் சுயவேலை வாய்ப்பபு முயற்சிக்கு அரசு மானியம்.

வங்கிகளின் மூலம் கடனுதவி பெற்று சுயவேலை வாய்ப்பிற்காக சிறு தொழில் பிரிவுகள் அமைக்கும் பெரும்பான்மையான ஊனமுற்றோர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு உதவித்தொகை அளித்து சிறப்பு ஊக்குவிக்கு முயற்சிகள் எடுத்து வருகின்றது. வங்கிகள் அளிக்கும் கடன் தொகைகளுக்குச் சமமான தொகையை அரசு மான்யமாக அளிக்கும். ஆனால், தனிப்பட்ட ஒரு நபருக்கு ரூபாய் 1,000-க்கு மேற்படாமல் அரசு மானியத் தொகை வழங்குகிறது. 1981—82-இல் ரூபாய் 25 இலட்சம் அரசு மான்யமாக கொடுக்கப்பட்டு சுமார் 9,000 ஊனமுற்றோர் பயனடைந்தனர். இத்திட்டம் 1982—83-இல் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

4. ஊனமுற்றோருக்கு உபகரணங்கள் வழங்குதல்.

(அ மூன்று சக்கர வண்டி வழங்குதல்.

ஏழ்மை நிலையில் உள்ள கை-கால் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன இது வரை 6,848 மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 1982—83-ஆம் ஆண்டில் ரூபாய் 2 இலட்சம் நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டது. இதனால், 135 உடல் ஊனமுற்ற ஏழைகள் இலவசமாக மூன்று சக்கர வண்டிகள் பெற்றனர். 1983—84 இல் ரூபாய் 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) சக்கர நாற்காலிகள்.

உடலின் கீழ் பகுதி பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ள 100 நபர்களுக்கு ரூபாய் 1 இலட்சம் செலவில் இலவசமாக சக்கர நாற்காலிகள் வழங்க அரசு ஒப்பளித்தது. 1982—83-ஆம் ஆண்டில் ரூபாய் 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதனால், 100 நபர்கள் இலவசமாக சக்கர நாற்காலிகள் பெறுகின்றனர், 1983—84 இல் இதற்காக ரூபாய் 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(இ) காது கேட்கும் கருவிகள் வழங்குதல்.

காது கேளாத ஏழைக் குழந்தைகளுக்கு காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ்வுதவியைப் பெறுகின்ற குழந்தைகளின் பெற்றோரின்/பாதுகாவலரின் மாத வருமானம் ரூபாய் 500-க்கு மேற்படக்கூடாது. விண்ணப்பதாரர்கள் அரசு பொது மருத்துவ மனைகளில் உள்ள கண், காது

மற்றும் தொண்டைப் பிரிவினரால் பரிசோதனை செய்யப்படுகின்றன. 1975 ஆம் ஆண்டு முதல் 2,825 காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1981—82ல் பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்கள் மட்டுமல்லாமல், பள்ளிக்குச் செல்லாத 18 வயதுக்குக் கீழ் உள்ள சிறுவர்களுக்கு 250 காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 1982—83 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இதற்காக ரூபாய் 50,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 125 காது கேட்கும் கருவிகள் வழங்கப்படும். 1983—84 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 50,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

5. மற்ற திட்டங்கள்.

(அ) தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல் :

8—14 வயதிற்குள் இளம்பிள்ளை வாதத்தினாலும், முடக்கு வாதத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கிற, மன வளர்ச்சி குன்றிய காது கேட்காத, பார்வையற்ற, கை, கால் ஊனமுற்ற குழந்தைகளையும், தொழு நோயால் துன்பப்படும் குழந்தைகளையும் தொழுநோயாளியின் குழந்தைகளையும் பராமரிப்பதற்கு மாதம் ஒன்றுக்கு, குழந்தை ஒன்றுக்கு ரூபாய் 30 என்ற வீதத்தில் தொண்டு நிறுவனங்களுக்கு பராமரிப்பு மான்யம் வழங்கப்படுகிறது. இது வரை சுமார் ரூபாய் 2 இலட்சம் மான்யமாக தொண்டு நிறுவனங்களுக்கு வழுஙகப்பட்டுள்ளது.

1982—83 ஆம் ஆண்டில் 11 தொண்டு நிறுவனங்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 65,000 நிதி ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 64,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) பார்வையற்றோருக்கான எழுத்துமுறை வட்டார அச்சகம் பூவிருந்தவல்லி.

பள்ளியில் கற்பிக்கும் பல்வேறு பாடங்களை நான்கு தென் மாநில மொழிகளில் அதாவது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் ஆங்கிலத்தில் எழுத்துமுறையில் அச்சிடுவதற்கு தனி அச்சகம் மத்திய அரசால் 1968—69 இல் ஏற்படுத்தப்பட்டது. இந்த அச்சகம் 4 தென் மாநிலங்களுக்குத் தேவையான பார்வையற்றோர் படிப்பதற்குரிய எழுத்து முறையில் தேவையான புத்தகங்களை அச்சிடுகிறது. இந்த அச்சகம் பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசினர் மேல்நிலைப் பள்ளியில் அமைந்துள்ளது. மேற்படி அச்சகத்தைப் பராமரிப்பதற்கான செலவை தமிழ்நாடு அரசு முதலில் முழுமையாக ஏற்றுக் கொள்கிறது. அதன் பின்,



இச்செலவு மேற்குறிப்பிட்டுள்ள நான்கு தென் மாநில அரசுகளால் விகிதாசாரப்படி பகிர்ந்து கொள்ளப்படுகிறது. 1982—83 ஆம் ஆண்டில் ரூபாய் 1.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1983—84 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(இ) பார்வையிழந்தோருக்கு ஒலிப்பதிவுசாதனம்கொண்ட நூலகம் ஏற்படுத்துதல் :

மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் பார்வையிழந்த மாணவர்களின் பாடப்புத்தகங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அப்பாடங்களை ஒலிப்பதிவு செய்யும் சாதனத்தில் பதிவு செய்து அவர்கள் கேட்டு பயன்பெறுவதற்காக பூவிருந்தவல்லியில் உள்ள அரசினர் பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளியில் ஒரு நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்காக 1982—83 ஆம் ஆண்டில் ரூபாய் 60,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1983—84 ஆம் ஆண்டில் ரூபாய் 10,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) ஊனமுற்றோருக்கான கணக்கெடுப்பு.

1981—82 ஆம் ஆண்டில் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களது பிரச்சனைகளை அறிய அரசு புள்ளியியல் துறையின் மூலம் ஒரு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. கணக்கெடுப்பின் அறிக்கை புள்ளியியல் துறையால் தயாரிக்கப்பட்டு அந்த அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின்படி ஊனமுற்றோர் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் தீட்டப்படும்.

(உ) பிரச்சாரமும், செய்திப்படங்களைத் தயாரித்தலும்.

உலக ஊனமுற்றோர் ஆண்டில் ஊனமுற்றோரிடம் பொது மக்களின் நாட்டத்தைத் திருப்பவும், அவர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்தில் பொது மக்களை ஈடுபடச் செய்யும் பொருட்டு ரூபாய் 88,000 செலவில் ஒரு செய்திப்படம் தயாரித்து வெளியிட உள்ளது. இதைத் தவிர, உலக ஊனமுற்றோர் ஆண்டில் ரூபாய் 1.22 இலட்சம் ஊனமுற்றோர் நலன் சம்பந்தமாக பிரச்சாரத்திற்காக செலவு செய்யப்பட்டது.

(ஊ) செயற்கை உறுப்புக்கள் வழங்குவதற்காக இரண்டு புதிய துணை நிலையங்கள்.

1981—82 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மற்றும் கடலூரில் இரண்டு புதிய துணை செயற்கை உறுப்புகள் நிலையங்கள்

ஏற்படுத்தப்பட்டன. இந்நிலையங்கள் கை,கால்ஊனமுற்றோருக்கு மருத்துவ ரீதியில் புதுவாழ்வு அளிக்கும். மேலும், இந்த நிலையங்கள் கை, கால் ஊனமுற்றோர் நடப்பதற்கு இயலும் வண்ணம் தாங்குக் கட்டைகளையும், ஏனைய சாதனங்களையும் அவர்களுக்கு வழங்கும். உலக ஊனமுற்றோர் ஆண்டின் ஒரு திட்டமாக இத்திட்டம் மக்கள் நல்வாழ்வுத் துறையின் செலவில் அத்துறையால் செயல்படுத்தப்படுகிறது.

(எ) மூன்று செவியியல் பிரிவுகள்.

உலக ஊனமுற்றோர் ஆண்டின் ஒரு திட்டமாக தமிழக அரசு 1981–82 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர்; திருநெல்வேலி, மற்றும் தஞ்சாவூரில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சைப்பிரிவுகளுடன் இணைந்த மூன்று புதிய செவியியல் பிரிவுகளை அமைக்க ஆணை பிறப்பித்தது. இப்பிரிவுகள் காது கேளாதவர்களை ஆரம்பத்திலேயே கண்டறிதல் மற்றும் காது கேளாதோர், ஊமையர் போன்றவர்களுக்கு சிகிச்சை அளித்தல் போன்ற பணிகளின் மூலம் மற்றும் சமூகப் புனர்வாழ்வுப் பணிகளையும் மேற்கொள்ளும். இத்திட்டம் மக்கள் நல்வாழ்வுத்துறையால் செயல்படுத்தப்படுகிறது.

(ஏ) ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு.

அரசு மற்றும் அரசு சார் நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சித் துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளில் 3 சதவீதம் ஊனமுற்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. ஒரு சதவீதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த ஊனமுற்றோருக்கும், ஒரு சதவீதம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த ஊனமுற்றோருக்கும், மீதமுள்ள ஒரு சதவீதம் மற்ற வகுப்பினரான ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதே போன்று கல்வி நிலையங்களிலும் தொழில் கல்வி போதனை செய்யும் நிலையங்களிலும் 3 சதவீதம் இடங்கள் ஊனமுற்றவர்களுக்காக ஒதுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(ஐ) புதிய அரசு கட்டிடங்களில் லிப்டுகள் அமைத்தல்.

ஊனமுற்றவர்களும் எளிதில் செல்ல வசதியாக இருக்கும் வண்ணம் புதிய அரசு கட்டிடங்களில் லிப்ட் வசதிகள் அவசியம் செய்ய அரசு உத்தரவிட்டிருக்கிறது.

(ஒ) ஊனமுற்ற சிறுவர்களுக்கு பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை.

பள்ளிகள் மற்றும் பிற கல்வி நிலையங்களில் பயிலும் ( ) றும் மருத்துவச் சோதனைக்காக மரு துவ மனைக்குச் செ லும் ஊனமுற்ற சிறார்களுக்கு மாநில ில் உள்ள போக்குவ துக்



கழக பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர) இலவசமாக பயணம் செய்ய அரசு அனுமதித்து உள்ளது. மாநிலத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்களுக்கு இதனால் ஆகும் இழப்பை சமூக நலத்துறை ஈடு செய்யும். 1981–82 ஆம் ஆண்டில் சுமார் 2,368 குழந்தைகள் பயனடைந்தனர். 1982–83 ஆம் ஆண்டில் சுமார் 7,000 குழந்தைகள் பயனடைவர். இத்திட்டம் 1983–84 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

(ஓ) ஊனமுற்றோர் நலனுக்காக தன்னலமற்ற பணி புரிந்தவர்களுக்கு அரசு விருது வழங்குதல்.

ஊனமுற்றோர் நலனுக்காக தன்னலமற்ற பணி செய்பவர்களுக்கு மூன்று விருதுகள் வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. இந்த விருது கடந்த ஏப்ரல் 1982 ஆம் ஆண்டில் உலக ஊனமுற்றோர் நாளில் வழங்கப்பட்டது.

(ஔ) ஊனமுற்றவர்களுக்கு போதனை செய்யும் ஆசிரியர்களுக்கு விருதுகள்.

பார்வையற்றோர், காது கேளாதோர், கை, கால் ஊனமுற்றோர் மன வளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழு நோயிலிருந்து குணமடைந்தோர் ஆகியவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 5 சிறப்பு விருதுகள் ஊனமுற்றோர் ஆண்டை ஒட்டி வழங்கப்பட்டது இந்த விருதுகளுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்கையில் ஊனமுற்ற ஆசிரியர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

(ஃ) திருச்சிராப்பள்ளியில் மாவட்டம் தழுவிய மருத்துவ முகாம்கள் அமைத்தல்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெரிய அளவில் ஊனத் தடுப்பிற்கான '' ஊனத் தடுப்பு சோதனை மற்றும் மறுவாழ்வு முகாம் '' 1982 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 7 ஆம், 8 ஆம் நாட்களில் நடத்தப்பட்டது

இந்த முகாமின் முக்கிய குறிக்கோள்

இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்து, வில்வாத ஜன்னி, தொண்டை அடைப்பான் ஆகிய நோய் தடுப்பு மருந்து அளித்தலும், உடல் அங்க ஊன முற்றவர்களுக்கு முறையான மருத்துவ வசதிகளாகிய மருத்துவ வசதி, மருத்துவ சிகிச்சை, காலணிகள் செயற்கை அவையவங்கள் அளித்தல் ஆகும் இரண்டாவது, மூன்றாவது முகாம்கள் முறையாக பிப்ரவரி 7, 8 மார்ச் 15, 16 ஆம் தேதிகளில் 1982 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. இத்திட்டத்தை, விரிவுபடுத்தும் நோக்கத்துடன், எல்லா மாவட்டங்களுக்கும் ஒன்றன் பின் ஒன்றாக அமுல்படுத்த ஆவன செய்யப்பட்டுள்ளது.

1982 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் 1983-ஆம் ஆண்டு ஜனவரி ஈறாக மூன்று கட்டங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் செயல்படும் 50 இடங்களிலும் தடுப்பூசி போடுதல் பெருவாரியான அளவில் மேற்கொள்ளப்பட்டது. இத் திட்டம் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரகவளர்ச்சி-உள்ளாட்சித்துறை மற்றும் மாவட்ட ஆட்சியாளர்கள் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டது. மூன்று மாதத்திலிருந்து 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன. அதன் விவரமானது :

| | கொடுக்கப்பட்ட டோஸ்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|
| | ஓரல் போலியோ, | டிப்தீரியா. வேக்ஸின். |
| (1) | (2) | (3) |
| முதற் கட்டம் .. .. .. | 1,30,425 | 1,30,893 |
| இரண்டாவது கட்டம் .. .. | 92,400 | 89,425 |
| மூன்றாவது கட்டம் .. .. | 83,365 | 82,239 |

(அஅ) சிராமப் பகுதிகளில் சுறு தொழில் அமைக்கும் திட்டம்

தமிழ்நாட்டில் 1981—82 ஆம் ஆண்டில் நடைபெற்ற பரிசுச் சீட்டு குலுக்கலில் கிடைக்கப்பெற்ற தொகையிலிருந்து ரூபாய் 20.75 இலட்சம், ஊனமுற்றோருக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தில் செலவு செய்ய தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. மேலும் இத் தொகையிலிருந்து 25 ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு உதவி அளிக்கும் பொருட்டு தொழிற்கூடம் ஒன்று அமைக்க காட்பாடியிலுள்ள ஓர்த் டிரஸ்ட் நிறுவனத்திற்கு ரூபாய் 1 இலட்சம் ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. மீதித் தொகையான ரூபாய் 19.75 இலட்சத்திற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழில் கூடங்கள் துவங்க தீர்மானம் செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் எல்லா கிராமப் பகுதிகளிலும் உள்ள ஊனமுற்றவர்கள் வேலை வாய்ப்பு உதவி பெற வாய்ப்புண்டு.

(அஆ) ஊனமுற்றோர் மாநில வாரியம்:

மாநில சமூக நல அமைச்சரை தலைவராகக் கொண்ட ஊனமுற்றோர் மாநில வாரியம், ஊனமுற்றோர் நலன் மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களை வகுப்பதில் அரசுக்கு ஆலோசனை கூறும் நிறுவனமாக இயங்கி வருகிறது. இந்த வாரியம் ஒரு வல்லுநர் குழுவைக் கொண்டதாகும். இக்குழு இரண்டு முறை கூடி ஊனமுற்றோருக்காக திட்டங்களை வகுப்பதில் ஆலோசனைகள் கூறி இருக்கிறது.





இந்த வாரியத்திற்கு சமூக நல இயக்குநரை தலைவராகக் கொண்ட துணைக் குழு ஒன்றும் இருக்கிறது. இந்த துணைக் குழு நான்கு தொண்டு நிறுவனங்களுக்கு அவைகளின் பணிகளை விரைவுபடுத்தும் பொருட்டு மானியங்களை வழங்கி இருக்கிறது. மேலும், சுயவேலை வாய்ப்பிற்காக 86 ஊனமுற்றோர்களுக்கு இக்குழு மானியங்கள் வழங்கியுள்ளது.

6. தமிழ்நாடு சமூகநல வாரியம்.

தமிழ்நாடு சமூகநல வாரியம் 1954-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தமிழ்நாட்டின் தொண்டு நிறுவனங்களது மேம்பாட்டு வளர்ச்சியில் முக்கியமான பங்கு வகித்து வருகிறது. மேற்படி வாரியம் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படுகிறது.

முக்கிய நோக்கங்கள்:

1. சமூக நல அமைப்புக்களை ஆரம்பித்து, உயர்வடையச் செய்தல்.

2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித் திறனை வளர்ப்பதற்குத் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியளித்தல்.

3. உதவி திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

தமிழ்நாடு சமூக நல வாரியம், மத்திய சமூக நல வாரியத்திடம் இருந்து பண உதவி பெற்று, தொண்டு நிறுவனங்களின் மூலம் தமிழக குழந்தைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் மாதர்கள் ஆகியோரது மேம்பாட்டுக்காக பணியாற்றுகிறது. சுமார் 50 விழுக்காடுகள் முதல் 90 விழுக்காடுகள் வரை தொண்டு நிறுவனங்களுக்கு பண உதவி செய்யப்படுகிறது. மீதித் தொகை தொண்டு நிறுவனங்களால் பார்த்துக் கொள்ளப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 விழுக்காடுகள் கூட பண உதவி செய்யப்படுகிறது.

தற்போதைய தமிழ்நாடு சமூக நல வாரியம் 1978-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்று அலுவலக உறுப்பினர்கள் உட்பட 32 உறுப்பினர்களைக் கொண்டதாக திருத்தியமைக்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டு முதல் திருமதி தாராசெரியன் அவர்கள் தலைவியாக பணியாற்றி வருகிறார்கள். 1981—82-ஆம் ஆண்டில் 1,194 தொண்டு நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 76.25 இலட்சம் பண உதவி செய்யப்பட்டது.

விவரம்:

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். | அலகு எண். | அனுமதிக்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 திட்டகால உதவி .. .. | 34 | 3.19 |
| 2 வருடாந்திர உதவி .. | 324 | 5.08 |
| 3 மகிலாமண்டல் உதவி .. | 16 | 1.19 |
| 4 விடுமுறை முகாம் .. .. | 51 | 2.00 |
| 5 குறுகிய காலக் கல்விப் பயிற்சி (ஒரு வருடம்). | 15 | 2.37 |
| 6 வாழ்க்கை தொழிற் பயிற்சி.. | 79 | 15.18 |
| 7 பணிபுரியும் மாதர்கள் தங்கும் விடுதி. | 7 | 0.40 |
| 8 நல விரிவாக்கத் திட்டம் (நகர்ப்புறம்). | 2 | 0.12 |
| 9 சமூக பொருளாதார திட்டம். | 17 | 7.97 |
| 10 பால்வளத் திட்டம் .. | 62 | 12.94 |
| 11 சத்துணவுத் திட்டம் .. | 132 | 4.29 |
| 12 குழந்தைகள் காப்பக திட்டம். | 382 | 19.84 |
| 13 சிறப்பு சுய வேலை வாய்ப்பு திட்டம். | 5 | 0.50 |
| 14 புத்தறிவுப் பயிற்சி முகாம் .. | 45 | 0.09 |
| 15 மாநில அரசு மானியம் .. | 21 | 1.00 |
| 16 கிராமப்புற மாதர்கள் பயிற்சித் திட்டம். | 2 | 0.09 |
| மொத்தம் | 1,194 | 76.25 |



## VII. முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டம்

ஆதரவற்ற, உற்றார் உறவினர் யாரும் இல்லாத வயது முதிர்ந்த முதியோர்களுக்கு, சமூக பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு அரசு 1—4—1962 முதல் முதியோர் உதவித் தொகை திட்டத்தினை ஏற்படுத்தி அமுல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்படி, கீழ்க்கண்ட இனத்தைச் சார்ந்த முதியோர்கள் பயனடைந்து வருகின்றனர்:—

(அ) ஆதரவற்ற முதியோர்களுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

(ஆ) ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

(இ) ஆதரவற்ற விதவைகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

(ஈ) ஆதரவற்ற விவசாயிகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

(அ) ஆதரவற்றமுதியோர்களுக்கான முதியோர் உதவித் தொகை திட்டம்.

இத்திட்டம் 1962 முதல் செயலாக்கப்பட்டு வருகிறது. ஆதரவற்ற 65 வயதும் அதற்கும் மேற்பட்ட முதியோர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்றனர். இத்திட்டத்தின் மூலம் 1—1—1983 வரை இம்மாநிலத்தில் 1,10,822 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

உடல் ஊனமுற்றவர்களுக்கும் முதியோர் உதவித் தொகை வழங்கும் பொருட்டு 1974 முதல் முதியோர் உதவித் தொகைத் திட்டம் விரிவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 45 வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதரவற்ற உடல் ஊனமுற்ற நபர்கள் பயன் பெறுகின்றனர். ஆனால், கண் பார்வையற்ற நபர்களுக்கு வயது வரம்பு எதுவும் இன்றி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட அளவிலான குழுக்களையும் அரசு அமைத்துள்ளது. இக்குழுக்களில், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட மருத்துவ அலுவலர், மாவட்ட சமூக

நல அலுவலர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக் குழுக்கள், உடல் ஊனமுற்றோர் அனுப்பும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து, அவ்விண்ணப்பதாரர்களின் வயது குறித்த விதிகளைக் கருதிப் பாராது, ஒவ்வொரு விண்ணப்பதாரரின் இடர்ப்பாட்டை மட்டுமே கருதிப் பார்த்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்க அனுமதிக்கும்.

இம்மாநிலத்தில் 1—1—1983 முடிய 15,318 நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(இ) ஆதரவற்ற விதவைகளுக்கான முதியோர் உதவித் தொகை திட்டம்.

அரசு 1975 முதல் முதியோர் உதவித் தொகை திட்டத்தினை விரிவுபடுத்தி ஆதரவற்ற விதவைகளுக்கும் உதவித் தொகை வழங்கி வருகிறது. 40 வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதரவற்ற விதவைகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். இம் மாநிலத்தில் 1—1—1983 முடிய 43,018 நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(ஈ) ஆதரவற்ற விவசாயிகளுக்கான முதியோர் உதவித்தொகைத் திட்டம்.

முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் மூலம் வேளாண்மை தொழிலாளர்களுக்கும் பயன்பெறும் பொருட்டு இத்திட்டத்தினை விரிவுபடுத்தி 15—3—1981 முதல் செயற்படுத்தி வருகிறது. இதன் மூலம் 60 வயதும் அதற்கும் மேற்பட்ட பட்ட ஆதரவற்ற எத்தொழிலும் செய்ய இயலாத நிலையில் உள்ள வேளாண்மை தொழிலாளர்கள் பயன்பெறுகின்றனர். இம்மாநிலத்தில் 1—1—1983 முடிய 30,000 விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற அரசு ஆணையிட்டுள்ளது.

முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் திங்கள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரொக்கமாக 35 ரூபாய் வழங்குவதோடு ஆண்டொன்றுக்கு பொங்கல் திருநாளன்றும், சுதந்திரத் திருநாளன்றும் ஆக இருமுறை சேலைகள், வேட்டிகள் ஆகியவையும் இலவசமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கும் உதவித் தொகைக்கான ரொக்கம், காசோலை மூலம் அஞ்சல் வழியனுப்பப்படுகிறது. இதற்கான அஞ்சல் வழியனுப்பல் செலவுத் தொகையினையும் அரசே ஏற்றுக்கொள்கிறது.





2. முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தினை முதியோர் உதவிதொகை பெறும் நபர்களுக்கும் நீட்டித்தல்.

முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகை பெற்று வரும் நபர்களும் பயனடையும் பொருட்டு, திட்டத்தினை விரிவுபடுத்தி 15—1—1983 முதல் அமுலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம், முதியோர் உதவித் தொகை பெற்று வரும் அனைத்து நபர்களுக்கும் ஒரு நாளைக்கு ஒருவேளைக்கு இலவச உணவு வழங்கப்படுகிறது. இந்த உணவு கீழ்க்கண்ட அளவில் இருக்கும் :—

| | | |
|---|---|---|
| 1. அரிசி | .. .. | 200 கிராம். |
| 2. பருப்பு | .. .. | 15 கிராம். |
| 3. எண்ணெய் | .. .. | 14 கிராம். |
| 4. காய்கறி மற்றும் தாளிதம் | | 50 கிராம். |

இதர செலவு வகைகளைத் தவிர மேற்கண்ட சத்துணவிற்கு 90 பைசா ஆகிறது. அருகாமையில் உள்ள குழந்தைகள் சத்துணவு மையங்களில் முதியோர் உதவித் தொகை பெரும் முதியோர்களுக்கு சத்துணவு அளிக்கப்படுகிறது. நகரம், கிராமம் போன்ற இடங்களில் அவரவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ள குழந்தைகள் நல மையங்களில் அளிக்கப்படுகிறது. சத்துணவு பெறும் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு 1 கிலோ அரிசிக்கு பதிலாக 15—1—1983 முதல் ½ கிலோ அரிசி வழங்கப்படுகிறது. சத்துணவு பெறாத முதியோர் உதவித் தொகை பெறும் ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு 1 கிலோ அரிசி வீதம் தொடர்ந்து வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 6.48கோடி ரூபாய் செலவினம் ஏற்படும். அரசு இதுவரையில் 1,99,158 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க ஆணையிட்டுள்ளது. சென்ற 1982–83 நிதி ஆண்டில் முதியோர் உதவித் தொகை திட்டத்திற்கென 8.92 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்டத்திற்கென 16.70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

VIII. சீர்திருத்தப்பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புப் பணி.

சீர்திருத்தப்பள்ளி, மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை, 1920-ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் 1956-ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புத் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு பாதுகாப்பு இல்லங்கள் என இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

இத்துறை தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின்கீழ் குற்றம் புரிந்த இளங்குற்றவாளிகள், ஆதரவற்றோர் கட்டுக்கடங்காச் சிறுவர்கள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத்தடுப்புச் சட்டத்தின்கீழ் நெறி பிறந்தவர் களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் பெண்டிர் ஆகியோரின் பொறுப்பினை ஏற்று சீர்திருத்தப் பயிற்சி அளித்து கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி, மறுவாழ்வு அளிக்கும் முக்கிய குறிக் கோளைக் கடமையாகக் கொண்டுள்ளது. இத்துறை சீர்திருத்த நிறுவனங்களிலிருந்து விடுதலையாகும் இல்லவாசிகளுக்கும் நிறு வனங்கள் மூலமாக பிற்காப்பு அளிக்கிறது.

சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை இயக்குநர் இத்துறையின் தலைவர் ஆவார். இத்துறையின் கீழியங்கும்அனைத்து நிறுவனங்களின்(அரசினர் மற்றும் அரசினரின் மானியம் பெறும் தனியார் நிறுவனங்கள்) ஆட்சி அதிகாரங் கள் இயக்குநருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை துணை இயக்குநரைக் கொண்டு இம்மாநிலத்தின் தென் மாவட்டங்களிலுள்ள நிறுவனங் களை உடனடி மற்றும் நேரடி மேற்பார்வைக்காக மதுரையில் ஒரு மண்டல அலுவலகம் இயங்கி வருகிறது.

## 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் மற்றும் அதன கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள்.

1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் 23 சீர்திருத்தப்பள்ளிகள் (நீண்டகால வரையன்ற நிலையங்கள்) உள்ளன. ஒன்பது பள்ளிகள் அரசினராலும் எஞ்சிய 14 பள்ளிகள் அரசு மானியம் பெறும் தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன. அறிவு வளர்ச்சி குன்றியதாகக் காணப் படும் சிறார்களும், பாலவிகார் நிறுவனத்தின் கீழியங்கும் இனை நிலை சீர்திருத்தப்பள்ளியில் பொறுப்பேற்கப்பட்டு பயிற்றுவிக்கப் படுகின்றனர்.

மாநிலம் முழுவதுமாக பதினைந்து வரவேற்பு இல்லங்கள் (ஒன்பது அரசினராலும், ஆறு தனியார் நிறுவனங்களாலும்) நடத்தப்படும் (குறுகிய கால வரையறை நிலையங்கள்) உள்ளன. இவ்வரவேற்பு இல்லங்கள் நீதிமன்றங்களின் முன் விசாரணை யேற்கும் சிறுவர் சிறுமியரைச் சேர்த்து விசாரணை காலங்களில் அவர்களின் பொறுப்பேற்கின்றன. இவ்வரவேற்பு இல்லங்கள் சீர்திருத்தப்பள்ளிகளின் நுழைவாயில்களாகும். இவ்வரவேற்பு இல்லங்களில் ஒன்பது அரசினராலும், ஏனைய ஆறு வரவேற்பு இல்லங்கள், குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், விடுதலைப் பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் ஆகிய (அரசினரின் மானிய உதவி பெறும்) தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன.





## 1956 ஆம் ஆண்டு சிறுமியர் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டமும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களும்.

1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்த மைப்புத் தடுப்புச் சட்டத்தின கீழ் குற்றவாளிகளாக சேர்க்கப் படும் சிறுமியர் மற்றும் பெண்டிருக்கு அரசினர் மகளிர் விழிப்பு காப்பகங்களில் (நீண்ட கால வரையறை) புகலிடம் தந்து பயிற்சி அளிக்கப்படுகின்றது. இத்துறையின் கீழ் ஆறு அரசினர் மகளிர் காப்பகங்கள் உள்ளன. இவற்றைத் தவிர ஒன்பது (குறுகிய கால) மீட்பு இல்லங்கள் நீதிமன்றத்தின் முன் விசாரணை ஏற்கும் சிறுமியர் மற்றும் பெண்களைச் சேர்த்து அவர்களது விசாரணைக் காலங்களில் பொறுப்பேற்கின்றன. இக்குறுகிய கால வரையறையுள்ள நிறுவனங்கள் நீண்டகால வரையறையுள்ள பாதுகாப்பு இல்லங்களுக்கு நுழைவாயில்களாக விளங்குகின்றன.

### பிற்காப்பு இல்லங்கள்:

இத்துறையின் கீழ் 3 அரசினர் பிற்காப்பு இல்லங்கள் 2 சிறுவர்களுக்காகவும் 1 சிறுமியர் மற்றும் பெண்டிருக்காகவும் செயல்படுகின்றன. சிறுமியர் மற்றும் பெண்களுக்கான இல்லம் வட ஆற்காடு மாவட்டம் வேலூரிலும் மற்ற சிறுவர்களுக்கான இரண்டு இல்லங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆத்தூரி லும், மதுரையிலும் இயங்கி வருகின்றன. சீர்திருத்த இல்லங்களி லிருந்து விடுவிக்கப்பட்ட இல்லவாசிகள் (ஆதரவற்றோர்) மற்றும் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட பெண்கள் ஆகியோ ருக்கு இவ்வில்லங்கள் வாழ்க்கைத் தொழிற் கல்விப் பயிற்சியினை தொடர்ந்து பெற்று வேலைக்குத் தகுதி பெறுமாறு உருவாக்க பயிற்சி அளித்து வருகின்றன. மேலும் அரசினர் மகளிர் பிற் காப்பு இல்லத்துடன் இணைப்பட்டுள்ள ஒரு தொழில் நிலையம் உடைகள், உள்ளாடைகள் மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தலிலும் பயிற்சி அளித்து வருவதுடன். பயிற்சிகளுக்கு வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பில்ல இல்லவாசிகளும், அகதிப் பெண்கள் மற்றும் உள்ளூர்ப் பெண்களும் தேர்ந்தெடுக் கப்படுகின்றனர்.

### கல்வி:

அனைத்து சீர்திருத்தப் பள்ளிகளும் கல்வித் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட கல்விப் பிரிவுகளைக் கொண்டவையாகும். இவற்றில் எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படுகிறது. செங்கற்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளியில் உள்ள உயர் நிலைப்பள்ளியில். மாணவர்களுக்கு உயர்நிலைக்கல்வி கற்பிக்கப்படுகிறது. கல்வியில் நாட்டமுள்ள மாணவர்கள் மேல் நிலைப் பள்ளி/கல்லூரி தொழிற் பயிற்சி நிலையங்கள்/பல்தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

**வாழ்க்கைத் தொழிற் கல்வி:**

இல்லவாசிகளின் பயனுக்காகவும் இல்ல நீக்கத்திற்குப் பின் அவர்களின் மறுவாழ்வு இலகுவாக அமையும் பொருட்டும் கீழ்க்குறிப்பிட்ட வருவாய் பயக்கும் தொழில் கல்விப் பயிற்சிகள் நிறுவனங்களில் பயிற்றுவிக்கப்படுகின்றன :—

அ. சீர்த்திருத்தப் பள்ளிகள் மற்றும் மகளிர் காப்பகங்கள்:

1. தச்சுப் பயிற்சி
2. தையல் மற்றும் பூவேலைப் பயிற்சி
3. நெசவுப் பயிற்சி
4. பாய் நெசவுப் பயிற்சி
5. கருமார் பணிப் பயிற்சி
6. உலோகப் பணி பயிற்சி
7. தோட்டம் மற்றும் வேளாண்மைப் பயிற்சி.
8. கொத்து வேலைப் பயிற்சி
9. புத்தகம் கட்டும் பயிற்சி.
10. இசைக் கருவி மீட்டும் பயிற்சி
11. மாட்டுப்பண்ணைப் பயிற்சி
12. சோப்புகள் தயாரிக்கும் பயிற்சி

இ. பிந்காப்பு இல்லங்கள்:

1. புத்தகம் கட்டும் பயிற்சி
2. கருமார்ப் பணி பயிற்சி
3. தையல் பயிற்சி.

மாணவ மாணவிகளுக்கு நவீன இயந்திரங்களில் உற்பத்தி செய்வதற்கு பயிற்றுவிப்பதன் மூலம் அவர்கள் இல்ல நீக்கம் பெற்று வெளியேறி தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புப் பெற வசதியாக மேலே குறிப்பிட்டுள்ள தொழிற்கூடங்களில் சென்னை அரசினர் பெண்கள் சீர்திருத்தப்பள்ளி மற்றும் தஞ்சாவூர், அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி தையற் கூடங்களும், செங்கற்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளியில் தச்சு மற்றும் நெசவுத் தொழிற்கூடங்களும் மின்விசையால் இயங்கும்படி நவீனமாக்கப்பட்டுள்ளன.



1981–82 ஆம் ஆண்டின் திட்டப் பணிகளில், தஞ்சாவூர் அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி மற்றும் இராணிப்பேட்டை அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளியின் தச்சுக்கூடங்கள் மின் பொறிகளால் இயங்கும் வண்ணம் நவீனப்படுத்தவும், சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில் ஒரு மின் விசை சலவைத் தொழிற்கூடம் தொடங்கவும் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

சென்னை, அரசினர் பெண்கள் சீர்திருத்தப்பள்ளியில் புதிய தாகத் துவங்கி செயல்பட்டு வரும் குழந்தைகள் காப்பகத்தில் சில பெண்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

**சீர்த்திருத்தப் பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள்:**

1980–81 ஆம் ஆண்டு முதல் சீர்திருத்தப்பள்ளி மாணவர் களுக்கு இடையே உடற் பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டி கள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டியினால் மாணவர் களின் திறமை உயர்வதுடன் அவர்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு, சகோதரத்துவம், தலைமையேற்றல் ஆகிய நற் பண்புகள் வளர வாய்ப்பளிக்கப்படுகிறது.

**இளம் குற்றவாளிகள் வழகாட்டி நிலையங்கள்:**

சிறுவர்களிடையே விளங்கும் குற்றவியல் தன்மை பற்றி ஆய்வு கள் மேற்கொள்வது மட்டுமன்றி, இளைஞர் நீதிமன்றங்கள் மற் றும் தனியார் நிறுவனங்கள் அனுப்பும் சிறுவர், சிறுமியரைப் பற்றிய மனநிலை அறிக்கைகளை அளிக்க சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் மூன்று இளங் குற்றவாளி களுக்கான வழிகாட்டி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அருகிலிருக்கும் வரவேற்பு இல்லங்களின் கோரிக்கைகளை ஏற்கும் இவ்வழிகாட்டி நிலையங்கள் செயற் குழுக்களால் நடத்தப் பட்டாலும் இவற்றுக்கான செலவினங்கள் அரசினரால் ஏற்கப் படுகிறது.

**மறுவாழ்வுத் திட்டம்:**

இல்லவாசிகள், நிறுவனங்களில் சீர்திருத்தப் பயிற்சிப் பெற்ற பின்னர், தகுந்த மறுவாழ்வு கீழ்கண்டவாறு அளிக்கப்படுகிறது:—

(1) விருப்பமுள்ள (ஆதரவற்ற) பெண்களுக்கு திருமண ஏற்பாடு செய்தல்.

(2) வேலைவாய்ப்புவசதி ஏற்படுத்தித் தருதல்.

(3) வேலைத் திறமையுள்ள மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற தொழில் கல்விக் கேற்ற கருவிகள் வழங்குதல் முதலிய மறுவாழ்வுத் திட்டங்கள் மூலம் விடுதலை பெற்ற இல்லவாசிகள் பொருளீட்டி தாங்கள் அமைதியாக வாழ்க்கை நடத்த வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

திருமணம் செய்து கொள்ளும் மணமக்களுக்கு அவர்கள் குடும்பம் நடத்த சீதனமாக ரூ. 1,000-ம் மற்றும் திருமணச் செலவுகளுக்கு என ரூ. 100-ம் அரசினரால் வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் (1—1—1980 முதல் 31—12—1982 முடிய) 51 இல்லவாசிகளுக்கு திருமணம் செய்யப்பட்டு மறு வாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர்.

**வரவு-செலவு மதிப்பீடு:**

இத்துறையின் 1983-84 ஆம் ஆண்டில் வரவு-செலவு மதிப்பீடு ரூ. 144·64 இலட்சமாகும். இதில் ஊழியர்களின் ஊதியம் மற்றும் இதர இனங்களுடன் தனியார் நிறுவனங்களுக்கு மானிய உதவியாக வழங்கப்படும் ரூ. 9·63 இலட்சமும் அடங்கும்.

**வரவினங்கள்:**

1983–84 ஆம் ஆண்டில் எதிர் நோக்கும் வரவினங்கள் பின் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. சீர்திருத்தப்பள்ளிகளின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை மூலம். | 4·50 |
| 2. இதர பலவகை வரவினங்கள் .. .. | 2·50 |
| 3. மகளிர் காப்பகங்கள் மூலம் .. .. | 0·25 |
| 4. பிற்காப்பு இல்லங்கள் மூலம் .. .. | 0·25 |
| மொத்தம் .. | 7·50 |



**புதிய திட்டங்கள்:**

1983–84 ஆம் ஆண்டில் இரண்டாம் பகுதித் திட்ட வேலைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பணித் திட்டங்கள் பின் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி வட்டம், அபிஷேகபுரம் கிராமத்தில் சர்வே எண் 201/1-ஐ-ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடங்களை அரசினர் பெண்கள் பாதுகாப்பு இல்லத்திற்கென அரசினருக்குச் சொந்தமாக வாங்குதல். | 4·00 |
| 2. சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறையில் நன்னடத்தைப் பிரிவினை வலுப்படுத்துதல். | 1·25 |
| மொத்தம் .. | 5·25 |

**ஆறாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்:**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்துறை நிறுவனங்களில் உள்ள மேலும் சில தொழில் பிரிவுகளை நவீனப் படுத்தி, இத்துறையின் நடவடிக்கைகளை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தொழில் கல்விப் பிரிவுகளைத் துவங்கவும் இல்லங்களை நிறுவவும், இத்துறைக்கு மாநில திட்டக் குழு ரூ. 80 இலட்சம் ஒதுக்கீடு அளித்துள்ளது. மேற்குறிப்பிட்டவற்றைத் தவிர இல்லவாசிகளின் நலனைக் கருதி துறைக் கட்டிடங்களைப் புதுப்பிக்கவும், விரிவாக்கவும், புதிய கட்டிடங்களைக் கட்டவும் வகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை-600 008.